ஸ்ரீ ராமாநுஜ தர்சனம்

(PHILOSOPHY OF RAMANUJA)

தொகுத்தளிப்பு

Srirangam

ஸ்ரீரங்கம் நல்லான் சக்கரவர்த்தி ஸ்ரீனிவாசன்

N.C. SRINIVASAN

மதிப்புரை

ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வான்,
புரிசை நடாதூர் ஸ்ரீ உ.வே. கிருஷ்ணமாசார்யஸ்வாமி
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சம்பாதகர்

தர்சனம் என்பது சித்தாந்தத்தைச் சொல்லும். தர்சனம் என்பது கண்ணுக்கும் பெயர். நாம் வெளியில் செல்லும் போது, நமக்கு நல்ல மார்க்கத்தை காண்பிப்பது கண்களேயாகும். இதுபோல சித்தாந்தமும் நமக்கு நல்ல மார்க்கத்தைக் காண்பிக்கும். சாங்கிய, ஜைன, பௌத்தாதி தர்சனங்கள், வேதத்தை ஒப்புக் கொண்டுள்ள நமக்கு உபாதேயமாகாது. த்வைத அத்வைத சித்தாந்தங்களும் நமக்கு ஏற்புடையனவைகளல்ல. ஸ்வாமி தேசிகன், **"அகில தம: கர்சனம் தர்சனம் ந:"** என்று அருளிச் செய்தபடி, எல்லா அஞ்ஞானத்தையும் போக்கடித்து, நல்ல மார்க்கத்தைக் காண்பித்து, மோக்ஷத்தை அடைவிப்பது நம்முடைய ராமாநுஜ தர்சனமேயாகும்.

ராமாநுஜருடைய சித்தாந்தத்தை விளக்கி, நம் பூர்வாச்சார் யார்கள், பல கிரந்தங்களை அருளிச் செய்துள்ளார்கள். அவைகள் சம்ஸ்கிருத பாஷையிலேயே இருப்பதால், சம்ஸ்கிருதத்தை அறியாதவர்கள், நமது விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை அறிய இயலவில்லை. அக்கிரந்தங்களில் சிலவற்றிற்கு தமிழிலும், பாஷாந்தரத்திலும் வியாக்யானம் இருந்த போதிலும், ஆச்சார்யன் மூலமாகவே தெரிந்து கொள்ள கூடியதாய் இருக்கிறது. ஆகையால் நமது நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யங்கார் ஸ்வாமி ராமாநுஜ சித்தாந்த சங்கரஹத்தை அடியேற்றி சுறுக்கமாகவும், தெளிவாகவும் ஸ்ரீ ராமாநுஜ தர்சனம் என்கிற இந்த நூலை வெளியிட்டுள்ளார். இந்த ஸ்வாமி வித்வான், ஸாரஸாரஜ்ஞ கிரோன்மணி, திருக்கள்ளம் ஸ்ரீ உ.வே. நரசிம்ஹ ராகவாச்சாரி ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்யத்தை ஸமந்வயாதி கரண பர்யந்தம் காலக்ஷேபம் பண்ணியிருக்கிறார். அதன் பிறகு நம்மிடம் ஸ்ரீபாஷ்யம் பூராகவும் காலக்ஷேபம் செய்துள்ளார். நம்முடைய சித்தாந்தத்தில் தெளிவான ஞானமுடையவர். இந்த நூலை நாம் படித்துப் பார்த்தோம். குறை ஒன்றும் சொல்ல முடியாத ரீதியில் நன்கு அமைந்துள்ளது. இதை யாவரும் படித்து பயன்பெற கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை

புரிசை நடாதூர் கிருஷ்ணமாசாரியர்

அணிந்துரை

டாக்டர் டிஎஸ். நாராயணஸ்வாமி
யூனிசெப் சென்னை (UNICEF MADRAS)

புண்ணிய பாரதத்திற்குப் புகழையும் பெருமையையும் தேடித் தந்த, ஆன்மீகப் பெரியார்களில், ராமாநுஜர், தனக்கெனத் தனித் தத்துவ பாணியையும், சிறப்பினையும் கொண்டவர். நாராயண மந்திரத்தைப் பாமரனுக்கும் உபதேசித்து, எல்லோரும் உய்ய வழி செய்த, அவரின் வைணவ தத்துவங்கள், வாழ வழிகாட்டும் வரலாற்றுச் சொற்களாகும்.

ராமாநுஜரின் தத்துவங்களை ராமாநுஜ தர்சனம் என்ற நூலாகத் தொகுத்து வழங்கியுள்ளார். திரு N.C. ஸ்ரீனிவாசன் அவர்கள் தர்மச்சுடர் எனும் சமயப் பத்திரிக்கையில் வைணவ தத்துவங்களையும், கதைகளையும் எழுதி தமிழக வாசகர்களுக்கு அறிமுகமான ஒரு எழுத்தாளர் ஆவர். வைணவ சமய நூல்கள் பற்றிய நுண்ணிய அறிவும், பல ஆண்டு ஆராய்ச்சி அனுபவமும் கொண்ட அன்னாரின் இந்நூல் வைணவ தர்மத்தை வாழ வைக்க வருங்கால சந்ததிக்கு எடுத்துக்கூற ஒரு கல்வெட்டு போல திகழும் என்பது என் நம்பிக்கை. இந்து சமய ஆராய்ச்சியாளருக்கும், சொற்பொழிவாளர்களுக்கும், சமயக் கல்வியில் ஈடுபாடு கொண்ட, எதிர்கால சந்ததியினருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

சென்னை — டாக்டர் T.S. நாராயணசாமி

முன்னுரை

அறிவுக் கருவூலமான வேதாந்தம் என்ற உயிருக்கு, வடமொழி தத்துவ ஞான விளக்கங்களும், பகவத் விஷயமான தமிழ் மறையும் இரு உடல்களாகும். உபயவேதாந்தமான இந்த இரு கூறுகளையும், நன்கு ஆராய்ந்து, ஆழ்ந்து சிந்தித்து அதன் முடிவுகளை சித்தாந்தமாக வெளிப்படுத்தியவர் ஸ்ரீ ராமாநுஜர். இவைகளை கற்பதற்காக, வித்வான், ஸாரஸாரஜ்ஞ, சிரோன்மணி, திருக்கள்ளம் ஸ்ரீ உ.வே. நரசிம்ஹ ராகவாச்சார்ய ஸ்வாமிகளிடமும், ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வான், புரிசை, நடாதூர் ஸ்ரீ உ.வே. கிருஷ்ணமாச்சார்ய ஸ்வாமிகளிடமும், அடியேன் ஸ்ரீ பாஷ்யம் காலக்ஷேபம் செய்தேன். அப்பொழுது, அவ்வாச்சார்யார்கள் வழங்கிய வெகு அற்புதமான மேற்கோள்களினையும், உதாரணங்களையும், அடியேன் குறிப்பெடுத்துக் கொள்வது வழக்கம். இவ்வகையில் இந்த பயிற்சி எனது எழுத்தார்வத்தை தூண்ட, "தர்மச்சுடர்" எனும் ஆன்மீகப் பத்திரிக்கையில், வைணவ தத்துவங்களையும், ஆழ்வார்களின் வரலாறுகளையும் எழுதுவதற்கு ஊக்குவித்தவர் எனது நண்பர் டாக்டர் ஸ்ரீ T.S. நாராயண சுவாமி அவர்கள்.

விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களை விளக்கும் தமிழ் நூல்கள் அரிதாக இருப்பதால், இத்தத்துவங்களை எளிய தமிழ்நடையில் ஒரு நூலாக வெளியிட அவாக்கொண்டு, "யதீந்தர மததீபிகா" என்ற சித்தாந்த நூலின் அடிப்படையில், ஸ்ரீராநுஜ தர்சனம் என்ற இந்த நூலை வெளியிட்டுள்ளேன்.

இதை வடிவமைத்து, சரிபார்த்து கொடுத்த அன்பரும் எனது உறவினருமான ஸ்ரீ உ.வே. ராமபத்சாச்சாரி I.A.S. அவர்களுக்கு அடியேன் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். மேலும், சித்தாந்த விஷயங்களில், பொருள் குற்றம் தோன்றாத வகையில் ஆலோசனைகள் வழங்கி உதவி புரிந்த ஆச்சார்யார் புரிசை நடாதூர் உ.வே. ஸ்ரீ கிருஷ்ணமாச்சார்ய ஸ்வாமி அவர்களுக்கும், எனது எழுத்தார்வத்தை தூண்டிய டாக்டர் ஸ்ரீ T.S. நாராயணஸ்வாமி அவர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய நிறுவனத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

சென்னை

இப்படிக்கு
நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீனிவாசன்

பொருளடக்கம்

1. நிலைத்த நல்வழி

மனிதனாகப் பிறப்பது மிக அரிது. அப்படிப் பிறப்பினும், வாழ்க்கையின் குறிக்கோள்களை அறிந்து வாழ்வது மிக மிக அரிது.

பிறவி எடுத்து மறையும் வரை மேற்கொள்ளும் பயணம் தான் வாழ்க்கை! அந்த வாழ்க்கை, ஒரு ராஜபாட்டையாக அமையாமல், கல்லும் முள்ளும் நிறைந்த ஒரு துன்பப்பாதையாக அமைந்துள்ளது. இதற்கு காரணம், வாழ்க்கையின் குறிக்கோள்களை நாம் அறிந்து கொள்ளாததுதான். செல்வம் சேர்ப்பது, பொருள் தேடுவது, அதைக் கொண்டு இன்பம் நுகர்வது ஆகிய சாதாரண விஷயங்களே வாழ்க்கையின் குறிக்கோள்களாக அமைந்து விடுவதால் நாளடைவில் வாழ்க்கை சலிப்படைந்து விடுகிறது. செல்வ போகத்தோடு வார்ந்தவர்கள், செல்வம் இழந்த நிலையில், குடிசைகளில் வாழ்க்கைப் பயணத்தை நடத்திக் கொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம். ஆதலால் வாழ்க்கையின் குறிக்கோள் செல்வத்திற்கு அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பது திண்ணம்.

அந்த உயர்ந்த குறிக்கோள்களை, மனித இனத்திற்கு உணர்த்தும் வழிதான், சனாதன தர்மம்" என்ற "நிலைத்த நல்வழி"யாகும். இதுவே, பிற்காலத்தில் "மதம்" என்றும், "சமயம்" என்றும் வழங்கப்பட்டது.

உலக சமயங்களுள், மிகப்புராதனமானதும், தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும் அமையப்பெற்றது பாரத நாட்டில் மலர்ந்த சமயம்.

பாரத நாட்டில் மலர்ந்த சமயம், ஒரு தனி நபரின் சிந்தனையால் உருவாக்கப்பட்டதாகவோ, அல்லது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியதாகவோ அமைந்ததல்ல! அன்றாடம் பல வகையான ஊர்திகளில் நாம் பயணம் செய்கிறோம். ஆனால் அவைகளைக் கண்டு பிடித்தவர்களின் பெயரைக் கூட நாம் அறிய முயலவில்லை. மாறாக, மெய்ஞானத்தைப் போதித்த மாமுனிவர்களுள் ஒரு வசிஷ்டரையோ, விசுவாமித்திரரையோ, அகத்தியரையோ நாம் என்றும் மறந்ததில்லை. இமயத்தின் தாழ்வரையிலும், கங்கா நதி தீரத்திலும் வாழ்ந்த முனிவர்களும், ஞானிகளும் "மனம்-வாக்கு-காயம்" என்ற மூன்று கருவிகளையும் அடக்கி தவமிருந்து, இறைவன்

அருள் பெற்று, வேதாந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட "சமயம்" நமது பாரத நாட்டின் "சமயம்".

இது வேதங்களைச் சார்ந்த கொள்கைகளை உள்ளடக்கிய சமயம் என்ற காரணத்தால், அக்காலத்தில் "வைதீக சமயம்" என்று வழங்கப்பட்டது. காலப்போக்கில் சிந்து நதி பள்ளத்தாக்குகளில் வாழ்ந்தவர்களும், பிறகு அங்கு குடியேறியவர்களும் தங்களது கலாசாரத்தால் இணைந்து "வைதீக சமயத்தைச்" சார்ந்து வாழத் தொடங்கினார்கள். சிந்து நதியோடு தொடர்பு கொண்ட மக்கள் "இந்துக்கள்" என்றும், இவர்கள் சார்ந்து வளர்த்த வைதீக சமயம் "இந்து சமயம்" என்றும், சமயத்தை தோற்றுவித்த பாரதநாடு "இந்தியா" என்றும் வழங்கின.

மிகப் பழங்காலந்தொட்ட சமயமாயினும், "இந்து" என்ற சொல் பிற்காலத்தில் தோன்றியதே! வேத கோட்பாடுகளையும், தத்துவங்களையும் சார்ந்து வாழ்பவனை "இந்து" என்று அழைப்பது மரபு. மேலும், பிறர் துன்பம் கண்டு அதை தனதாக பாவித்து எவன் துயருறுகிறானோ, அவனை "இந்து" என்று கூறுவதற்கு "ஹிம்சாயாம் தூயதேய:ச: ஹிந்து ரித்ய மீதியதே" என்று விரித்து பொருள் கொள்வோரும் உண்டு. ஓர் குலமென்ற எண்ணம், அன்பு, இரக்கம் போன்ற கொள்கைகளை தன்னுள் கொண்டது "இ ந்து சமயம்".

மனித குலமனைத்திற்கும் ஏற்றதாகவும், இயற்கைக்கு பொருந்தியதாகவும், விஞ்ஞானத்திற்கு இசைந்ததாகவும், பிற சமயங்களின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்காததாகவும், உலக வாழ்க்கையோடு ஒன்றியதாகவும் அமையப் பெற்ற ஒரே மதம் இந்து சமயம்.

மனிதனின் எவ்வித மனப்பக்குவத்திற்கும் உகந்தவாறு அனுசரிக்க வாய்ப்புகள் கொண்ட சமயம்.

இல்லறத்தாருக்கும், துறவிகளுக்கும், மற்ற எல்லா வகுப்பினர்களுக்கும் முக்தி அடைய பல வழிகளைக் கொண்ட ஒரே சமயம் இந்து சமயம்.

இதர சமய கொள்கைகளுக்கு முன்னோடியாக இருப்பினும் பிற சமயங்களின் வளர்ச்சியை தடுக்கவோ, அல்லது தான் ஏற்காத கொள்கைகளை இழிவுபடுத்துதல் போன்ற குறுகிய கண் ணோட்டம் இந்து சமயத்தில் அறவே இல்லை!

சமயத்தின் சிறப்பு

கடலைப் போல விரிந்தும், நிறைந்தும், ஆழமும் கொண்ட இந்து சமயம் முன்காலத்தில் அன்னிய நாடுகளிலும் பரவியிருந்தது.

காம்போஜம், இந்தோனிஷீயா, சீனா, தாய்லாந்து, மொரீஷஸ், பாலித்தீவு முதலிய நாடுகளிலெல்லாம் பரவியிருந்தது என்பதற்கு வரலாற்று சான்றுகள் உள.

கடாரம் என்றும், சுவர்ண பூமி என்றும் வழங்கிய பர்மாவில் 3,000 ஆண்டுகளுக்கு முன்பே இந்து சமய தொடர்பு கொண்டிருந்தது. ஒரு பெரிய நதியே தேவேந்திரனின் வாகனமான **"ஐராவதம்"** என்று வழங்கப்பட்டது. அவர்கள் நீதி சட்டங்கள், நமது பாரத நாட்டின் மனு நீதி சாத்திரங்களை தழுவியதாகவே அமைந்திருந்தன என்று பாலி (BAALI) மொழி சாசனங்களிலிருந்து தெரிய வருகிறது.

தாய்லாந்தின் மொழியான சயாம் மொழியில் அதிக அளவில் சமஸ்கிருத சொற்கள் கலந்துள்ளன. அங்கே விஷ்ணுவிற்கும், சிவனுக்கும் ஆலயங்கள் எழுப்பப்பட்டிருந்தனவென்றும், மார்கழி மாதத்தில் பாவை நோன்பும் அனுசரிக்கப்பட்டதென்றும் வரலாற்று சான்றுகள் கூறுகின்றன.

பாலித்தீவில் இந்து சமயக் கொள்கைகளையே பின்பற்றி வாழ்ந்தார்களாம்!

இப்படி பல சான்றுகள்.

இந்திய நாட்டின் பண்பாட்டினை விளங்கும் இதிகாச புராணங்களில் கூறியுள்ள தத்துவங்களை ஆராயப்புகின் அவற்றினுள் பொதிந்துள்ள கொள்கைகளனைத்தும் மேம் பட்டவை என்றும், மேற்கத்திய நாடுகளில் வழங்கும் பிராதன கிரேக்க மற்றும் ரோம தத்துவங்களைக் காட்டிலும், இந்த சமயத் தத்துவங்கள் மிகச் சிறந்தவை என்று மேனாட்டு தத்துவஞானி மாக்ஸ்முல்லர் தனது கீழை நாட்டுத் தத்துவங்கள் என்ற நூலில் கூறியுள்ளார்.

சமயங்கள் தோன்றிய காலம்

இந்து சமயக்கோட்பாடுகள் ஏட்டில் அடங்கக் கூடியவையல்ல. வரலாற்றிற்கு முற்பட்ட காலந்தொட்டு வழங்கிவருவதால், சமயம் தோன்றிய காலத்தை அறுதியிட்டு கூற இயலவில்லை. ஆனால் உலகில் தோன்றிய பிற சமயங்கள் அனைத்திற்கும் தோன்றிய காலத்தை திட்டவட்டமாக கூற இயலும்.

கிரிஸ்துவம் - கி.பி. முதல் நூற்றாண்டு

இஸ்லாம் - கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில்

சீக்கியம் - கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில்

சமணம் - கி.மு. 600 ஆண்டுகள்

பௌத்தம் - கி.மு. 560 ஆண்டுகள்

சௌராத்திரர் பரப்பிய பாரசீக மதம்
- கி.மு. 670 ஆண்டுகள்

யூத மற்ற ரோமானிய மதங்கள்
- கி.மு. 1500 ஆண்டுகள்

வரலாற்றிற்கு முற்பட்டதாயினும், காலத்தால் மங்காமல் புதுப்பொலிவுடன் இன்றும் விளங்கும் "இந்து சமயம்" அனேக பிரிவுகளைக் கொண்டது.

அவைகளுள் ஒன்று "வைணவம்".

2. வைணவம்

பாரதத்தில் அநேக தத்துவங்கள் தோன்றிடினும், இந்து சமய தத்துவங்களுக்கு மூலாதாரமாக அமைந்துள்ளது வேத வேதாந்தங்கள். இவைகளுள் அநேக உட்பிரிவுகள் இருப்பினும், இந்து என்பவன் வேதங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். வேதங்களை ஏற்றுக் கொள்ளாது, இறைவனை மட்டும் ஏற்றுக் கொள்பவர்களை, இந்து என்று கூறுவது மரபில்லை. இறைவனை ஏற்றுக்கொள்ளாத மீமாம்சகர்களும், வேதங்களை ஏற்றுக் கொண்டதால் இந்துக்கள் என்றே வழங்கப்பட்டார்கள்!

மக்களனைவரும் தத்துவஞானம் பெற்று, அதன் அடிப்படையில் சிந்திக்க இயலாத காரணத்தால் அவர்களின் மனப்பக்குவத்திற்கேற்றபடி கடவுளை உருவகப்படுத்தி வணங்கும் போது, மனம் எளிதில் அந்த உருவங்களைப் பற்றிக் கொள்கிறது. அதனால், கடவுளின் பல உருவங்களை வணங்க அனுமதித்திருப்பது இந்து மதத்தின் தனிச் சிறப்பு!

இந்து சமயத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான "வைணவம்" ஆதி சமயங்களுள் ஒன்று. வைணவம் என்ற சொல்லிற்கு ஆதாரம் "விஷ்ணு" என்ற சொல். விஷ்ணு என்ற சொல்லிற்கு பிரபஞ்சமெங்கிலும், அனைத்துயிர்களிலும், அனைத்துப் பொருள்களிலும் பரவியுள்ளவன் என்று பொருள்.

எழுத்துக்கலை தோன்றுவதற்கு முன் தோன்றியவை வேதங்கள். ஓராண் வாய்மொழியாக, இறைவனால் பிரும்மாவிற்கு உபதேசித்து பிரும்மாவிடமிருந்து வழிவழியாக மனித சமுதாயத்திற்கு வழங்கப்பட்ட அருமையான பொக்கிஷங்கள் வேதங்கள். இதை வரிசைப்படுத்தியவர் "வேதவியாசராவார்". நான்கு வேதங்களான, "ரிக்", "யஜுர்", "சாம", "அதர்வண" ஆகியவைகளுள், காலத்தால் முந்தியது "ரிக்வேதம்". இறுதியில் வெளியிடப்பட்டது "அதர்வண வேதம்".

மிக புராதனமான ரிக்வேதம், சரித்திர - வான நூல் ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி நோக்கிய போதிலும், 4800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படுகிறது. இந்த வேதத்தில் அநேக இடங்களில் விஷ்ணுவைப் பற்றிய குறிப்புகள் உள.

தருமத்தை நிலை நிறுத்த விஷ்ணுமூர்த்தி **"உருக்ரமன்"** என்ற வடிவில் தனது இரண்டு அடிகளால், பிரபஞ்சத்தை அளந்து தனது உடைமையாக்கிக் கொண்டவன் என்று கூறுகிறது ரிக்வேதம். மேலும், விஷ்ணு எங்கும் பரவி உள்ளவன். பிரபஞ்சத்தையே தனக்கு சரீரமாக கொண்டவன், அதற்கு உணவையும், நீரையும் அளிப்பவன் என்றும் கூறுகின்றது. பிரபஞ்சம் முழுவதையும் தனது உடைமையாக்கிக் கொண்ட விஷ்ணுவை **"புருஷோத்தமன்"** என்றும், உயிர்களையும் - ஜடப்பொருள்களையும் தனது இருப்பிடமாக (அயனமாக) கொண்டவன் என்ற நிலையில் **"நாராயணன்"** என்றும் போற்றப்படுகிறான். (நாராணாம் + அயனம் = நாராயணன்) **"திரு"** என்ற பெரிய பிராட்டியை தனது மார்பில் கொண்டு விளங்குவதால் **"ஸ்ரீமந் நாராயணனன்"** என்றும் **"திருமால்"** என்றும் வழங்கப்படுகிறான். அதனால். ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருளான "பரப்பிரம்ஹம்" என்று கூறப்படுகிறது.

ரிக்வேதம் - யஜுர் வேதம் ஆகிய இரண்டு வேதங்களும், ஸ்ரீமந் நாராயணனை எல்லா நற்குணங்களுக்கு இருப்பிடமானவன் என்று கூறுகின்றன.

அவைகள்:

சர்வரக்ஷகன்,
பிரபஞ்சத்தைப் படைப்பவன்,
உலகத்தை தாங்குபவன்,
சத்துவ திருமேனி கொண்டபவன்,
சரணாகதி செய்பவர்களுக்கு முக்தி அளிப்பவன்,
அவனை அடையத் தக்க வழியாக விளங்குபவன்,
அவனே பலனுமாக இருப்பவன்,
பிறக்கும் ஒவ்வொரு ஜீவனுக்கும் பாதுகாப்பு அளிப்பவன்,
சூர்யனாக ஒளியை தருபவன்,
பர்ஜன்யனாக மழையைப் பொழிபவன்,
வேள்விக்கு தலைவனாக இருப்பவன்,
வேள்வி வடிவினன்,
வேள்வியில் பலனை அளிப்பவன்,
வேள்வியில் போற்றப்படுபவன்,
வேள்வி சொரூபனாக திகழும் போது
அவருடன் இந்திரன் - வருணன் - அக்நீ -
மித்ரன் - அரியமான் - வாயு - மருத் -

ஆதித்யன் - சோமன் - அதிதி
ஆகியோர்களும் உடன் இருக்க பெருமை கொண்டவன்!

மேலும், சூர்யனின் உருவமாக கூறும் போது சூர்யனின் போழ்தில் காலை - மதியம் - மாலை ஆகிய மூன்று நிலைகளை விஷ்ணு அளந்த மூன்று அடிகளுக்கு ஒப்பாக கூறகின்றது வேதங்கள்.

விஷ்ணுவின் வலது கரத்தில் சூழன்று கொண்டிருக்கும் சக்கரத்த காலச்சக்கரம் என்றும் வர்ணிக்கிறது. அது

அயனங்கள்	-	2
ருதுக்கள்	-	6
மாதங்கள்	-	12
பக்ஷங்கள்	-	24
தினங்கள்	-	30
யாமங்கள்	-	8
லக்னங்கள்	-	12

என்று 94 ஆரங்கள் அமையப்பெற்று, ஒரு சுழற்சி ஒரு ஆண்டாக கணக்கிடப்படுகிறது என்று கூறுகிறது வேதம்.

பிரபஞ்சத்தை மூன்று உலகங்களாக அளந்தவர் விஷ்ணு என்றும், அதில் ஒன்று "பரமபதம்" என்ற "கலங்காப் பெருநகரம்" என்றும், அங்கு உறைபவர் "ஸ்ரீமந் நாராயணன்" என்றும், அவரிடமிருந்தே அனைத்தும் உண்டாயிற்று என்றும், அப்படி உண்டாவதற்கு காரணமும் அதை தாங்குபவனும் அவனேயென்றும், அவனைத் தவிர வேறு இல்லை என்று கூறும் ஒரு மந்திரம் யஜுர் வேதத்தில் உள்ளது.

அந்த மந்திரம்

"இதம் விஷ்ணுர் விசக்ரமே த்ரேதா நிததே பதம்"
"திரீணிபதா விசக்ரமே"

பரமபதமே, ஜீவர்களின் நீண்ட நெடிய பயணத்தின் எல்லையாக விளங்குகிறது என்று "கடோப நிஷத்" கூறகிறது.

இதிகாச புராணங்களில், "ஸ்ரீமத் ராமாயணம்", "மஹாபாரதம்", "ஸ்ரீமத் பாகவதம்", "ஸ்ரீவிஷ்ணு புராணம்" ஆகியவைகள், விஷ்ணுவைப் பற்றியே கூறுபவைகளாகவே அமைந்துள்ளன.

ஸ்ரீமந் நாராயணனின் அவதாரமான ஸ்ரீராமனின் வரலாற்று

சிறப்பையும், வைணவத்தின் கொள்கையான சரணாகதி தத்துவத்தையும், மேம்பட விளங்கும் நூல் ஸ்ரீமத் ராமாயணம்.

திருமாலின் அவதாரமான ஸ்ரீகிருஷ்ணனின் சம்பந்தம் கொண்டது மஹாபாரதம். பீஷ்மரால் யுதிஷ்டரனுக்கு உபதேசிக்கப்பட்ட **"விஷ்ணு சஹஸ்ரநாமமும்"**, அர்ச்சுணனுக்கு கிருஷ்ணனால் உபதேசிக்கப்பட்ட **"பகவத் கீதையையும்"** தன்னுள் கொண்டது என்ற பெருமை வாய்ந்த நூலாகும்.

ஸ்ரீமத் பாகவதமோ, திருமாலின் அவதாரமான கண்ணனின் வரலாற்றுச் சிறப்பைக் கூறுவது.

விஷ்ணுவைப் பற்றி கூறும் புராணம் விஷ்ணு புராணம்.

பெருமளவில் மக்களிடையே பரவியுள்ள இந்த நூல்களனைத்துமே வைணவ நூல்கள் என்று கூற தடையேதுமில்லை!

இத்துணை சீரும் - சிறப்பும் கொண்ட வைணவமும், விஷ்ணு வழிபாடும் வேத காலந்தொட்டே பாரத நாட்டில் பரவியுள்ளனவையாக இருப்பினும், குறிப்பாக வடபகுதியில் கிருஷ்ண பகவானின் ஜன்ம பூமியான "மதுரா"வில் வாசுதேவ கிருஷ்ண வழிபாடு, வெகுகாலமாகவே வழக்கிலுள்ளது என்பதற்கு சான்றுகள் உள. மேலை நாட்டு யாத்ரீகர் ஒருவர், அப்பகுதியில் ஓடும் **"ஜம்நப்"** என்ற நதிக்கரையில் அமைந்துள்ள, ஒரு நகரத்தில், கிருஷ்ண வழிபாடு வெகுகலந்தெட்டே நிலவியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். இதை ஆழ்ந்து நோக்கின் யமுனை என்ற நதியையும் மதுரா என்ற நகரத்தையும் குறிப்பிட்டிருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது. மேலும் குப்தர்கள் ஆட்சியிலும் வைணவம் சிறப்புற்றிருந்ததாக வரலாறு கூறுகிறது.

அண்மை காலத்திலும் வடநாட்டில் வைணவத்தைப் பரப்பியவர்களுள் **"ஜயதேவர் - வல்லபாசார்யர் - ராமாநந்தர் - சைதன்ய மஹாப்பிரபு - துளசிதாசர் - ராமதாஸ்"** ஆகியோரை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

வடநாட்டைப் போலவே, தென்னாட்டிலும் விஷ்ணு வழிபாடும் வைணவமும் வெகுகாலத்திற்கு முன்பே பரவியிருந்தது.

சங்க கால நூலான "பரிபாடல்" திருமாலை ஸ்ரீவிஷ்ணு என்றும், ஸ்ரீமந் நாராயணன் என்றும் கூறுகிறது. "பெரும்பாணாற்றுப்படை" என்ற சங்க நூலிலும், முப்பெருங்கடவுள்களுக்கும், தலைவன் திருமால் என்றும், அவன் திருவை மார்பில் கொண்டவன், பாம்பை படுக்கையாகக் கொண்டவன், கருடன் என்ற பறவையை கொடியில் கொண்டவன், அவன் நீல நிறத்தவன் என்றும் பலவாறாக புகழ்ந்து பேசுகின்றது.

சிலப்பதிகாரத்திலும், திருமாலைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளது.

கோவலன், தனது மனைவி கண்ணகியை மதுரைக்கருகில் ஒரு இடைச்சேரியில் தங்க வைத்து விட்டு அவளது கால் சிலம்பு ஒன்றை விற்கப் போன இடத்தில், கள்வன் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, மரண தண்டனை அனுபவித்த போது, கண்ணகிக்கும், சேரியிலுள்ள ஆய்ச்சியர்களுக்கும், பல அபசகுணங்கள் தோன்றியதாம்! அதற்கு கழுவாயாக ஆய்ச்சியர்கள் தங்களது குல தெய்வமான ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து குரவைக் கூத்து ஆடினார்களாம்!

ஆய்ச்சியர் குரவையென்றும், குரவைக் கூத்து என்றும் கூறப்படும் கிராமிய நடனத்தை ஆய்ச்சியர்கள் வட்டமாக நின்று ஆடிப்பாடி திருமாலுக்கே உரிய ஒரு வழிபாட்டு நிகழ்ச்சியாக கருதி வந்தார்கள்.

குரவைக் கூத்தில் ஆய்ச்சியர்கள் பாடிய பாடல்கள், திருமாலின் பல லீலைகளை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தன. அக்காலத்திலேயே விஷ்ணு வழிபாட்டில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்த பழந்தமிழர்களால் பாடப் பட்ட பாடல்களா? இவைகள், என்று வியக்கும் வண்ணம், பொருளாழத்தோடு செவிக்கினிமையாகவும் அமைந்திருக்கின்றன!

அவைகள்,

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல் வண்ணன்! பண்டொருநாள் கடல்வயிறு
கலக்கினையே
கலக்கிய கை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர் கமல உந்தியாய்! மாயமோ? மருட் கைந்தே!

"அறுபொருள் இவன் என்றே அமரர் கணம் தொழுதேத்த

உறுபசி ஒன்(று) இன்றியே உலகடைய உண்டனையே,
உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டலாய்
வண் துழாய் மாலையாய்! மாயமோ? மருட்கைந்தே

"திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்! நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகம் இருள் தீர நடந்தனையே
நடந்த அடி, பஞ்சவர்க்குத் தூதாக நடந்த அடி!
மடங்கலாய்! மாறட்டாய்! மாயமோ? மருட்கைந்தே

"மூவுலகும் ஈரடியால் முகைநிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி சேப்பத்தம்பியோடும் கான்போந்து.
சோ அரணும் போர் மடிய தொல் இலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே!
திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே!

"மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்(து) ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை எத்தாத நாவென்ன நாவே!
நாராயணா என்னா நாவென்ன நாவே"

ஆய்ச்சியர்கள் பாடிய இந்தப் பாடல்களும், பிரபந்தப் பாசுரங்களைப் போலவே, எவ்வளவு நயமாகவும், உருக்கமாகவும், ஸ்ரீமந் நாராயணனின் அவதாரங்களான ஸ்ரீராமனைப் பற்றியும், ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றியும் அமைந்துள்ளன! கண்ணகி வரலாறு கூறும் சிலப்பதிகாரம் தோன்றிய காலத்திலேயே விஷ்ணு பக்தி தமிழ் மக்களிடையே வெகு ஆழமாகவே பரவியிருந்தது என்பதற்கு இந்த தீஞ்சுவைப்பாடல்களே நமக்கு சான்று.

தமிழ் முனிவர் அகத்தியருடைய சீடரான "தொல்காப்பியர்" விஷ்ணுவை முல்லை நாட்டுத் தெய்வமாகக் காடுகளிலும் காடுசார்ந்த இடங்களிலும் வசித்த பழங்குடி மக்கள் வழிபட்டு வந்தார்களென்று தம் "தொல்காப்பியத்தில்" கூறியுள்ளார்.

இதற்கேற்ப, தேனோங்கிய சோலைக்காடு என்ற "திருவேங்கடத்திலும்"; வானோங்கிய சோலைக்காடு என்ற "திருமாலிருஞ்சோலையிலும்"; புனல் சூழ்ந்த சோலைக்காடு என்ற "திருவரங்கத்திலும்" திருமாலுக்கு தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்களே தொல்காப்பியரின் கூற்றை உறுதிப்படுத்துகிறது.

மேலும், இந்த புராதன ஆலயங்களுள், உறையும் திருமாலான

திருவரங்கத்து பள்ளிகொண்டானையும், வேங்கடத்து மலைமேல் நின்றானையும், சிறப்பாக சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார், சமண சயத்தை சார்ந்த "இளங்கோவடிகள்".

"நீலமேகம் நெடும் பொற் குன்றத்துப்
பால்விரிந்(து) அகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழுதலையுடை அருந்திறல் -
பாயிற் பள்ளிப் பலர் தொழுது ஏத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்
திரு அமர்மார்பன் கிடந்த வண்ணமும்"

என்று ஞானத்துயில் புரியும் அரங்கனின் சயனத்திருக்கோலத்தையும்

"விங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத்து உச்சிமீ ழிசை
விரிகதிர் ஞாயிறும், திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடை நிலைத் தானத்து
மின்னுக் கோடி உடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிறம் மேகம் நின்றதுப்போலப்
பகை அணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நிலம் கிளர் ஆரம் மார்பிள் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிச்
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்

என்று திருமால் திருமலையில் நின்ற கோலத்தையும், நம் கண்முன் நிறுத்தியுள்ளார்.

இப்பாடல் திருமலை மீது எழுந்தருளியிருக்கும் திருவேங்கடலனைப் பற்றியது. சைவத்தையோ, வைணவத்தையோ சாராத இளங்கோவடிகள், திருமலைத் தெய்வத்தை "ஆழியும் பால் வெண் சங்கமும் தாமரைக் கையில் ஏந்தி நின்றவண்ணமும்" என்று புகழ்ந்ததிலிருந்து, அவர் திருமால் தான் என்று உறுதிப் படுத்தியுள்ளார். மேலும், அக்காலத்திலேயே தமிழ்நாட்டில், வைணவம் ஆதி சமயமாக திகழ்ந்தது என்பதும் விளங்குகின்றது.

வைணவ சமயத்தை "பாகவத தர்மம்" என்றும் கூறுவது அக்காலத்திய மரபு. அதனால் விஷ்ணு பக்தியில் சிறந்தவர்களை "பாகவதர்கள்" என்று கூறுவது வழக்கம். இல்லற வாழ்க்கையில் ஈடுபடாது துறவியாக, தலம்தோறும் யாத்திரை செய்துகொண்டு

பாகவத தர்மத்தைப் பரப்பியவர்களை "**பகவர்**" என்றும் சிறப்பாக "**முக்கோல்பகவர்கள்**" என்றும் அழைப்பதுமுண்டு.

"**பகவன்**" என்ற சொல் "**பகவான்**" என்ற சொல்லின் திரிபு. பகவான் என்ற சொல் பொதுவாக இறைவனைக் குறிப்பிடினும், குறிப்பாக திருமாலையே உணர்த்தும் சொல்லாக வழங்கி வருகிறது.

திருவள்ளுவருடைய முதல் குறட்பாவில் "**ஆதி பகவன் முதற்றே உலகு**" என்ற அடியில் வரும் பகவன் என்ற சொல், உலக உற்பத்திக்கு காரணமாக ஸ்ரீமந் நாராயணன் என்ற திருமாலையே குறிக்கும் என்பது பல ஆராய்ச்சியாளர்களின் கருத்து!

மேலும் தெய்வங்களின் பெயர்களை தனது குறட்பாக்களில் குறிப்பிடாத திருவள்ளுவர் 610வது குறளில் "**அடியளந்தான்**" என்று திருமாலை சுட்டிக்காட்டுவதாக அமையப் பெற்றதிலிருந்து, விஷ்ணு வழிபாடு வள்ளுவர் காலத்திற்கு முன்பே பரவியிருந்தது என்பது தெளிவு.

3. வைணவப்பண்பாடு

ஒருவன் காயமடைந்து இரத்தம் சிந்தும் போது, நீயும் இரத்தம் பெருக காயமடைந்திருப்பதாக உணர்ந்தால், நீ ஒரு வைணவன் என்று கூரத்தாழ்வாரின் புத்திரரான "பராசரப்பட்டர்" வாயிலாக வெளிவந்த கருத்தை அவரது சீடர் "நஞ்சீயர்" கூறுகிறார். நஞ்சீயர் காட்டும் "காருண்ய அன்பு நெறி" ஆழ்மனத்தையே தொட்டுவிடுகிறது. பிறர் துன்பம் கண்டு பொறுக்கமாட்டாமல் உதவுவது, பாகவத்தொண்டாற்றுவது ஆகிய நெறிகள், அனைத்துலகமும் பகவானுக்கு சரீரம் என்ற வைணவ தத்துவத்திற்கிணங்க, உலக கைங்கர்யமாகவும், மிகச் சிறந்த சமூக சேவையாகவும் உருவாகி விடுகின்றதே!

பொதுவாக அஹிம்சையை எல்லா சமயங்களும் வற்புறுத்திடினும், பிராணிகளும் துன்பப்படும் போது உதவிபுரியும் "பூத-தயை" என்ற ஜிவ காருண்ய செயல் வைணவ தர்மத்தில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது!

ஒரு சமயம், வைணவ ஆச்சார்யாரான "ராமானுஜரும்" அவரது சீடர் "எம்பாரும்" திருமலையிலுள்ள குளத்தில் நீராடிவிட்டு திரும்பும் போது, ஒரு பாம்பு துன்பபப்டுவதைக் கண்டு, அதற்கு தீர்வுகண்டு மீண்டும் நீராடிவிட்டுத் திரும்பினார் எம்பார். இதற்கு ராமானுஜர் காரணம் வினவ "பாம்பின் வாயில் முள் குத்தியிருந்ததை வாங்கிவிட்டு மீண்டும் நீராடிவிட்டு வருகிறேன்" என்று பதில் கூறினாராம் எம்பார். இப்படியும் ஒரு பூத தயையா? என்று பாராட்டினாராம் ராமானுஜர்.

இப்படியொரு அன்பு நெறியையும், அருள் நெறியையும் வளர்க்கும் வைணவனை உருவாக்கிய தீஞ்சுவை ஊற்றான வைணவத்தை நமக்கு அள்ளி பருகக் கொடுத்தவர்கள் ஆழ்வார்களும் ஆச்சார்யார்களும்.

"யார் வைணவன்"? என்ற வினாவிற்கு "நரசிம்மமேத்தா" என்றும் "நார்ஸிமேத்தா" என்றும் பிரபலமாயிருந்த ஒரு குஜராத்தி கவிஞர் வைணவ இலக்கணத்தைப் பற்றி ஒரு பாடலாகவே விடை அளித்துள்ளார்.

மஹாத்மா காந்தி இந்தப் பாடலில் கருத்துகளைச் சார்ந்தே, அஹிம்சா தர்மத்தை கைக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

அப்பாடல்

1 "வைஷ்ணவ ஜனதோ தேனே கஹியே
ஜே பீட பராவோ ஜானரே
பர துக்கே உபகார கரேதோயே
மன அபிமான ந ஆணேரே" -

2 "சகல லோகமாம் சஹீனே வந்தே
நிந்தா நகரே கேணீ ரே
வாச-காச மன நிச்சலராகே
தந்தந் ஜனனீ தேனீரே"

3 "ஸமதிருஷ்டினே த்ருஷ்ணா த்யாகி
பரஸ்திரி கீ ஜேனே மாதரே
ஜிஹ்வா தகீ அஸத்ய ந போலே
பரதன நவ ஜானே ஹாதரே" -

4 "மோஹமாய வ்யாயே நஸி ஜேனே
த்ருடவைராக்ய ஜேனா மன மாம்ரே
ராம நாஸரம் தாளீலாகி
ஸகல தீரத தேனா தன மாம்ரே"

5 "வணலோபீ நே கபட ரஸிதசே
காமக்ரோத நிவார் யாரே
பணே நரஸம்யோ தேனும் தரஸனகரதாம்
குல ஏகோ தேர தார்யாம்ரே"

இதன் பொருள்:

1. பிறர் துன்பங்களையும், கஷ்டங்களையும் கண்டு அவைகளைக் களைய உதபுவனும், அதே நேரத்தில் தற்பெருமை கொள்ளாமல் இருப்பவனே "வைணவன்".

2. எவன் உயிரினங்களை மக்கள் போல மதித்தும், பிறரை தூஷணை செய்யாமலும், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கருவிகளையும், சலன மின்றி சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பவன் எவனோ? அவனை பெற்றவள் புண்யவதி.

3. எவன் சமநோக்கு கொண்டவனோ, மனதாபத்தை

விட்டொழித்தவனோ, பிறஸ்திரிகளை தாயாக மதிப்பவனோ, பொய் கூறாதவனோ, பிறர் பொருளை கையினால் தீண்டாதவனோ, அவனே உண்மையான "வைணவன்".

4. மோஹத்தை வெறுப்பவனும், மனதில் திடவைராக்யம் கொண்டவனும், காமத்தையும், கோபத்தையும் வென்றவனுமானவனே, உண்மையான வைணவன்.

5. வைணவ லக்ஷணமே கைங்கர்யம்தான்! நித்ய கைங்கர்யம் செய்ய பகவான் உடலையும், உள்ளத்தையும் கொடுத்திருக்கிறான். அதனால், தொண்டில் தன்னை அர்பணித்துக் கொள்பவனே "வைணவன்".

கைங்கர்யமே வைணவ லஷணம் என்ற இப்பாடலின் கருத்தை வேறொரு வகையில் நோக்குவோம்.

ஒரு சமயம் கூரத்தாழ்வானின் குமாரர் ஸ்ரீபராசரபட்டர் திருவரங்கத்தில் உபன்யாசம் நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது, கூட்டத்திலிருந்து ஒருவர் "வைணவன் என்பவர் யார்"? என்று ஒரு வினாவைக் கேட்டார். மிக சாதாரணமான, வெகுளித்தமான வினாவாக இருந்த போதிலும், பட்டர், அவரை திருமலையில் மலர் தொண்டு புரியும் அனந்தாழ்வானிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி கூறி அனுப்பினார்.

அவரும், திருமலைக்கு பயணப்பட்டு, அனந்தாழ்வானை சந்தித்து, தனது வினாவிற்கு விடையளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஆனால் அவருக்கு உடனே விடை கிடைக்கவில்லை. மாறாக ஒரு புதிய அனுபவம் கிட்டியது. அனந்தாழ்வான், அவரை அன்புடன் உபசரித்து, உணவு உட்கொள்ள அழைத்துச் சென்றார்.

வைணவ பாகவதர்களுக்கு அமுது அளிப்பதை "ததீயாராதனம்" என்று வைணவர்கள் கூறுவார்கள். அனந்தாழ்வானின் திருமாளிகையில் தகுதிக்கேற்றவாறு, ஏழு பங்திகளாக அமைத்து உணவளிப்பது வழக்கம். ஸ்ரீரங்கத்து வைணவரை முதல் பங்திவிருந்தினராக அமர்த்தினார். ஆனால், அவரோ அங்கு அமர்வதற்கு மிகவும் தயங்கினார். அந்த நிலைக்கு தான் தகுதியல்ல என்பதையும் உணர்ந்தார். இருப்பினும் அங்கேயே அமர்த்தப்பட்டு

முதல் நாள் விருந்து முடிந்தது. இவ்விதம் தினமும் ஒவ்வொரு பங்தியாக தாழ்த்தி, ஏழாம் பங்தியில் அமரச் செய்த போது, அவர் சிறிதும் தயக்கம் காட்டாது முகம் மலர்ந்து உணவு உட்கொண்டார்.

விருந்தோம்பல் முடிந்ததும், அனந்தாழ்வான், அவரை நோக்கி, உமது வினாவிற்கு "தாங்களே விடை" என்றார்.

எதிர்பாராத விடையை செவியுற்றதும், ஸ்ரீரங்கத்து வைணவர் ஒன்றும் புரியாமல் தயங்கிய போது, அனந்தாழ்வான், ஸ்வாமி வைணவன் என்பவன்:

"கொக்கைப் போல இருப்பான்,
கோழியைப் போல இருப்பான்,
உப்பைப் போல இருப்பான்,
உம்மைப் போலவும் இருப்பான்".

என்று கூறி அதன் பொருளையும் விளக்கினார்.

கொக்கு வெண்மையானது. நீர் நிலைகளிலே, தனக்குரிய மீனை பெறுவதற்கு ஒற்றைக்காலில் நின்று கொண்டு ஒரு யோகியைப் போல காணப்படும். வைணவனும் புனித நீர்க்கரைகளில் வசிப்பவன். கொக்கின் வண்ணத்தைப் போல கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவன். தனக்கு வழிகாட்ட ஒரு தகுந்த ஆசிரியரை தேடுவதிலும், தோழமை கொள்வதிலும் ஒரு யோகியைப் போல காத்திருப்பவன்.

கோழி குப்பையைக் கிளறி, தனக்கு வேண்டிய தான்ய மணிகளை மட்டும் கொத்திக் கொண்டு செத்தைகளை விலக்கிவிடும். வைணவனும் வேதசாஸ்திரங்களை ஆராய்ந்து, சாரத்தை மட்டும் கிரகித்துக் கொள்வதிலும், பிறரிடமுள்ள குற்றங்களை தள்ளி, குணங்களை மட்டும் ஏற்றுக் கொள்வதிலும் நாட்டமாயிருப்பவன்.

உப்பு, தன்னை அழித்துக் கொண்டு பதார்த்தங்களுக்கு சுவையூட்டும். உப்பு இன்றியமையாதது என்பதற்காக முனைந்து நின்றால் கண்டனத்திற்குள்ளாகிவிடும். தான் அழிய கரியமுதுக்கு சுவையூட்டும் பொழுது, உப்பின் உயர்நிலை புகழப்படும். உண்பவனுக்கு உணவுருசியாக இருக்கிறது என்ற எண்ணம் தான் வரவேண்டுமே யன்றி உப்பின் நினைவே வரக்கூடாது. வைணவனும் மற்றவர்கள் தன்னை புகழும் போது அடக்கத்துடன் **"நீசனேன் நிறை ஒன்று மிலேன்"** என்று தன் குறைகளை நினைத்துப் பார்ப்பான். மாறாக "நீசனே" என்று அவமதித்த

போதிலும் சினந்து சீறாமல் "அடியேன் குறைகளை நினைவூட்டியதற்காக நன்றி" என்று இன்முகத்தோடு கூறுவான். தொண்டாற்றுவதிலும், முனைந்து நிற்காமல் தன்னை சிறிதும் காட்டிக் கொள்ளாமல் கைங்கர்யங்கள் செய்வான். கைங்கர்யத்தில் தான் கரைந்து போய்விட வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கும். ஒருவனின் கைங்கரியத்தைப் புகழ வேண்டுமேயன்றி, கைங்கர்யம் செய்பவனை புகழக்கூடாது. பெயரும் புகழும் கைங்கர்யத்திற்கு இடையூறுகள்.

ஸ்ரீரங்கத்து வைணவரை முதல்நாள் விருந்துண்ண அமரச்செய்ததும், முதலிடம் தனக்கு தகுதியில்லை, என்ற அடக்க உணர்வால் கூச்சப்பட்டார். ஒவ்வொரு நாளும் அடுத்தடுத்த இடத்தில் அமரச் செய்தபோதும் இன்முகத்தோடு காணப்பட்டார். அடியார்களுக்குமடியேன், கடையர்களுள் கடையேன் என்ற அகங்காரமற்ற நிலைக்கு தன்னை உயர்த்திக் கொண்டதால், இடத்தாழ்வு பற்றி அவரது மனம் வேறுபடவில்லை. மேலும், "நான் இன்றியமையாதவன்" என்ற எண்ணம் சேவைமனப்பான்மையை, வேரிலேயே அழிந்துவிடும். இதன் காரணமாகவே அனந்தாழ்வான், ஸ்ரீரங்கத்து வைணவரை நோக்கி "உம்மையும் போல் இருப்பான் வைணவன்" என்று கூறியது.

ஸ்ரீராமனுஜர் வளர்த்த வைணவத்தை கடைப்பிடித்து ஒழுகுபவன், நம்மாழ்வார் அருளிச் செய்தபடி **"உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும்"** எல்லாம் கண்ணன், என்று தனது பாரங்களை அவன் அடிகளில் ஒப்புவித்து விடுவான்! பக்தியைக்கூட சிறப்பாக கருதாமல், பகவானின் திருவடிகளையே உபாயமாக கருதுவான்.

வைணவர்களுக்கு பகவத் கைங்கர்யம் ஒரே பயன்.

வைணவர்களுக்கு பரப்பிரம்மான ஸ்ரீமந் நாராயணனே ஒரே தெய்வம்.

வைணவர்கள் சரணமடைவது ஸ்ரீமந் நாராயணன் ஒருவனிடமே.

"பிள்ளை லோகாச்சாரியார்" இயற்றிய **"ஸ்ரீவசன பூஷணத்தில்"**, **"பகைவனுக்கும் அருள்வாய்"** என்ற தலைப்பில், தீங்கிழைத்தல் என்ற குற்றம் செய்தவர்களிடைத்து காட்டவேண்டிய ஐந்து நெறிகளான:

"பொறை" - "கிருபை" - "மகிழ்ச்சி" - "உகப்பு" - "உபகாரம்" ஆகியவைகளை குணமாக கொண்டவர்கள் வைணவர்கள் என்று கூறியுள்ளார்.

"பொறை": தீங்கிழைத்தவர்களுக்கு, பதில் தீங்கு செய்யாமலும், தீங்கு செய்ய நினையாமலும், தனக்கு தீங்கிழைத்துவிட்டார்களே என்று வருந்தாமலும் இருப்பது பொறை.

"கிருபை": தீங்கிழைத்தவர்களுக்கு, நாமாக பதில் தீங்கு செய்யாமலிருப்பதுமல்லாமல் அவர்கள் செய்த வைகளுக்கு இறைவன் தண்டிக்காமலிருக்கும் பொருட்டு, மனமிரங்கி பிரார்த்திக்க வேண்டும். இது கிருபை.

"மகிழ்ச்சி": தீங்கிழைத்தவர்களுக்கு ஏதேனும் துன்பம் நேரிடின் அதனை களைய வழி செய்வதில் மகிழவேண்டும். இது மகிழ்ச்சி.

"உகப்பு": அவர்களிடம் கருணை காட்டி, அவர்கள் உகந்து திருந்த வழி செய்ய வேண்டும். இது உகப்பு.

"உபகாரம்": அவர்களை பகைவர்களாக கருதாது உபகாரம் செய்தல் வேண்டும். இது உபகாரம்.

4. வைணவம் காட்டும் அறநெறிகள்

அனைத்துலகங்களையும் சரீரமாகக் கொண்டு திருமால் வியாபித்து, ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் உள்நின்று நியமித்துக் கொண்டிருக்கும் நிலையில், உலகில் எந்த உயிரைக் தான் பகையெனவோ, அன்னியமாகவோ கருத இயலும்? இந்த கருத்தை வலியுறுத்துவது வைணவம்.

குணத்தில் உயர்ந்து நல்வினைகள் பல செய்து, அனேக நன்மைகள் தேடிக் குவித்த போதிலும், நாம் இறைவனை எட்டிப்பிடிக்க இயலாது. ஆனால் வைணவம் காட்டும் அருள்நெறி, அன்பு நெறி, சரணாகதி முதலிய வழிகள், இறைவனை இறங்கி வந்து நம்மைப் பற்றிக்கொண்டு பரிந்து பாதுகாக்கும் தன்மை கொண்டது என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் இப்படி கூறுகிறார்.

"வானேற வரிதந்த வாட்டாற்ருன் பழிவகையே
நானேற்ப பெருகின்றேன் நரகத்தை நடு நஞ்சே
தேனேறு மலர் துளவம் திகழ் பாதன் செ ம் பறவை
தானேரித்திரிவான தாளிணையென் தலைமேலே".

கடுமையான விரதங்களையும், தீவிர ஒழுக்க நெறிகளையும் வலியுறுத்தும் சமணம், பௌத்தம் போன்ற அறிவு மதங்களில் ஒன்றல்ல வைணவம், வழி தவறியவர்களையும், திருத்தி உய்ய வழிகாட்டுகிறது. ஆழ்வார்களின் சரிதங்கள், அதுவும் குறிப்பாக திருமங்கையாழ்வாரின் வரலாற்று சம்பவங்கள்.

தத்துவக் கொள்கைகளைப் பற்றிய சிந்தனைகளும். ஆராய்ச்சிகளும் மற்றும் பலவேறு சாதனைகளும் தெய்வத்தை காட்டுபவன அல்ல! அருள்நெறி வாழ்க்கையும், அகம் ஒழிந்து தன்னை பூரணமாக இறைவனின் அடிகளில் ஒப்படைத்தலான சரணாகதியும் மட்டுமே, அந்த அன்பனும் அழகனும், ஆராவமுதனுமாகிய புருஷோத்தமனக் காட்ட வல்லது.

நான்கு வேதங்கள் கூறும் கருத்துகளனைத்தும் வடமொழியாலானவைகள். அவை அனைவருக்கும் பொது.

அருமறை தமிழ் செய்தான் என்றும், வேதம் தமிழ் செய்த மாறன் என்றும் சொல்லப்படுவதால் வடமொழி வேதக்கருத்துகளே, நம் போன்ற சாமான்யர்களின் மேம்பாட்டிற்காக ஆழ்வார்களின்

வாக்கினின்றும் பிரபந்த பாசுரங்களாகவும், நம்மாழ்வார் வாக்கிலிருந்து திருவாய் மொழி பாசுரங்களாகவும் வெளிவந்து தமிழ் வேதமாக பரிணமித்தன.

வடமொழியிலான வேதமோ அனைவருக்கும் பொது. நம்மாழ்வாரின் அருளிச் செயலான தமிழ்மறை வைணவத்திற்கு ஏற்பட்ட ஒரு அசாதாரணமான செல்வம்.

இரண்டு மொழிகளிலும் உள்ள "மறை" ஏககண்டமாய் ஒரே பொருளைத்தான் குறிப்பிடுகிறது. அதனால் இவைகளை வெவ்வேறு கருத்துக்கள் கொண்ட இரண்டு வேதங்கள் என்ற பொருளில்லாமல், ஒரே கருத்தை இரு மொழிகளில் கூறும் ஒரே வேதம் என்ற நிலையில் "உபயவேதாந்தம்" என்று பெயர் பெற்றது.

ஆழ்வார்களின் காலத்திற்கு பல ஆண்டுகளுக்குப் பின் தோன்றியவரும், ஆச்சார்ய பரம்பரையில் முதலிடம் வகித்தவருமான "ஸ்ரீமந்நாதமுனிகள்" இந்த உபய வேதாந்த சித்தாந்தத்தை நமக்கு வழங்கியவராவார்.

அதனால் வைணவர்களை "உபயவேதாந்திகள்" என்று அழைப்பது மரபு,

ஸ்ரீமந்நாதமுனிகளால் பிரகாசப்படுத்தப்பட்ட உபய வேதாந்த சித்தாந்தத்தை அவரது திருப்பேரரான ஸ்ரீ ஆளவந்தார் பிரசாரம் செய்தும், பல நூல்கள் இயற்றியும் நாடு முழுவதும் வளர்த்தார். இருப்பினும், அவரது கருத்துக்கள் சிலவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்காத நிலையில் அவர் காலமாகிவிட்டார். பிறகு இளந் துறவியான ஸ்ரீராமானுஜர் அக்கருத்துக்களை யூகித்தறிந்து திட்டமிட்டு செயல்பட்டு வைணவ வெள்ளம் பெருக்கெடுத்தோடும்படி செய்தார்.

துவைத சித்தாந்தை பின்பற்றுவர்களையும், வைணவர்கள் என்று கருதுவது மரபு. துவைத சித்தாந்தத்தில், ஸ்ரீயைபதியாகிய ஸ்ரீமந்நாராயணன் என்ற நிலை அல்லாது, நாராயணன் மட்டுமே ஈசுவரதத்துவம். அதனால் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை பின்பற்றுபவர்களை ஸ்ரீவைணவர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள்.

ஸ்ரீவைணவத்தை பொதுவாக "சம்பிரதாயம்" என்று கூறுவது மரபு. இதற்கு மிகச் சிறந்த "குலதனம்" என்று பொருள். வேத காலத்து முனிவர்கள் சேமித்து வைத்திருந்த இந்த அழியா

குலதனத்தை, ஆழ்வார்களும், ஆச்சார்யார்களும் போற்றி வளர்த்து "வற்றாத செல்வமாக" வழங்கியுள்ளார்கள்.

பல இன்னல்களையும், இடுக்கண்களையும், விடா முயற்சியோடு எதிர்த்து செயல்பட்டு இந்த குலதனத்தை புத்தொளி பெறச் செய்தவர் ஸ்ரீராமாநுஜர்.

ஸ்ரீ ஆளவந்தாரின் பிரதான சீடரான "திருக்கோட்டியூர் நம்பிகளிடம்" வைணத்தின் சிறந்த குலதனமான "த்ரய ரஹஸ்யார்த்தங்களை" விரிவாக கற்க விரும்பினார், ஸ்ரீராமாநுஜர். ஸ்ரீராமாநுஜரின் தகுதியை நன்கு சோதித்துப் பார்க்காமல் கற்பிக்க இசையாத நம்பிகள், அவரை பதினெட்டு முறைகள் அலைக்கழித்தார்.

ஸ்ரீரங்கத்திலிருந்து நூறுமைல் தொலைவிலுள்ள திருக்கோட்டியூருக்கு பதினெட்டாவது தடைவையாக நடந்து சென்று நம்பிகளை வேண்டிக் கொண்டபொழுது நம்பிகள் அப்பொழுது இசையாது, திருக்கோட்டியூரிலேயே, ராமாநுஜரை ஒரு மாதம் இருக்க செய்தார். நம்பிகளிடம் மந்திரார்த்தங்களை உபதேசம் பெறும் வரை அன்ன ஆகாரமின்றி இருப்பதாக விரதம் மேற்கொண்டார். ஒரு மாதம் முடியும் நிலையில் உடல் தளர்ந்து கவலைக்கிடமளித்தது. ராமாநுஜரின் சீடர்கள் நம்பிகளை வற்புறுத்தி அன்றே மந்திரார்த்தங்களை உபதேசம் செய்யும்படி வற்புறுத்தியும், நம்பிகள் இசையவில்லை. சற்றும் கவலைப்படாமல் "ஸ்ரீராமாநுஜர் இருந்தால் நாளை என்னிடம் உபதேசம் பெறுவார். இறந்தால் என் குருநாதார் ஸ்ரீ ஆளவந்தாரிடம் உபதேசம் பெறுவார். இந்த இரண்டில் ஒன்று கண்டிப்பாக நடக்கும்" என்று கூறினாராம்.

மறுநாள் ராமாநுஜரை அன்புடன் அழைத்து, தான் அவரை சோதித்தது போலவே, ராமாநுஜரும் பாத்திரமறிந்து உபதேசிக்க வேண்டும் என்று ஆணை பெற்றுக்கொண்டு, மந்திரார்த்தங்களை உபதேசம் செய்தாராம்!

திருக்கோட்டியூர் நம்பிகளை, ஒரு கல்மனம் படைத்த முரட்டுவேதாந்தி என்று நாம் மதிப்பிட்டுவிடக்கூடாது. அவரது கண்டிப்பும் திடவைராக்கிய்மும் தான், ராமாநுஜரை ஒருபுடம் போட்ட தங்கமாக மாற்றியது என்றால் அது மிகையாகாது.

ஆனால், மறுதினமே, குருவின் ஆணையையும் மீறி,

ஆலயகோபுரத்தின் மீதிலிருந்து, திருமந்திரத்தையும், அதன் பொருளையும் ஊராருக்கு ராமாநுஜர் முழங்கினாராம்! இதை கேள்வியுற்ற நம்பிகள் மனம் புழுங்கினார். பிறகு ராமாநுஜரை அழைத்து வரச் செய்து, "ஆணையிட்டுக்கற்றவைகளை ஊருக்கு உபதேசித்தாயோ? அப்படி உழைத்து என்ன லாபம் அடைந்தாய்", "இதை நீ நன்றாக உணர்ந்து தான் செய்தாயா? என்று வினவினாராம் நம்பிகள்.

ராமாநுஜர் மிக அடக்கமாக "குருநாதரின் ஆணையை மீறியதால் மீளமுடியாத நரகத்தை அடையப் போவது நான் ஒருவன் மட்டுமே! ஆனால், பகவானை அடையும் நெறி இவ்வளவு எளிமையாகவும், சுலபமாகவும் இருக்க பகவானும் இப்படி பரம சுலபனாகவும், அடியார்க்கு அடியவனாகவும் இருக்க அவனை அறியும் வழியறியாது, வருந்துபவர்களுக்கு தன்னை அழித்துக் கொண்டாகிலும், வழிகாட்ட வேண்டும் என்று அறிந்தேதான் அப்படி செய்தேன் என்று கூறினாராம். அந்த விந்தையான சீடர்.

வைணவன் உப்பைப் போல இருப்பான் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு!

சீடரின் பதில், நம்பிகளை திகைப்படைய செய்துவிட்டதாம். திருமந்திரார்த்தம் தானம் செய்து மக்களை வாழ்வித்த நிகரற்ற கருணை, கசடறக்கற்ற வேதாந்தியான தனது உள்ளத்தில் ஊறவில்லையே என்று புழுவாய் துடித்துப்போனாராம் நம்பிகள்! சீடரின் உத்தமபத்தி நிலையை எண்ணி, மனமுருகி கண்ணீர் மல்க அந்த ஒப்பில்லாத மணியும், ஞானசிகரமுமான, ராமாநுஜரைக் கட்டித்தழுவிக் கொண்டாராம்.

யுத்த பூமியில் பலபேர் அறிய கீதோபதேசம் செய்த கண்ணனின் உருவத்தையே ராமாநுஜரிடம் கண்டாராம் நம்பிகள்! பொதுவாக இறைவனை "எம் பெருமான்" என்று கூறுவது மரபு. "பெருமான்" என்ற சொல்லிற்கு உபகாரம் செய்பவன் என்று பொருள். எம்பெருமான் என்றால் எல்லோர்க்கும் என்ற நிலையில் லோகோபகாரி என்று பொருள்படும். இறைவனையும் முக்தரல்லாத ஜீவனையும் சமநிலையில் வைத்து கூறுவது ஏற்புடையதல்ல என்ற காரணத்தால், ராமாநுஜரை "எம்பெருமானாரே" என்றழைத்து, உம்மால் வைணவம் குன்றின்

மேலிட்ட தீபம் போல் வானளாவ உயர்ந்து பிரகாசிக்கின்றது என்று கூறி மகிழ்ந்தாராம், நம்பிகள்!

அன்று முதல் வைணவ சமயம், **"எம்பொருமானார் தர்சனம்"** என்றும் **"ஸ்ரீ ராமானுஜ தர்சனம்"** என்றும் வழங்கலாயிற்று.

இப்படி, வைணவ சித்தாந்தத்தை பெயரிட்டு நிறுத்தியது, ஸ்ரீ ரங்கநாதனான நம்பெருமாளின் திருவுள்ளம் தான் என்று கூறும் ஸ்ரீ மணவாளமாமுனிகளின் கூற்றும் இங்கு நோக்கற்பாலது.

ஆழ்வார்களின் முற்பட்ட காலந்தொட்டு, வைணவம் பாரதத்தில் பரவியிருந்ததற்கு பல சான்றுகளைக் கண்டோம். ஸ்ரீ ராமானுஜருக்கு முற்பட்டவர்கள் என்று கருதப்படும் **"டங்கர்" "குஹதேவர்", "திரமிடர்", "ஸ்ரீ வத்ஸாங்கர்"** ஆகியோர் வைணவ சித்தாந்தமான **"விசிஷ்டாத்வைதத்தை"** உருவாக்கி கொடுத்துள்ளார்கள். இவர்களுக்குப்பின், **"ஸ்ரீ நாதமுனிகள்"** விசிஷ்டாத்வைத கருத்துக்கள் கொண்ட, ஆழ்வாராதிகளின் திவ்ய பிரபந்தங்களை தொகுத்தளித்து சிறப்புப் பெற்றார். பிறகு அவரது திருப்பேரரான **"ஸ்ரீ ஆளவந்தார்"** வைணவ சித்தாந்த கருத்துக்களை வளமாக்கி, நாடெங்கிலும் வளரச்செய்தார். இருப்பினும் ஆழ்வார்களின் பெயரிலோ அல்லது ஆச்சார்யார்களின் பெயரிலோ வைணவ சமயத்தைக் குறிப்பிடாது ஸ்ரீ ராமானுஜரின் பெயரில் குறிப்பிடப்பட்டிருப்பது, கடலைக் கடைந்து அமிர்தம் கொண்டது போல முன்னோர்கள் காட்டிய தொலை வழியையும், நல்வழியையும் ஒரு புதுமை வாய்ந்த நன்னெறியாக காட்டியதாக இருக்கக் கூடுமல்லவா?

நம்மாழ்வாரின் உயர்நிலை கொள்கைகளை அடிப்படையாக கொண்டது ஸ்ரீ ராமானுஜர் இயற்றிய **"ஸ்ரீ பாஷ்யம்"**.

ஆதி சங்கர பகவத் பாதாளும் பிரும்ம சூத்திரங்களுக்கு விளக்க உரையான பாஷ்யம் இயற்றியுள்ளார். அதற்கு சங்கரர் என்ற அடை மொழியிட்டு "சங்கரபாஷ்யம்" என்றே கூறுகிறோம். ஆனால் ஸ்ரீ ராமானுஜர் இயற்றிய பிரும்ம சூத்திர விளக்கங்களை, எந்த அடைமொழியுமில்லாமல் **"ஸ்ரீ பாஷ்யம்"** என்றே கூறுவதோடு மட்டுமல்லாமல் ராமானுஜரையும் **"ஸ்ரீ பாஷ்யக்காரர்"** என்றே அழைப்பதும் ஸ்ரீ பாஷ்யத்தின் தனிச்சிப்புக்குச் சான்று.

வைணவம் செழிக்க, தங்கள் கருத்துக்களாலும், கொள்கைகளாலும், அடித்தளம் அமைத்து செயற்கருஞ்செயலை

செய்து காட்டியவர்கள் ஆழ்வார்கள். குறிப்பாக நம்மாழ்வார் பாசுரங்கள், ராமாநுஜருக்கு வழிகாட்டியதோடு, மற்றவர்களை திருத்துவதற்கும் மிகவும் பயன்பட்டன என்றும், அவற்றில் பிராட்டியோடு கூடிய பகவானின் புகழ்வளம் பெற்றிருக்க, அவற்றை அமுதமாகிப் பருகி நற்கதிக்கு வழிகண்டவர் ஸ்ரீராமாநுஜர் என்றும், தமக்கு வழிகாட்டியதிருவாய் மொழியை ஆதாரமாக கொண்டு "ஸ்ரீபாஷ்யம்" என்ற சித்தாந்தத்தை நமக்கு அளித்தார் என்ற கருத்து ஸ்ரீராமாநுஜ நூற்றாந்தாதிப் பரசுரங்களால் அறியலாகும்.

"உறுபெருஞ் செல்வமுந் தந்தையும் தாயும் உயர்குருவும்
வெறி தருபூமகள் நாதனும் மாறன் விளங்கிய சீர்
நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றித் நீணிலத்தோர்
அறிதரநின்ற இராமாநுஜனைக் காரமுதே".

பிற்காலத்தில் வெளிநாட்டவர்களும், பிறமதத்தினர்களும், படையெடுத்த பொழுது, ஸ்ரீபாஷ்யம் என்ற அபூர்வமான பொக்கிஷம் பறி போகாமல் காப்பாற்றி ராமநுஜ தர்சனத்தை நாடெங்கிலும் பரப்பிய மஹான், ஸ்ரீவைணவத்தின் தலைசிறந்த ஆச்சார்யாரான "ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன்" ஆவார்.

5. வைணவத்தின் தாரகம் திருமந்திரம்

ஆத்மஞானம் பெறுவதற்கு உலகைத்துறந்து துறவியாவது இயற்கை. ஆனால் உலகம் உய்ய, ஆத்மாவை துறந்த துறவியான ஸ்ரீராமாநுஜா யதிராஜனாகவே விளங்கினார்!

கோபுரத்தின் மேல் நின்று அனைத்து மக்களும் உய்யும் வண்ணம் ஸ்ரீராமாநுஜரால் விளக்கப்பட்ட "திருமந்திரம்" தன்னுள் ஆழ்ந்த கருத்துக்களையும் பொருள்களையும் கொண்டது. பரமனுக்கும், ஜீவனுக்குமுள்ள ஒரு நெருங்கிய தொடர்பை காட்டிக் கொடுப்பது.

பிறவிப் பெரு நோயிலிருந்து விடுபட்டு, தம்மை வந்தடைந்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்பதற்காக, எம்பெருமான் "நர நாராயணர்"களாகத் தானே சீடனும் குருவுமாக தோன்றி ஸ்ரீபத்ரிகாச்ரமத்தில் உபதேசிக்கப்பட்ட மந்திரம், "திருமந்திரம்".

திருமந்திரத்தின் பெருமையை உபநிஷத்துக்களும், ஸ்ம்ருதிகளும், வெகுவாகப் புகழ்கின்றன. எம்பெருமானைப் பற்றிய, அநேக மந்திரங்களுள் வ்யாபக மந்திரங்கள் என்று கூறப்படும் "திருமந்திரம்" - "ஷடக்ஷரம்" "த்வாதசாக்ஷரம்" ஆகியவைகள் சிறந்து விளங்குபவைகள். இவைகளுள் "திருமந்திரம்" மிகப்பெருமையும் சிறப்பும் கொண்டது.

இதன் சிறப்பை, திருமழிசை ஆழ்வார், ஆச்சார்யாரிடமிருந்து உபதேசிக்கப் பெற்று ஜபிக்கிறவர்கள் வைகுண்ட லோகத்தை ஆளமுடியும் என்று பொருள்படும் பாசுரமாக அருளிச் செய்துள்ளார்!

"எட்டு மெட்டுமெட்டுமாய் ஓரேழுமேழு மாய்
எட்டு மூன்று மொன்று மாகி நின்ற ஆதி தேவனை
எட்டினாய் பேதமோடு இறைஞ்சி நின்று அவன் பெயர்
எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லவர் வானமாளவே"

திருமந்திரம் எல்லா வேதங்களுக்கும் சாரமானது. எல்லாத் தீங்குகளையும் போக்க வல்லது. சகல பலன்களையும் அளிக்கவல்லது. இத்திருமந்திரம் ஒன்றே முக்தியை விரும்புபவர்களுக்கு தத்துவம், உபாயம் ஆகியவைகளைப் பற்றி அறிய வேண்டிய அனைத்தையும் தெரிவிக்க வல்லது.

இது முப்பிரியாய் எட்டிழையாய் உள்ள மங்கல நாண்போல

மூன்று பதமாகவும், எட்டெழுத்தாகவும் உள்ளதோர் உயர்ந்த மந்திரம்.

"ஓம் நம:நாராயாணாய" என்பது திருமந்திரம். இது எட்டெழுத்துக்கள் கொண்டது.

"ஓமித்யே காக்ஷரம்!
நம இதித்வே அக்ஷரே
நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி"

என்பது கருதிவாக்கு இதன்பொருள்:

"ஓம்" என்பது ஒரே எழுத்து. தமிழ் வழக்கில் இரண்டு எழுத்துக்களாயிருப்பினும் வடமொழியில் ஒரேஎழுத்தாகத்தான் கணக்கிடப்பட்டுள்ளது.

"நம:" என்பது இரண்டு எழுத்துகளாகும்.

"நாராயணாய" என்பது ஐந்து எழுத்துக்கள் கொண்டது. ஆக மூன்று சொற்பிரிவுகளோடு கூடிய எட்டெபத்துக்கள் கொண்ட இதை எட்டெழுத்து மந்திரம் என்று தமிழில் கூறுவது மரபு.

திருமந்திரத்தில் முதலில் நிற்பது "ஓம்" என்ற பிரணவம். இது மூன்று வேதங்களின் சாரமாக இருப்பது, அதனால் வேதங்களை ஓதும் போது, பிரணவத்தை முதலிலும் கடைசியிலும் ஓதியேயாக வேண்டும், என்பது நியதி. இது சாரமான விஷயங்களின் பொருளை சுறுங்கக் கூறுவதாக அமையப் பெற்றது.

ஓம் என்ற பிரணவம் அ - உ - ம் என்ற மூன்றெழுத்துக்களின் சேர்கையால் ஒரே எழுத்தாக உருவாகியது.

இதில் முதலெழுத்தான "அ" - அகரம் அனைத்திற்கும் ஆதாரமாக நிற்கும் பகவானைக் கூறும். எல்லாச் சொற்களுக்கும் ஆதியாய் நிற்பது அகாரம். எல்லா எழுத்துகளுக்கும் மூலகாரணமான அகாரத்தினின்று தான் எழுத்துக்களும் சொற்களும் தொடங்குகின்றன. மெய்யோடு கலந்து ஒலிக்கச் செய்வதும் இந்த மூல எழுத்தான அகாரம் தான். சொற்களால் கூறப்படும் எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணமாய் நிற்பவன் எம்பெருமான். ஆகவே சொற்களுக்கு மூலமான "அகாரம்" சொற்கள் கூறும் பொருள்களுக்கும் மூல காரணமான "எம்பெருமானை" கூறுவதும் மிகப் பொருத்தமே. வியாகரண முறைப் படி நோக்கினாலும் "அகாரம்" காத்தல் என்ற பொருள்கொண்ட "அவ்" என்ற வினைவேர்

சொல்லிலிருந்து தேறுவதால் எல்லோரையும் ரக்ஷிக்கும் ஸ்ரீமந்நாராயணனையே சுட்டிக்காட்டும்.

திருவள்ளுவரும், "அகரமுதலெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று திருக்குறளை தொடங்கியதற்கு இதுவே காரணமாக இருக்கக் கூடும்.

"அகாரத்தின்" மேல் "ஆய" என்ற நான்காம் வேற்றுமையுருபு ஏறிமறைந்துள்ளது. "சதுர்த்தி ஏறி கழியும்" என்று இதை "பிள்ளைலோகாச்சாரியர்" குறிப்பிட்டுள்ளார். இந்த உருபுக்கு அடிமை என்று பொருள். அதனால் இயற்கையாகவே சர்வசேஷியான எம்பெருமானுக்கு ஜீவன் அடிமையாய் (சேஷமாய்) இருப்பவன் என்ற நிலையில் "சேஷித்வம்" என்ற பொருள்தேறும் சேஷித்வமென்றால் ஆண்டான் - அடிமை (சேஷி - சேஷன்) என்ற சம்பந்தம்.

இந்த சம்பந்தத்திற்கு காலம் வரையிட்டு கூறப்படாததால் எம்பெருமான் எப்பொழுதும் ஆண்டான் (சேஷி) என்றும்; காரணம் ஒன்றும் கூறப்படாததால், இயற்கையிலேயே எம்பெருமான் ஆண்டான் (சேஷி) என்றும்; இன்னாருக்கு என்று குறிப்பிடாததால் எம்பெருமான் அனைவருக்கும் ஆண்டான் (சேஷி) என்றும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பிரவணத்தின் நடு எழுத்தான "உகாரம்" எம்பெருமானுக்கும், ஜீவனுக்குமுள்ள உறவை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. முதல் எழுத்தான அகாரத்தினால், எம்பெருமானான விஷ்ணு சொல்லப்படுகிறான். உகாரத்தினால், பகவானால் எப்பொழுதும் தாங்கப்பட்டிருக்கிற லக்ஷ்மி சொல்லப்படுகிறாள் இப்படி கூறுவது "கடஸ்ருதி". அதனால் எம்பெருமான் என்று நாம் கூறும் போதெல்லாம், பிராட்டியுடன் கூடிய ஸ்ரீமந்நாராயணனையே குறிப்பிடும் என்பது தேற்றம். மேலும் உகாரத்திற்கு நாம் பொருள் கொள்ளும்போது அகாரத்தின் மேல் மறைந்து இருக்கும் உருபையும் தொடர்பு கொண்டு அறிதல் வேண்டும். வேற்றுமை உருபான "கு" உறவை உறுதிப்படுத்தும் தேற்றேகாரமாக அமையும். தமிழ் இலக்கணத்தில் இது வேற்றுமை தொகை எனப்படும். இதனால் "இறைவனுக்கு ஜீவன் அடியன்" என்று தேறும். மற்றவர்களுக்கு ஜீவன் அடியன் அல்ல என்று தோன்றுவதற்கும் இறைவனுக்கே அடியேன் என்று வரையறுத்தலே தேற்றேகாரத்தின் விசேஷம்.

மேலும் உகாரத்திற்கு "அவதாரணம்" என்ற பொருளும் சுருதியில் கூறப்பட்டுள்ளது. "அவதாரணம்" என்றால் மற்றொன்றின் தொடர்பை துண்டித்தல் என்று பொருள். ஆதலால் பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுக்கே அடியன், மற்றவருக்கு இல்லை என்ற பொருள் தேறும்.

மூன்றாவது எழுத்தான "மகாரம்" ஜீவாத்மாவைக் குறிப்பிடும். இலக்கணவிதிப்படி "மந்" என்ற வினைவேர் சொல்லிலிருந்து "மகாரம்" தேறும். "மந்" என்ற வினைப்பகுதி, "அறிவு" என்ற பொருள் கொண்டதாதலின், அதனின்று தோன்றிய மகாரம் ஞானஸ்வரூபன், அறிவை குணமாகக் கொண்டவன் என்ற பொருளைக் கொடுத்து, அறிவற்ற அசேதனங்களை காட்டிலும் வேறுபட்ட அறிவுள்ள ஜீவனை குறிக்கும். மேலும் "மஸ்" என்ற வேர் சொல்லினின்றும் மகாரம் தோன்றும். இந்த வேர் சொல்லிற்கு "அளவு" என்று பொருள். ஜீவன் "அணு" அளவே உள்ளவன், எங்கும் பரவியுள்ள "விபு" எனப்படும் ஈசுவரனைக் காட்டிலும் அணுவான ஜீவன் வேறுபட்டவன் என்பதையும் காட்டும். வடமொழி எழுத்து வரிசையில் மகாரம் 25வது எழுத்தாகும். அதனால் 25வது தத்துவமான ஜீவனை "மகாரம்" குறிப்பிடுவதும் பொருத்தம் தானே? "நான்" என்று ஜீவன் கூறிக் கொள்ளும் போது அது சரீரத்தைக் குறிப்பிடாமல், ஆத்மனை குறிப்பிடும். ஆகவே, அகார - உகார - மகார சேர்க்கையினால் பிரணவத்திற்கு பொருள் கொள்ளும் போது, சரீரமே ஆத்மன் என்ற மயக்கம் தெளிந்து ஜீவன் ஸ்வதந்தரன் அல்ல என்ற விவேகம் பெற்று எம்பெருமானுக்கு அடியன் (சேஷன்) என்ற எண்ணம் உய்விக்க வழிபிறக்கும். மகாரம் என்று இதுவரை குறிப்பிடப்பட்டது. உயிர் சேராத "ம்" என்ற எழுத்தைப் பற்றியது!

திருமந்திரத்தின் நடுப்பதமான "நம:" என்ற பதம் ந - ம என்று இரண்டு எழுத்தாகப் பிரியும். "ம" என்பது "ம்" என்ற ஜீவனைச் சொல்லும் சொல்லின் ஆறாம் வேற்றுமையாகும் இதற்கு ஜீவனாகிய எனக்கு என்று பொருள். "எனக்கு" "நான்" என்ற எண்ணங்கள் ஆணவமுனைப்பை குறிப்பிடுவதால், விரோதிகளாக கருதல் வேண்டும். இதனால் ஜீவனுக்கு என்று தனி உடைமை ஒன்றுமில்லை என்று தேறும். வடமொழியில் மந்திரங்களின் அர்த்தங்களை அவற்றிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு பொருந்த விளக்குவது "நிருக்தம்" என்ற நூலாகும். இதை சார்ந்தே

பிரணவத்தின் மூன்றாவது எழுத்தாகிய "ம்" என்பதை பொருத்திக் கொண்டு பொருள் கொண்டால், நான் எனக்கு சேஷனல்லேன் என்று தேறும். அதாவது "நம:" என்ற பதத்திற்கு ஜீவனாகிய நான் என்னுடையது என்று கூறுபவைகளுள், உண்மையில் ஜீவனுக்கு உடைமையும் இல்லை, உரிமையும் இல்லை என்று அறிந்து கொள்ளலாம். ஆக அனைத்தும் இறைவனுக்கே உரிமை. ஜீவன் உள்பட மற்றவை அனைத்தும் எம்பெருமானுக்கே சேஷம் என்றாகும்!

திருமந்திரத்தின் இறுதிப் பதமான "நாராயணாய" என்ற சொல், அகாரத்தால் எல்லாவற்றையும் காப்பவனாகவும் எல்லாவற்றிற்கும் சேஷியாகவும், சேதனர்கள் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்பவனாகவும் உள்ள எம்பெருமானை கூறும்! இந்த பதத்தையே உயிர் - மெய்யாகப் பிரித்துப் பார்த்தால் எட்டெழுத்தாகவே திகழும் என்று கூறப்படுகிறது.

"நாராயண" என்ற சொல் "நார - அயனம்" என்று விரியும். இதில் "நார" என்ற பதத்திலுள்ள "ர" என்ற எழுத்து "அழிதல்" என்ற பொருள் கொண்ட "ரீ" வினைவேர் சொல்லினின்று வந்தது. "ந" என்ற எழுத்து வேறுபாட்டையும், இல்லாமையையும் கூறும் சொல். ஆக "நர" என்று சேர்த்துப் பார்த்தால், "அழிவற்றது" என்று பொருள்படும். அறிவற்ற பொருள்களைக் காட்டிலும், வேறுபட்டதும், அழிவற்றதும், அறிவுள்ளதுமான ஜீவாத்மன் என்ற வகையில் "நார" என்ற சொல் நாரங்களான ஜீவர்களின் கூட்டத்தைக் கூறும். இதேவகையில், அழியாதவனான எண்பெருமானான பரமாத்வையும் கூறும். "மேலும் வழி நடத்திச் செல்வது என்று பொருள்படும்" "ந்ரு" வினைவேர் சொல்லினின்று "நார" என்ற சொல் தோன்றியதால், அனைத்து ஜீவர்களையும் நல்வழியில் செலுத்துமவனான எம்பெருமானைக் கூறுவது எவ்வளவு பொருத்தம்! நரனைச் சேர்ந்தவை "நாரம்" என்ற வகையில் எம்பெருமானுடைய உடைமைகளைத்தும், சேதனா சேதனங்கள் உள்பட எல்லாவற்றையும் கூறுவதாக அமைந்துள்ளது.

"அயன" என்ற சொல்லிற்கு உபாயம் - பலன் - ஆதாரம் என்று மூன்று பொருள்கள் உண்டு. வடமொழி இலக்கண வகையில் "நாராயண" என்ற சொல் "நாராணாம் + அயனம்" என்றும் நாரா: + அயனம் என்றும் விரியும். முதல் வகைப்படி நாரங்களுக்கு அயனமாயிருப்பவன் என்ற நிலையில் ஜீவர்களின் கூட்டங்களுக்கு

பலனும் ஆதாரமாயும் இருப்பவன் என்று பொருள்படும். இரண்டாவது வகையில் சேதனா சேதனங்களை தனக்கு உட்புகும் பொருள்களாகக் கொண்டவன் எம்பெருமான் என்று தேறும். தமிழ் இலக்கணப்படி இவைகள் முறையே "வேற்றுமைப் புணர்ச்சி" என்றும், "அன்மொழித் தொகை" என்றும் கூறப்படும். ஆக இரண்டையும் இணைத்து பொருள் கொண்டால், சேதனா சேதனங்கள் இல்லாத இடத்திலும் எம்பெருமான் உளன் என்றும் சேதனா சேதனங்களுள்ள இடத்தில் தான் இல்லையென வொண்ணாதபடி எம்பெருமான் கலந்து உளனென்றும் தேறும்.

இறுதியாகவுள்ள "ஆய" என்ற வேற்றுமையுருபு, ஜீவன் அடிமையாக இருந்த எம்பெருமானுக்கு பூர்ணாநுபவத்துடன் செய்யும் கைங்கர்யத்தைக் குறிப்பிடும்!

ஆக திருமந்திரம் கூறும் திரண்ட பொருள் என்னவென்றால்:

திருமகளோடு கூடியவன் எம்பெருமான்,
அனைத்திற்கும் காரணமாயிருப்பவன்,
அனைவரையும் காப்பவன்,
ஜீவர்களைத் தனக்கு அடிமையாகக் கொண்டவன்,
ஞானத்திற்கும், ஆனந்தத்திற்கும் இருப்பிடமான
ஜீவன், சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவன்,
ஜீவர்கள் இறைவனுக்கே கைங்கர்யம் செய்து
வீடு என்ற மோக்ஷம் பெறுபவர்கள், என்பதாகும்.

"குலந்தரும்; செல்வந்தந்திடும்; அடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும்; நீள்விசும்பருளும்;
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும்; மற்றுந்தந்திடும்; பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்"

என்ற திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த பாசுரம் இங்கு நோக்கற்பலாது.

6. திருமந்திரம் காட்டும் உறவுகள்

நம்மாழ்வார் இயற்றிய திருவாய் மொழியை தமிழ் வேதம் என்று கூறப்படுகிறது. திருவாய் மொழியின் சிறப்பினை உணர்ந்து அதற்கு காப்புச் செய்யுளாக ஒரு வெண்பாவை (தனியன்) அருளியுள்ளார் கூரததாழ்வானின் திருக்குமாராகிய "ஸ்ரீ பராசரபட்டர்". அது

"மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும்
ஓதும் குருகையோர்கோன் யாழினிடை

- வேதத்தியல்

இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து விஷயங்கள் அவைகள்

(1) அடையவேண்டிய பொருள்,
(2) அடைகின்றவன்
(3) அடைவதற்காக செய்யவேண்டியவை
(4) அடைவதிலுள்ள இடையூறுகள்
(5) அடைவதின் பயன், ஆகியவைகள்.

வேதாந்தத்தில் இவைகளை "அர்த்த பஞ்சகம்" என்று விவரித்துள்ளார்கள். அதாவது அறிந்து கொள்ள வேண்டிய ஐந்து பொருள்களைப் பற்றி கூறப்படுபவை.

1)	பரஸ்வரூபம் :	நம்மைப் படைத்துக் காக்கும் எம் பெருமானின் தன்மை.
2)	ஸ்வஸ்ரூபம் :	நான் என்னும் ஜீவனின் தன்மை.
3)	உபாயஸ்வரூபம் :	ஜீவன் எம் பெருமானை அடையும் வழி.
4)	பலஸ்வரூபம் :	நாம் அவனை அடைவதால் ஏற்படும் பயன்.
5)	விரோதிஸ்வரூபம் :	நாம் அவனை அடைய முடியாமைக் குள்ள தடைகள்.

ஜீவனுக்கும் - ஈசுவரனுக்கும் உள்ள இயற்கையான தொடர்புகளைப் பற்றி ஒரு உபநிஷத்மந்திரம் இப்படி கூறுகிறது.

"மாதா பிதா பிராதா, நிவாஸ: சரணம்
ஸுஹ்ருத் கதி: நாராயண:"

இதன் பொருள், தாய், தந்தை, உடன் பிறந்தோர், இருப்பிடம், காப்பவன், நண்பன், அடைய வேண்டிய பேறு அனைத்தும் நாராயணனே, என்பதாகும்.

உலகவாழ்வில் நமக்குள் உறவுகளைத்தும், தாயையும் தந்தையையும் முன்னிட்டே உண்டாவது. இந்த உறவுகளுக்குக் காரணம், மோஹமும் பந்தமும் தான். அதாவது முன்வினைப் பயனால் உண்டான உறவுகள். இவையனைத்தும், சரீரத்தைச் சார்ந்த உறவுகளாகையால் சரீரம் அழியும் போது அழிந்துவிடக் கூடியவை.

சரீரத்தைச் சாராத ஆன்மீகமான உறவு நிலையானது, உண்மையானது, அழியாதது. ஒரு காரணத்தால் இடையே தோன்றி, ஒரு காரணத்தால் விட்டுப்போகும் உறவு அல்ல ஆன்மீக உறவு. இந்த உறவை "பெரியாழ்வார்" தான் அருளிச்செய்த திருமொழியில்.

"உனக்கும் எனக்கும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு"

என்று கூறியுள்ளார். இங்கு ஆயிரம் என்ற சொல் எண்ணிக்கையைக் குறிக்காமல், கணக்கில் அடங்காதது, என்பதை குறிப்பவையாகப் பொருள் கொள்ள வேண்டும். தந்தையைப் போலவே மகளான ஸ்ரீ ஆண்டாளும். இறைவனே ஒழிக்க நினைத்தாலும் ஒழிக்க முடியாத உறவு என்று **"உன் தன்னோடு உறவேல் நமக்கிங்கு ஒழிக்க இயலாது** என்று உறவின் நெருக்கத்தை சுட்டிக்காட்டுகிறார்.

இத்தகைய பிரிக்கமுடியாத உறவைத் தான் திருமந்திரம் நமக்குச் சுட்டிக் காண்பிக்கின்றது.

மேலும் நமக்கு எல்லாவித உறவுமாய் உற்ற துணையாய் இருப்பவன் எம்பெருமான் ஒருவனே; இறைவனே நமக்கு எல்லாவித உறவினராயிருப்பதால் எனக்கு என்ன குறை; எதைப்பற்றியும் இனி எனக்கு சிந்தனை இல்லை; என்று களிப்புடன் பேசுகிறார், நம்மாழ்வார். தான் அருளிச் செய்த பெரிய திருவந்தாதியில்.

"அடர் பொன் முடியானை ஆயிரம் பேரானை
சுடர் கொள் சுடராழியானை இடர்கடியும்
மாதா பிதுவாக வைத்தேன் - எனதுள்ளே
யாதாகில் யாதே இனி."

ஸ்ரீயோடு கூடிய நாராயணன் தான். தாய் தந்தை என்று தொடங்கி ஒன்பது வகை உறவுகளை திருமந்திரம் உணர்த்துகிறது.

அவைகள்:

1. தந்தை (தாய்) மகன் (பிதா (மாதா) புத்ர:)

ஓங்காரத்தின் முதலெழுத்தான "அகாரம்" இறைவனைக் குறிக்கும் என்று திருமந்திர விளக்கத்தில் கூறப்பட்டது. இந்த உலகமும், அதில் உள்ளவைகளும், இறைவனிடமிருந்தே தோன்றியதால், ஜீவர்களுக்கு இறைவன் தந்தையாகின்றான். பிரளயத்தின் போது அனைத்துயிர்களையும் தன் வயிற்றில் கொண்டு காப்பவன் ஸ்ரீமந்நாராயணன் என்று சுருதி கூறுகின்றது. பிரளயத்தின் போது ஒரு சிறிய குழந்தை உருவம் கொண்டான் இறைவன். பிறகு, அப்போழ்தில் முளைத்த ஒரு சிறிய ஆல இலையில், ஏழு (7) உலகங்களையும் தனது சிறிய வயிற்றில் வைத்துக் கொண்ட அந்த பாலகன் பள்ளிகொண்டான் என்று நம்மாழ்வார் தனது திருவாய் மொழியில் அருளிச் செய்துள்ளார்.

> "பள்ளியாலிலை யேழுலகம் கொள்ளும்
> வள்ளல் வல்வயிற்றுப் பெருமான்
> உள்ளுளார் அறிவார் அவன்றன்
> கள்ள மாய மனக்கருத்தே?"

வயிற்றில் கொண்டு காப்பாற்றி பிறகு படைப்பதால் ஸ்ரீமந்நாராயணனே உலகப்படைப்பிற்கு காரணம் என்ற வகையில் அவனே தாயுமாகின்றான்.

குலசேகராழ்வார், திருவிற்றுவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் "அபயப்பிரதான பெருமானை" மங்களா சாசனம் செய்து அருளிச் செய்த பெருமாள் திருமொழியில் திருமந்திரம் காட்டும் ஒன்பது உறவுகளைப் பற்றி கூறியுள்ளார்.

2. காப்பவன் - காப்பாற்றப்படுவன் (ரக்ஷக ரக்ஷ்ய)

ஓங்காரத்தின் முதலெழுத்தான அகாரத்தினின்று தோன்றிய சொற்கள் கூறும் பொருள்களனைத்தும், இறைவனால் படைக்கப்பட்டவைகள். ஒரு பொருளை உண்டாக்கியவன் அப்பொருளைக் காக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதியல்பு. இதே கருத்தை, "மூவாத்தனிமுதலாய் மூவுலகங்காவலோன்" என்ற நம்மாழ்வாரின் திருவாய் மொழிப்பாசுரத்திற்கிணங்க, ஒரு நாட்டிற்கு அரசன் காவலனாகப் செயல்படுவதைப் போல, இறைவன் ஜீவர்களை காப்பவனாகவும், ஜீவர்கள் இறைவனால்

காப்பாற்றப்படுவர்களாகவும் உன்ன உறவை திருமந்திரம் காட்டுகிறது.

ஒரு நோயாளி தன்னை துன்பத்திற்குள்ளாக்கும் மருத்துவன் மீது வெறுப்பு கொள்ளாது நேசிக்கவே செய்கிறான். இக்கருத்தை உள்ளடக்கி குலசேகராழ்வார் மருத்துவன் நிலையில் இறைவனையும் நோயாளியின் இடத்தில் தன்னையும் வைத்து இந்த உறவை பெருமாள் திருமொழியில் உணர்த்தியுள்ளார்.

3. ஆண்டான் - அடிமை (சேஷி - சேஷன்)

ஆன்மாவுக்கு ஆன்மாவான இறைவன் பரமாத்மா எனப்படுவன். பரமாத்மாவுக்கும் - ஜீவனுக்கும் உள்ள உறவுதான் சேஷி - சேஷ சம்பந்தம். சேஷி என்றால் முழுமையானது என்று பொருள். சேஷம் என்றால் அம்சம் எனப்படும். ஆக பகவானுக்கு சரிராம்சமாக இருப்பது ஜீவன் என்ற கருத்து சேஷித்வம் எனப்படும்.

ஓங்காரத்தின் மூன்று எழுத்துகளான அகாரம் - உகாரம் மகாரம் ஆகிய மூன்றையும் தொடர்பு கொண்டே இந்த உறவை அறிந்து கொள்ள வேண்டும். அகாரம் எம்பெருமானை குறிக்கும், மகாரம் ஜீவனைக் குறிக்கும், இவையோடு உகாரத்தை தொடர்பு கொண்டு அகாரத்தின் மேல் மறைந்துள்ள நான்காம் வேற்றுமை உருபான குகாரத்தை வரையறுத்தலை உணர்த்தும் தேற்றேகாரமாக பொருள்கொள்ளும் போது எம்பெருமானுக்கே ஜீவர்கள் அடியர்கள், என்பது விளங்கும். "ராமன்" - "நிலவுரிமை" என்று கூறினால் இரண்டு சொற்களும் தொடர்பற்று தனித்தனி சொல்லாக காணப்படும். நான்காம் வேற்றுமை உருபான 'கு' என்ற எழுத்தை தொடர்புபடுத்தி பொருள் கொண்டால், "ராமனுக்கு நிலவுரிமை" என்று விரியும். தேற்றேகாரமாகக் கொண்டு பொருள் கூறும் போது "ராமனுக்கே நிலவுரிமை" என்று தேறும் இதுபோலவே ஜீவன் மற்றெவர்க்கும் அடியன் இல்லையாதலால், "எம்பெருமானுக்கே" அடியன் என்று பொருள்பட தேற்றே காரமாக இணைந்தது.

ஆண்டான் அடிமை உறவு என்றால் துன்பமயமானது தானே என்று தோன்றலாம். ஒரு செல்வனிடத்து கைக்கூலி பெற்றுக் கொண்டு ஏவிய வேலைகளை செய்து அடிமையாக இருப்பது துன்ப மயமானதுதான்! ஆனால் ஒரு குடிமகன் என்ற நிலையில் அரசனுக்கும் அரசு நீதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பது அடிமைத்தனமல்ல! நியாயத்திற்கு புறம்பான செயல்களில்

சுதந்திரமாக செயல்பட முயையும் போது, ஆத்ம ஞானத்திற்கு தடை என்ற நிலையில் துன்பமடைய காரணமுண்டு. இது அனுகூலமானதல்ல என்ற நிலையில் நாம் அடியன் - அடிமை என்ற சொற்களின் பொருளை புரிந்து கொள்ள வேண்டும்.

இதே கருத்தை குலசேகராழ்வார் இறைவனை அரசன் ஸ்தானத்திலும் தன்னை குடிமகன் ஸ்தானத்தில் வைத்து, பரமன் ஆண்டான் (சேஷி) என்றும் குடிமகன் அடிமை (சேஷன்) என்றும் பெருமாள் திருமொழியுள் குறிப்பிட்டுள்ளார்.

4. கணவன் - மனைவி (பர்த்ரு - பார்யா)

சேஷித்வத்தை உணர்ந்தது போலவே உகாரத்தை தேற்றே காரமாகக் கொண்டு அறியப்படும் மற்றொரு உறவு இது.

உகாரத்தை தேற்றேகாரமாகக் கொள்ளாமல் பொருள் அறிந்தால், ஜீவன் இறைவனுக்கு அடிமை என்ற நிலையல்லாது, மற்றவர்க்கும் அடிமையாகக் கூடும் என்று தோற்றும். இது ஆத்மனுக்கு அனுகூலமானதல்ல என்று அறிந்தோம். கணவன் மனைவி உறவில் தேற்றேகாரம் இன்றியமையாதது. ஒரு மங்கை கற்பு நெறியோடு வாழ்வது மிக அவசியம். கணவன் குறிப்பறிந்து செயல்படுவதும் அவள் அவனுக்கேயன்றி மற்றெவருக்கும் அடிமையல்ல என்பதை உணர்த்த வேண்டும். இந்த நிலை **"அநந்யார்ஹத்வம்"** என்று சொல்லப்படுகிறது.

சீதா தேவி தன் கற்பின் மகிமையால், ராவணனை அழித்திருக்க முடியும்! ஆனால் அது ஸ்ரீராமனின் வீரத்திற்கும் சுவாதந்தர்யத்திற்கும் இழுக்கு என்றும், தனது பாதந்தர்யத்திற்கு தகாத செயல் என்று வாளாவிருந்தாள் என்பதை இங்கு நினைவு கூர்வது மிகப்பொருத்தம்.

ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே புருஷோத்தமன், இதர ஆன்மாக்களைத்தும் ஸ்திரிகளே. **"எஜமானத்வம்"**, **"சேஷித்வம்"**, **"புருஷத்வம்"** முதலிய குணங்களை எம்பெருமானுக்கே உரியவை. இக்குணங்களுக்கு எதிர்தட்டான **"தாசத்வம்"**, **"சரீரத்வம்"** - **"ஸ்திரித்வம்"** - **சேஷத்வம்** ஆகிய குணங்களனைத்தும் ஜீவர்களுக்கேற்பட்டது.

புருஷோத்தமான எம்பெருமானுடைய பேராண்மைக்கு முன், உலகம் முழுமையும் பெண் தன்மையாக இருத்தலும், ஜீவர்கள்

சுவதந்தரர்களாக செயல்படாது எம்பெருமானுக்கே வசப்பட்ட பரதந்தரைகள் என்ற "ஸ்திரிபாவம்" ஸ்வாபிகமாக உண்டானது.

ஆழ்வார்களும் எம்பெருமானை அடைய "நாயகிபாவனையை" மேற்கொண்டார்கள் என்பதை நாம் அறிந்துள்ளோம். நாயக நாயகி பாவனையின் விசேஷம் என்னவென்றால் நாயகி தன் உடல் பொருள் - ஆவி அனைத்தையும் ஒளிவு மறைவின்றி நாயகனிடம் ஒப்புவித்து, அவனுடைய போகத்திற்கு காத்திருப்பவள் என்று கருதப்படுவதேயாகும். மேலும், அவனது நன்மையையும் மேன்மையையும் மனதிலிருத்தி, அவனால் தான், தனக்கு சகல சௌபாக்கியங்களும் உண்டாகின்றன என்ற பெருமையை உணர்வதும், அவனில்லையேல் எந்த நல்ல செயல்களிலும் அவனோடு "சம உரிமையும் - பங்கும்" பெறமுடியாமல் போய்விடும் என்று கருதுவதே நாயக - நாயகி பாவம்.

நம்மாழ்வாரும் - திருமங்கையாழ்வாரும் தங்களை நாயகிகளாகப் பாவித்து தங்கள் காதலுக்கு எம்பெருமானை இலக்காக்கி, பிரபந்த பாசுரங்கள் பாடியுள்ளார்கள். நாயகியே பேசுவது போலவும், சில நேரங்களில் தாயோ, தோழியோ, பேசுவது போலவும் அமையப் பெற்றவைகள் "அகப்பொருள் பாசுரங்கள்" என்று கூறப்படும். திவ்ய பிரபந்த பாசுரங்களில் இவைகள் மிகச் சிறப்பு வாய்ந்தவை. நம்மாழ்வார் தன்னை நாயகியாக பாவித்து எம் பெருமானை அடைய ஏங்குகிறாள். அந்தக் கவலையில் எதை நோக்கினாலும் சங்கும் - சக்கரமும், தெரிகின்றதாம்! இதை ஒரு தாய் கூறுவது போல அருளிச் செய்த பாசுரம்:

"நங்கைமீர்! நீரும் ஒரு பெண் பெற்றது நல்கினீர்
எங்ஙனே சொல்லுகேன் யான் பெற்ற ஏழையை?
சங்கென்னும்; சக்கரமென்னும்; துழாயென்னும்
இங்ஙனே சொல்லும் இராப்பகல் என் செய்கேன்.

இந்த உறவில் மனைவிக்கு சமஉரிமையும் பங்கும் வழங்கப்பட்டுள்ளது. குலசேகராழ்வார் நாயகி - நாயக பாவனையில் பெருமாள் திருமொழியை அருளிச் செய்யவில்லை. இருப்பினும் தன்னை மனைவியின் நிலையில் இருத்தி, எம்பெருமானை கணவனின் நிலையில் வைத்து, மனைவியான ஜீவன் கணவனான எம் பெருமானுடைய உடைமை. அவனது

உறவில் இன்பத்தையும், பிரிவில் துன்பத்தையும் அடைகிறார்கள் என்ற நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

5. அறிபவன் - அறியப்படுவது (ஞாத்ரு - ஞேயம்)

திருமந்திர விளக்கத்தில் கூறியபடி ஓங்காரத்தின் மூன்றாவது எழுத்தான "மகாரம்" அறிவு மயமான ஜீவனைக் குறிக்கும். அறிவு மயமானவன் என்றால் "அறிபவன்" என்று பொருள் தேறும். அறிபவன் என்ற ஒன்று இருக்கும் போது அறியப்படுவது என்று ஒன்று இருந்தேயாக வேண்டும். ஆக அறிபவனால் அறியப்படுவது எத்தன்மையது என்ற தொடர்பை (உறவை) நமக்கு உணர்த்துவது ஓங்காரத்தின் மூன்றாவது எழுத்தான "ம" காரம்!

கேவலம் லோகார்த்த அறிவையூட்டும் தர்க்க சாஸ்திரம் கணிதம் - வானவியல் - ஆயுர்வேதம் முதலானவைகளில் திளைத்து அறிந்தவர்களையும் அந்தந்த வகையில் அறிவாளிகள் (ஞானிகள்) என்றே கூறப்படுகிறார்கள். இவைகளை அறிந்தால் மட்டும் அறியப்பட்டதாக ஆகாது! துன்பத்தில உழன்று மறு பிறவிக்கு வித்திடும் சம்சாரபந்தம் என்ற விஷ சூழலினிருந்து விடுபட்டு சுகாநுபவத்தை அடையும் வழியைப் போதிக்கும் சாதனங்களை அறிவதே அறியப்படுவது ஆகும்.

அழகிய தாமரை மலரில் பிறந்த பிராட்டிக்கு நாயகனான எம்பெருமான் ஒருவனையே பற்றுவதற்குரிய ஆற்றலே அறிவு (ஞானம்) என்று பொய்கை ஆழ்வார் தனது பாசுரத்தில்

"ஒண்டா மரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும்
உணர்வு"

என்று அறியப்படுவதை நமக்கு அருளி செய்துள்ளார். உலகியலில் அறியப்படுவது அநேகம் இருந்தாலும் அவைகளை அறிவதினால் உலக வாழ்க்கையில், அற்பப் பலன்களை மட்டுமே நம்மால் அனுபவிக்க இயலும். அறிவுக்கும் ஆனந்தத்திற்கும் இருப்பிடமான இறைவனைப் பற்றி அறியும் போது என்றென்றும் ஆனந்த வெள்ளத்தில் திளைக்க கூடுமே! ஆக எம்பெருமானோடு ஒட்டிய உறவு அறியப்படுவது என்பது வெள்ளிடைமலை.

கதிரவனின் வெப்பம் மிகுந்த கிரணங்கள் மட்டுமே, தாமரை மலர்வதற்கு காரணமாகும். மாறாக தீப்பிழம்பின் கிரணங்களை தாமரையின் மேல் படுமாறு அமைத்தால், தாமரை காய்ந்து

கருகிவிடும். இதைப் போலவே ஜீவனின் இதயத் தாமரை, இறைவனின் குணவிசேஷணங்களை அறிதல் என்பதால் மட்டுமே மலரும் கேவலம் லோகார்த்த அறிவினால் மலர்ந்து இறைவனை அடையமுடியாது என்று குலசேகராழ்வார் அருளிச் செய்துள்ளார்.

6. உடைமை - உடையவன் (ஸ்வம் - ஸ்வாமி)

இதுவரை கூறப்பட்டுள்ள உறவுகைள் பற்றி, ஓங்காரத்தினா லறிந்தோம். இந்த உறவை, திருமந்திரத்தின் நடுப்பதமான "நம"; என்பதிலிருந்து அறிவோம்!

"நான்" என்று கூறிக்கொள்ளும் ஜீவன், மற்றெவருக்கும் உரிமையல்லன், தனக்கும் உரிமையல்லன், இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உரிமையானவன் என்று நம: என்ற பதம் விளக்கியதை முந்தைய அதிகாரத்தில் அறிந்தோம். இதனால் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் உடைமை என்ற நிலையில், பரமாத்மாவுக்கு மட்டுமே சொந்தமானவை என்று தேறும். ஒரு சொத்திற்கு தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் திறன் இல்லை. அதனால் சொத்தான ஜீவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு ஸ்வாமி என்ற எஜமானான பகவானுக்கே உரியது. சொத்தின் பயனும் எம்பெருமானுக்கே உரிமை என்பதை காட்டும் உறவு விளங்கும்!

நதிகள் நாடெங்கிலும் ஓடுங்கின்றன. மக்களுக்கும், பயிர்களுக்கும் நன்மை செய்து, இறுதியில் சேருவதற்கு தகுதியான இடம் கம்பீரமான கடல்தான் என்றுணர்ந்து, அதை அடைகின்றன. நதிகள் பெருக்கெடுத்து பிரவாகமாக ஓடும்போது, தன்னிச்சையாக செயல்படுவது போல தோன்றினாலும், அது தங்களது சுய பயனுக்காக அல்ல என்பது தெளிவு. நதிகள் கடலை அடைவதால் கடலுக்கு ஒரு நிறைவும், அடையாவிட்டால், கடலுக்கு ஒரு குறைவும் உண்டாவதில்லை. தங்களது இயல்பால் தனித்து இருக்க முடியாததால் கடலை அடைகின்றன. ஜீவர்களும் உலக வியாபாரங்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட போதிலும் முடிவில் உடைமை, உடையவனையே அடைவது இயல்பு. இப்படி கூறியிருப்பது, குலசேகராழ்வார் தான் இயற்றிய பெருமாள் திருமொழியில்.

7. உயிர் - உடல், சரீரி - சரீரம் - (ஆன்மா - ஆன்மீய)

திருமந்திரத்தின் இறுதிப்பதமான "நாராயண" என்பதிலிருந்து இந்த உறவை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாரங்களாகிய ஜீவர்களின் சமூகத்தை சரீரமாகக் கொண்டு, அதனுள் உயிராக (ஆன்மாவாக) உட்புகுந்து, ஜீவர்களை ஏவுவதற்கும், ஜீவனின் இயல்பான அறிவு சுருங்கிய நிலையிலிருந்து, விரிந்து மலர்ந்த நிலையில், தன்னை காட்டிக் கொடுக்கும் நேர்த்திக்கும் எடுக்காட்டாக விளங்குவது இந்த உறவு.

சேதனாசேதனங்களான நாரங்களை தான் தாங்குபவனாகவும் தனக்கு இருப்பிடமாகவும் (அயனமாக) கொண்டவன் எம்பெருமான் என்று திருமந்திர விளக்கத்தில் கூறப்பட்டது, ஜீவர்களை தனக்கு சரீரமாக கொண்டு, அவற்றுள் தான் உறையும் நிலையில், சரீரம்தான் ஆன்மாவை தாங்குவது போல தோன்றுவது இயல்பு. உண்மையில் அப்படியல்ல. சரீரத்திற்குள் இருக்கும் ஆன்மாவுக்கு (உயிர்) சரீரம்தான் ஆதாரம் என்றால், ஆன்மா (உயிர்) போன பின்பும் சரீரம் நிலைத்து நிற்க வேண்டுமே! ஆனால் நாம் தினமும் காண்பது சரீரம் கீழே வீழ்வதைத் தானே. ஆதலால் ஆன்மாவே (உயிரே) உடலிற்கு ஆதாரம் என்பது தெளிவு.

இறைவன் உட்புகுந்து அந்தர்யாமியாக செயல்படுகிறான் என்பது உயிரான ஆன்மாவை தனக்கு சரீரமாகக் கொண்டு இயங்கும் எம்பெருமானே உயிருக்கும் ஆதாரம் என்று விளங்குகிறதல்லவா? இந்த சரீரி-சரீர சம்பந்த நிலை வைணவ சித்தாந்தத்திற்கே உரிய, மற்றைய சித்தாந்தங்கள் இசையாத ஒரு அசாதாரண சித்தாந்தம்!

அனைத்து சரீரங்களிலும், உள்ளும் வெளியும் மறைந்து வியாபித்து இருப்பவன் எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனே என்று பொருள்படும். நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழிப்பாசுரம் இங்கு கவனத்தில் கொள்வது தகும்.

> "திடவெசும்பெரி வளிநீர் நிலமிவைமிசைப்
> படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
> உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
> சுடர்மிகு குருதியுள் இவையுண்டசுரனே."

ஒவ்வொரு ஜீவனும் இறைவனை நோக்கி, என்னை சரீரமாக

கொண்டு எனக்கு நீ உயிராய் இருப்பது போலவே, அனைத்தையும் சரீரமாக கொண்டு அவைகளுள் உயிராய் மறைந்து நிற்கிறாய் அல்லவா? என்று எம்பெருமானின்' சரீரி-சரீர சம்பந்தத்தையும், அந்தர்யாமித்வத்தையும் காட்டும். இந்த பாசுரமே ராமாநுஜ சித்தாந்தத்திற்கு திறவு கோலாக அமைந்தது போலும்!

தாபத்தைப் போக்கி, பயிரைக் காப்பதற்கு மழை அவசியம். மழை தவறிவிடுமானால், பயிர்கள் நீர்நிலைகளைத் தேடிப்போக முடியாத நிலையில், மழைக்காக மேகத்தை நோக்கிய வண்ணம் இருப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. அதுபோலவே, ஜீவர்களுக்கு, சம்சாரபந்தம் என்ற தாபத்தைப் போக்க, எம்பெருமானின் கருணையை எதிர்நோக்கித்தான் இருக்க வேண்டுமேயன்றி வேறு வழியே இல்லை. உயிர் என்ற ஆன்மா இல்லாமல் சரீரம் தனித்து செயல்பட முடியாது. அந்த ஆன்மாவான உயிரை உடலாகக் கொண்ட உயிரான எம்பெருமானே நமக்கு கதி என்று குலசேகராழ்வார் அருளிச் செய்வது எத்துணை பொருத்தம்.

8. தாங்குபவன் - தாங்கப்படுவது (ஆதாரம் - ஆதேயம்)

சேதனா சேதனங்களை தனக்கு இருப்பிடமாகக் கொண்டவன் இறைவன் (நாரங்கள் + அயனம்) என்ற வகையில், சரீரி-சரீர சம்பந்த விளக்கத்திலேயே இந்த உறவும் உணர்த்தப்பட்டதால், இங்கே விரிவாகக் கூறவில்லை.

ஆர்ப்பரித்து, அலை பொங்கி எழும் அச்சந்தருகின்ற கடலின் நடுவில் செல்கின்ற ஒரு கப்பலின் பாய்மரக் கொம்பின் மீது தங்கிய பறவை, அதனை விடுத்து. போக்கிடம் தேட. தன் வலிமை கொண்ட மட்டும், நாற்புறமும் பறந்து அலைந்தாலும், எங்கும் தங்குமிடம் காணாது, மீண்டும் அக்கப்பலின் பாய்மரக் கொம்பின் மீதே கால் பாய்ச்சி உட்காரும்! இதைப் போலவே பிறவிப் பெருந்துயர் என்ற பெருங்கடலைக் கடக்க, இறைவன் என்ற மரக்கொம்பை பற்றுவதை தவிர, ஜீவர்களுக்கு வேறு புகலிடமே கிடையாது, என்று அறுதியிட்டுக் கூறுகிறார் குலசேகராழ்வார் தான் இயற்றிய பெருமாள் திருமொழியில்.

9. அனுபவிப்பவன் - அனுபவிக்கப்படுவது (போக்தா - போக்யம்)

திருமந்திரத்தின் மூன்றாவது சொல்லான நாராயணாய என்பதிலுள் "ஆய" என்ற நான்காம் வேற்றுமையுருபுவினால் இந்த உறவு அறியப்படுகிறது.

வடமொழியில், நான்காம் வேற்றுமையான "அதன் பொருட்டு" அல்லது "அவனுக்காக" என்பதை உணர்த்த "ஆய" என்ற உருபு இணையும். இதனால் எம்பெருமானின் பொருட்டே உயிர்கள் உள்ளது என்றும், பரமாத்மாவின் அனுபவத்திற்காகவே ஜீவர்கள் உள்ளார்கள் என்று பொருள்படும்.

"போக்தா" என்ற சொல்லிற்கு "உண்பவன்" என்று பொருள் கொண்டால், "போக்யம்" என்பது உண்ணப்படுபவைகளாகும். இதில் உண்பவன் இறைவன், உண்ணப்படுபவை உயிரான ஜீவாத்மா. இந்த நிலை சில வேளைகளில் மாறுவதுமுண்டு. எப்படியெனில், எம்பெருமானின் அனந்த கல்யாண குணங்களில் ஈடுபாடு கொண்டு அவனை மனத்திலிருத்தி அனுபவிக்கும் போது, ஜீவன் அனுபவிப்பவன் என்ற நிலையில் உண்பவனாகின்றான். ஜீவனது அன்பையும், தன்னலமற்ற பணிகளையும் (கைங்கர்யங்கள்) இறைவனும் அனுபவிப்பவன் என்ற நிலையில் ஜீவன் உண்ணப்படுவனாக இருக்கிறான். மேலும், பயனை எதிர்பாராது செய்யும் நற்பணி எம்பெருமானின் இச்சைக்கு உகந்தது என்று செயலாற்ற வேண்டும். மாறாக தனது சுயநலத்திற்கு உகந்ததாக செய்யும் நற்பணிகள், நெற்பயிரில் களைமுளைத்தது போல துன்பத்தில் முடியும். பயனைக்கருதாது செய்யும் இறைப்பணிகளினால் பெரும்பயனை அடையலாம் என்று "உனக்கே நாம் ஆட் செய்வோம், மற்றைய நம்காமங்களை மாற்றேலோ ரெம்பாவாய்" என்ற ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவை பாசுரம் இதை உறுதிப்படுத்துகிறது.

ஜீவர்கள் தங்களது பக்திப் பெருக்கினால், இறையன்பு, இறைவனின் கருணை என்ற வற்றாத செல்வங்களையே விரும்புதல் வேண்டும். இதைவிடுத்து, அழியக்கூடிய நிலையில்லாத பொருட்முதல் செல்வத்தை விரும்புவார்களாயின் எம்பெருமானின் அன்பிற்கும், கருணைக்கும் பாத்திரமாகாமலே (போக்யமாகாமலே) போய்விடக்கூடும் என்பது குலசேகராழ்வாரின் அருள்மொழியான

பெருமாள் திருமொழி கூறுவது. எம்பெருமானின் அன்பு, கருணை என்ற செல்வங்கள் ஜீவனுக்கு போக்யம். ஜீவனின் நற்பணிகள் (கைங்கர்யம்) செய்யும் இச்சை இறைவனின் போக்யம்.

குலசேகராழ்வாரின் பாசுரங்கள்: பெருமாள் திருமொழி ஐந்தாம் பத்து.

7. முக்தி பெறும் வழிகள்

உலகில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை, சாத்திரங்களின் துணை கொண்டு, நம் முன்னோர்கள் காட்டிக் கொடுத்துள்ளார்கள்.

கடோப நிஷதத்தில், சிறுவன் நசிகேதனை திருப்திப்படுத்த. யமதர்மராஜன் அநேக கவர்ச்சிமிக்க உடைமைகள் மட்டுமல்லாமல், தரணியாளும் பதவியையும், வரங்களாக வழங்கியும், சிறுவன் ஏற்றுக் கொள்ளாது, பதவியும், உடைமைகளும், ஒரு நாளும் மனிதனுக்கு மனநிறைவை அளிக்க வல்லதல்ல என்று கூறி மறுத்துவிட்டானாம். ஆக சாதாரண உலகியல் வாழ்வு மனநிறைவை அளிக்கவல்லது அல்ல என்று சிறுவன் நசிகேசனின் கூற்று உறுதிப்படுத்துகிறது. ஆதனால், மனநிறைவு அளிக்கும் ஒரு மேம்பட்ட வாழ்க்கையைப் பெற நாம் முயற்சிக்க வேண்டும்.

உலகியல் வாழ்க்கை துன்பங்கள் நிறைந்த **"ஜீவனம்"** என்ற ஒரு சாதாரண வாழ்வாகும். பேரின்பத்தோடு கூடிய மேம்பட்ட வாழ்வே **"உஜ்ஜீவனம்"** என்ற உயர்ந்த வாழ்வாகும். இதை அடைய முயற்சிப்பதே வாழ்வின் பயன். இதை பெறுவதற்குள்ள உபாயங்கள் என்ன, அதை எவரிடமிருந்து பெற வேண்டும், என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இதை அளிக்கவல்லவர் எம்பெருமான் ஒருவரே. சேதனர்களால் செய்யப்படாததாய் முன்பே சித்தமாக உள்ளவர் எம்பெருமான். ஆகவே அவரே **"சித்தோபாயம்"** எனப்படுகிறார். அவரை அடைவதற்கு சேதனர்களால் செய்யப்படுவதற்கு உரிய உபாயமாக உள்ளது. **"பக்தியோகமும்" - "பிரபத்தி"** என்ற **"சரணாகதியும்"**. இவைகள் சேதனர்களால் செய்யப்படுவதால் **"சாத்யோபாய"** மாகின்றது.

உலகில் ஜீவனோபாயம் எப்படி நடக்கிறது என்பதை ஆராய்ந்தால், உயர்ந்த வாழ்வான உஜ்ஜீவனோபாயத்திற்கு உள்ள வழிகளை (உபாயங்கள்) ஓரளவு உணரமுடியும்.

இவ்வழிகளை ஒரு உதாரணம் கொண்டு பார்க்கலாம்.

ஒரு முதலாளியிடம் ஒரு பணியாளர் பணிபுரிகிறார். பணிபுரிபவருக்கு முதலாளி பணிக்கு தகுந்த ஊதியம் கொடுத்து அவரைக் காப்பாற்றுகிறார். இதனால் எஜமானர் பணியாளருக்கு

ஜீவனோபாயமாகின்றார். ஊதியம் வழங்கும் எஜமானர் பணிபுரிபவரால், எவ்வகையிலும் செய்யப்படாதவராக ஏற்கெனவே சித்தமாக இருப்பவராதலால், எஜமானர் பணியாளருக்கு சித்தோபாயனாக கருதப்படுகிறார்.

எஜமானரின் மனம் உவக்கும் வரை பணியை முழுமையாகப் பணியாளர் முடித்துக் கொடுத்தபின்பே, எஜமானர் ஊதியம் வழங்கி காப்பாற்றுகிறார். முழுமையான பணியை முடித்துக் கொடுக்காத நிலையில் ஊதியம் வழங்கப்படுவதில்லை. ஆதலால் பணியாளருக்கு ஒரு முழுமையான பணியும் **"ஜீவனோபாயமாகின்றது"**. இந்தப் பணி ஏற்கனவே சித்தமாக இல்லாது பணியாளரால் சாதிக்கப்படுவதாக இருப்பதால், ஒரு முழுமையான பணி பணியாளருக்கு **"சாத்யோபாயமாகின்றது."** மேலும்; முழுமையான பணியே ஊதியம் வழங்க காரணமாக அமைவதால் இது பலனுக்கு காரணமாகவும் ஆகின்றது **(பலகரணம்)**. எஜமானருக்கு பலனை அளிப்பவன் என்ற தகுதிக்கும் காரணமாகின்றது. **(பலப்ரதன்)**.

இந்த உதாரணத்தைச் சார்ந்தே உலகியல் வாழ்க்கையில் சேதனர்கள் **"பக்தியேகம்"** என்ற **"சாத்யோபாயத்தை"** முழுமையாகக் கடைப்பிடித்து வாழ்ந்தால், சித்தோபாயனான எம்பெருமான் உஜ்ஜிவனத்திற்குரிய மோக்ஷத்தைப் பலனாக அளிப்பவன் என்பது விளங்கும்.

இதே உதாரணத்தை வேறு ஒரு பரிமாணத்தில் நோக்கும்போது சித்தோபாயனே, சாத்யோபாயத்தின் பொறுப்பையும் சிலருக்காக ஏற்றுக் கொள்வதையும் பார்ப்போம்.

அந்த பணியாளர், ஒரு குடும்பத்தலைவர் என்ற நிலையில் தனது குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். மனைவி, மகன், மகள் என்று பல உறவினர்களை கைம்மாறு எதிர்பார்க்காமல் காப்பாற்றுகிறார். அவர்களும் வீட்டின் நிர்வாகத்தில் பங்கு கொண்டு அநேக சிறுசிறு பணிகளை செய்கிறார்கள். இப்படி தாங்கள் செய்யும் பணிகளுக்காக, குடும்பத்தலைவர் தங்களை காப்பாற்றுகிறார் என்று எண்ணாமல் தங்களது கடமை என்று எண்ணியே பணியாற்றுகிறார்கள். ஆதலால் இப்பணிகள், பலனை எதிர்பாராமல் செய்யும் ஒரு தொண்டாகவே (கைங்கர்யமாகவே) கருதப்படுகின்றது. குடும்பத்தலைவரும் உறவை முக்கியமாகக்

கொண்டே பலனுக்கு காரணமாகவும் பலனை அளிப்பவனாகவும் விளங்குகின்றான். இங்கு பலனை அளிப்பவன் என்ற சித்தோபாயமே சாத்யோபாயத்தின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதாகின்றது.

சேதனங்கள் பிரபத்தி என்ற சரணாகதியை செய்ததும், சித்தோபாயனான எம்பெருமான், சாத்யோபாயத்தின் பொறுப்பையும் ஏற்று, அவர்களின் தொண்டையே (மைங்கர்யத்தையே) முக்கியமாகக் கொண்டு பலனாக மோக்ஷத்தை அளிக்கின்றான் என்பது விளங்குகிறதல்லவா?

இந்த இரண்டு வழிகளான பக்தி யோகத்தைப் பற்றியும் பிரபத்தியைப் பற்றியும் இனி காண்போம்.

சேதனர்களாகிய நாம் வினைப்பயன்கள் காரணமாக அஞ்ஞானத்தில் மூழ்கி, இறையருளை பெற முடியாதபடி வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டோம். மீண்டும் நாம் அவனிடம் நெருங்கிச் சென்று, விட்ட உறவை வளர்த்துக் கொள்ளுதல் மிக அவசியம். அதற்கு சாதனமாக அமைந்துள்ள வழிகளுள் பக்தியோமும் சரணாகதி என்ற பிரபத்தியும், வைணவம் காட்டும் உபாயங்கள்.

சுறுங்கச் சொல்லின் பக்தி நெறி என்பது "பற்றுவதெல்லாம் பற்றி எம்பெருமானைப் பற்றுகை". பிரபத்தி நெறி என்பது "விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விடுகை, அதாவது விட்டோம் என்ற எண்ணத்தையும் விடுகை."

தன்முயற்சியால் நடைபெறுவது பக்தி நெறி. தன் முயற்சியால் ஆவதொன்றுமில்லை எல்லாம் அவன் செயலால் ஆவனவே என்று துணிந்து தன் முயற்சி ஒழிய எம்பெருமானருளையே எதிர்பார்த்திருப்பது பிரபத்தி நெறி.

பக்தியோகம்:

எம்பெருமானை இடைவிடாது, இச்சரீரம் விடுமளவும் தியானம் செய்து கொண்டேயிருத்தல். இது முக்திக்கு நேரான உபாயமாகும். பக்தியை உண்டு பண்ணுவதற்கு கருவிகளாக அமைந்தவை "கர்மயோகமும்", "ஞானயோகமும்" ஆகும். ஆனால் இவையிரண்டும் முக்திக்கு நேரடி உபாயமாகாது, பக்தியை உண்டு பண்ணுவதற்கே சாதனமாக அமைந்தவை.

"கர்மயோகம்"

கர்மயோகமென்பது, "ஜீவன் - பரமாத்மா" இவர்களைப் பற்றிய உண்மைகளை சாத்திர மூலம் உணர்ந்து, பிறகு பலனில் பற்று இல்லாமல் செய்யும் காம்ய கர்மங்கள், நித்ய நைமித்திககர்மங்கள் ஆகியவைகளோடு, கட்டுப்பாட்டுடன் செயலாற்றுவதாகக் கொண்ட ஒரு நற்செயல். இது தபஸ் - தானம் - யாகம் என்று பலவகைப்படும்.

"ஞானயோகம்"

கர்மயோகத்தை சரிவர செய்து, அதனால் மனதை தன் வசப்படுத்திய ஒருவன், எம்பெருமானுக்குச் சரீரமான ஜீவாத்ம (தனது) ஸ்வருபத்தை இடைவிடாது சிந்தித்தலேயாகும்.

இவையிரண்டும் வரப்பெற்றவர்கள், ஆச்சார்யார்கள், சாத்வீகர்கள் முதலானார்களோடு நெருங்கிப் பழகும் போது, இறைவனிடம் உண்டாகும் அன்பு, அவனை இன்னும் தெளிவாய் அறியவே வண்டும் என்ற பேரன்பாக (காதல்) வளரும். இந்தப் பேரன்பே "பக்தி" எனப்படும். இந்த பேரன்பினால் தன் ஆன்மாவையும் காணப்பெறுகிறான். பிறகு முழுமையான பகவதனுபவத்தைப் பெறவிரும்பி பக்தியோகத்தை அனுஷ்டிக்கிறான். இது "பரபக்தி" எனப்படும்.

இந்நிலையில், எப்படி ஒரு நாயகி நாயகனின் பிரிவால் ஏங்கித் தவிப்பாளோ, அதே நிலையை அடைந்து, எம்பெருமானைக் காணவேண்டும் என்று நெஞ்சம் பதறும். இத்தகைய பக்தனுக்கு இறைவன் தன்னை கொஞ்சம் கொஞ்சமாய் காட்டிக் கொடுத்தும் - மறைந்தும் அவனது பக்தியை தூண்டுவான் இந்த நிலை பக்தனிடம் "பரஜ்ஞானத்தை" வளர்க்கும். இது தியான வடிவமானது.

பக்தியோகம் "அஷ்டாங்க யோகம்" என்றும் கூறப்படும்.

இயமம் - நியமம் - ஆசனம் - பிராணயாமம் - பிரத்தியாகாரம் - தாரணை - தியானம் என்ற ஏழு அங்கங்களோடு "சமாதி" என்ற அங்கியையும் சேர்த்து எட்டும் அஷ்டாங்கயோகமெனப்படும்.

<u>இமயம்</u>: வாய்மை, பற்றுதலில்லாமை, பிரும்மசர்யம், அஹிம்சை, திருடாமை ஆகிய ஐந்து இயல்புகள் கொண்டது.

<u>நியமம்</u>: தினமும் வேதம் ஓதுதல், புறத்தூய்மை, அகத்தூய்மை,

உடலை வருத்தும் விரதம் - தவம், இறையுணர்வு ஆகிய ஐந்து இயல்புகள் கொண்டது.

<u>ஆசனம்</u>: மனத்தை ஒரு முகப்படுத்தி தியானத்தில் அமரும் நிலை.

<u>பிராணாயாமம்</u>: மூச்சுக்காற்றை உள்ளிழுப்பதான "பூரகம்", காற்றை வெளியேற்றுவதான "ரேசகம்", உடலிற்குள்ளேயே காற்றை நிறுத்திக் கொள்ளுதலான "கும்பகம்" ஆகிய மூன்றையும் நிலைப்படுத்தி சரீரத்திலுள்ள ஐந்து பிராணன்களையும் வசப்படுத்துவதாகும். பிராணன் - அபானன் வ்யானன் - உதானன் - சமானன் என்பவை ஐந்து பிராணன்களாகும்.

<u>பிரத்தியாகாரம்</u>: ஐந்து புலன்களை கட்டுக்குள் வைப்பது.

<u>தாரணை</u>: மனதை சதா இறைவனிடம் லயிக்கச் செய்வது.

<u>தியானம்</u>: வேறு நினைவில்லாமல் இறைவனையே நினைப்பது.

இந்த ஏழு அங்கங்களையும் முறையாகப் பயின்றால், எட்டாவது நிலையான சமாதியை அடைய வழிபிறக்கும். இவைகளை செய்வது மிக கடினமானது. எண்ணெய் வார்க்கும் போது அதன் தாரை தொடர்ந்து விழுவது போல எம்பெருமானின் தியானம் தொடர்ந்து நிலை பெற வேண்டும்!

இவை தவிர வேறு வகையான ஏழு அங்கங்களையும் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். அவைகள், விவேகம் - விமோகம் அப்பியாசம் - கிரியை - கல்யாணம் - அனவசாதம் - அனுதர்ஷம் எனப்படும்.

<u>விவேகம்</u>: இறைவன் உறையும் ஆலயமான சரீரத்திற்குள், கண்ட உணவுகளையும், சாப்பிடக் கூடாதவைகளையும் இட்டு திணிக்காமல், சத்துவகுணமேலோங்கும் உணவு வகைகளையே உட்கொண்டு ஆகார நியமனம் என்ற தூய்மை பெற வேண்டும்.

<u>விமோகம்</u>: உலகியல் பொருள்களைப் பற்ற இச்சை கொள்ளாது ஆசையற்று அகத்தூய்மை பெறுதல்.

<u>அப்பியாசம்</u>: இறைவனை நெஞ்சில் கொண்டு அவனது கல்யாண குணங்களில் ஈடுபாடு கொள்ளுதல்.

<u>கிரியை</u>: தினமும் மேற்கொள்ளும் பஞ்ச யக்ஞங்கள் இதில் அடங்கும். "தேவயக்ஞம்" என்ற இறைவன் வழிபாடு, "பிரும்மயக்ஞம்" என்ற வேதம் ஓதுதல், ஓதுவித்தல், "பித்ருயக்ஞம்" என்ற நீத்தார்கடன், "மனுஷயக்ஞம்" என்ற அதிதி உபசாரம்,

"பூதயக்ஞம்" என்ற உயிரினங்களுக்கு ஆகாரமிடுதல் என்ற ஐந்து செயல்களும் கிரியை எனப்படும்.

கல்யாணம்: மனம் - வாக்கு - காயம் ஒன்றுபட்டு அஹிம்சை, கருணை, தானம், வாய்மை, பிறர் பொருள் விரும்பாமை ஆகிய நற்பண்புகள் அடையப் பெறுதல்.

அனவசாதம்: துன்பங்களைக் கண்டு வருந்தாமல் அத்துன்பங்களை தாங்கும் பக்குவம் பெறுதல்.

அனுதர்ஷம்: இன்பத்தைக் கண்டு தனது திருமேனியை அவ்வப்போது காட்டியும் மறைத்தும் உள்ள நிலையில், எப்பொழுதும் அவனைக் காணவேண்டும் என்ற ஒரு பேரானந்தம் உண்டாகும். இதுவே "பரமபக்தி" எனப்படும். எம்பெருமானை அனுபவித்தாலன்றி உயிர்தரிக்க முடியாத ஒரு ஆசையை உண்டாக்கும். இந்நிலையில் பிராட்டியோடு கூடிய எம்பெருமான் தனது பரிபூர்ணானுபவத்தைக் கொடுப்பதற்கு இசைவான். இந்த வகை பக்தனுக்கு முக்திநிச்சயம் உண்டு. மரண காலத்தில் இறைவனைப் பற்றிய நினைவு அந்திமஸ்முருதி கட்டாயம் பக்தனுக்கு வந்தேயாக வேண்டும். சரீரம் விட்டதும் அந்திமஸ்முருதியுடனேயே மோக்ஷலோகம் செல்கின்றான்!

இவ்வகையான பக்தி "சாதனபக்தி" எனப்படும். "சாத்தியபக்தி" என்ற மற்றொரு வகை, பகவானின் கருணை தானாகவே ஒருவர் மேல் லயிப்பது. இது மிக மிக அரிதான நிலை. மயர்வறமதி நலம் அருளப்பட்ட நம்மாழ்வாரே இதற்கு உதாரணமாக திகழ்கின்றார்.

"சரணாகதி என்ற பிரபத்தி"

பிரபத்தி என்றால் சரணாகதி என்று பொருள். இதற்கு "பரந்யாசம் - பரசமர்ப்பணம் - உபாயானுஷ்டானம்" என்று பல பெயர்களுண்டு.

சக்தியற்ற ஒருவன் தனக்கு வேண்டிய கார்யங்களை சாதித்துக் கொள்ள, அக்கார்யங்களை செய்து கொடுக்கும் தகுதி படைத்த ஒருவரை அணுகி, அவர் கோரியதைக் கொடுத்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்வதே சரணா கதியாகும். இவன் யாரிடம் உதவி கோரி செல்கிறானோ, அவனுக்கு இவன்கோரும் செயலைச் செய்து கொடுப்பதற்குள்ள சக்தியும்,

தகுதியும், நல்லெண்ணமும் இருத்தல் அவசியம். இல்லையேல் சரணாகதி தர்மம் பலிக்காமல் போகக் கூடும்.

ஒரு வேடன் பட்டினயிால் அவதியுற்று, இறுதியில் ஒரு முயல் குட்டியைப் பிடித்தான். தனது பசியைப் போக்கிக் கொள்ள முயல் குட்டியாவது கிடைத்ததே என்ற களிப்பில் இருந்த போது, தாய் முயல் வேடனின் காலில் வீழ்ந்து மன்றாடி கத்தித்துடித்தது. இதைக்கண்டு மனமிரங்கிய வேடன், குட்டியை விடுவித்து விட்டான். இக்கதையில், வேடனுக்கு சரணம் பற்றியவனை காப்பாற்ற வேண்டும் என்ற அறிவில்லை. முயலுக்கோ சரணாகதி செய்தால், அது பலிக்கும் என்று செயல்படுவதற்குள்ள அறிவாற்றல் இல்லாத பிராணி. ஆக சரணாகதி தர்மத்தின் பெருமையை அறிந்திராத நிலையில் சரணாகதி தர்மம் பலித்தது என்றால், ஞானானந்த மயனான எம்பெருமானிடம், ஞானச்ரயனான சேதனன் சரணாகதி செய்யும் போது, அது கட்டாயம் பலிதமாகத்தானே வேண்டும்.

சரணாகதி முறையான பிரபத்தியே பக்திமார்க்கத்தை விட சிறந்தது என்று வைணவம் கூறுவதற்கு காரணம் பிரபத்தி ஒரு எளிய வழிமட்டுமல்ல. அது பக்தியின் ஒரு அங்கம். கடினமார்க்கமான பக்தி கைவரப் பெறாத சேதனர்களுக்கு பிரபத்தியே முக்தி பெற சிறந்த சாதனம்.

இறைவனிடம், நான் வேறு கதி இல்லாதவன், வேறு ஒரு சாதனமும் இல்லாதவன். நீயே எனக்கு நல்ல பயனைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று முறையிடுவதே சரணாகதியாகும்.

ஆச்சார்யஸ்ரேஷ்டரான "ஸ்ரீ ஆளவந்தார்" தனது "ஸ்தோத்திர ரத்னத்தில்" எப்படிப்பட்டவன் சரணாகதன் என்று கூறியுள்ளார்.

"ந தர்ம நிஷ்டோஷ்மி ந சாத்மவேதி
ந பக்திமாந் த்வத் சரணாரவிந்தே
அகிஞ்ச னோ நன்யகதி ச் சரண்ய:
த்வத் பாதமூலம் சரணம் பிரபத்யே"

இதன் பொருள்: "நான் வேதங்கள் பயின்று ஓதியவனல்ல. நான் அநேக தர்மங்களை செய்த தர்ம நிஷ்டனல்ல, பக்தி செலுத்துபவனுமல்ல, கைமுதல் இல்லாதவன், சுருங்கச் சொன்னால் அகிஞ்சனன், உனது திருவடிகளை தஞ்சமாகப் பற்றுகிறேன்".

இந்த நிலையிலுள்ள அனைவரும் ஸ்திரீகளுட்பட்ட எல்லா ஜாதியினரும் பிரபத்தியை செய்ய தகுதிபடைத்தவர்கள். பக்தி மார்க்கத்தைப் போல தகுதி வரையரைகள் கொண்டதல்ல பிரபத்தி மார்க்கம்.

சரணாகதியின் தத்துவத்தைப் பற்றி,

"சரணமாகும் தனதாளடைந்தார்க் கெல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்"

என்று நம்மாழ்வாரின் அருளிச் செயலான திருவாய் மொழி பாசுரம், சரணமடைந்தவர்களுக்கு, இறைவன் முக்தி அளிக்கின்றான் என்று கூறுகிறது.

பிரபத்தி, "ஸ்வநிஷ்டை" - "உக்திநிஷ்டை" - "ஆச்சார்யநிஷ்டை" - "பாகவுத நிஷ்டை" என நான்கு வகைப்படும்.ஸ்வநிஷ்டை": ஞான அனுஷ்டானங்களில் சிறந்து, பிரபத்தியின் விதிகளை நன்கறிந்து ஒரு ஆச்சார்யாரை புருஷகாரமாக அடையாமல், தானே நேராக பகவானிடம் சரணமடைந்து பிரார்த்திப்பது.

<u>உக்தி நிஷ்டை</u>: ஆசார்யன் பிரபன்னர்களை, பகவான் முன்னிலையில் அழைத்துச் சென்று அவர்களுக்கு பிரபத்திக்கான வாக்கியங்களை உபதேசித்து, தம்மைக் காப்பதை இறைவன் பொறுப்பாகக் கொள்ள வேண்டுமென பிரார்த்திப்பது. இவ்வழியில் ஆசார்யானை முன்னிட்டே ஸ்வயமாக பிரார்த்திப்பதால் சிறப்பாக கருதப்படுகிறது.

<u>ஆசார்ய நிஷ்டை</u>: ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்த ஆசார்யன் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருப்பது.

<u>பாகவத நிஷ்டை</u>: பூர்ண அதிகாரியான ஒரு பாகவதர் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருப்பது.

ஐந்து அங்கங்களை கொண்டது சரணாகதி என்ற அங்கி.

<u>ஆநுகூல்ய சங்கல்பம்</u>: எம்பெருமானுக்குகந்த செயல்களை செய்து, அவனுக்கு அநுாகூலமாகவே நடக்க உறுதி கொள்ளுதல்.

<u>ப்ராதிகூல்ய வர்ஜனம்</u>: எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு மாறாக நடக்காதிருத்தல். அதாவது, பிறர் மனம் நோகும்படி பேசாமலும், பிறர் பொருளை இச்சிக்காமலும் தீயோர் சேர்க்கையை வெறுத்தலும்; ஹிம்சை செய்யாதிருத்தலும் இப்படி இன்னும் அநேக அனுகூலமற்ற செயல்களை செய்யாதிருப்பது.

மஹாவிசுவாசம்: பகவான், நிச்சயமாக தன்னை கரையேற்றி முக்தி அளிப்பான் என்ற திடநம்பிக்கை கொள்ளுதல்.

கணக்கற்ற பாபங்கள் செய்துள்ள நமக்கும் பலன் கிட்டுமா; முக்திக்கு தடையானவைகளை இறைவன் போக்கிவிடுவானா; அற்பமான செயலிற்கு இவ்வளவு பெரிய பதவியா; உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று தரம் பாராமல் எம்பெருமான் முக்தி அளிப்பானா; என்ற பல சந்தேகங்களை வளர்த்துக் கொண்டால், சரணாகதி தர்மம் பலிக்காமலும் போகலாம்.

கார்ப்பண்யம்: தன்னிடம் பக்தி யோகம் என்ற கைமுதல் இல்லாமையை அனுசரித்து பிரபத்தியின் காரணமாக முக்தி அடையப் போகிறோம் என்று கர்வம் கொள்ளாதிருப்பது. மேலும் எம்பெருமானுக்கு கிருபை உண்டாகுமாறு எப்பொழுதும் அடக்கமாக நிற்றல் ஆகியவைகளாகும்.

கோப்த்ருத்வ வரணம்: பத்தியோகம் முதலிய உபாயங்களை கடைப்பிடிக்க சக்தியற்ற தம் விஷயத்தில் அருள்பாவித்து, தோஷங்களை மன்னித்து, அவ்வுபாயங்களின் இடத்தில் நின்று தன்னை காப்பாற்ற வேண்டல்.

இந்த ஐந்து அங்கங்களும் சரணாகதி செய்யும் போது இருக்க வேண்டியது மிக அவசியம். இவற்றுள் ஒன்று குறைந்தாலும் அங்கியான சரணாகதி நிறைவேறாது. விபீஷணன், திரௌபதி, திரிஜடை ஆகியோர் செய்த சரணாகதியிலும் இவ்வைந்து அங்கங்களும் குறைவின்றி இருந்தன. உலகியல்பில் கூட ஒரு பொருளைக் காக்குமாறு ஒருவரிடம் ஒப்படைக்கும் போதும் இவ்வைந்தும் இருப்பதைக் காணலாம்!

முற்கூறிய ஐந்து அங்கங்களும் மஹாவிசுவாசம் மிகவும் முக்கியமான அங்கமாகும். அதை பெறுவது மிகவும் அரிது.

எம்பெருமான் சர்வசக்திமான். சர்வஞ்ஞான், அளவற்ற அபராதங்களை செய்த சேதனனுககு அணுகமுடியாதவன். ஆயினும், புருஷகாரமாக விளங்கும் பிராட்டியின் மறுக்கமுடியாத சொல்லால், சேதனனின் அபராதங்களையெல்லாம் மன்னித்துவிடுவானாதலின், நெருங்குவதற்கு எளியவனாகின்றான்.

கர்மத்திற்கு தக்க பலனையே அளிப்பவன் பகவான். சேதனன் மிகவும் அபராதியாயினும், அவன் செய்யும் சரணாகதிக்கு வசப்பட்டு, தனக்கும் சேதனனுக்கும் உள்ள தலைவன் - அடியன்

(சேஷி - சேஷன்) என்ற ஒழிக்க முடியாத உறவால், சேதனனுக்கு அளவற்ற பலனைத் தருவான்.

மற்ற தேவதாந்தரங்களைப் போல, இறைவன் எளிதில் பலன் தருவதில்லை. பொதுவாக பலன்களை தாமதித்து தருபவனாயினும், சரணாகதி செய்தவன் விஷயத்தில், தன் சங்கல்பமாத்திரத்தால் சேதனன் விரும்பும் காலத்திலேயே பலனை அளிப்பான்.

எம்பெருமான் ஒத்தாரும், மிக்காரும் இல்லாதவனாயினும், தன்னை சரண் அடைந்தோர்க்கு தரம் பார்க்காமல், தனது ஸ்வாதந்தர்யம் முதலான குணங்களால் சேதனனது பலனையே தனது பிரயோஜனமாகக் கொண்டு பலனை அளிக்கின்றான்.

எம்பெருமானால் பெறமுடியாதது என்று ஒன்றுமில்லை! மற்றவரது உபகாரத்தை எதிர்பாராதவன். இருப்பினும் தனது இயல்பால் சேதனன் செய்யும் சிறு தொண்டாற்றலையும் தனக்கு பரமோபகாரமாக கொண்டு பலன் அளிப்பவன்!

இந்த ஐந்து அர்த்தங்களையும் ஆசார்ய அனுக்ரஹத்தால் நன்கு தெளிந்தால் தான், மஹாவிசுவாசம் கை கூடும்!

முக்திக்காக மட்டும் செய்யும் சரணாகதிக்கு "சாத்வீக தியாகம்" (பலனில் பற்றை விடுகை) என்ற மற்றொரு அங்கமும், இன்றியமையாதது ஆகும்!

பிரபத்தி செய்வதற்கு அதிகாரி நிர்ணயம், கால நிர்ணயம், இட நிர்ணயம் என்ற வரம்பு இல்லை.

யானை மிகப்பலம் கொண்டதாயினும் தன்னாலேயே விடுவித்துக் கொள்ளமுடியும் என்ற முயற்சி தோல்வியுற்று, "ஆதிமூலமே" என்று குரலெழுப்பி சரணடைந்த பிறகு தான், அது விலங்கினத்தை சார்ந்ததாயினும், இறைவனால் காப்பாற்றப் பட்டது.

ஆதலால் தன்னைத்தானே காத்துக் கொள்ளும் தற்காப்பு வழிகளை கைவிட்டு எம்பெருமானே கதி என்ற நிலையில் தான் சரணாகதி பலிக்கும். சரணாகதி செய்வதற்கு முன்பு தன் இழிவான நிலையைக் கண்டு மனம் வருந்த வேண்டும். இல்லையேல் சரணாகதி பலிக்காமல் போகும். சரணாகதி செய்த பிறகு இப்படி மனம் வருந்தினால், எம்பெருமானின் வாக்கில் ஐயம் கொண்டவன் என்ற நிலையிலும் சரணாகதி பலிக்காமல் போகும். ஆதலின் சரணாகதி

செய்வதற்கு முன் வருந்தியும் பின் வருந்ாது மகிழ்ந்தும் இருப்பவனே செய்ய வேண்டியதை செய்து முடித்தவனாவான்.

சரணாகதி செய்தவனை பிரபன்னன் என்று கூறுவது வழக்கு.

பிரபன்னனுக்கு மரணம் நெருங்கும் போது அந்திமஸ்முருதி என்ற எம்பெருமானின் நினைவு வரவேண்டிய அவசியமில்லை!

பக்திக்கும் - பிரபத்திக்குமுள்ள சில ஒற்றுமைகளும், வேறுபாடுகளும்

ஒரு சேதனனுடைய நல்வினைகள் - தீவனைகள் பூர்வாகம் **உத்தராகம்** என்று இரு பிரிவாக உளது. இரண்டுமே சேதனனை கட்டுப்படுத்தப்படுபவைகளே! நல்வினை பொன் விலங்கு என்றால் தீவினை இரும்பு விலங்கு. சேதனின் சம்சார பந்தங்களுக்கு, இரண்டுக்கும் வேறுபாடு கிடையாது. இரண்டு வினைகளுமே பாபம் என்ற பொதுப் பெயரால் வழங்கும்.

பூர்வாகம் என்பது, ஒரு சேதனன் சரணாகதி செய்வதற்கு முன்பு, அனாதிகாலமாகத் தேடிய வினைகள். சரணாகதி செய்த பிறகு அறியாமலும், பழக்கதோஷத்தாலும் செய்யும் வினைகள் உத்தராகம் எளப்படும்.

பூர்வாகம் என்ற வினைகள் **"சஞ்சிதம்"** என்றும் **பிராரப்தம்"** என்றும் இருவகைப்படும்.

காலங்காலமாக சேதனன் செய்து மலைபோல குவிந்திருக்கும் வினைகளுள், குறிப்பிட்ட பிறவியில் சேதனன் அனுபவிப்பதற்காக வென்று இறைவனால் ஒதுக்கப்பட்டது. "பிராரப்தமாகும்", மலைபோல குவியலுள் எஞ்சியுள்ள வினைகள் "சங்சிதமாகும்".

பக்தியில் திளைத்தவனது சஞ்சிதம் முழுவதையும் இறைவன் போக்கி விடுகின்றான். பிராரப்தத்தை அப்பிறவியில் அனுபவித்தே தீர வேண்டும். பிராரப்தம் முழுவதும் அனுபவித்துத் தீர்க்கும் வரை பிறவியுண்டு. எந்தப் பிறப்பில் பிராரப்தம் முடிகின்றதோ, அப்பிறவியிலேயே உடல் பிரிகையில் எம்பெருமான் நினைவு வரும். உடனே முக்திப்பயணம் தொடங்கும்.

சரணாகதி செய்தவனான பிரபன்னனுக்கு பிராரப்தம் முழுவதும் அனுபவித்தே தீர வேண்டும் என்பதில்லை. சரணாகதி செய்த பின், மீதியுள்ள பிராரப்தத்தையும், சஞ்சிதத்தையும்

எம்பெருமான் போக்கிவிடுகிறான். ஆதனால் பிரபன்னனுக்கு சரணாகதி செய்த பிறவியிலேயே முக்தி உண்டு.

பிரபன்னர்களுள் "ஆர்த்தன்", "திருப்தன்" என இருவகையுண்டு.

சம்சாரபந்தத்தின் தளைகளில் வெறுப்புற்று, பகவத் விஷயங்களில் விருப்பம் கொண்டு, சரீரத்திற்குரிய பிராரப்தம் முடிவதற்கு முன்பே, முக்தியை விரும்பி சரணாகதி செய்பவர்கள் ஆர்த்தர்கள். இவர்கள் கோரியபடியே எம்பெருமான் முக்தியை அளிக்கின்றான்.

பகவத் கைங்கர்யங்களில் ஈடுபாடு கொண்டு, இந்த பிறப்பின் முடிவிலே முக்தி கிடைத்தால் போதும் என்று காத்திருக்கும் பிரபன்னர்கள் திருப்தர்கள்.

பக்தியும் - பிரபத்தியும் முக்தி தருவதில் ஒப்புமை உடையவைகள்.

பக்தன் இடைவிடாமல் பக்தி செய்தல் அவசியம்.

பிரபன்னன் ஒரு தரம் சரணமடைந்து விட்டாலே போதும்.

பக்தன் முக்தி பெறுவதற்கு மரணத்தின் போது இறைவனை அவசியம் நினைக்க வேண்டும். பிரபன்னனுக்கு இது அவசியமில்லை.

ஸ்ரீ ஆண்டாள் தான் அருளிச் செய்த திருப்பாவையில் கூறியபடி "போயபிழையும் புருதருவான் நின்றனவும்" என்று குறிப்பிட்டுள்ள உத்தராக வினைகள் இருவகையினரையும் ஒட்டாது!

ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள். தானும், பிறரும் தமக்குத் தஞ்சமல்ல என்ற நிச்சயத்துடன் ஒருவன் ஸ்ரீமந் நாராயணனை சரண்புகுவதே பிரபத்தி அல்லது சரணாகதி தர்மமாகும். இதுவே சாலச்சிறந்தது என்று ஆன்றோர்கள் கருத்து. நம்மாழ்வாரும்,

"அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்
மங்கையுறைமார்பா
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்
என்னையாள்வானே
நிகரில் அமரர் முனிகணங்கள் விரும்பும்
திருவேங்கடத்தானே
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து
புகுந்தேனே"

என்று சரணாகதியின் தத்துவத்தை திருவாய் மொழியில் அருளிச் செய்துள்ளார்.

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்தது.

"ஸர்வத்ர்மாந் பரித்யஜய மாமேகம் சரணம் - வரஜ - ll
அஹம்த்வா சர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாயி மாசுச:- ll

என்னையே சரணம் பற்று என்று கண்ணன் அருளிச் செய்த பிரபத்தி நெறியை, ஸ்வாமி தேசிகன்,

"வல்லார் முயல்க வலியிழந்தாரென்றனைத் தொழுகென்
றெல்லாத்தரும முரைத்தவன்"

என்று அருளியுள்ளார். பக்தி நெறி வாய்க்கப் பெற்றோருக்கும் பிரபத்தி நெறி உகந்தது என்பது ஆன்றோர் கருத்து.

8. "அத்வைதம்" - "விசிஷ்டாத்வைதம்" ஒரு கண்ணோட்டம்

விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நாம் நன்கு அறிய வேண்டுமானால், அத்வைத சித்தாந்தத்தை ஓரளவிற்கு நாம் அறிந்து கொள்வது அவசியம்.

அத்வைதம் என்பது **அ + துவைதம் என்றோ ந + துவைதம்** என்றோ விரியும். இதன் பொருள் தன்னைத் தவிர வேறு ஒரு பொருள் இல்லை எனப்படும். "சித்" - "அசித்" - "ஈசுவரன்" ஆகிய மூன்றும் மூன்று தத்துவங்கள் என்று கணக்கிடப்படாமல் ஒரே தத்துவமான அகண்டமான பரமாத்மா ஒன்றுதான் உளது என்று சித்தாந்தப்படுத்தப்பட்டது. இது ஏகஸ்வரூபமாயுள்ளது. இதைப்போல மற்றொரு வஸ்து இல்லை என்பதை **"சஜாதீயம்"** என கூறப்படும். இதைத் தவிர வேறு பொருள் இல்லை என்பதை **"விஜாதீயம்"** என கூறப்படும். ஆக சஜாதீயமோ, விஜாதீயமோ இல்லாத ஒரே பொருள் பிரம்மம் என கூறப்படுகிறது.

இந்த பிரம்மம் **"நிர்க்குணம்"** அதாவது எவ்வித குணங்களும் தர்மமும் இல்லாதது. இது மனத்தால் நினைக்கவொண்ணாதது. **"அசிந்தயம்"** எனப்படும். வாக்கால் விவரிக்க முடியாதது, "அவாச்யம்" எனப்படும். சத் - சித் ஆனந்த ஸ்வரூபம், அதாவது இது சத்யமானது. முக்காலத்திலும் நித்யமாயுள்ளது, ஞானவடிவானது, ஆனந்தமயமானது, ஞானவடிவானது என்று கூறப்படுகிறதே தவிர, ஞானமுள்ளது எனக்கூறப்படவில்லை. ஏனென்றால், அது ஒரு குணம் என்ற நிலையில் அத்வைதம் பொருளற்றதாகிவிடும்.

ஆனாதி காலந்தொட்டே, நிர்க்குண பிரம்ம ஸ்வரூபம், "மாயை" என்னும் ஒரு வஸ்துவிற்கு ஆதாரமாயுள்ளது. சத்வ, ரஜோ, தமஸ் என்ற முக்குணங்களுக்கு ஆச்ரயமாயுள்ள இந்த மாயை தனக்கு ஆதாரமாயுள்ள பிரம்மத்தின் உண்மை ஸ்வரூபத்தை மறைக்கும் தன்மை கொண்டது. பஞ்ச பூதங்களாலும் அவற்றின் சேர்க்கையாலும் உண்டாகும். சராசரங்களாய் நமக்குத் தோன்றும் பிரபஞ்சமும், அதிலுள்ள எல்லா வகையான பொருள்களும் உண்மையாக உள்ளவைகள் அல்ல! பாலைவனத்தில் காணப்படும்

10. தத்துவங்களின் விரிவு "பிரமாணம்"

நாம் ஒரு பொருளை உள்ளது உள்ளபடி அறியும் அறிவு "பிரமை (PRAMA)" எனப்படும். பிரமை உண்டாவதற்கு சாதனமாக அமைவது "பிரமாணம்".

உள்ளது உள்ளபடி என்று சொல்வதற்குக் காரணம், உண்மை அறிவான பிரமைக்கு இலக்காகும் பொருள். அதன் இலக்கணத்திற் கேற்ப அமையப்பெற்று, உள்ளது உள்ளபடியே உணர்த்த வேண்டும். மேலும் அவ்வாறு அறியப்பட்ட பொருள் உலகியல் நடைமுறை இயல்வுகளுக்கு ஒத்ததாகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு கயிற்றைப் பார்த்து பாம்பு என உணரும் போது, அது உள்ளதை உள்ளபடியே அறிந்ததாகது. பாம்பு என்ற நிலையில், பாம்பிற்கே உரிய இலக்கணங்களான, ஊர்தல் - சீறுதல் முதலியன இல்லாததால், உலகின் நடைமுறை இயல்புகளுக்கு ஒத்ததாக இருக்கவில்லை. இதனால் குற்றமுள்ள அறிவு உண்டாக வாய்ப்புள்ளது என்ற காரணத்தால் விசிஷ்டாத்வைத சித்தாந்தம் கீழ்பாராவில் கூறிய இரண்டு விதிகளையும் வற்புறுத்துகின்றது.

குற்றமுள்ள அறிவு:

சம்சயம்: (DOUBTFUL KNOWLEDGE)

உண்மை அறிவு "சம்சயம்" என்ற ஐயம் நீங்கப் பெற்றிருக்க வேண்டும். இல்லையேல் பெறப்பட்ட அறிவு "ஐயம்" என்ற குற்றத்திற்குள்ளாகும்.

ஒரு பொருளைப் பார்த்ததும் அதில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பல இயல்புகளை மனதில் கொண்டு, தொலைவில் தெரியும் ஒரு கம்பத்தை, இன்னது என்று தெரியாத நிலையில் அப்பொருள் கம்பமா அல்லது மனிதனா என்று அறுதியிட்டு சொல்லமுடியாத நிலையில் பெறப்படும் அறிவு, ஐயம் அல்லது சம்சயம் என்ற குற்றமுள்ள அறிவாகும்.

"அன்யதாஞானம்" (WRONG KNOWLEDGE)

ஒரு பொருளின் இயல்பை அறியாமல் அந்த இயல்பை மாறுபட்டு அறியும் அறிவு "திரிபு" அல்லது "அன்யதாஞானம்"

எனப்படும். சங்கு வெண்மை நிறமானது என்பது யாவரும் அறிந்ததே! ஆனால் அதை மஞ்சள் வண்ணம் கொண்டது, என்று அறிவது "திரிபு" என்ற குற்றமுள்ள அறிவாகும்.

"விபரீதஞானம்" (CONTRARY KNOWLEDGE)

ஒரு பொருளைப்பார்த்து, அதை வேறு ஒரு பொருளாக அறிவது விபரீதமாகும். சிப்பியை வெள்ளிக்காசு என்று அறிவதோ, கயிறை பாம்பு என்று அறிவதோ விபரீதம் என்ற குற்றமுள்ள அறிவாகும்.

இந்த மூன்று குற்றங்களை தவிர, ஒரு பொருளின் இலக்கணத்தை துச்சமாக கருதும் நிலையில், மேலும் மூன்று குற்றங்கள் உண்டாக வாய்ப்பு உண்டு; அவைகள்:

"அவ்யாப்தி" (NON PERVASION)

ஒரு பொருளுக்குரிய இலக்கணம் அதே இனத்தைச் சார்ந்த மற்றவைகளுக்கும் பொருந்தாது இருந்தால் இவ்வகை குற்றத்தைச்சாரும். மாடுகள் வெளுப்பானது என்று அறியும் போது, அந்த இலக்கணம் பல மாடுகளுக்கு பொருந்துவதில்லை. நாட்டிலுள்ள அனைத்து மாடுகளும் வெள்ளை வண்ணம் மட்டுமின்றி, கருப்பு, பழுப்பு என்ற பல வண்ணங்களிலுள்ளதே! ஆதலால் இப்படி பெறும் அறிவு **"அவ்யாப்தி"** என்ற குற்றமுள்ள அறிவாகும்.

"அதிவ்யாப்தி" (OVER PERVASION)

ஒரு பொருளுக்கு கூறப்படும் இலக்கணம், அதே இனத்தைச் சாராத, வேறு இனங்களுக்கும் பொருந்துமானால் **"அதிவ்யாப்தி"** என்ற குற்றத்திற்குள்ளாகும் அறிவாகும். மாட்டின் கால்கள் இரட்டை குளம்புகள் கொண்டது என அறியும் போது, அதே இலக்கணம், மாட்டின் இனத்தைச்சாராத ஆடு, மான், ஒட்டகம், முதலான பிராணிகளுக்கும் பொருந்தும். ஆதலால் இவ்வகையில் பெறும் அறிவு **அதிவ்யாப்தி** என்ற குற்றத்தைச் சாரும்.

"அசம்பவம்" (COMPLETE INAPPLICABILITY)

ஓர பொருளுக்கு இலக்கணம் கூறினால் அப்படிப்பட்ட பொருள், உலகில் எங்கும் காணப்படாதது **"அசம்பவம்"** என்ற வகையைச் சாரும். உடலிலுள்ள உயிரை நான் பார்த்திருக்கிறேன்அது இப்படி உள்ளது என்று ஒருவன் கூறினால்,

அந்த உயிரை நாம் உலகில் எங்கும் காணமுடியாது. இது அசம்பவம் என்ற குற்றத்தைச் சார்ந்தது.

ஆக உண்மையான அறிவை அதாவது "பிரமையை" நமக்கு சாதித்துத் தரும் உயர்ந்த காரணம் பிரமாணங்களாகும். (PRAMA IS VALIDKNOWLEDGE)

11. பிரத்யக்ஷ பிரமாணம் (காணுதல்)

ஒரு பொருளைப் பார்த்த கணத்திலேயே உறுதியான பிரனமயை (VALIDKNOWLEDGE) தோற்றுவிக்கும் கருவி "கரணம்" எனப்படும். அக்கருவி காலதாமதமின்றி ஒரு பொருளை அறிய காரணமாவதால் அது இன்றியமையாத காரணமாகிறது. (DISTINCTIVECAUSE) இதுவே பிரமாணமாகும்.

பல பிரமாணங்களுள் விசிஷ்டாத்வைத சித்தாந்தம் ஏற்றுக் கொண்டது மூன்று பிரமாணங்கள். அவைகளுள் பிரத்யக்ஷ பிரமாணம் முதலாவதாகும்.

ஒரு பொருளை உள்ளபடி அறிவதற்கு காரணமான பிரத்யக்ஷ பிரமாணத்தின் கருவிகளான கரணங்கள் த்வக் - வாக்கு - கண் - மூக்கு - செவி ஆகிய ஐந்து பொறிகளுமாகும். இவைகள் ஒருவனுக்கு அறிவை உண்டாக்குவதால் "அறிவுப்பொறிகள்" அல்லது "ஞானேந்திரியங்கள்" என்று கூறப்படுகிறது. (SENSE ORGANS) ஒரு பொருளை நேரிடையாக காண்பதற்கு பயன்படும் கரணம் கண்கள். அப்படியிருக்க மற்ற பொறிகளால் அறியப்படுபவைகளும் எப்படி காணுதல் என்ற வகையில் அடங்கும் என்ற ஐயம் தோன்றுவதியல்பு. ஆனால் கொள்கை நியதிப்படி, ஐந்து பொறிகளின் செயல்களும் காணுதல் என்ற பிரத்யக்ஷத்திலேயே அடங்கும்.

ஒரு பொருளைப்பற்றி நாம் அறிய முற்படும் போது, நமது ஆன்மா மனதுடன் இணைகிறது; மனம் இந்திரியத்துடன் சேருகிறது; இந்திரியம் பொருளோடு சேர்ந்து அது இன்ன பொருள் என்ற அறிவை உண்டாக்குகிறது. இந்திரியம் என்ற பொறி பொருளுடன் கலந்துதான் பொருளின் அமைப்பு மனத்துள் பதிய, அது இன்ன பொருள் என்ற அறிவு உதயமாகிறது.

கண்களால் காணும் இந்திரியம் "சக்ஷுஸ்" எனப்படும். கண்களே இந்திரியங்களல்ல. சக்ஷுஸ் என்ற இந்திரியத்திற்கு இருப்பிடம் கண்கள். ஆக கண்களால் அறியப்படுவது "சக்ஷுஸ்ஸ பிரத்யக்ஷம்" எனப்படும். இது போலவே "ச்ரோத்ரம்" என்ற இந்திரியத்திற்கு இருப்பிடம் காது. இதனால் அறியப்படுவது "ச்ராவணப் பிரத்தியக்ஷம்" எனப்படும். "க்ராணம்" என்ற இந்திரியத்திற்கு இருப்பிடமான மூக்கினால் வாசனையை

அறியப்படுவது "கிராணப் பிரத்தியக்ஷம்" எனப்படும். "ரஸனம்" என்ற இந்திரியம் அமைந்த இடம் நாக்கு. இதுவால் அறியப்படுவது "ராஸநப்பிரத்தியக்ஷம்". "த்வக்" என்ற இந்திரியத்திற்கு இருப்பிடம் உடல் முழுவதும். இதனால் அறியப்படுவது "ஸ்பர்சன பிரத்யக்ஷம்". ஆக இப்படித் தனித்தனியாகக் கூறப்படினும் அனைத்தும் காணுதல் என்ற பிரத்தியக்ஷ பிரமாணத்துக்ளேயே அடங்குபவைகள்.

பிரத்யக்ஷ பிரமாணம் "நிர்விகல்பகம்" (INDETERMINATE) என்றும் "சவிகல்பகம்" (DETERMINATE) என்றும் இருவகைப்படும்.

ஒரு இனத்தைச் சார்ந்த ஒன்றை முதன்முதலாகப் பார்க்கும் போது "அது இன்ன பிராணி" என்று அறியமுடியாமல் அது ஒரு பிராணி என்று அறிவது நிர்விகல்பகமாகும். பிறகு, அதை இரண்டாம் தடவையாகப் பார்த்து அதன் அங்க அமைப்பு, ஜாதி முதலானவைகளை அறிந்து அது இன்ன பிராணி என்று அறிந்து கொள்வது சவிகல்பமாகும்.

இப்படி இரண்டாக பிரிந்துள்ள பிரத்தியக்ஷம் "தாழ்ந்தது" (அர்வாசீனம்) என்றும் "உயர்ந்தது" (அனர்வாசீனம்) என்றும் இருவகையாகப் பிரிந்துள்ளது.

சம்சாரபந்தம் என்ற கடலில் சிக்கித்தவிக்கும் பத்த ஜீவர்களுடைய அறிவாற்றல் தாழ்ந்தது.

பரமபதத்திலுள்ள நித்ய - முக்த ஜீவர்களின் அறிவாற்றலும், எம்பெருமானின் ஞானமும் உயர்ந்தது ஆகும்.

தாழ்ந்தது என்று கூறப்பட்டதும் இரண்டாக பிரிந்துள்ளது.

இந்திரியங்களின் உதவியால் பெறும் அறிவு "இந்திரிய ஸாபேக்ஷம்" என்றும் இந்திரியங்களின் உதவியின்றி பெறும் அறிவானது "இந்திரிய அநபேக்ஷம்" என்றும் இரண்டு வகை.

இதில் முதல் வகையான இந்திரிய ஸாபேக்ஷம் நம் போன்ற ஜீவர்களுக்குண்டானது. இரண்டாவது வகை ஆழ்வார்கள் முனிவர்கள் போன்றவர்களுக்குடையது.

"இந்திரிய அநபேக்ஷம்" என்ற பொறிகளின் உதவியின்றி பெறும் அறிவும் "தானே உண்டாகிறது" என்றும் "திவ்வியம்" என்றும் இருவகைப்படும்.

"தானே உண்டாகிறது" என்பது யோகத்தினால் உண்டாகும்.

இது யோகிகளுக்கும் முனிவர்களுக்கு மட்டும் உண்டாவது. யோகம், தவம் ஆகியவைகளை செய்யும் காலத்தில், மனதால் மாத்திரம் உண்டாகும் அறிவு, மற்றொன்று திவ்வியம், இது பகவானுடைய அருளினால் உண்டாகிறது. இறைவனால் மயர்வறமதிநலம் பெற்ற நம்மாழ்வாரும், தனது விசுவரூபத்தைக் காண ஸ்ரீகிருஷ்ணனால் அர்ச்சுனனுக்கு அருளிச்செய்த விசேஷபார்வையும் "திவ்வியம்" என்பதற்கு உதாரணம்.

ஆக, ஒரு பொருளைப்பற்றி உள்ளது உள்ளபடி அறிவதற்கும் பேசுவதற்கும் காரணமான அறிவு பிரமை என்பதை அறிந்தோம்.

இனி "பிரமிப்பு" - "மருள்" என்ற குற்றமுள்ள அறிவை உண்டாக்கும் வகைகளைக் காணலாம்.

இருட்டில் கம்பத்தைக் கண்டு திருடன் என்று திகைக்கிறான். சிப்பியை வெள்ளி நாணயம் என்று கையிலெடுத்து ஏமாறுகிறான். கயிறை பாம்பென்று பிரமித்து அஞ்சுகிறான். இப்படி தோன்றுவதெல்லாம் உண்மையா? என்று ஐயம் உண்டாகிறது. வைணவ சித்தாந்தப்படி கயிறு பாம்பு போல தோற்றம் கொடுத்தது உண்மை. ஆனால் தோற்றப் பொருளும் அதன் ஆதாரப் பொருளும், சிலவகைகளில் ஒரே மாதிரி உருவ அமைப்பு காரணமாகவும், சில நேரங்களில் வெளிச்சமின்மை காரணமாகவும் இப்படி தோன்றுவதுண்டு. மேலும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையும் ஒருவகையில் காரணமாகக் கூடும்.

உலகம் ஐந்து பூதங்களால் ஆனது. ஒவ்வொரு பூதமும் தனித்தனியே இருக்கும் போது தோன்றாமல் அவை ஒன்றோடு ஒன்று கலக்கும் போதுதான் உலகம் தோன்றுகிறது. ஒவ்வொரு பூதமும் தன் பகுதி பாதியும், மற்ற நான்கு பூதங்களிலிருந்தும் எட்டில் ஒரு பகுதியும் கூடி ஒரு முழுப்பகுதியாக மாறுகிறது. பஞ்ச பூதங்களான ஆகாயம் - வாயு - தீ - நீர் - மண் ஆகியவைகளுள், ஆகாயத்தில் ஆகாயம் 1/2 + வாயு 1/8 + தீ 1/8 + நீர் 1/8 + மண் 1/8 ஆக ஒரு முழுப்பகுதி. இந்த கலவைக்கு **பஞ்சீகரணம்** என்று பெயர். ஆகையால் உலகிலுள்ள பொருள்களைத்தும் ஐந்து பூதங்களின் கலவையினால் உண்டானதே. ஒரே பூதத்தால் உண்டான பொருள் ஏதும் இல்லை!

சிப்பி, வெள்ளி இரண்டும் பளபளவென மினுக்கும் பொருள்கள். பஞ்சீகரண முறைப்படி, சிப்பியில் சிப்பியின் பகுதி மிகுதியாகவும்,

வெள்ளியின் கூறு ஒரு சிறிதாவது இருக்கத்தான் வேண்டும். (INFINITESIMAL) ஆதலால் சில சமயங்களில் சிப்பியின் பகுதியை அறிய முடியாமல், இரண்டும் ரூபத்திலும், ஒளிரும் தன்மையிலும் ஒரே மாதிரியாக இருப்பதின் காரணமாக, வெள்ளியோ என்ற பிரமிப்பு (BRAMHA) தோற்றுவிதியல்பு. ஒரே மாதிரியான அமைப்பு என்ற சாதர்சத்தினாலும் தொலைவிலிருந்து நோக்கியதாலும் உண்டான தோஷம் காரணமாக வெள்ளி என்ற பிரமிப்பு உண்டானது உண்மை. அருகில் சென்று பார்த்ததில், தோஷமற்ற நிலையில், இது வெள்ளியல்ல சிப்பி என்ற உண்மை அறிவு உண்டானதும் உண்மை.

இந்த அனுபவத்தில் தோற்றம் உண்மை. தோற்றப்பொருள்களினால் உண்டானது பிரமிப்பு. அருகில் சென்று பார்த்ததும், அது வெள்ளியல்ல, சிப்பி என்ற உண்மை அறிவு பிரமை (PRAMA) உண்டாக, அது பிரமிப்பு (BRAMHA) என்ற மருளை ஒழித்துவிட்டது.

பிரமிப்பை உண்டாக்கும் பொருள் தனித்து தோன்றாது. ஒரு ஆதாரப் பொருள் இருந்தால்தான் அதன்மேல் வந்தேறியாக தோன்றும்.

உண்மை பொருள்களான கம்பம் - சிப்பி - கயிறு முதலியன ஆதாரம் (ஆச்ரயம்), தோற்றப் பொருள்களான திருடன், வெள்ளி - பாம்பு ஆகியவைகள் வந்தேறிகள் (ஆரோஹம்).

பொதுவாக ஒரு பொருளின் குறையை அதிகமாக காண்பதும், நிறையைக் குறைவாக காண்பதும் "பூயஸ்தம்" என்ற குணதோஷத்தைச் சார்ந்தது. இதுவும், சில கர்ம வினைகளும், பிரமிப்பு உண்டாவதற்கு துணைபுரிகின்றன. இறைவன் அருள் இருந்தால் மருள் தோன்றாது.

வெண்மையான சங்கு, மஞ்சள் வண்ணமாகத் தோன்றுவதற்கு காமாலை என்ற நோய் காரணம். கண்களில் உள்ள பித்தத்துடன் கலந்த சக்ஷுஸ் இந்திரியத்தின் பார்வை கிரணங்கள் சங்கோடு இணைகின்றன. பித்தத்தினுடைய மஞ்சள் வண்ணத்தினால் சங்கின் வெண்மை மறைபடுவதால், சங்கின் வெள்ளை வண்ணம் அவனால் பார்க்கப்படுவதில்லை. மஞ்சள் வண்ணம் மிக சூட்சமாக இருப்பதால், கண்ணில் காமாலை நோய் உள்ளவனால் மட்டுமே

மஞ்சள் வண்ணம் அறியப்படுகிறது. மற்றவர்களால் அறியப்படுவதில்லை!

மேலும் கண்களில் **"திமிரம்"** (CATARACT) என்ற நோய் உள்ளவர்களுக்கு ஒரு பொருள் இரண்டாகவோ பலவாகவோ தோன்றும். கண்ணில் இருந்து புறப்படும் கிரணங்கள் இரண்டாகவோ, மூன்றாகவோ பிரிந்து தனித்தனியாகப் பார்க்கும் பொருளோடு இணையும். இதனால், இரவில் நிலாவைப் பார்த்தால், நிலா இரண்டாகவோ மூன்றாகவோ தோன்றும். பார்ப்பதற்கு வேண்டிய கிரணங்கள் பிரிந்து சென்றபோதிலும் அவைகள் உண்மை. அதனால் இப்படித் தோன்றுவதும் உண்மை.

கண்ணாடியில் முகத்தைப் பார்க்கும் போது, முகம் தோன்றுவதும் உண்மைதான். கண்களிலிருந்து வெளியேறிய ஒளிக்கற்றைகள் (கிரணங்கள்) கண்ணாடியில் பட்டு திரும்பி வருகின்றன. (பிரதிபலிக்கின்றன) திரும்பிய கற்றைகள் முகத்தில் பட, முகம் கண்ணாடியில் தெரிகிறது. இந்த செயல் மிக வேகமாக செயல்படுவதால், தாமதமின்றி அக்கணத்திலேயே முகம் தோன்றுகிறது. (ஒளிகற்றைகளின் வேகம் விநாடிக்கு ஒரு லக்ஷத்து எண்பதினாயிரம் மைல்கள் என்பதால், பார்த்த கணத்திலேயே முகம் தோன்றுவதில் வியப்பில்லை) இந்தத் தோற்றமும் உண்மை.

ஒரு ஸ்படிகத்திற்கு அருகில் செம்பரத்தி மலரை வைத்தால், ஸ்படிகம் சிவப்பாகத் தோன்றும். மலர் எந்த வண்ணமோ அதே வண்ணம் ஸ்படிகத்தில் தோன்றும். ஸ்படிகம், கண்ணாடி ஆகியவைகள் ஒளிக்கற்றையை பிரதிபலிக்கும் தன்மை கொண்டதால் (ஸ்வச்சதிரவியம்) இப்படி தோன்றக்காரணம். இந்த தோற்றமும் உண்மை.

கனவில் கண்ட பொருள்கள், விழிப்பு நிலையில் தோன்றாததால் அவைகளும் பொய்தானே என்ற ஐயம் உண்டாவதியல்பு. ஆனால் கனவில் தோன்றும் தோற்றமும் உண்மை. கனவு காண்பவனுக்கு, அக்காலத்தில் மட்டும் அனுபவிப்பதற்கு அவனவன் கர்மவினைப்படி இறைவன் பொருள்களை படைத்துத் தருகிறான் என்று உபநிஷத் கூறுகிறது. கனவு காணும் போது ஐந்து இந்திரியங்களும் ஓய்வு நிலையிலுள்ளன. மனம் மட்டும் இயங்குகிறதால், வெளியில் உள்ள பொருள்கள் தோன்றுவதில்லை, இந்த தோற்றமும் உண்மை.

கானல் நீரைப் போல மாயையின் செயலால் கண்களுக்குப் புலப்படும் வெறும் தோற்றமே! என்கிறது அத்வைதம்.

பிரபஞ்சத்தையும் அதிலுள்ள பொருள்களையும் உண்மையில் கண்கூடாகக் காண்கிறோமே, அவைகள் உண்மை இல்லை வெறும் தோற்றம் என்று சொல்வது எப்படி? என்ற வினாவிற்கு சமாதான மாகக் கூறப்படுவது இதுதான்!

முக்காலத்திலும் இருக்கக் கூடிய வஸ்து ஒன்றுதான் சத்தியமானது. இதன்படி நிர்க்குணபிரம்மம் ஒன்று தான் நித்தியமாய் முக்காலத்திலும் இருக்கக்கூடியது. இந்தநிலை **"பரமார்த்திகஸத்"** என்று கூறப்படுகிறது.

மாயைக்கும் அதன் செயலின் விளைவால் உண்டாகும் பிரபஞ்ச தோற்றங்களுக்கும், சுருதியில் அழிவு சொல்லப்படுவதாலும், ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாமல் போகக் கூடியதாலும் அவைகளை "சத்" என்று சொல்வதற்கில்லை. ஆனால் கண்களுக்கு தோன்றுவதால் முயல் கொம்பு போல "அசத் என்றும் சொல்வதற்கில்லை. ஆதலால் இந்த நிலை **"வ்யவகாரிகஸத்"** என்று கூறப்படுகிறது.

தோற்றப் பொருளான பிரபஞ்சத்தையும், அதிலுள்ளவை களையும் உண்மை என்று உணருவது கயிரை பாம்பாகவும், முத்துச் சிப்பியை வெள்ளியாகவும் கண்டு பிரமிப்பது போல என்று கூறப்படுகிறது. இந்த நிலை **"பிரபாஸிக சத்"** என்று கூறப்படுகிறது. அதாவது சத் என்று கூறமுடியாமலும், அசத் என்று கூறமுடியாமலும் இருக்கும் ஒரு நிலை. இந்த நிலை "அநிர்வசனியம்" (விவரிக்க இயலாது) என்று கூறப்படுகிறது. இதை மித்யை என்று கூறுகிறார்கள்.

மாயைக்கு கண்ணாடி போன்று பிரதிபலிக்கும் சக்தி உண்டு. சத்வகுண பிரதானமாக மாயை விளங்கும் போது, பிரதிபலிக்கும் பிரம்மத்தின் சைதன்யத்திற்கு **"ஈசுவரன்"** என்று பெயர். மிகமிகக் குறைந்த சத்வகுண நிலையில் மாயை, அவித்யை என்று கூறப்படும். இதில் பிரதிபலிக்கும் சைதன்யத்திற்கு **"ஜீவன்"** என்று பெயர். இதனால் ஈசுவரன் முதிர்ந்த ஞானமும் சர்வசக்தியுடனும், ஜீவர்கள் மிகக்குறைந்த ஞானமும் அற்பசக்தியுடனும் உள்ளார்கள்.

மாயையின் இதர பெயர்கள் **"அவித்யை, ப்ரகிருதி"** முதலியன.

எங்கும் பரந்த நிலையிலுள்ள ஆகாசத்தை மஹாகாசம் என்று

கூறகிறோம். ஒரு பானைக்குள் உள்ள இடைவெளியை "கடாகாசம்" என்று கூறுகிறோம். (கடம் என்றால் பானை). இதனால் நாம் அறிவது ஒரே ஆகாசம். அது இருக்குமிடத்தைச் சார்ந்து பெயர் பெறுகிறது. பானை உடைந்தால் அதனுள் இருந்து வெளியான கடாகாசம் தனது பெயரை இழந்து மாகாசத்தோடு ஒன்றி விடுகிறது. இதைப்போலவே பிரம்மமும் சரீரம் என்ற உபாதி காரணமாக பின்னம் பின்னமாக ஒவ்வொரு சரீரத்திலும் ஜீவன் என்ற பெயரில் இருக்கிறது. சரீரம் அழிந்ததும் தனது பெயரை இழந்து பிரம்மத்தோடு ஐக்கியமாகி விடுகிறது.

இந்த நிலை தான் ஸ்ருதி வாக்யத்தில் "**தத்வமஸி**" (நீ அதுவாக இருக்கிறாய்) என்று கூறப்படுகிறது.

பிரம்மத்தின் சைதன்யமான ஈசுவரனை, சகுண பிரம்மமாக உபாசித்து முக்தியடைவது "**விதேஹமுக்தி**" அதற்குரிய பலன்களை அடைந்து பூர்ண ஞானம் பெற்று பிரம்மத்தோடு ஐக்யமாவது "**கிரமமுக்தி**" எனப்படும்.

இந்த சித்தாந்தம் நமக்கு தெரிவிக்கும் கருத்து

பிரம்மம் நிர்குணம், எந்தவித தர்மமும் இல்லாதது.

பிரபஞ்சமும் அதிலுள்ள பொருள்களும் வெறும் தோற்றம், உண்மையல்ல.

சித்-அசித்-ஈசுவரன் ஆகிய மூன்றும் ஒரே தத்துவம்.

விசிஷ்டாத்வைதம"

விசிஷ்டாத்வைதமென்றால் விசேஷணங்களோடு கூடிய அத்வைதம் அதாவது விசிஷ்டஸ்ய + அத்வைதம் என்று விரியும். விசிஷ்டம் என்றால் விசேஷணம் என்றும் சேர்க்கை என்றும் பொருள்.

அத்வைதம் என்பது தன்னைத் தவிர இரண்டாவது பொருள் இல்லை என்பதாகும். விசிஷ்டாத்வைதமோ, தன்னைப் போல குண விசேஷணங்களோடு கூடியது. இரண்டாவதாக வேறு இல்லை என்பதாகும். ஆக குணவிசேஷணங்களோடு கூடியது என்பதை அடிப்படையாகக் கொண்ட சித்தாந்தம் என்பது தெளிவு.

ஞானம், பலம், ஐசுவர்யம் முதலான அநேக கல்யாண குணங்கள் கொண்ட பரம்பொருள் சித் - அசித் ஆகிய இரண்டு

விசேஷணங்களை சரீரமாகக் கொண்டு இயங்குவதால் குணவிசேஷணங்களோடு கூடிய பிரம்மம் என்று கூறப்பட்டது.

"சித்" - "அசித்" - "ஈசுவரன்" ஆகிய மூன்றும் தனித்தனி தத்துவங்களாகக் கொண்டு, ஈசுவரன் என்ற விசேஷ்ய பொருள், "சித்-அசித்" என்ற இருவகைப் பொருள்களை ஈசுவரனிடமிருந்து பிரிக்க முடியாத "விசேஷணங்களாகக்" கொண்டது இந்த சித்தாந்தம். இதை ஆங்கிலத்தில் (ORGANIC UNITY) (OR) (SYNTHETIC UNITY) என்று கூறுவார்கள்,

சித் அல்லது "சேதனம்" என்றால் அறிவுடைய ஜீவர்கள் என்று பொருள்.

அசித் அல்லது "அசேதனம்" என்றால் மூலப்ருகிருதியும் அதன் பரிமாணங்களும் என்றும் பொருள்.

ஆக சித்-அசித் என்ற இருவகை தத்துவங்களை தனது உடலாகக் கொண்டு, அவைகளின் ஆத்மாவாக நியமித்துக் கொண்டும் விளங்குபவன் பரம்பிரம்மமான ஸ்ரீமந் நாராயணனன்.

உடலோடு கூடிய ஜீவாத்மாவை ஜீவன் என்று ஒரே பொருளாக அறிகிறோம். உடலுக்கு ஆதாரமாக விளங்குவது உயிர். உயிர் இல்லையேல் உடலுக்கு இருப்பு இல்லை, வீழ்ந்து அழிந்து விடும்.

அதுபோல, சித்-அசித்துகளை உடலாகக் கொண்ட அதாவது உடலோடு கூடிய பரம்பொருளை ஒரே தத்துவமாக எடுத்துக் கொள்வதைச் சார்ந்து இது விசேஷமான அத்வைதமாகின்றது.

இந்த சித்தாந்தத்திற்கு சரீரி-சரீர பாவம் பிரதான பிரதி தந்திரம். அதாவது மற்ற சித்தாந்தங்களில் இல்லாத இந்த சித்தாந்தத்திற்கே உள்ள ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த விசேஷமான கொள்கையாகும்.

அத்வைதம், பிரம்மத்தை நிர்க்குணம் என்று கூறகின்றது. விசிஷ்டாத்வைதமோ, அநேக கல்யாண குணங்கள் கொண்டது பிரம்மம் என்று கூறுகின்றது.

ஸ்ரீமத் ராமாயணத்தின் துவக்கத்தில் கல்யாண குணசாலி யார்? என்ற வால்மீகி முனிவரின் கேள்விக்கு, ஸ்ரீமந் நாராயணனே அவதரிக்கப்போகும், ஸ்ரீராமன் என்ற நரனே சகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடம் என்று நாரத முனிவரின் வாக்கிலிருந்து பதிலாக பிறந்தது. கேள்வியும் பதிலும் விசிஷ்டாத்வைதத்தின்

உயிர் நாடியையே தொட்டு விட்டது எனலாம்! இதனால் பரம்பொருள் சகல கல்யாண குணங்களோடு கூடிய "விசேஷ்த்வம்" என்றும் "நிர்விசேஷத்வம்" அல்ல என்றும் தெளிவாய் விளங்குகிறது.

முக்தி கொடுக்கக்கூடிய தகதியுடையவன்தானே பரம்பொருளாக இருக்க முடியும்? இத்தகுதி ஸ்ரீமந் நாராயணனுக்கே உண்டா என்ற சந்தேகம் எழலாம்.

ஸ்ரீபாஷ்யத்தின் மங்கள ஸ்லோகத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை புரிபவன், வீடு என்ற முக்தியை உய்விக்கும் பொறுப்பை கொண்டவன் என்று கூறப்பட்டுள்ளது. பலாதிகரணத்தில் மங்கள குணங்களைக் கொண்ட பரமனிடமிருந்து தான் மோட்சம் கிட்டுகிறது என்பது ஆதாரங்களோடு சித்தாந்தப்படுத்தப்பட்டிருக்கிறது! தவிர ஸ்ரீமந் ராமாயணத்தில் சபரி, ஜடாயு, சரபங்கர் ஆகியோர்களுக்கு வீடு என்ற மோக்ஷத்தை அளித்த நரனான ஸ்ரீராமன, பரத்வத்தில் ஸ்ரீமந் நாராயணனே என்பதிலிருந்து விசிஷ்டாத்வைதம் சட்டிக்காட்டும் பரம்பிரம்மம் குணங்களோடு கூடியது. அதை நிர்க்குணமென்று சொல்ல இயலாது என்று ஏற்படுகிறது.

விசிஷ்டாத்வைத சித்தாந்தத்திற்கு சுருதி மூலமானதால், இதுவும் சுருதிபோல் அனாதியானது.

வேதங்களின் சிகரம் என்று மதிக்கப்பட்ட **"உபநிடதங்களில்" "உண் மை பொருள் ஒன்றே"** என்று அத்வைத கொள்கைகளுக்கேற்ப கூறும் மந்திரங்களும் உண்டு. ஜீவனும், பிரம்மனும் தனித்தனியாக உள்ள தத்துவங்கள் என்று துவைத சித்தாந்தத்தை வலியுறுத்தும் வாக்கியங்களுமுண்டு. இப்படி முரண்படுவது போல தோன்றும் உபநிடத வாக்கியங்களை சமரசப்படுத்தி பொருள் கூறுவது போல அமைந்தது விசிஷ்டாத்வைத சித்தாந்தம். சுருதி வாக்கியங்களை சமரசப்படுத்தி பொருள் கூறுவதற்கேற்ப ஸ்ரீராமானுஜரின் "கடக சுருதி" வாக்கியங்கள் அமைந்திருப்பது. இந்த சித்தாந்தத்தின் தனி சிறப்பு. "கடகம்" என்றால் பொருந்த வைப்பது என்று பொருள்.

உதாரணமாக "தத்-த்வம் அஸி" என்ற சுருதி வாக்கியத்திற்கு, "நீ அதுவாக (பிரம்மமாக) இருக்கின்றாய்" என்றும் முக்தி என்பது ஜீவ-பிரம்ம ஐக்யம் என்றும் அத்வைத கொள்கைக்கு சேர பொருள் கொள்ளலாம். **"உனக்கு ஆத்மாவாக அந்த பரம்பொருள்**

இருக்கிறது",D என்றும், முக்தியில் பிரம்மத்திற்கு சமமாக ஆகிறாய் என்றும் விசிஷ்டாத்வைத கொள்கைகளுக்கேற்ப பொருள் கொள்ளவும் முடியும். மேலும் ஆழ்வார்கள் "நிற்கின்றதெல்லாம் நெடுமால்" என்றும் "காண்கின்ற பொருளெல்லாம் அவனே" என்றும் அருளிச் செய்திருப்பதின் கருத்து, உலகிலுள்ள எல்லா பொருள்களையும் சரீரமாகக் கொண்டு அவைகளுக்கு ஆத்மாவாக பிரம்மம் விளங்குவதையே சுருதி வாக்கியங்கள் கூறுகிறதே தவிர, அந்த பிரம்மமாகவே எல்லா பொருள்களும் இருக்கின்றன என்ற பொருளில் அல்ல என்பதை உணர வேண்டும்.

ஸ்ரீராமாநுஜரின் காலத்திற்கும், ஆழ்வார்களின் காலத்திற்கு முன்பேயும் "பிரும்ஹநந்தி" "போதாயனர்" "டங்கர்" "குஹதேவர்" போன்ற ஞானிகளும், பிறகு ஆழ்வார்களும், விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை வளர்த்த போதிலும், ஸ்ரீராமாநுஜரின் கடகஸ்ருதி பொருள்களினாலேயே இது ஸ்ரீராமாநுஜ தர்சனம் என விளங்குகிறது.

இந்த சித்தாந்தத்தின் கருத்து:

பிரம்மம் சகல கல்யாண குணங்களையும் கொண்டது.
பிரபஞ்சமும் அதிலுள்ள பொருள்களும் உண்மை.
"சித்-அசித்-ஈசுவரன் ஆகிய மூன்றும் மூன்று தத்துவங்கள்" என்பதே!

9. தத்துவங்களின் அடிப்படை

முந்தய அத்தியாயத்தில், நாம் அறிந்து கொண்டது, பரம்பொருள் குண விசேஷணங்களோடு கூடியது என்பதையும் அதனால் உலகில் நாம் காணும் பொருள்களனைத்தும் குணவிசேஷணங்களோடு கூடியவைகளாகத் தான் அறிய முடியும் என்டதே!

விசேஷணங்களில்லாத ஒரு பொருள், பிரபஞ்சத்திலேயே இல்லை என்று கூறிவிடலாம். நாம் எந்தப் பொருளை காண்கின்ற போதிலும், அதை விசேஷணமுடையதாகத்தான் காண்கிறோம். இந்தப் பொருள் அழகானது, வெளுப்பானது, பெரியது, சிறியது, நீளமானது, அகலமானது, நெட்டையானது, குட்டையானது, தனித்திருப்பது, சேர்ந்திருப்பது, பயங்கரமானது என்று இப்படி ஏதாவது ஒரு குண விசேஷணத்தோடு கூடியதாகவே காண்கிறோமேயன்றி, கேவலம் பொருளின் இருப்பின் நிலையை மட்டும் கண்டு அறிவதில்லை.

ஆனால் அத்வைத சித்தாந்தப்படி ஒரு பொருளின் இருப்பு நிலை மட்டும் பற்றிய அறிவு உண்டாகக்கூடும் என்று நம்பப்படுகிறது. ஒரு வெண்மையான மாட்டை அறியும்போது, முதலில் "மாடு" என்ற பொருள்மாத்திர அறிவும், பிறகு "வெண்மை" என்ற விசேஷணமாத்திர அறிவும் தனித்தனியாக உண்டாகி, பிறகு இது வெண்மையான மாடு என்ற சமுதாய அறிவு உண்டாகிறது என்று கூறப்படுகிறது. இதுசரியல்ல, ஏனெனில் பல விசேஷணங்கள் கொண்ட பொருளில், ஏதேனும் சில விசேஷணங்களில்லாமல் அறியக்கூடுமேயன்றி ஒரு விசேஷணமும் இல்லாமல் அறிய இயலாது. "குடம் இருக்கிறது" என்ற வாக்கியத்தில் அவயவ அமைப்பு என்ற ஜாதி விசேஷணத்தால்தான் "குடம்" என்று அறிகிறோம். அவயவ அமைப்பு என்ற ஜாதியை பொருளோடு சேர்த்தே நாம் அறியாமற்போனால், குதிரையைப் பார்க்க விரும்புகிறவன், கழுதையைப் பார்த்தே திருப்தி அடையக்கூடுமே! ஆதலால் குணவிசேஷணங்களோடு தான் ஒரு பொருளை அறியமுடியும்.

வினைச் சொற்களை நாம் எடுத்துக் கொண்டாலும், அவைகளும் விசேஷணத்தோடு தான் பொருள்படும். "போகிறான்" என்ற பகுதி -

விகுதி கொண்ட சொல் "ஆண்பாலோடு கூடிய, நிகழ்காலத்தோடு போகுதல் என்ற செயலோடு கூடியது" என்று தான் பொருள்படும். நேரில் காணும் பொருள்கள் மட்டுமல்லாமல் சப்தம் என்ற உரைநடை சொற்களும் விசேஷணத்தைக் காட்டுபவன என்பது தெளிவு.

நாம் வாழும் இந்த உலகம் அகித்துப் பொருளாலானது. அசித் என்றால் நிலையாக இல்லாமல் மாறிக்கொண்டே இருப்பது என்று பொருள். இவை பிரகிருதியால் ஆனவை. இந்த உலகப்படைப்பிற்கு காரணம் ஏதும் கூற இயலாது. இறைவனின் களிப்புக்காக உண்டாக்கப்பட்டது என்ற நிலையில், லீலாவிபூதி என்றழைக்கப்படுகிறது. பிராகிருத்ப் பொருளால் ஆகாத மற்றொரு உலகம் உண்டு. அது அப்பிராகிருத உலகமான **"நித்யவிபூதி"** எனப்படும். இதுவே எம்பெருமானான **ஸ்ரீமந்நாராயணன்** எழுந்தருளியுள்ள **"பரமபதம்".**

அனைத்துலக பொருள்களும் **"பிரமாணம்" "பிரமேயம்"** என இருவகைப்படும். ஒரு பொருளை, அது உள்ளது உள்ளபடி அறியச் சாதனமாவது **"பிரமாணம்"** பிரமாணத்தால் அறியப்படும் பொருள் **"பிரமேயமாகும்."**

பிரமாணங்களுள் மூன்றை மட்டும் வைணவம் ஏற்றுக் கொண்டுள்ளது.

நேரிடையாக ஒரு பொருளைக் கண்டு அறிவுபெறுவது **"பிரத்யக்ஷ பிரமாணமாகும்."**

நேரிடையாகக் காணாமல் அப்பொருள் இருப்பதற்கு காரணமான ஒரு அடையாளத்தைக் கொண்டு பொருளை அறிவது **"அநுமானப்பிரமாணமாகும்."**

சுருதி வாக்கியங்கள் உணர்த்தும் விளக்கங்களை கொண்டு அறிவது **"சப்தப் பிரமாணமாகும்."**

பிரமாணத்தால் அறியப்படும் பிரமேயம், **"திரவியம்"** என்றும் **"அத்திரவியம்"** (திரவியமல்லாதது) என்றும் இருவகைகளாக பிரிந்துள்ளது.

இரண்டு வகைகளுள் ஒன்றான திரவியம் **"ஜடம்" - "அஜடம்"** என்று இரண்டாகப் பிரிந்துள்ளது.

வேறொன்றின் உதவியின்றி தன்னைத் தானே காட்டாத பொருள்

ஜடம் எனப்படும். போதிய வெளிச்சமில்லாத ஒரு இடத்தில் ஒரு பொருள் இருக்குமானால் அதை நாம் அறிய இயலாது. ஏனெனில் அது தன்னைத்தானே காட்டாது. அதனால் அது "ஜடம்".

வேறொன்றின் உதவியின்றி தன்னைத்தானே காட்டும் பொருள் "அஜடம்". உடலிலுள்ள "ஆன்மா" எப்பொழுதும் தன்னைத்தானே "நான்" என்று காட்டிக் கொண்டிருப்பதால் அது "அஜடம்".

ஜடப் பொருள் பிரகிருதி - காலம் என்று இரண்டாகப் பிரிந்துள்ளது.

பிரதிருதி என்பது இருபத்தி நான்கு தத்துவங்களாக விரிந்துள்ளது. அவைகள் முறையே பிரகிருதி - மஹத்-அகங்காரம் - ஐந்து அறிவுப் பொறிகள் (ஞானேந்திரியங்கள்) ஐந்து செயல் பொறிகள் (கர்மேந்திரியங்கள்) ஐந்து தந்மாத்ரங்கள் ஐந்து பூதங்கள் மனம் ஆக இருபத்திநான்கும் (இதன் விளக்கம் பிரகிருதி என்ற அத்தியாயத்தில் காணலாம்).

காலம் என்பது பூமி சூரியனைச் சுற்றுவதால் உண்டாகும் மாறுதல்களான நிகழ்காலம் - இறந்தகாலம் - எதிர்காலம் என்ற மூன்று கூறுகள்.

திரவியத்தின் மற்றொரு பிரிவான அஜடமும் இரண்டு வகைப்படும். அவைகள் அறிவின் பயனைப் பெற்று அனுபவிப்பது என்ற பிரத்யக்கும்" அறிவின் பயனைப் பெறாத "பராக்கும்" ஆகும். இவைகளுள் பரமபதமான நித்ய விபூதியும், தர்மபூத ஞானமும் பராக்கு ஆகும். ஜீவர்களும் ஈசுவரனும் பிரத்யக்குகள் ஜீவர்கள் மூவகைப்படுவர். சம்சாரபந்தத்தில் கட்டுண்டு உழல்பவர்கள் "பத்த ஜீவர்கள்", அதனின்று விடுபட்டவர்கள் "முக்த ஜீவர்கள்", சம்சார பந்தத்தின் வாசனையே அற்றவர்கள் "நித்ய ஜீவர்கள்".

ஈசுவரனின் ஐந்து உருவங்கள் பரம் - வியூஹம் - விபவம் அந்தர்யாமி - அர்ச்சை என்பன.

இதுவரை சுருக்கமாக கூறிய தத்துவங்களைப் பற்றிய விளக்கங்களை இனி விரிவாக காணலாம்.

ஒரு திசையை வேறு திசையாக எண்ணுவது "திக்பிரனம" எனப்படும். ஏனென்றால் ஒரு திக்கில் மற்ற திக்குகள் இருக்கின்றன. ஒரு இடம் கிழக்கே உள்ளதா மேற்கே உள்ளதா என்பதை ஒரு பொருளைக் கொண்டே அறியப்படுவது! நாம் இருக்கும் இடத்திலிருந்து ஒரு பொருள் கிழக்கே உள்ளது என்றால் அப்பொருளுக்கு கிழக்கே நாம் சென்று நோக்கும் போது, அப்பொருள் மேற்கில் உள்ளது என்றாகும். அதனால் ஒரு பொருளின் இருப்பைக் கொண்டு தீர்மானிப்பதால், அது இன்ன திக்குத்தான் என்ற நியதி இல்லை!

12. அனுமானப்பிரமாணம் (கருதல்)

சமையல் செய்யும் அறையின் புகைப்போக்கியிலிருந்து, புகை படர்வதைக் கவனித்த ஒருவனுக்கு, புகைக்கு காரணமான நெருப்பு சமையல் அறையில் உள்ளது என்று அறிவது "அனுமிதி" எனப்படும். அதற்கு கருவியாக அமைந்தது "அனுமானம்" என்ற கருதல். புகையை நேரில் கண்டு இதற்கு காரணமான நெருப்பை நேரில் காணாமல், உளது என்று கருதுவது அனுமானம். இதனால் பெறப்படும் அறிவு அனுமிதியாகும்.

ஒரு மலையிலிருந்து புகை படர்வதைக் கண்ணால் கண்டு, கண்ணால் காணாத நெருப்பு மலையிலுள்ளது என்று தீர்மானிப்பது அனுமாப் பிரமாணம். இந்த அனுமானத்தில் மலையில் நெருப்பு உளது என்று தெரிவித்த அடையாளம் (ஹேது) புகை, ஹேது என்ற அடையாளத்தை இலிங்கம் என்றும் சிலர் கூறுவார்கள். இந்த அடையாளத்தால் உறுதிப்படுத்தப்பட்டது (சாதிக்கப்பட்டது) நெருப்பு. ஆக நெருப்பு "சாத்யம்" என கூறப்படும். சாத்யமான நெருப்பு உள்ள இடமான மலையை "பக்ஷம்" என்று கூறுவது அனுமானவிதி. "இந்த மலை நெருப்பை உடையது, புகை காணப்படுவதால்" என்று கூறுவது ஒரு அனுமானவாக்யம்.

புகை பரவும் இடங்களிலெல்லாம் நிச்சயமாக நெருப்பு இருக்கும். ஆனால் நெருப்பு உள்ள இடங்களிலெல்லாம், புகை இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. பழுக்கக் காய்ச்சிய இரும்பில், நெருப்பு உண்டு. ஆனால் புகை தோன்ற வாய்ப்பில்லை. ஆதலால் நெருப்பு உள்ள இடங்களிலெல்லாம் புகை தோன்ற வேண்டும் என்ற விதி (நியதி) இல்லை. ஆக அதிகமான இடங்களில் நெருப்பு இருந்த போதிலும், புகை சில இடங்களிலிருந்து அதுவும் சில நேரங்களில் மட்டும் பரவ வாய்ப்புண்டு. இதன் காரணமாக அதிகமான இடங்களிலும், காலங்களிலும் நெருப்பு உள்ளதால் அதை "வியாபகம்" (PERVADER) என்றும், குறைவான இடங்களிலிருந்தும் காலங்களிலும் புகை பரவுததால் அதை "வியாப்பியம்" (PERVADED) என்றும் கூறப்படுகின்றன. இதுபோல் எது எதைவிட்டுப் பிரியாமல் இருக்குமோ அது அதற்கு "வியாப்பியம்", அதனுடன் சேர்ந்து இருக்கும் மற்றொன்று "வியாபகம்" இப்படி

இரண்டு பொருள்கள் எப்பொழுதும் சேர்ந்திருப்பது "வியாப்தி" (PERVASION) எனப்படும்.

வியாப்பியம் என்ற புகையை அடையாளமாக கொண்டு, வியாபகமான நெருப்பு உளது என்பது தீர்மானிக்கும் இடமான மலையை "பக்ஷம்" என அறிந்தோம். பக்ஷமான மலையை தவிர வேறு இடமான சமையல் அறையில் நெருப்பு உளது என்று சாதிக்க வேண்டிய அவசியமில்லையாதலால் சமையல் அறை "சபஷம்" எனப்படும். நெருப்பு இருப்பதற்கு சாத்தியமே இல்லாத இடமான குளம், எரி முதலியவைகள் "விபஷம்" எனப்படும்.

வியாபகமான நெருப்பில் வியாப்பியமான புகை அடங்கியுள்ளது. இந்த தொடர்புதான் வியாப்தி எனக்கூறப்பட்டது. எங்கே புகை இருக்குமோ, அங்கு நெருப்பு இருக்கும் என்று இரண்டின் சேர்க்கையை பலதடவை பார்த்திருப்பதனால் வியாப்தி அறியப்படுகிறது. இந்த வியாப்தி **"அன்வய வியாப்தி"** (AFFIRMATIVE CONCOMITTANCE) என்றும், **"வியதிரேகவியாப்தி"** (NEGATIVE CONCOMITTANCE) என்றும் இருவகைப்படும். ஹேது இருந்தால் சாத்தியம் இருக்கும் என்று கூறுவது அன்வய வியாப்தி. அதாவது எது எது புகையுளதோ, அதது நெருப்பை உடையது என்று அறிவது.

சாத்தியமில்லாவிட்டால் ஹேது இல்லை என்று கூறப்படுவது வியதிரேக வியாப்தி. அதாவது எதில் நெருப்பு இல்லையோ அதில் புகையும் இல்லை என்பது வியதிரேக வியாப்தி.

"பக்ஷம்" என்ற மலையில் நெருப்பை சாதிப்பது முதல் வகை. "விபக்ஷம்" என்ற குளம் ஏரி முதலிய நீர் நிலைகளில் நெருப்பை சாதிக்க முடியாதது என்பது இரண்டாவது வகை.

பழுக்கக் காய்ச்சிய இரும்பில் நெருப்பு உண்டு, புகை இல்லை. இதை நெருப்பு உள்ள இடமெல்லாம் புகை உண்டு என்று அறிவதோ அல்லது எதிர்மறையாக புகை தோன்றாத இடத்தில் நெருப்பு இல்லை என்று அறிவதோ குற்றமுள்ள வியாப்தியாகும். ஆகவே குற்றமுள்ள வியாப்தியை அறிந்து கொள்வது **"உபாதி"** என்ற சாதனத்தால்.

நெருப்பில் அடங்கியுள்ள புகையை வெளியேற்ற ஒரு கருவி அவசியம். அதுதான் ஈரவிறகின் தொடர்பு. ஆக புகைக்கு காரணம்

ஈரவிறகின் தொடர்பு என்பது "உபாதி". இதனால் தவறான அனுமானத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த "உபாதி நிச்சயிக்கப்பட்டது" (DETERMINED) என்றும் சந்தேகப்பட்டது. (DOUBTFUL) என்றும் இருவகைப்பட்டது.

"சேவை துன்பத்திற்கு காரணம், சேவையாக இருப்பதால், அரசன் முதலானவர்களுக்கு செய்வதைப் போல" என்பதை ஒரு அனுமான வாக்யமாக கருதுவது தவறானது. இந்த வாக்யத்தில் துன்பத்திற்கு காரணம் தீவினைகளால் உண்டான பாபம் என்பதையும், அரசனுக்கு சேவை செய்வதினால் உண்டானது அல்ல என்பதையும் கொண்டு துன்பத்திற்கு காரணமான உபாதியை அறிய வேண்டும். எம்பெருமான் சேவையில் எந்த பாபத்திற்கும் தொடர்பில்லை, மேலும் அந்த சேவையே பேரானந்தத்திற்கும் வழியாகும். அதனால் இது நிச்சியக்கப்பட்ட உபாதியாகும்.

"சரீரத்தை விட்ட பின், ஒரு ஜீவன் முக்தி அடைவான், அவனது பக்தியோகம் பூர்த்தி அடைந்து விட்டதால், சுகர் முதலானவர்களைப் போல" இது மற்றொரு அனுமான வாக்யம். இந்த உதாரணத்தில் கர்மவினைகள் முழுவதும் கழிந்துவிட்டது என்பது உபாதி. பக்தியோகத்தில் ஈடுபட்ட ஜீவனுக்கு பிராரப்தம் முழுவதும் கழியுமட்டும் பிறவி உண்டு. ஆதலால், கர்மவினைகள் முழுவதுமாக கழிக்கப்பட்டதா என்பது இந்த ஜீவன் விஷயத்தில் தெளிவாக அறிய ஹேது இல்லை. ஆதலால் இது சந்தேகிக்கப்பட்ட உபாதி.

அனுமானத்தை ஆதாரபூர்வமாக ஆராயும் போது ஐந்து அவயவங்களுக்குட்பட்டதாக இருத்தல் அவசியம்.

அவைகள் "பிரதிக்ஞா" - "ஹேது" - "உபநய" - "உதாரண" "நியமன" என்பன.

மலை என்ற பக்ஷத்தில் நெருப்பு உளது என்று சாதிப்பது "பிரதிக்ஞா" எனப்படும்.

கண்ணால் காணாத நெருப்பை சாதித்துக் கொடுத்த கண்ணால் கண்ட புகை, அடையாளமான "ஹேது" எனப்படும்.

ஹேதுவைக் கண்டு காணாத நெருப்பை உளது என்று சாதித்த அறிவான அனுமதி "உபநய" எனப்படும்.

எங்கு புகையுள்ளதோ அங்கெல்லாம் நெருப்பு உண்டு. இவ்வகையில் மலை பக்ஷம். எங்கு நெருப்பு இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையோ அங்கு புகையும் இல்லை. இவ்வகையில் ஏரி விபக்ஷம். இது உதாரணம் எனப்படும்.

இந்த மலை நெருப்பை உடையது அல்லது இந்த மலையில் நெருப்பு இல்லாமல் இல்லை என்ற முடிவு 'நியமன' எனப்படும்.

பொதுவாக அனுமானப் பிரமாணம் மிக கடினமானதும் விரிவானதுமாகும். இங்கே கொடுக்கப்பட்டது. ஒரு துளிதான்.

13. சப்தப் பிரமாணம் (வாய்மொழி)

ஒன்றை அறிவதற்கு கருவியான பிரத்யக்ஷ பிரமாணம், அனுமானப்பிரமாணம், ஆகிய இரண்டும், முறையே கண்களில் நோய் காரணமாகவும், தவறான ஹேதுவாலும், பாதிப்புக்குள் படும் வாய்ப்புகள் உண்டு. ஆதலால் பிரமாணங்களுள் சிறந்ததாகக் கருதப்படுவது "சுருதி" - "வேதம்" - "மறை" "சாஸ்திரம்" என்று பலவாறாக வழங்கப்படும் வாய்மொழியே (வாக்குகளே) "சப்தப் பிரமாணம்" என அறியப்படும்.

பிரத்யக்ஷம், அனுமானம் முதலிய பிரமாணங்களால் அறிய முடியாதவைகளை யெல்லாம் அறிவிக்கின்ற படியால், சுருதிக்கு வேதம் என்ற பெயர் வழங்கி வருகிறது. வேதம் தமிழில் "மறை" எனப்படும்.

"மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே" என்று நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பாசுரம் இங்கே நினைக்கற்பாலது.

"மறை" என்ற சொல்லிற்கு மூடுதல் என்று பொருள். "வேதம்" என்ற சொல்லிற்கு வெளிப்படுத்தல் என்று பொருள். இவையிரண்டு பொருளும் முரண்பாடாக உள்ளதே என்ற ஐயம் தோன்றக்கூடும். இதில் முரண்பாடு ஏதுமில்லை! இறைவன் ஒருவன் இருக்கின்றான், அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்ற நினைப்பு துளிக் கூட இல்லாத மக்களுக்கு சுருதி தன் பொருளை அறிய முடியாமல் செய்வதினால் "மறை" என்றாயிற்று. மாறாக பக்தர்களுக்கு தன்னுள் அடங்கிக்கிடக்கும் கூடமான அர்த்தங்களையெல்லாம் தெளிவாக அறிவிப்பதினால் "வேதம்" என்றாயிற்று. இந்த இரண்டு சப்தங்களும் சுருதிக்கு வாசகங்களாகும்.

பகவான் உளன், என்பதற்கு வேதமே பிரமாணம் என்பது விசிஷ்டாத்வைத கொள்கை.

வேதம் "அபௌருஷேயம்", அதாவது அதை யாரும் இயற்றவில்லை. அதற்கு கர்த்தா கிடையாது. தனியொருவர் அதனை இயற்றியிருந்தால் அதில் குற்றங்கள் தோன்ற வாய்ப்புண்டு இயற்றுபவனுக்குள்ள குண தோஷங்கள், அவன் இயற்றும் கிரந்தங்களிலும் தோன்றக் கூடும். ஆகையால் முன்கல்பத்தில்

படைப்புகால ஆரம்பத்தில், பகவான் நான்முக பிரும்மாவிற்கு எந்தக் கிரமப்படி வேதம் உபதேசிக்கப்பட்டதோ அதே கிரமப்படி வேதத்தை நினைத்து நினைத்து சிறிதும் மாறுதலில்லாமல் சப்தமாத்திரம் உபதேசம் செய்வதால் வேதம் **"அனுபூர்வி"** என்றும் **"நித்யம்"** என்றும் சொல்லப்படுகிறது. இதனால் வேதம் ஒரு புருஷனால் செய்யப்படவில்லை என்று ஏற்படுகிறது. ஆதலால் **"அபௌருஷேயம்"**, மேலும் வேதத்திற்கு காரணதோஷம் கிடையாது. காரணதோஷம் என்பது, வாக்கியத்தை சொல்லுபவனிடம் உள்ள குறைகள். அவைகள், ஒரு விஷயத்தை நன்றாய் அறியாமை; அறிந்ததை உள்ளபடி சொல்லாமை முதலியன. காரணதோஷத்தைப் போல, பாதகமான பொருளைக் கூறும் வாக்கியங்களும் இருக்கக் கூடாது. அதாவது "நெருப்பு உஷ்ணமில்லாதது" என்று ஒருவாக்கியம் இருந்தால், நெருப்பை தொட்டுப் பார்த்து அறியக் கூடும் என்று கூறகிற பிரத்யக்ஷ பிரமாணத்தால், வேத வாக்கியம், பிரமாணமாகாமல் போகக்கூடும்.

பிரத்யக்ஷம் - அனுமானம் ஆகிய பிரமாணங்களால் அறிய முடியாதவைகளைப் பற்றிய அறிவை தருவதே வேதத்தின் நோக்கு . இவ்விரு பிரமாணங்களால் அறியப்பட்டவைகளையே, வேதம் கூறுமானால் அது ஒரு அனுவாதமாக இருக்குமேயன்றி தனிப்பிரமாணமாகமாட்டாது. மேலும் வேதம் பிரமாணமாகாது என்ற நிலையில் **"அப்பிரமாணமாகி"** விடும். ஆதலால் இதர பிரமாணங்களால் அறியப்படாதவைகளைப் பற்றிய அறிவிப்பதில் வேதம் அமைந்துள்ளது. மேலும் இவ்விரு பிரமாணங்களால் அறியப்பட்டவைகளுக்கு முரண்பாடுள்ள ஒரு கருத்தை வேதம் தெரிவிக்குமானால், அது பிரமாணமல்லாதது என்றாகிவிடும். ஆகையால், இதர பிரமாணங்களால் அறியப்படாதவைகளாகவும், அறியப்பட்டவைகளோடு முரண்பாடு இல்லாததாகவும் வேதம் அமையப்பெற்றிருப்பதால், **"சப்த பிரமாணமாகிறது"**.

ஒருவனை நேரான வழியில் அழைத்துச் செல்வது வேதம். **"சாஸ்தி இதி"** என்று கூறப்படுகிறது. சாஸ்திரத்தையே ஒரு சாதனமாகக் கொண்ட இறைவனை அறிவதற்கு சாஸ்திரமே பிரமாணமாகிறபடியால், பிரமாணங்களுள் சிறந்தது வேதம் என்று ஏற்படுகிறது. நமக்கு தெரிந்த விஷயங்களை சொல்வதற்கு சாஸ்திரம் தேவையில்லையே?

மேலும் ஆப்தர்கள் என்ற நம்பத்தகுந்தவர்களின் வாக்கும்

சப்தப்பிரமாணமாகும்! வால்மிகி முனிவர், வேதவியாசர், போன்ற நம்பத்தகுந்தவர்கள் இயற்றிய இதிகாசங்களான ஸ்ரீமத் ராமாயணமும், மஹாபாரதமும் பிரமாணங்கள் ஆக தடை இல்லை.

நம்பத்தகுந்தவர்கள் வாக்கு என்றால், யாரோ சிலர் கூறியது என்று பொருள் கொண்டால், அபௌருஷேயமான வேதமும் சப்த பிரமாணமாகாமல் போகக் கூடும். ஆதலால் ஆன்றோர்களான முனிவர்கள் கூறியவைகளும் சப்தப்பிரமாணமாகும், என்று பொருள்படும்படி அறுதியிட்டுச் சொல்ல வேண்டும் என்பதற்காக எதிர்மறையாக சொல்லப்பட்டுள்ளது.

எப்படியென்றால், நம்பத்தகுந்தவர்கள் வாக்கு என்று கூறாமல்,

"நம்பத்தகுந்தவர் அல்லாதவர்களால் சொல்லப்படாத வாக்கு" என்றும்,

"ஆப்தனல்லாதவனால் சொல்லப்படாதது" என்றும் சப்தப பிரமாணத்திற்கு இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. (UNUTTERED BY NON TRUST WORTHY PERSONS)

இதனால் வேதம் ஒரு புருஷனால் செய்யப்பட்டது அல்ல என்றும் அனாதி என்றும் தே[illegible]ம்

வேதத்தின் முன்பகுதி பூ[illegible]பாகம் என்றும், பின்பகுதி உத்திரபாகம் என்றும் இரண்டாக பிரிந்துள்ளது. முன்பகுதியான "கர்மகாண்டம்" சம்பிரதாயம் செயல்கள் முதலியவைகளைப் பற்றி விதிவாக்கியங்களாக (கட்டளை வாக்கியங்கள்) "இதை செய்" "அதை செய்யதே" என்று அமையப் பெற்றிருப்பதால் சப்தப் பிரமாணமாகத் தடையில்லை. பின்பகுதியான **"உத்தரகாண்டம்"** பிரம்மத்தைப் பற்றி சொல்லுவதாக அமைந்துள்ளது. இதில் விதிவாக்கியங்கள் கிடையாது. உபநிஷத்துக்களை தன்னுள் கொண்டது. எண்ஜாண் உடலிற்கு சிரசே முக்கியம் என்பது போால, வேதத்திற்கு இதுவே சிகரமாக அமைந்து **"வேதசிரஸ்"** என்றும் கூறப்படுகிறது. முன்பகுதி - பின்பகுதி ஆகிய இரண்டையும் முறையே **"பூர்வமீமாம்சை" "உத்தர மீமாம்சை"** என்றும் கூறப்படும். பின்பகுதியை **"வேதாந்தம்"** என்றும் கூறவதுண்டு. **"அந்தம்"** என்ற சொல்லிற்கு முடிவு - நிர்ணயம் என்று பல பொருள்கள் சொல்லப்படுகிறது. நிர்ணயம் என்றால் உறுதிப்படுத்தப்படுகிறது என்ற நிலையில் பின்பகுதியும் சப்தப்பிரமாணமாகிறது.

இரண்டு பாகங்களுள்ள வேதம் "ருக்" - **"யஜுர்"** - **"சாமம்"**

"அதர்வணம்" என்று நான்கு பிரிவுள்ளது. வேதம் இறைவனின் கட்டளை (ஆக்ஞை) என்று கூறப்படுவதால் சப்தப் பிரமாணமாகிறது.

வேதம் ஆறு அங்கங்களைக் கொண்டது. அவைகள் "**சந்தஸ்**" "**கல்பம்**" - "**சிக்ஷை**" - "**நிருத்தம்**" - "**ஜ்யோதிஷம்**" - "**வியாகரணம்**" என்பவைகள்.

அடிகளுக்கு இத்தனை எழுத்துக்கள் இருக்கவேண்டியதென்றும், அப்படி எத்தனை அடிகள் இருக்க வேண்டும் என்று சொல்கிற சாஸ்திரத்திற்கு "**சந்தஸ்**" என்று பெயர்.

வேதத்தில் சொல்லப்பட்ட செயல்களை செய்யும் விதத்தைச் சொல்லும் காஸ்திரம் "**கல்பம்**".

வேதத்தின் அக்ஷரங்கள், ஸ்வரங்கள் முதலானவைகளை சொல்வது "**சிக்ஷை**".

வேதத்திலுள்ள அருமையான சொற்கோர்வுகளுக்கு அர்த்தத்தைச் சொல்கிறது "**நிருக்தம்**".

வேதத்தை அத்யயனம் பண்ணவேண்டிய காலத்தையும், அதில் சொல்லப்பட்ட செயல்களை செய்யும் காலத்தையும் கூறும் சாஸ்திரம் "**ஜ்யோதிஷம்**".

நல்ல சப்தங்கள் எவைகள், அவைகளுக்கு இன்ன ஸ்வரங்கள் என்று காட்டுகிற சாஸ்திரம் "**வியாகரணம்**".

இப்படி ஆறு அங்கங்களோடு கூடிய வேதம் சப்தப் பிரமாணம் என்பது சித்தம்.

பிரமாணமாகும் வாக்கியங்கள் மூன்று இலக்கண விதிகளுக்குட்பட்டு அமைந்திருத்தல் வேண்டும். அவைகள்:

"**ஆகாங்ஷா**" - "**யோக்யதை**" - "**சந்நிதி**" எனப்படும் (EXPECTANCY COMPATIBILITY - PROXIMITY)

ஒரு சொல், தான் பொருள்படுவதற்கு வேறொரு சொல்லைத் தேடுவது அதாவது எதிர்பார்த்து நிற்பது "ஆகாங்ஷை" எனப்படும். ஆகாங்ஷை என்றால் தேடுவது என்று பொருள். குடத்தைக் கொண்டுவா என்ற வாக்கியத்தில் ஒரு சொல்லை விட்டு மற்றொரு சொல்லை மாத்திரம் சொன்னால் அது கருத்தை தெரிவிக்காது. "குடத்தை" என்ற சொல் "கொண்டுவா" என்ற சொல்லையும் கொண்டுவா என்ற சொல் குடத்தை என்ற சொல்லையும் பொருள்

முடிவுக்கா தேடி நிற்பது ஆகாங்ஷா (EXPECTANCY) என்ற இலக்கணவிதியைச் சாரும்.

வாக்கிய அமைப்பில் உள்ள சொற்கள் தகுதியான பொருள்களை கொடுப்பவைகளாக அமைப்பது "யோக்யதா" (COMPATIBILITY) ஆகும். "துணிகளை வெய்யிலில் நனைக்கிறான்" என்று கூறுவது பொருத்தமற்றது. வெய்யிலில் துணிகளை உலரவைக்க முடியுமேயன்றி நனைக்கமுடியாது! ஆதலால் துணிகளை வெய்யிலில் உலரவை என்று கூறுவதே "யோக்யதா" என்ற இலக்கணவிதியைச் சார்ந்தது.

சந்நிதி என்பது (PROXIMITY) ஒரு தொடரில் உள்ள சொற்களை தாமதமின்றி கூற வேண்டும். "கதவைமூடு" என்ற தொடரில், கதவை என்று கூறி பிறகு சில விநாடிகள் கழித்து மூடு என்று கூறினால் பொருள்படாது. ஏனென்றால் சந்நிதி என்ற இலக்கணவிதி கையாளப்படவில்லை.

இவ்வாறு இலக்கண விதிகளைச் சார்ந்து வாக்கியங்களை ஒரு ஆப்தர் கூறினால் அதை பிரமாணமாக ஏற்றுக் கொள்ளகூடும். பெயரளவில் நண்பர்களாக பழகுபவர்கள் ஆப்தர்களாக மாட்டார்கள்.

வாக்கியங்கள், வேறுவகையில் "முக்ய விருத்தி" என்றும், "உபசாரவிருத்தி" என்று இருவகைப்படும். விருத்தி என்பது ஒரு சொல்லிற்கு ஒரு பொருளைச் சொல்லும் சக்தி. சில வாக்கியங்களில் சொற்களுக்கு முக்கியமான பொருள் சொல்லப்படுகிறது. "சிங்கம்" என்ற சொல் வனவிலங்கை குறிப்பது இதில் பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது. இப்படி பொருள்படி சொல்வது முக்கிய விருத்தியாகும். இதை அபிதாவிருத்தி (PRIMARY DENOTATION) என்றும் கூறலாம்.

இது "யோகம்" - "ரூடி" - "யோகரூடி" என்று மூன்றாகப் பிரிந்துள்ளது.

ஒரு சொல்லை பொதுவாக பகுதி விகுதி என்று பிரிக்கக்கூடும். இப்படி பிரிந்த நிலையில் பகுதியும் - விகுதியும் தனித்தனியாக பொருள்படுமானால் அது "யோகம்" எனப்படும். "பாசகன்" என்ற சொல் பச் + அகன் என்று விரியும். இதில் "பச்" என்னும் சொல் சமையல் செய்வது என்றும் பாகம் என்றும் பொருள்படும். "அகன்"

என்ற விகுதி சமையல் செய்பவனைக் குறிக்கும். ஆக பாசகன் என்றால் சமையல் செய்பவன் என்று பொருள்படும். இது யோகம்.

மரம் என்ற சொல் மர் + அம் என்று பிரியும் போது பகுதி விகுதிக்கு ஒரு பொருளும் கிடைப்பதில்லை. இது ரூடி எனப்படும்.

சில சொற்கள் ஒரு காரணத்தால் பல பொருள்களை குறிப்பிடினும் சொல் வழக்கில் ஒரு பொருளை மட்டும் குறிப்பிடுவது "யோகரூடி" எனப்படும். சேற்றிலிருந்து தோன்றுவதனைத்தும் "பங்கஜம்" என்று சொல்லப்படினும் சொல்வழக்கில் "தாமரை" என்ற பொருளை மட்டும் உணர்த்துவதாக அமைந்துள்ளது.

சில வாக்கியங்களில் சொற்கள் முக்கியமான பொருள்களைச் சொல்லாமல் அந்தப் பொருளுடன் தொடர்பு கொண்ட வேறு ஒன்றை காட்டுவது "உபசார விருத்தி" எனப்படும் (SECONDARY DENOTATION).

இது "லக்ஷணம்" என்றும் "கௌணி" என்னும் இருவகையாக பிரித்துள்ளது. "கங்கையில் இடைச்சேரி" என்பதில் கங்கை என்ற சொல்லிற்கு "பிரவாகம்" என்பது முக்கியமான பொருள். அதில் இடைச்சேரி இருக்க முடியாதாகையால். முக்கியமான பொருளை தவிர்த்து, பிரவாகத்தோடு தொடர்பு கொண்டுள்ள கரையை குறிப்பதாக அமைந்துள்ளது. இப்படி பொருள்பட கூறுவது "லக்ஷணம்".

"ராமன் ஒரு சிங்கம்" என்று கூறுகின்ற இடத்தில் சிங்கம் என்ற சொல் வனவிலங்கை குறிப்பிடாமல், அதோடு தொடர்பு கொண்ட "வீரம்" என்ற குணத்தை குறிப்பதாக அமையபெற்று, ராமன் ஒரு சிங்கத்தைப் போன்று வீரமுடையவன் என்று பொருள்பட அமைந்தது இது "கௌணி" எனப்படும்.

விசேஷம் என்பது ஒன்றை மற்றொன்றிலிருந்து பிரிக்கும் அதிலுள்ள தர்மம். இதற்கு விசேஷணம் என்று பெயர். பிரிக்கப்பட்ட பொருளுக்கு விசேஷ்யம், விசிஷ்டம் என்று சொல்லப்படுகிறது "நீல அல்லி மலர்" என்ற சொல்லில் நீலம் என்ற சொல் வண்ணம் என்ற குணத்தை உடைய பொருளைச் சொல்லும். இதில் குணம் என்ற தர்மம் விசேஷணம். அல்லிமலர் என்பது பூவைக்குறிக்கும். இதில் அல்லி என்பது ஜாதியை குறிக்கும் விசேஷணம், மலர் என்பது பூ என்ற பொருளைக் குறிப்பதால் விசேஷ்யமாகும்.

குணம் என்ற விசேஷணம் வேறு, பொருள் என்ற விசேஷ்யம் வேறு என்று பேதத்தை இப்பொழுது நாம் அறிந்தோம் இப்படி விசேஷணமும் விசேஷ்யமும் கூடிய விசிஷ்டமான பொருள்களாகத்தான், உலகியல் பொருள்களனைத்தையும் நாம் அறிய முடியும் விசிஷ்டமற்ற பொருள் என்று ஏதும் இல்லை.

நடக்கிறான் என்ற வினைச்சொல்லும் விசிஷ்டம் தான். ஆண்பாலான ஒருவன் நடத்தல் என்ற செயலைச் செய்கிறான் என்பது இதன் பொருள்.

தேவன் - மனிதன் என்ற சொற்கள் சரீரத்திலிருக்கும் ஆன்மாவையும் சொல்லும். ஏனென்றால், ஜாதி - குணம் என்பவைகள் அவைகளுக்கு ஆச்ரயமான திரவியத்தை விட்டு பிரிந்திருக்க முடியாது போல, சரீரங்களும் ஆன்மாவை விட்டு பிரிந்திருக்க முடியாது. ஆகையால் மனிதன் என்ற சொல் மனித சரீரத்திலுள்ள ஆன்மாவையும் சொல்லும் என்பதை பிரயோகத்தால் அறிந்தோம். இவ்வகையில் உடலைச் சொல்லுகிற சொற்கள், உடலிலிருக்கும் ஆன்மாவைச் சொல்லுகிறதோ, அப்படியே பிரும்மா - அக்நி - இந்திரன் முதலான சேதனர்களைச் சொல்லும் சொற்களும், பிரகிருதி - காலம் - ஆகாயம் முதலான அசேதனங்களைச் சொல்லுகிற சொற்களும், அவர்களுக்கும், அவைகளுக்கும் ஆன்மாவாய், அவைகளை உடல்களாகக் கொண்ட ஸ்ரீமந் நாராயணனையே சொல்லுகின்றன.

ஆக சேதனா சேதனங்களை தனக்கு உடலாகக் கொண்டு, இறைவன் உயிருக்கு உயிராக உள்ளான் என்ற நிலையில், சொற்களனைத்தும் எம்பெருமானையன்றி, சித் - அசித்துக்களை மட்டும் குறிப்பன என்று கூறவே முடியாது. இவ்வாறு பொருள் கொள்ளும் போது, உலகிலுள்ள அனைத்துயிர்களும் பொருள்களும், இறைவனாகவேதான் காக்ஷி அளிக்கின்றான் என்ற கருத்தை, நம்மாழ்வாரின் பாசுரம் எத்துணை துல்லியமாகக் காட்டுகிறது.

> **"நாம் அவன் இவன் உன் அது இது உது எது**
> **தாம் அவர் இவர் உவர் அவன் இவன் உவன் எவன்**
> **வீம் அவை இவை உவை இவை நலம் தீங்கவை**
> **ஆமவை ஆயவை ஆய்கின்ற ஆவரே".**

14. பிரகிருதி

உள்ளதை உள்ளபடி அறியும் அறிவு பிரமை என்றும், பிரமைக்கு சாதனமாவது பிரமாணம் என்றும், பிரமாணத்தால் அறியப் படுபவைகள் பிரமேயம் என்றும் அறிந்தோம்.

பிரமேயம் "திரவியம்" "திரவியமல்லாதது" (அத்திரவியம்) என இருவகைப்படும்.

ஒரு பொருளில், முதலில் இல்லாமல், பிறகு வந்து சேர்ந்து அமைந்துவிட்டுப் பிரியாததுமான தர்மம் அவஸ்தை எனப்படும். மண் குடமாகிறது என்பதில் முதலில் மண்ணிற்கு கட்டியாக இருப்பது என்ற நிலை (அவஸ்தை) இருந்தது; அப்பொழுது குடம் என்ற நிலை இல்லை; பின்னால் அந்த நிலை பொருளில் சேர்ந்து அதை அப்பொருளின்று பிரிக்கமுடியாத நிலையில் அதன் தர்மமாக ஆகின்றது. மண் என்ற பொருள் முதலில் கட்டி என்கிற நிலையிலிருந்தது, பிறகு குடம் என்ற நிலையை அடைந்தது. இப்படி இரண்டு நிலைகளுக்கும் இருப்பிடமானதால், முதல் நிலையில் உபாதானமான திரவியம், பின் நிலையில் தர்மியான திரவியம் என்று ஆயிற்று. திரவியமல்லாதவைகளுக்கு தர்மரூபமான நிலை (அவ்ஸ்தை) கிடையாது. ஆக குணங்களுக்கு இருப்பிடம் (ஆச்ரயம்) திரவியம் என்றாயிற்று.

திரவியங்கள், "பிரகிருதி" - "காலம்" "சுத்தசத்துவம்" - "தர்மபூதஜ் ஞானம்", "ஜீவன்" - "ஈசுவரன்" என்று ஆறு வகைப்படும். இவைகள் ஜடம் என்றும் அஜடம் (ஜடமல்லாதது) என்றும் இருவகைப்பட்டவைகள்.

தனக்குத் தானே தோன்றாது, வேறொன்றாலேயே தோன்றுவது ஜடம். இருட்டில் உள்ள ஒரு பொருள் தானாக தோன்றுவதில்லை. விளக்கின் உதவியைக் கொண்டே அது தோன்றுகிறது. அது போலுவே, ஜீவர்கள், எம்பெருமான் ஆகியோருடைய அறிவினாலேயே பிரகிருதியும் - காலமும் தோன்றகிறபடியால் அவையிரண்டும் ஜடங்கள். மற்ற நான்கு திரவியங்களும், வேறொன்றின் உதவியில்லாமல், தாங்களே தோன்றுவதால், அவைகள் சுயம்பிரகாசங்கள் என்றும் அஜடங்கள் என்றும் சொல்லப்படுகின்றன. எது தனக்கே தோன்றுகிறதோ அது

"பிரத்யக்" எனப்படும். ஆன்மா தனக்கே தோன்றுவதால் அது "ப்ரத்யக்". எது தன்னைத் தவிர வேறு ஒருவனுக்கு தோன்றுகிறதோ அது பராக் எனப்படும். குடம் தனக்காகவே தோன்றுவதில்லை. ஒரு ஆன்மாவுக்கே தோன்றுகிறபடியால் அது "பராக்". ஆன்மாவுக்கு குணமான "தர்ம **பூதஜ்ஞானம்**" சுயம் பிரகாசமாயிருந்தாலும் அது தனக்கே தோன்றாமையாலே அதுவும் பராக்.

முக்குணம் (திரிகுணம்) என்ற சொல்லிற்கு மூன்று குணங்களையுடைய ஒரு பொருள் எனப்படும். "சத்துவம்" - "ரஜஸ்" - "தமஸ்" - என்னும் மூன்று குணங்களுக்கும் இருப்பிடமான பிரகிருதி முக்குணம் என வழங்கும். இந்த பிரகிருதி சேதனங்களுக்கு தீங்குகளை விளைவித்து எம்பெருமானின் சுயரூபத்தை மறைக்கும் தன்மை கொண்டது.

பிரகிருதி அழிவில்லாதது. அதாவது இதன் சுயரூபத்திற்கு அழிவில்லை. ஆனால் அது வேறு ரூபத்தையும் பெயரையும் அடையும்படி எப்பொழுதும் மாறிக்கொண்டிருக்கிறது. இதற்கு சுயரூபத்தில் அழிவில்லாமையால் "அக்ஷரம்" என்றும், முக்திக்கு செய்யப்படும் வித்யைக்கு (ஞானத்திற்கு) விரோதியாக இருப்பதால் "அவித்யை" என்றும், ஆச்சரியமான உலக படைப்பிற்கு சாதனமாயிருப்பதால் "மாயா" என்றும் பல பெயர்களால் வழங்கப்படுகிறது.

பரமபதம் தவிர, மற்ற இடங்கள் முழுவதும், பிரகிருதி இல்லாத இடமே இல்லை என்று கூறும்படி பரவியுள்ளது. பிரகிருதியின் மூன்று ருணங்களும், பிரளய காலத்தில் ஏற்றத்தாழ்வில்லாமல் சமமாக இருக்கின்றன. படைப்பு காலத்தில் ஒரு குணம் மேலிட்டு, மற்ற இரண்டு குணங்களும் அடங்கியிருக்கும், இன்ன குணம் தான் மேலிடுகிறது. இன்ன குணங்கள் அடங்கியிருக்கின்றன, என்று நியமம் ஏதும் இல்லை.

உலக படைப்பு என்ற சிருஷ்டியை பகவான் செய்ய விழையும் (சங்கல்பிக்கும்) போது, குணங்கள் மூன்றும், ஒன்று மிகுந்தும் மற்ற இரண்டும் தாழ்ந்தும், வேறுபாடுகள் உண்டாகும். இதன் காரணமாக, பிரகிருதியின் ஒரு பகுதி மாறத் தொடங்கி, அதனின்று "மஹத்" என்ற தத்துவம் உண்டாகிறது. மஹத்தின் ஒரு பகுதி "அகங்கார"மென்ற தத்துவமாக மாறுபாட்டை அடைகிறது. இந்த மாறுபாட்டில் பிரகிருதி முழுமையும், மஹத் என்று மாறுவதில்லை.

அதுபோல மஹத் என்று மாறுபாட்டை அடையாத பகுதி பிரகிருதி என்றும், அகங்காரமாக மாறுபாட்டை அடையாது நிற்கும் பகுதி மஹத் என்றும் தனித்தனி தத்துவங்களாகக் கணக்கிடப்படும். இந்த முறையை வைத்து இருபத்தி நான்கு தத்துவங்களாக கணக்கிட்டுச் சாஸ்திரம் கூறுகின்றது. அவையாவன "மூலப்பிரகிருதி" - "மஹத்" - "அகங்காரம்" - "மனம்" - "அறிவுப் பொறிகள் ஐந்து" - "செயல்பொறிகள் ஐந்து" - "தன்மாத்ரங்கள் ஐந்து" - "பூதங்கள் ஐந்து", என்பன.

பிரகிருதி ஒரு காரணப் பொருள் அது மற்ற பொருள்கள் தோன்றுவதற்கு காரணமாகுமேயன்றி அதுவே கார்யமாகாது என்ற நிலையில் அதை "மூலப்பிரகிருதி" என்றும் கூறப்படும்.

மஹத் என்ற மாறுபாட்டை அடைந்த தத்துவத்திலும் சத்துவம் ராஜஸம் - தாமசம் என்ற குணப்பிரிவுகளுண்டு. அகங்காரத்திலும் மூன்று குணப்பிரிவுகள் உண்டு. இவைகள் முறையே சாத்வீக அகங்காரம் "வைகாரிகம்" என்றும், ராஜஸ அகங்காரம் "தைஜஸம்" என்றும், தாமஸ அகங்காரம் "பூதாதி" என்றும் குறிப்பிடுவதுண்டு.

உடலையும் ஆன்மாவையும் "நான்" என்று ஒன்றாக நினைப்பது அகங்காரம். உயர்ந்தவர்களிடம் மரியாதை இல்லாமல் கர்வத்துடன் செயல்படுவதும் அகங்காரம் தான். இந்த அகங்காரத்தைத்தான் நாம் விட வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆனால் இதற்கும் அகங்காரம் என்று கீழ்பாராவில் கூறப்பட்ட தத்துவத்திற்கும் சம்பந்தம் இல்லை).

இந்த மூன்று வகை அகங்காரங்களுன் சாத்வீக அகங்காரமான வைகாரிகத்திலிருந்து, ஐந்து அறிவுப் பொறிகளும் (ஜ்ஞானேந்திரியம்) ஐந்து செயல் பொறிகளும் (கர்மேந்திரியம்), மனம், ஆகிய பதினொன்று இந்திரியங்கள் உண்டாகின்றன. தாமஸ அகங்காரமான பூதாதியிலிருந்து, ஐந்து தன்மாத்திரங்களும், ஐந்து பூதங்களும் உண்டாகின்றன. தன்மாத்திரங்கள் பூதங்கள் ஆகியவைகளின் விளக்கத்தை பிறகு காணலாம்.

இந்திரியங்கள் பதினொன்று. இவைகளுள் அறிவு பெறுவதற்கு துணையாக நிற்பது மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்ற த்வக், ரஸனம் - சக்ஷுஸ் - க்ராணம் - ச்ரோத்ரம் ஆகிய ஐந்தோடு மனதையும் சேர்த்து ஆறாகும். இவைகள் அறிவுப்பொறிகள் ஜ்ஞானேந்திரியங்கள் (SENSE ORGANS) எனப்படுகின்றன. செயல்

செய்வதற்கு உபயோகப்படும் கை - கால் பாயு - உபஸ்தம் குதம் ஆகிய ஐந்தும் கர்மேந்திரியங்கள் (MOTOR ORGANS) எனப்படும்.

அறிவுப் பொறிகளுள் மனம் என்பது உள் இந்திரியம். இதை அந்தக் கிரணம் என்றும் கூறுவதுண்டு. நினைத்ததை செயலாற்றுவதற்கும், ஆக்கபூர்வமாக முடிவெடுப்பதற்கும், மனமே பலவகையில் காரணமாகிறது. வெளி இந்திரியங்கள் தத்தம் செயலை செய்வதற்கும், அதற்கு துணையாக இருப்பதும் மனமே!

நடந்த விஷயங்களை மறுபடியும் நினைப்பது முதலானவைகளுக்கு சாதனமாயிருப்பது மனம். இது மூன்று விதமான வேலைகளை செய்கிறது. சந்தேகங்களுக்கிடமின்றி, ஒரு உறுதியான அறிவுடன் இது இத்தகையது என்று தீர்மானம் செய்யும்போது "புத்தி" எனப்படுகிறது. ஆன்மாவின் இயல்பை அறியாது அதையே உடலாகக் கருதி செயல்படும்போது, "அகங்காரம்" எனப்படுகிறது. ஒரு விஷயத்தைப் பற்ற தீவிரமாக ஆலோசிக்கும் போது இது "சித்தம்" எனப்படுகிறது.

ஆக பலவகைகளில் செயல்படும் மனம், உலகியல் விஷயங்களிலேயே எப்போதும் ஈடுபாடு கொள்வதால், அதிலேயே பற்றுக் கொண்டு சேதனர்கள் சம்சாரபந்தத்தில் சிக்குண்டு அவதிப்பட காரணமாகிறது.

உலகியல் விஷயங்களை துச்சமாக மதித்து எம்பெருமானிடம் ஈடுபாடு கொள்ள வழிவகுத்து முக்தியை பெறுவதற்கு வழிகாட்டியாகவும் செயல்படுகிறது மனது. ஆக உலக பந்தத்திற்கும் அதனின்று விடுபடுவதற்கும் காரணமாவது மனமே.

பூதாதியிலிருந்து, ஐந்து தந்மாத்திரங்களும், பூதங்களும் உண்டாகின்றது என்று கூறப்பட்டது.

ஒவ்வொரு பூதமும் பிறக்கும்போது, அதற்கு முன்பு சூஷ்மமான நிலையில் உன்ன திரவியம் "தந்மாத்ரம்" எனப்படும். பால் தயிராக மாறுபாடு அடையும் போது, பாலுக்கும் - தயிருக்கும் இடையில் உள்ள ஒரு நிலையை போல, ஒரு திரவியம், பூதமாக மாறுபடும் போது நடுவில் உள்ள நிலை "தந்மாத்ரம்" என்று வழங்கப்படுகிறது.

தாமஸ அகங்காரத்தினின்று சப்த-தன்மாத்திரம் தோன்று கின்றது. அதனின்று ஆகாசம் உண்டாகிறது. அதாவது ஆகாசம் என்ற பூதத்திற்கும், தாமஸ அகங்காரத்திற்கும் இடையில் சூஷமமான நிலையிலுள்ள திரவியம் ஒலி (சப்த) தன்மாத்திரம்

ஆகும். ஆக ஆகாசத்திற்கு ஒலி குணமாகிறது. இவ்வகையிலேயே, ஆகாசத்தினின்று ஸ்பர்ச தன்மாத்ரமும், அதனின்று வாயுவும்; வாயுவிலிருந்து "ரூப" தன்மாத்ரமும், அதனின்று அக்நியும் (தேஜஸ்); அக்நியிலிருந்து ரஸ தன் மாத்ரமும், அதனின்று ஜலம்; ஜலத்தினின்று கந்த-தன்மாத்ரமும் அதனின்று பூமி என்ற முறையில் தந்மாத்ரங்களும் பூதங்களும் உண்டாகின்றன.

சாத்வீக அகங்காரமான (வைகாரிகத்திலிருந்து தோன்றுவதற்கும்; தாமஸ அகங்காரமான பூதாதியிலிருந்து தோன்றுவதற்கும்; ராஜஸ அகங்காரமான "தைஜஸம்" துணையாக செயல்படுகிறது.

"வெளி" (ஆகாயம்) - "காற்று" (வாயு) - "தீ" (அக்நி) - "நீர்" (ஜலம்) - "நிலம்" (பிருதிவி) ஆக ஐந்தும் பஞ்சபூதங்களெனப்படும். இவைகளின் குணங்கள் முறையே "ஓசை" - "ஊறு" - "ஒளி" - "சுவை" "மணம்" என்பனவாம்.

இவைகளுள் முதல் குணமான ஓசை அல்லது ஒலியை உணர்வது செவிப்பறை. இது காதுகளில் அமைந்துள்ளது.

இரண்டாவது குணமான ஊறு என்ற ஸ்பர்சத்தை அறிவது சரீரமான மெய். இது உடல் முழுவதும் பரவியுள்ளது. ஆயினும் நகம், பல், ரோமம் ஆகிய இடங்களில் மூச்சுக்காற்றின் மந்தநிலை காரணமாக இந்த உணர்வு புலப்படுவதில்லை.

ஒளி என்றும் ரூபம் என்றும் சொல்லப்படும் மூன்றாவது குணத்தை புலப்படுத்தும் இந்திரியம் சக்ஷுஸ். இது கண்களில் அமைந்துள்ளது.

நான்காவது குணமான சுவையை உணர்த்துவது நாக்கு. இந்த உணர்வு நாக்கின் நுனிப்பாகத்தில் அமையப்பெற்றது.

மணம் என்ற குணத்தை புலப்படுத்துவது நாசி என்ற மூக்கு. இது மூக்கின் நுனியில் உள்ளது. யானைக்கு துதிக்கையில் உள்ளது.

இந்த ஐந்தும் மிக நுண்ணிய நிலையிலுள்ள பொறிகள், கண்களுக்கு புலப்படாதவைகள். வெளியே தெரியும் மெய் - வாய் - கண் மூக்கு - செவி ஆகியவைகள் பொறிகள் செயல்படுவதற்கு காரணமான அவயவங்கள். சூட்சம நிலையிலுள்ள பொறிகள் மனத்தின் துணையோடு அவயவங்கள் மூலமாக செயல்படுகின்றன.

ஐந்து அறிவுப் பொறிகளின் தன்மை விளக்கப்பட்டது. இனி ஐந்து செயல் உருப்புகளான கர்மேந்திரியங்கள் விளக்கப்படுகிறது.

செயல்கள் செய்வதற்குரிய சக்தி கைகளின் விரல்களில் அமைந்துள்ளது. இந்த சக்தி யானைக்கு துதிக்கையிலும் பறவைகளுக்கு மூக்கிலும் அமைந்துள்ளது.

நடப்பதற்கு சக்தி கால் பாதங்களில் அமைந்துள்ளது. இது பறவைகளுக்கு இறக்கைகளிலும், பாம்புக்கு மார்பிலும் அமைந்துள்ளது.

கழிவுப் பொருள்கள் வெளியேற்றும் குதம் ஒரு உருபு ஆசனவாயில் அமைந்துள்ளது. ஒருவகை ஆனந்தத்திற்கு காரணமான உபஸ்தம் ஆண், பெண் குறிகளில் அமைந்துள்ளது.

பேசுவதற்கு காரணமான வாக்கு, நாக்கை முதன்மையாகக் கொண்டு எட்டு உருபுகளிலுள்ளது. அவைகள் அடிநாக்கு - நெஞ்சு தொண்டை - பல் - உதடு - மூக்கு - அண்ணங்கள் - தாடை முதலானவை. விலங்கினங்களுக்கு இவை முழுமையாக செயல்படுவதில்லை.

இந்திரியங்கள் சூட்சமமாக இருப்பவைகள். வேறு உடலில் ஜீவன் புகும்போது, வேறு லோகம் போகும் போதும், ஜீவனுடன் இந்திரியங்களும் செல்கின்றன. ஜீவன் முக்தி அடையும் போது பிராக்ருதம் அல்லாத உலகத்திற்கு செல்வதால், இந்திரியங்கள் அங்கே போக முடியாது. ஆதலால் பிரளயம் வரை இங்கேயே இருக்கும். இதனால் படைக்கும் போது உண்டான இந்திரியங்களுக்கு ஊழிக்காலம் வரை அழிவில்லை.

ஒலி (சப்த) தந்மாத்திரத்திலிருந்து ஆகாயம் உண்டாகிறது என்பதை அறிந்தோம். இதற்கு ஸ்பர்சம் கிடையாது. அதாவது தொட்டுப் பார்த்து உணரமுடியாது ஆக ஸ்பர்சமற்றதால் ஒலி என்ற குணத்திற்கு இருப்பிடமானதாக இருப்பது. அதற்கு ஒலி என்ற ஒரே குணம் மட்டும் உண்டு. ஆகாசத்திலிருந்து ஊறு என்ற ஸ்பர்சதந்மாத்திரம் உண்டாகிறது. இதிலிருந்து வாயு தோன்றுகிறது. வாயுவுக்கு ரூபம் கிடையாது. ஆனால் உடலினால் உணரக்கூடிய தன்மை உண்டு. ஆகாசத்தின் குணமான ஒலியுடன் ஊறு என்ற தனது குணத்தையும் சேர்த்து இரு குணங்களுக்கு இருப்பிடமானது வாயு. வாயுவிற்கு வெப்ப - தட்பங்கள் இயல்பல்ல, வந்தேறிகள் வெய்யில் - நீர் - மலர் ஆகியவைகளுடைய தொடர்பால்

உஷ்ணமானது, குளிர்ந்தது, மணமுள்ளது, என்கின்ற நிலைகளுக்கு உட்படுகின்றது.

உடல் முதலானவைகளைத் தரிக்கும்படி செய்து இயங்க வாயுவின் மாறுபாட்டால் தோன்றுவது முக்கியப்பிராணன் ஆகும். இது "பிராணன்" - "அபாநன்" - "வியாநன்" - "உதாநன்" - "சமாநன்" என்று ஐந்து விதமாய் இருந்து செயல்படுகிறது.

உடல் அசைவிற்கு காரணமாவது "பிராணன்" ஆகும். இதன் இருப்பிடம் இதயப்பகுதி கழிவுப்பொருள்களை வெளியேற்றுவது "அபாநன்". இது இருக்குமிடம் ஆசனவாய். ஜீரண உருபுகள் இயங்கு உதவுவது "வியாநன்", இது உடல் முழுவதும் பரவியுள்ளது. சிந்தனைக்கும் பேச்சுக்கும் உதவுவது "உதாநன்" இது தொண்டை பகுதியின் மேற்புறம் உள்ளது. உடலின் நாடிகள் இயங்க உதவுவது "சமாநன்", இது நாடிப்பகுதியில் உள்ளது.

தாவர வகைகளுள்ளும் பிராணன் இருப்பினும் அது மந்தமாக செயல்படும். வேரில் விட்ட நீரையும் எருவையும், தாவரங்கள் வாங்கிக் கொள்கிறபடியால் இதை அறியலாம்.

வாயுவிலிருந்து ரூப தந்மாத்ரமும் அதனின்று (அக்நி) என்ற பூதம் உண்டாகிறது. ஒலி - ஊறு ஆகிய குணங்களோடு, தனது குணமான ஒளியுடன் மூன்று குணங்களுக்கு இருப்பிடமாக அமைந்தது தீ என்றும் "அக்நி" என்றும் "தேஜஸ்" என்றும் சொல்லப்படும் பூதம்.

வெளிப்படையான உருவமும், உஷ்ணமும் இதன் இயல்புகள். இதை பிரத்யஷத்தினால் அறிய முடியும். இது "பௌமம்" "திவ்யம்" "ஔதரியம்" "ஆகரஜம்" என்று நான்கு வகைப்படும்.

பூமியின் தொடர்பு கொண்டது பௌமம் எனப்படும். எண்ணெய் விறகு முதலியவைகள் பூமியிலிருந்து தோன்றுவதால் இவைகளுள் இருக்கும் தீ சுடரும் தன்மை பௌமம் ஆகும்.

ஒருபொருளில்தேஜஸ் என்ற அக்நி பிரகாசிப்பதற்கு சாதனமான தன்மை "இந்தநம்" எனப்படும். ஆக பௌமத்திற்கு இந்தநம் விறகு எண்ணெய் என்பது போல ஜலவாயுவை இந்தநமாக உடைய தான சூர்யன் திவ்யம் எனப்படும்.

பிரதிவியிலிருந்து உண்டானதையும் ஜலத்தையும் இந்தநமாக கொண்டது "ஔதரியம்" அதாவது நாம் உண்ட உணவையும்

நீரையும் எரிபொருளாக கொண்டு ஜீரணத்திற்கு காரணமாகும் "ஜாடராக்நி" ஒதைரியமாகும்.

இந்த நத்தை தேடாத தங்கம் என்ற சுரங்கப்பொருள் "ஆகரஜம்" ஆகும். தங்கத்தில் வேறு திரவியங்களும் சேர்ந்திருப்பதால் உஷ்ணத்தின் ஸ்பர்சம் தோன்றுவதில்லை.

ஒளியை "பிரபை" என்றும் ஒளியை உடைய பொருளை "பிரபாவான்" என்றும் கூறப்படும்.

சூரிய கிரணமும் தீபச்சுடரும் பிரபை எனப்படும். இதற்கு சுருங்குவதும் விரிவதும் ஆகிய தன்மைகளுண்டு. அது பரவுவதற்கு தடை இருந்தால் சுருங்கும். தடையில்லாவிட்டால் நாலு பக்கமும் பரவும். இப்பிரபைகளுக்கு இருப்பிடமான சூரியனும் விளக்கும் பிரபாவான் ஆகும்.

அக்நியிலிருந்து ரஸ தந்மாத்ரமும் அதனின்று ஜலம் என்ற பூதம் தோன்றும்.

முந்தைய பூதங்களின் குணங்களான ஒலி - ஊறு - ஒளி ஆகியவைகளோடு தனது குணமான சுவையோடு நான்கு குணங்களுக்கு இருப்பிடமானது. இது குளிர்ச்சியுள்ளது. அதனால் தண்ணீர் என்ற பெயர் கொண்டது. இதர இயல்புகள் மணமற்றது - சுவையுள்ளது வெண்ணிறமானது.

வெவ்வேறு நிலைகளில் இதன் இயல்புகள் மாறும் தன்மை கொண்டது. தீயின் தொடர்பால் சூடான நிலையில் "வெந்நீர்" என்ற பெயரில் இருக்கும். செம்மண் நிலத்தில் இருக்கும் நீர் செந்நிறமாக காணப்படும். உவர் நிலத்தில் இருக்கும்போது உப்புநீராக இருக்கும். இவையனைத்தும் செயற்கை, நீரின் இயல்பல்ல!

நீரிலிருந்து தோன்றும் கந்த தந்மாத்தரலிருந்து, மண் (பிருதிவி) என்ற பூதம் பிறக்கும். முந்திய பூதங்களின் குணமான ஒளி - ஊறு ஒளி - சுவை, ஆகியவைகளோடு தனது குணமான "மணம்" என்பதையும் சேர்த்து ஒலி - ஊறு- ஒளி - சுவை - மணம் என்ற ஐந்து குணங்களுக்கு இருப்பிடமானது. கட்டி, கல், மண் என்று பல வகையாக காணப்படும் நிலம் (பிருதிவி) என்ற பூதம் அனைத்துப் பொருள்களுக்கும் ஆதாரமாக உள்ளது.

எல்லா பூதங்களிலும் மற்ற பூதங்கள் சேர்க்கப்பட்டிருப்பதால்

ஒலி முதலான எல்லாப் பூதங்களுடைய குணங்கள் எல்லாவற்றிலும் தோன்றுகின்றன.

பகவான், பூதங்களை உண்டு பண்ணி ஒவ்வொரு பூதத்தையும் இரண்டு சமபாகமாகப் பிரித்து அவைகளில் ஒன்றை அந்த பூதத்தின் பாகமாக வைத்துக் கொண்டு மற்றொரு பாகத்தை நான்கு கூறுகளாகப் பிரிக்கிறான். அப்படிப் பிரித்த கூறுகளை மற்ற நான்கு பூதங்களுடன் சேர்க்கின்றான். இப்படி எல்லா பூதங்களையும் செய்வதால், ஒவ்வொரு பூதத்திலும் பாதி அதனுடைய பாகமும், மற்றொரு பாதி மற்ற நான்கு பூதங்களிலிருந்து எடுக்கப்பட்ட கூறுகளாகும். முதல் பூதமான ஆகாசத்தை எடுத்துக்கொண்டால் ஆகாசம் பாதிபாகம் இதனோடு சேர்க்கப்படும். மற்ற பூதங்களின் கூறுகள் பாதி பாகம், அதாவது வாயு 1/8 பாகம், தீ 1/8 பாகம், நீர் 1/8 பாகம், நிலம் 1/8 பாகம் ஆக 1/2 பாகம் சேர்க்கப்பட்டு ஆகாசம் ஒரு முழுமையான பூதமாகும். இந்தக் கலவைக்கு "பஞ்சீகரணம்" செய்வது என்று பெயர். இதன் காரணமாக ஒவ்வொரு பூதத்திலும் அதன் குணம் நிறைந்தும் மற்ற பூதங்களின் குணங்கள் மிகச்சிறிய அளவிலும் இருப்பது இயல்பு.

இவ்வகையில் பிரிக்கப்பட்ட இருபத்தி நான்கு தத்துவங்களில், ஐந்து தந்மாத்ரங்கள், ஐந்து பூதங்கள், பிரகிருதி, மஹத் - அகங்காரம் ஆகிய பதிமூன்றும் சரீரங்களுக்கு உபாதான காரணங்களான தத்துவங்கள். இந்திரியங்கள் கணக்கிட்டு பார்க்க முடியாதபடி எண்ணற்றவைகள். ஆக ஒவ்வொரு பதினோரு இந்திரியங்களை மற்றவைகளில் இருந்து பிரித்து ஒவ்வொரு ஜீவனுக்கும் கொடுக்கப்படுகின்றன. ஆகையால் ஒரு ஜீவனுடைய இந்திரியங்கள் மற்ற ஜீவன்களின் இந்திரியங்களைக் காட்டிலும் வேறுபட்டவை. நகைகளில் பதிக்கப்பட்ட நவரத்தினங்களைப் போல சரீரத்தில் அந்தந்த இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

சரீரம் என்பது ஒரு சேதநனால் எப்பொழுதும் தூக்கப்பட்டும். அவனால் ஏவப்பட்டும், அவனுடைய சொத்தாகவும் இருந்து, அவனை விட்டுப் பிரியாததாய் உள்ள ஒரு திரவியம்.

சேதநன் என்ற சொல் அறிவு (சைதந்யம் - ஞானம்) என்கிற குணத்தை உடையவனை குறிப்பிடுகிறது. வேறொன்றை சரீரமாகச் சொல்லுவதாலே, அறிவு என்ற சைதந்யம் அவனுக்கு சரீரமல்ல என்று ஏற்படும்.

ஆன்மாவின் ஸ்வரூபம் இருந்தால் தான் சரீரம் நிலைத்து நிற்கும். ஆன்மா இல்லையெனில் உடலின் இருப்பும், அது நிலைபெற்று நிற்றலும் முடியாத காரியம். ஆதலால் உடல் எப்பொழுதும் ஆன்மாவுக்கு அதேயமாயுள்ளது. ஆன்மாவினால் தரிக்கப்பட்டும், சொத்தாகவும் உள்ளது.

சரீரமான உடல் ஜடப் பொருள், அறிவற்றது. அதற்கென்று தனிப்பயன் ஒன்றுமில்லை. ஆன்மாவின் பயனே உடலிற்கும் பயனாகிறது. ஆதலால் உடல் எப்பொழுதும் சேஷமானது.

பஞ்சீகரணம் செய்யப்பட்டவைகளைக் கொண்டுதான் இந்த அண்டம் உண்டுபண்ணப்பட்டது. அண்டம் உண்டாவதற்கு முன்னால் நடந்த படைப்பிற்கு (ஸ்ருஷ்டிக்கு) **"சமஷ்டி படைப்பு"** என்று பெயர். அதற்கு மேல் நடந்தது **"வியஷ்டி படைப்பு"** எனப்படும்.

மஹத் முதலான தத்துவங்களை உண்டு பண்ணும் போது ஒரு தத்துவத்தை முழுவதும் அடுத்த தத்துவமாக செய்வதில்லை. ஒவ்வொரு தத்துவத்தைச் சுற்றி அதற்கடுத்த முன் தத்துவம் சூழ்ந்துள்ளது. இப்படி சுற்றியுள்ள தத்துவத்திற்கு ஆவரணம் என்று பெயர். ஒவ்வொரு தத்துவமும் முழுவதுமாக வேறு தத்துவமாக செய்யப்பட்டால் இறுதி தத்துவமான பிருதிவி மட்டும் தான் இருக்கும். தத்துவங்கள் இப்படி ஆவரணங்களாக இருப்பது பிற்பாடு ஒன்று சேர்க்கப்படுவதற்காக ஒரு பாகம் வேறுபடாமல் அப்படியே இருக்கிறது.

பனை ஓலை, மனிதர்களின் காதில் அணிந்து கொள்வதற்கேற்ப, "பனந்தோடு" என்று மாறுபட்டால் முன்நிலையை விட்டு வேறு நிலையை அடைந்தது. சிப்பாய்கள் தனித்து இருக்கும் போது அவர்களுக்கு சேனை என்ற பெயர் கிடையாது. அவர்கள் ஒன்றாக சேர்ந்த நிலையில் சேனை என்ற பெயர் உண்டாகிறது. மரங்கள் தனித்து இருக்கும் நிலையில் மரம் என்றே கூறுகிறோம். அவைகளே சேர்ந்திருக்கும் நிலையில் வனம் என்று சொல்லுகிறோம். ஒரு பொருள் முன்னிருந்த நிலையை விட்டு வேறுவித நிலையை அடையும் போது, அதை வேறு தத்துவம் என்று கூறப்படுகிறது.

சரீரம். **"அழிவில்லாதது"** **(நித்யம்)** என்றும் **"அழிவது"** **(அநித்யம்)** என்றும் இருவகைப்படும். பரமபதத்தில் உள்ள பகவானது திருமேனி, நித்தயமுக்தர்களின் ரூபம்

அழிவில்லாதவைகள் (நித்யமானது). அழிவதான அநித்ய சரீரம், வினைப் பயனால் உண்டானது என்றும், வினைப் பயனால் உண்டாகாதது என்றும் இருவகைப்படும்.

இறைவனின் அவதார சரீரங்களும் நித்யர் - முக்தர் ஆகியோர் தாங்களே விரும்பி எடுக்கும் சரீரங்களும் வினைப்பயனால் உண்டாகாதவைகள். மற்ற உயிர்களின் உடல்கள் அனைத்தும் வினைப்பயனால் அமைந்தவைகள். வினைப்பயனால் அமைந்தவைகளும் இருவகைப்படும்.

சில அத்தியாவசிய நேரங்களில் தானே சங்கல்பித்துக் கொண்டு எடுக்கும் உடல்கள் ஒருவகை, "**சௌபரி**" என்ற யோகி தனது சங்கல்பத்தால் எடுத்த உடல் இவ்வகையைச் சார்ந்தது.

வினைப்பயனால் மட்டுமே எடுக்கப்படும் உடல்கள் நம்மைப் போன்றவர்களின் உடல்கள் ஆகும்.

அழியும் உடல்கள், "**அசைவது**" (சரம்), "**அசையாதது**" (அசரம்) என்று இருவகைப்படும்.

மரம் - செடி - கொடி - கல் முதலானவைகள் அசையாதது (அசரம்) என்ற வகையைச் சார்ந்தவைகள். மனிதர்கள் விலங்கினங்கள் - பறவைகள் முதலானவைகளின் உடல்கள் அசைவது (சரம்) என்ற வகையைச் சார்ந்தவைகள்.

தேவ உடல் - மனித உடல் - மிருகங்களின் உடல்கள், நரகர் உடல் ஆகிய அசையும் உடல்களில் நான்கு வகைகள்.

பிறப்பெடுக்கும் உயிர்களுக்குள், **கருப்பை _ முட்டை - விதை வியர்வை** என்று நான்குவிதமாக தோன்றியவை.

கருப்பையிலிருந்து தோன்றாத உயிர்களும் உண்டு. இவைகள் கர்ப்பவாசனை அற்றது. (**அயோநிஜம்**) என்று கூறப்படும். மனிதர்களுள், சீதையும், ஆண்டாளும், பூமியிலிருந்தும் திருஷ்டத்யும்னனும், திரௌபதியும் தீயிலிருந்தும் முதலாழ்வார்கள் முறையே பொய்கை மாதவிப்பூ; செவ்வல்லிப்பூக்களிலிருந்தும் பிறந்தவர்கள். தேவர்களுள் பிரமன் திருமாலின் நாபியிலிருந்து பிறந்தவர். மிருகங்களுக்குள் ஐராவதம் திருப்பாற்கடலினின்று தோன்றியது.

கருப்பையினின்று பிறப்பவைகள் "**யோனிஜம்**" எனப்படும் முட்டையினின்று பிறப்பவைகள் "**அண்டஜம்**" எனப்படும்

பூமியை பிளந்து கொண்டு மேலே வருகிற மரம் செடி முதலானவைகள் விதையிலிருந்து முளைப்பனவைகள் **"உத்பிஜ்ஜம்"** எனப்படும். வியர்வையிலிருந்து உண்டாகுபவைகள் **ஸ்வேதஜம்** எனப்படும்.

பிரகிருதி முதலானவைகள், ஜீவர்களுக்கும்-ஈசுவரனுக்கும் அனுபவிப்பதற்காக பயன்படுவதால் இவைகள் போகஸ் தானங்களாகவும், போக்யங்களாகவும் அமைந்தவைகள். போகத்தை அனுபவிக்கும் கருவிகள் இந்திரியங்கள். ஆதலால் அவை உபகரணங்கள். ஆக நாம் வசிக்கும் இந்த அண்டம் ஒரு போகஸ்தானம்.

திருமரிசை ஆழ்வார் அருளிச் செய்த திருச்சந்தவிருத்தம் என்ற திருமொழியில் முதல் பாசுரம் இங்கே நினைக்கற்பாலது.

> **"பூநிலாய வைந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்**
> **தீ நிலாய மூன்றுமாய்ச் சிறந்த காலிரண்டுமாய்**
> **மீ நிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்**
> **நீ நிலாயவண்ணம் நின்னையார் நினைக்கவல்லரே"**

இதன் பொருள்: ஆகாயம், வாயு, அக்நி, ஜலம், பூமி என்ற ஐந்து பூதங்களையும் படைத்தாய், பூதப்படைப்பில் கடைசி பூமி. பூமியில் ஐந்து குணங்களும் (கந்தம் - ரஸம் - ரூபம் - சபர்சம் - சப்தம்) ஜலத்தில் நான்கு குணங்களும், அக்நியில் மூன்றும், வாயுவில் இரண்டும், ஆகாயத்தில் ஒன்றும் உள்ளன. இவ்வைந்தும் உனக்கு சரீரம். (ஜீவர்கள் விவேகம் பெற்று) பிரபஞ்சத்திற்கு நீயே முதற்காரணம் என்று அறிபவர் கிடைப்பது அரிது.

15. காலம்

காலம் ஜடப்பொருள். ஆதலால் இது தானே புலப்படாது. அறிவால் இதை அறிய வேண்டும். இதுபரவாத இடமே இல்லை. ஆதலால் இது **"விபு"** என்ற தன்மை கொண்டது.

"நிகழ்காலம்" - "இறந்தகாலம்" - "எதிர்காலம்" - "முன்பு" "பின்பு" - "ஒருகால்" - "பலகால்" என்றெல்லாம் பேசுகிறோமே அப்படி இச்சொற்களால் வழங்கப்படுவது காலம். மனிதனை சிறுவன், வாலிபன் - முதியவன் என்றெல்லாம் கூறும் வரையறைகளுக்கும், காலமே முக்கிய காரணமாகும். இது எங்கும் பரவிய ஒரே பொருளாக இருப்பினும், பல உட்பிரிவுகளைக் கொண்டது.

காலங்கள் இருவகைப்படும். அவைகள் **"அகண்டகாலம்"** (IMPARTITE TIME) என்றும், **"கண்டகாலம்"** அல்லது **"கார்யகாலம்"** (PARTITE TIME) என்னும் கூறப்படும்.

அகண்டகாலம் எங்கும் பரவியது. நித்தியம். இது நிகழ்காலம் இறந்தகாலம் - எதிர்காலம் என்று முப்பிரிவுகள் கொண்டது. அகண்ட காலத்தை முதற்காரணமாகக் கொண்டு. அதன் பாதிப்பால் பல பகுதிகளாக விரிந்துள்ளது. கார்ய காலமான கண்டகாலம். இப்படி விரியும் தன்மை காரணமாக இது அநித்யமாகிறது. இவைகள் விநாடி - நாழிகை - முகூர்த்தம் யாமம் - பகல் - இரவு - நாள் - பக்ஷம் - மாதம் - அயனம் ஆண்டு முதலான பல உட்பிரிவுகளைக் கொண்டது.

எது மிக மிகச் சிறியதோ, எதை மேலும் பகுக்க முடியாதோ, எது மற்றதுடன் சேராமல் தனித்து நிற்பதோ அது **"பரமாணு"** எனப்படும். பரமாணுவைக் கடக்க, சூரியனுக்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ அது ஒரு **"பரமாணுகாலம்"** எனப்படும். இது காலத்தின் மிக மிகச்சிறிய அடி நுணுக்கம்.

ஆண்டு என்பது காலத்தின் மேல் பருக்கம். இவைகளுக்கு இடையில் பல நிலைகள் உண்டு.

ஆறு பரமாணுக்களின் கூட்டம் ஒரு **"திரிஸ்ரேணு"** எனப்படும். சூரிய ஒளிக்கற்றையில் தூசுபோல தெரியும் பகுதி ஒரு திரிஸ்ரேணுவாகும். மூன்று திரிஸ்ரேணு கொண்டது ஒரு **"த்லுடி"**

(TLUTI) சூரியன் ஒரு த்லுடியைக் கடக்கும் காலமும் த்லுடி என்றே சொல்லப்படும்.

கீழ் பாராவில் கூறியது போல, காலத்தின் உட்பிரிவுகள், ஆண்டுக்கு பிறகு **யுகம் - கல்பம் - பரார்த்தம் - த்விபரார்த்தம் - மஹாகல்பம்** என்றெல்லாம், காலத்தின் பகுதிகள் விரிவடைகிறது.

பிரும்மாவின் பகலுக்கு "**கல்பம்**" என்று பெயர். பிரும்மாவின் ஆயுட்காலத்திற்கு "**பரம்**" என்று பெயர். அதில் ஒரு பாதி "**பரார்த்தமாகும்**".

த்விபரார்த்தம் என்றால் இரண்டு பரார்த்தம் என்ற நிலையில் பிரும்மாவின் ஆயுளாகும். பிரும்மாவின் முதல் பரார்த்தம் முடிந்து இரண்டாவது பரார்த்தம் ஆரம்பித்து முதல் நாள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு "**சுவேதவராஹகல்பம்**" என்று பெயர். வைஸ்வத மனுவின் காலம் நடந்து கொண்டிருக்கிறது. இவன் காலத்தில் 27 சதுர் யுகங்கள் முடிந்து 28வது கலியுகம் நடந்து கொண்டிருக்கிறது.

மனிதர்களுக்கு ஏற்பட்ட அளவுள்ள ஒரு மாதம் பித்ருக்களுக்கு (MANES) ஒரு நாள். அவர்களுக்கு அமாவாசை நண்பகல். மனிதர்களுக்கு ஏற்பட்ட அளவினாலே. ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாள். மனிதர்களின் ஆறுமாத காலமான உத்தராயணம் அவர்களுக்கு பகல்பொழுது. அதுபோல தாஷிணாயனமான ஆறு மாதங்கள் அவர்களுக்கு இரவு பொழுதாகும். இவ்வகையில் தேவர்களுக்கு உண்டான அளவுப்படி, ஒரு சதுர்யுகம் என்பது பன்னீராயிரம் ஆண்டுகள் அளவுள்ளது (12,000). இதில் முதல் யுகமான கிருதயுகம் நான்காயிரம் ஆண்டுகள் கொண்டது. அதில் தர்மம் முழு அளவில் இருக்கும். இரண்டாவது யுகமான தரேதாயுகத்தில், தர்மம் முக்கால்பங்கு செயல்படும் மூவாயிரம் ஆண்டுகள் அளவுள்ளது. தர்மம் அரை பங்கு செயல்படும் யுகமான த்வாபரம், இரண்டாயிரம் ஆண்டுகள் அளவு கொண்டது. ஆயிரம் ஆண்டுகள் கால அளவுகொண்ட நான்காவதான கலியுகத்தில் தர்மம் கால்பங்கே செயல்படும்.

ஒவ்வொரு யுகத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் சந்தி என்ற வகையில், கிருதயுகத்திற்கு எண்ணூறு ஆண்டுகளும், த்ரேதாயுகத்திற்கு அறுநூறு ஆண்டுகளும், துவாபர யுகத்திற்கு

நானூறு ஆண்டுகளும், கலியுகத்திற்கு இருநூறு ஆண்டுகளும் சேர்த்து மொத்தம் பன்னீராயிரம் ஆண்டுகள் (12,000).

தோன்றும் பொருள்கள் அழிவது இயல்பு. காலத்தின் முடிவில் பொருள்களின் அழிவு "பிரளயம்" எனப்படும்.

ஒவ்வொரு நாளும் உண்டாகும் பொருள்களின் அழிவு **"நித்தியப்பிரளயம்"** ஆகும்.

பிரும்மாவின் ஒரு நாள் முடிவில் உண்டாகும் அழிவு **"நைமித்திகப் பிரளயம்"** எனப்படும்.

பிரும்மாவின் ஆயுட்காலம் முடியும் போது தோன்றும் அழிவு "பிராக்கிருத பிரளயம்" எனப்படும். அப்பொழுது படைப்புக் காலத்தில் உண்டான தத்துவங்கள் ஒவ்வொன்றும் தன்னுடைய காரணத்தில் லயம் அடைகிறது. லயம் என்றால் ஒரு பொருள் தனது நிலையிலிருந்து, முன்னிருந்த காரணநிலையை அடைவது.

இறுதியில் "தமஸ்ஸு" என்ற ஒரே நிலையுள்ளதாகி பரமனுடன் ஒடுங்கும்.

மீண்டும் படைப்பு தொடங்க, சேதன - அசேதனங்களை உடலாகக் கொண்ட விசிஷ்ட எம்பெருமான், முதற் காரணமாகின்றான். அவரது சங்கல்பமே நிமித்த காரணமாகும். சங்கல்ப விசிஷ்டனான எம்பெருமானுக்கு இவ்வகையில் துணைபுரிவது காலம். ஆதலால் படைப்பிற்கு காலம் துணைக் காரணம். காலத்தின் துணை கொண்டே, பூமண்டலத்திலுள்ள கார்யப் பொருள்களனைத்தையும் பகவான் உண்டாக்குகிறான், நிலைபெறச் செய்கிறான், பிறகு அழிக்கின்றான். இவ்விதமாக, காலமானது எம்பெருமானது விளையாட்டிற்கு சாதனமாக உள்ளது லீலா விபூதியில்.

வசந்தகாலம் என்று ஒரு காலத்தைச் சொல்லுகிறோம். இக்காலத்தில், சில மலர் வகைகள் மலர்கின்றன. சில பழவகைகள் உண்டாகின்றன. வேனிற்காலத்தில் வெய்யில் மிக வெப்பமாக காய்கிறது. இவைகள் உண்டாவதற்கு, அக்காலப்பொழுதில், தொடர்பு கொண்டவைகளின் குணத்தன்மையைக் கொண்டே குணங்களை காலத்தில் ஏற்றி செயல்படுகிறது. இதனால் இவைகளுக்கு காலம் நிமித்த காரணமாகிறது.

நித்யவிபூதியான பரமபதத்திலும், காலம் உண்டு என்றாலும்,

அது அங்கு செயலற்றது. இந்த பூ மண்டலத்திலுள்ள கார்யப்பொருள்களின் உற்பத்தி முதலானவைகளுக்கு காலம் காரணமாவது போல, பரமபதத்தில் இல்லை. அங்கு எம்பெருமான் நித்ய - முக்தர்களின் சங்கல்பத்தினாலேயே எல்லாம் நடக்கின்றன.

பிரகிருதி - அதன் மாறுபாடுகள் ஆகியவைகளைக் காட்டிலும் வேறான பொருள் காலம். இதைப்பற்றி விளக்கமாக அறிந்து கொண்டால், இதுவரை பல காலங்கள் வீணாகிப் போய்விட்டனவே என்று வருந்த வேண்டிய அவசியமில்லாமல், ஜீவர்கள் தங்களுக்கேற்ற உயர்ந்த வாழ்க்கைக்குரிய (முக்தி) செயல்களை செய்ய முற்பட்டு விடுவார்களல்லவா? ஆதலால், காலத்தைப் பற்றிய அறிவு மிக அவசியமானது.

16. நித்யவிபூதி

சுத்த சத்துவம் - தர்மபூதஜ்ஞானம் - ஜீவன் - ஈசுவரன் ஆகிய இவைகளுக்குப் பொதுவான இலக்கணம் அஜடம் என்ற நிலையில், சுயம்பிரகாசமாயிருக்கும் தன்மைகளை கொண்டவை. அதாவது வேறொன்றின் உதவியின்றி தானாய்தோன்றும் தன்மை. இவைகளுள் ஜீவனும்-ஈசுவரனும் தானே தோன்றுபவைகள் அதாவது (பிரத்யக்குகள்) அறிவின் பயனை பெறுபவர்கள். தானே தோன்றாது, மற்ற ஆன்மாக்களுக்கு தோன்றுவது (பராக்), அறிவின் பயனை பெறாதவர்கள். சுத்தசத்துவம் தர்மபூத ஜ்ஞானம் ஆகிய இரண்டும். சுயம்பிரகாசம் என்கிற தன்மையில், அஜடங்கள்; அறிவின் பயனை அனுபவிக்காதவைகள் என்ற நிலையில், (பராக்) ஜடங்கள் ஆகின்றன. இவையிரண்டுக்கும் பொதுத்தன்மை "பராக்" என்ற நிலையில், அறிவின் பயனை அனுபவிக்க முடியாது, ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் செயல்படுகிறது. பிரகிருதி, சத்துவம்-ரஜஸ்-தமஸ் போன்ற முக்குணங்களின் இருப்பிடம். ஆனால் நித்யவிபூதிபோ, கலப்பில்லாமல், சுத்தசத்துவ குணயமாகவே இருப்பதால், **"சுத்தசத்துவம்"** என்றும் சொல்லப்படுகிறது.

நித்யவிபூதி, தானே பிரகாசிக்கும் தன்மை கொண்டதென்றால், அது ஒல்லோருக்கும் புலப்பட வேண்டுமே? பின் ஏன் நம்மைப் போன்றவர்களுக்கு புலப்படுவதில்லையே என்ற ஐயம் எழக்கூடும்.

புகைமண்டியுள்ள பொழுது, தீச்சுடரை நாம் காண முடியாது. அழுக்கேறிய கண்ணாடியில் நம்து முகம் தோன்றுவதில்லை. கருப்பையிலுள் சிசுவும் நமக்கு புலப்படுவதில்லை. அழுக்கு - புகை இவைகளைப் போல், நாம் செய்த தீவினைப்பயன்கள், நமது அறிவை மறைத்துவிடுவதால், அது நம் போன்றவர்களுக்கு புலப்படுவதில்லை.

ஜீவனையும் - ஈசுவரனையும் காட்டிலும் வேறாக இருப்பது அசேதனமான இந்த சுத்தசத்துவம். இது சுயம்பிரகாசம். எம்பெருமானுடைய திவ்யமங்களரூபம் அறிவு (ஜ்ஞான) மயமானது. இந்த ரூபம் சுத்த சத்துவத்தினாலானதால், சுத்த சத்துவமும் அறிவு மயமானது என்று சொல்லப்படுகிறது.

சயம்பிரகாசமாயிருப் பதைத்தான் அறிவு மயம் என்று கூறப்படுகிறது. கர்மத்தினால் கட்டுண்டவர்களுக்கு இது தானாக தோன்றாது. கர்மத்தினால் கட்டுப்படாதவர்களுக்கு அறிவில் குறைதல் இல்லாததினால் (ஜ்ஞானசங்கோசம்) இது தானாகவே தோன்றுகிறது. இது ஆனந்த மயமானது. இறைவனது ஆறுகுணங்களான **ஜ்ஞானம் - சக்தி - பலம் - ஐசுவர்யம் - வீர்யம் - தேஜஸ்** ஆகியவைகள் இங்கே புலப்படுவதால் இது "ஷாட்குண்ய மயம்" என்று கூறப்படுகிறது. மேலும், ஐந்து உபநிஷத மந்திரங்களைக் கொண்டு இது விளக்கப்படுவதால், ஐந்து உபநிஷத்துக்களை ஸ்வரூபமாக உடையது. இது பஞ்சோபநிஷத் மந்திரம் என்று கூறப்படும். பிரகிருதி மண்டலத்திலுள்ள ஐந்து பூதங்களைப் போல அல்லாது, பிராகிருத தொடர்பு சிறிதும் கலக்காத ஐந்து சக்திகள் கொண்டதாகையில், இது **"பஞ்சசக்திமயீ"** என்றும் வழங்கப் படுகிறது.

இங்குள்ள திருவாபரணங்கள், திருவாயுதங்கள், விமானங்கள் மண்டபங்கள், கோபுரங்கள் ஆகியவைகளனைத்தும் அழிவின்றி நித்யமாயும் - மிகுதியாயும் இருப்பதாலும், இது நித்யவிபூதி என்று கூறப்படுகிறது.

இறைவனுடைய சங்கல்பத்தாலே ஈசுவரனுக்கும் - நித்யமுக்தர்களுக்கும். அனுபவங்களாகவும் (போக்யங்களாகவும்), அனுபவிக்கப்படுபவைகளாகவும் (போக சாதனங்களாகவும்_, அனுபவிக்கும் இடங்களாகவும் (போகஸ்தானங்களாகவும்) அநேக ரூபங்களோடு இது விளங்குவதால், நித்ய விபூதியாகிறது. எம்பெருமானின் திருமேனி முதலானவைகள் அனுபவங்களாகும். (போக்யங்கள்). சந்தனம், மலர்கள் - ஆடைகள் - ஆபரணங்கள் - ஆயுதங்கள் முதலானவைகள் அனுபவிக்கப்படுபவைகள். (போக சாதனங்கள்); பட்டணம் - கோபுரம் - மதில் - மண்டபம் விமானம் - தோட்டம் - தாமரை ஓடை முதலானவைகள் அனுபவிக்கும் இடங்கள் ஆகும். (போகஸ்தானங்கள்).

எம்பெருமானுடைய வியூக சரீரங்களும், விபவ சரீரங்களும், அர்ச்சா சரீரங்களும் சுத்த சத்துவத்தினால் செய்யப்பட்டவைகள். நாம் வாழும் உலகத்தின் ஆலையங்களிலுள்ள விக்ரஹம் அர்ச்சை திருமேனி எனப்படும். இவைகள் பொன் - வெள்ளி - பஞ்சலோகம் கல் - கட்டை முதலான பிராகிருத பொருள்களால் செய்யப்பட்டவைகள். இருப்பினும் ஆலயங்களில் நிலைநிறுத்திய

(பிரதிஷ்டை) பின்பு, விக்ரங்களில் சுத்தசத்துவமான சரீரம் இறைவனின் சங்கல்பத்தால் அவைகளில் தோன்றுகிறது. இருப்பினும் பிராகிருத பொருளோடு, பிரகிருதமில்லாத (அப்பிராகிருதமான) சுத்த சத்துவப்பொருள் எப்படி இணையும் என்ற ஐயம் தோன்றக் கூடும். பிராக்ருதமும் - அப்பிராகிரதமும் சேருவது கூடாது என்றிருந்தால், பகவானுக்கு இராம கிருஷ்ண அவதாரங்கள் எடுக்க எப்படி முடிந்தது. ஈசுவரசரீரம் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளது என்பது வியாப்தி. அர்ச்சுணனுக்கா, பகவான் விசுவரூபம் எடுத்து இந்த வியாப்தியை காட்டியது பிராகிருத உலகத்தில்தானே?

நித்ய விபூதியிலுள்ள நித்ய முக்தர்கள், தாங்கள் விரும்பியபடி சரீரம் எடுத்துக்கொள்ள முடியும். நித்ய முக்தர் ஈசுவரன் ஆகிய இவர்களுடன், மலர்ச்சி பெற்ற அறிவும் (ஜ்ஞானமும்) எங்கும் நிறைந்திருப்பதால். இந்திரியங்கள் உதவி தேவையில்லை. இங்கு சரீரங்கள் கிடையாது என்று சொல்வதற்கு காரணம், கர்மத்தினால் உண்டான சரீரங்கள் இல்லை என்பது தான் கருத்து.

நித்ய விபூதிக்கு கீழ்புறம் மட்டும் எல்லை உண்டு. அது தான் பிராகிருத மண்டலம் குறைந்ததாயும், நித்ய விபூதி அதிக அளவுள்ளதுமாய் இருக்கிறது. லீலாவிபூதியான பிராகிருத மண்டலமும் நித்ய விபூதியும் சேர்ந்து ஒரு முழுப்பகுதி என்றால், அதில் லீலாவிபூதி கால்பாகமும், நித்யவிபூதி முக்கால் பாகமும் ஆகும். இதை விளக்குவது:

"பாதோஸ்ய விச்வா பூ தாநி
த்ரிபாதஸ்யாம் ருதம்திவி"

என்ற பூருஷசூக்த மந்திரம்.

இதன் பொருள், லீலாவிபூதி ஒரு பாதம் என்று கொண்டால், அம்ருத லோகமான நித்ய விபூதி மூன்று பாதங்கள் கொண்டது.

பகவானுடைய திவ்யமங்கள விக்ரகம், எல்லாப் பொருள் களுக்கும் தத்துவங்கள் உட்பட இருப்பிடமாக அமைந்துள்ளது.

எப்படியென்றால், ஜீவன்கள் கௌஸ்துபமணியாகவும்; பிரகிருதி **ஸ்ரீவத்ஸம்** என்ற மருவாகவும்; **மஹத்தத்துவம் கௌமேதகி** என்ற கத்தியாகவும், அதன் உறையாகவும்; சாத்துவீக அகங்காரம் **சார்ங்கம்** என்ற வில்லாகவும்; தாமஸ அகங்காரம் **சங்கமாகவும்**; மனது **சக்கரமாகவும்** இந்திரியங்கள் பத்தும்

அம்புகள் என்ற சரங்களாகவும்; ஐந்து தந்மாத்திரங்களும், ஐந்து பூதங்களும் வனமாலையாகவும் எம்பெருமானின் உடலில் திகழ்கின்றன.

"புருடன் மணிவரமாகப் பொன்றா மூலப்
பிரகிருதி மருவாக மான் தண்டாகத்
தெருள்மருள் வாள்மறைவாக ஆங்காரங்கள்
சார்ங்கஞ்சங்காக மனந்திகிரியாக
இருடிகளீரைந்தும் சரங்களாக
இருபூதமாலை வனமாலையாகக்
கரடனுருவா மறையின் பொருளாம் கண்ணன்
கரிகிரிமேல் நின்றனைத் துங்காக்கின்றானே"

என்ற பாடலின் மூலமாக இருபத்திநான்கு தத்துவங்களுக்கும் இருப்பிடம் எம்பெருமான் என்பதை அறியலாம்.

பெரிய பிராட்டிக்கும் சர்வேசுவரனுக்கும் இனியதாக இருப்பதால் நித்ய விபூதியானது, பிரமோதம் - ஆமோதம் - சம்மோதம் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. மேலும், அளவில்லாதது, திரிபாத்விபூதி, பதமபதம், அமிருதம், அப்பிராகிருத லோகம், ஆன்ந்தலோகம், ஸ்ரீவைகுண்டம், அயோத்யை சேணுயர்வானம் (பரமாகாசம்) பொன்னுலகு கலங்காப்பெரு நகரம் என்று பல பெயர்களால் வழங்கப்படுகிறது.

நித்யவிபூதியில் வைகுண்டம் என்று பெயருள்ள ஒரு நகரம் உள்ளது. இது ஒரு திவ்ய நகரம். இது பனிரெண்டு திருமதின்கள் என்ற ஆவரணங்களால் சூழப்பட்டது. இதற்குள் சோலைகள், குளங்கள், ஓடைகள், மண்டபங்கள் விமானங்கள் ஆகியவைகள் அணிகலன்களாக விளங்குகின்றன. உயர்ந்த கோபுரங்கள் கொண்ட இதன் நடுவில் ஆனந்தம் என்ற பெயருடைய ஒரு திருக்கோயில் அமைந்துள்ளது. அதற்குள்ளே ரத்னமயமான அநேகமாயிரம் தூண்களையுடைய ஒரு திருமாமணிமண்டபம் என்று பெயருள்ள ஒரு அரங்கம் உண்டு.

"இருள் இரிய சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி
இனத் துத்தி அணிபணம் ஆயிரங்களார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்"

என்று குலசேகராழ்வார் அருளிச் செய்தபடி, அந்த அரங்கில் ஆயிரம் படங்களிலுள்ள ரத்னங்களின் ஒளியால் விளங்குகின்ற

ஆதிசேஷன் என்ற திருவநந்தாழ்வார் இருக்கிறார். அவர்மேல் தர்மம் முதலானவைகளாலான ஒரு சீரிய சிம்மாசனம் இருக்கிறது. இச்சிம்மாசனத்திற்கு எட்டுகால்களாக, **தர்மம் - அதர்மம்; ஞானம் - அஞ்ஞானம்; வைராக்கியம் - அவைராக்கியம்; ஐசுவர்யம் - அநைச்வர்யம்** என்பவைகளின் அபிமான தேவதைகள் இருக்கிறார்கள். அதன் மேல் **விமலை** முதலான ஆரணங்குகளால் சாமரங்களை கையில் ஏந்திய வண்ணம் இருக்கிறார்கள். இதன் மேல் உயர்ந்த ஞானத்திற்கு இருப்பிடமான ஆதிசேஷன் மேலுள்ள ஒரு அழகிய பர்யங்கத்தில் வாக்கால் வர்ணிக்க இயலாத திவ்யதம்பதிகளான ஸ்ரீ வாசுதேவன் எழுந்தருளி இருக்கிறார்.

மனத்திற்கும் - வாக்குக்கும் எட்டாதவனும், பேரற்புத திவ்விய மங்கள திருமேனி கொண்டவனும், ஸ்ரீதேவி - பூதேவி நீளாதேவிகளோடு கூடியிருப்பவனும் உலகம் முழுவதையும் தாம் உள ஆக்கலும், நிலை பெற்று நிறுத்தலும், நீங்கலும் நீங்காத விளையாட்டாக கொண்டவனுமான ஸ்ரீ மந்நாராயணனை சேவிப்போமா? சேவிக்கத்தான் முடியுமா?

17. தர்மபூதஞானம்

இறைவனைப் போலவே, ஜீவனும் அறிவுமயமாக இருப்பது. அறிவுமயமாக இருப்பதோடன்றி அறிவையும் தர்மமாக கொண்டது. அந்த அறிவே "தர்மபூதஞானம்" (ATTRIBUTIVE CONSCIOUSNESS) என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

அறிவு (ஜ்ஞானம்) ஒரு அறிவற்ற பொருள். அதாவது அசேதனப்பொருள். சைதன்யம் என்ற அறிவுக்கு இருப்பிடமான ஜீவர்களை சேதனர்கள் என்று கூறப்படுகிறார்கள். ஆக உயிருள்ளவைகளனைத்தும் சேதனமல்ல. அறிவுள்ளது மட்டும்தான் சேதனனெனப்படும். இந்த அறிவு தன்னை உடையவனுக்குத் தன்னைக்காட்டும். இது தானே பிரகாசிக்கும் தன்மை கொண்டது. இதை அறிவதற்கு வேறொரு அறிவு தேவையில்லை. இதற்கு சத்துவ - ரஜஸ் - தமஸ் ஆகிய முக்குணங்கள் கிடையாது.

இது அறிவின் பயனைப் பெறாதது என்ற நிலையில் அசேதனம் என்றும், சுயம்பிரகாசம் என்ற நிலையில் அஜடம் என்றும், இருவகையிலும் கூறலாம்.

இது ஒரு பொருளுக்கு குணமாக அமைந்தது. இது எங்கும் பரவியது, நித்யமானது. இறைவனிடமும், நித்ய - முக்தர்களிடம் உள்ள தர்மபூதஞானம் எப்பொழுதும் சுறுங்குதலின்றியே இருக்கும் தன்மை கொண்டது. நமது தர்மபூதஞானம் இயல்பாகவே மலர்தலும் கூம்புதலும் (விகாசம் சங்கோசம்) தன்மை கொண்டது.

சம்சாரத்தில் கட்டுண்ட பத்த ஜீவர்களின் தர்மபூத ஞானம், எங்கும் பரவும் தன்மை கொண்டதாயினும், சேதனர்களின் வினைப்பயன்கள் காரணமாக மறைக்கப்பட்டுள்ளது. நல்வினையால் மலர்தலையும், தீவினையால் சுறுங்குதலையும், அடையும். இதனால் சேதனர்களின் செயல்கள், சில நேரங்களில் அறிவுபூர்வமாகவும், சில நேரங்களில் அறிவற்றதாகவும் இருக்க காண்கிறோம். இதற்கு தங்களது நிலை MOOD சரியில்லை என்று கூறுவதையும் கேட்டிருக்கிறோம்.

உலகியல் வாழ்வில். ஒருவனுக்கு பல பிரச்னைகள் தோன்றும்பொழுது, சிலர் அவைகளை அறிவாற்றலுடன்

சமாளிப்பதையும் காண்கிறோம். மாறாக முடங்கி போய் விடுபவர்களையும் காண்கிறோம். இவர்களை முறையே அறிவாளிகள் என்னும் அறிவற்றவர்கள் என்றும் கூறப்படுவதையும் கேட்டிருக்கிறோம். சேதனனோ அறிவுமயமானவன், தர்ம பூதஞானத்தை குணமாகக் கொண்டவன். அப்படியிருக்க அறிவுள்ளவன் என்றோ அறிவற்றவன் என்றோ எப்படி கூறப்படுகிறது. சேதனர்களது வினைப்பயன்கள் காரணமாக தர்மபூதஞானம், மலர்தலையும், சுறுங்குதலையும் இயல்பாகக் கொண்டதால், அத்தன்மைகளுக்கேற்றவாறு அறிவு பெற்றவன் என்றோ, அறிவு இழந்தவன் என்றோ சொல் வழக்கில் கூறுகிறோம்.

நல்வினை - தீவினை ஆகிய இருவினைகளும் நீங்கிய நிலையில் தான், முக்திக்கு வழிபிறக்கும். அந்நிலையில் தர்மபூதஞானம் மலர்ந்து இருக்கும் தன்மையை அடையும். நிலத்தினுள் தண்ணீர் உள்ளது. மண், கல் - பாறை முதலியவைகளால் மூடப்பட்டு இருப்பதால், தண்ணீர் கண்களுக்கு புலப்படுவதில்லை. மூடியிருப்பவைகளை அகற்றி, ஆழமாக - கிணறு போன்ற ஒரு அமைப்பை உண்டாக்கினால் தண்ணீர் வெளிப்படும். இதைப்போலவே, தீவினைப் பயன்காளல் மறைக்கப்பட்டிருக்கும் போது, தர்மபூதஞானம், சுறுங்கிய நிலையில் இருக்கும்.

தர்மபூத ஞானம் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் உண்டு. ஒரு ஆன்மாவின் ஞானத்தைக் காட்டிலும், மற்றொரு ஆன்மாவின் ஞானம் வேறுபட்டது. இது மிக நுண்ணியமானது. மிக மென்மையானது. மிக வேகமாக பரவும் தன்மை கொண்டது. எப்பொழுதும் தன்னைக் காட்டிக் கொண்டேயிருக்கும் தன்மை கொண்டது. செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சும் பூவாளியின் அநேக துளைகளின் வழியாக தண்ணீர் பாய்வதைப் போல, ஐந்து இந்திரியங்கள் வரியாக, தர்மபூத ஞானம் வெளிப்பட்டு பரவி, பொருள்களை தொட்டு, அதைப்பற்றிய அறிவை ஆன்மாவுக்கு உணர்த்தும் இயல்பு கொண்டது. ஜீவனுக்கு வினைப்பயன்களின் செயல்களால் அது சுருக்கத்தை அடைகிறது. சுருக்கத்தின் வேறுபாடுகள் அவனவன் கர்மத்திற்கேற்ப அமையும். மிக சுறுங்கிய நிலையில், வெளியே பரவுதல் குறைந்து, அறிவு மந்த நிலையில் செயல்படும். எப்படி ஒரு பாம்பு தன்னிச்சைபடி ஒருகால் நீண்டும், ஒருகால் சுருங்கியும் இருக்குமோ அப்படியே தர்மபூத ஞானமும் வினைப்பயன் நிலைகளுக்கேற்ப சுருங்கியும், விரிந்தும் செயல்படும்.

ஒரு பொருளின் விசேஷ்யம் அதாவது குணம் தான் இருக்கும் வரை அந்த பொருளினின்று பிரியாது. சுவையுள்ள பழம் என்பதில் சுவை என்ற குணம், பொருளான பழத்தைவிட்டுப் பிரியாது. இதில் குணம் வேறு பொருள் வேறு. ஆனால் தர்மபூத ஞானமோ பொருளாகவும், குணமாகவும் இருக்கும் தன்மை கொண்டது. எது ஒன்றை சார்ந்திருப்பதையே இயல்பாகக் கொண்டுள்ளதோ, அது அதற்கு குணம். இது குணத்தின் இலக்கணம். தர்மபூத ஞானம் ஆன்மாவை தன் இருப்பிடமாக கொண்டிருப்பதால். இது ஆன்மாவுக்கு குணமாகிறது. அது விரிதல், சுருங்குதல் என்ற தன்மைகளை கொண்டதால், அது பொருளாகிறது என்றும் சொல்லாம்.

குணம் என்ற தர்மம், அது சார்ந்திருந்த பொருளைவிட்டுப் பிரியாத்து. ஆனால் தர்மபூதஞானம், மலர்தல் என்ற நிலையில் ஆன்மாவினின்று பிரிந்து பரவுகிறதே என்ற ஐயம் தோன்றக்கூடும். சூரியனது குணமான ஒளி (பிரபை) சூரியனுக்குள்ளேயே இராமல், வெளியேறி பரவுகிறதல்லவா? தீபத்தின் ஒளியும் பரவுகிறது. என்பதை நாம் பார்க்கிறோம். ஆக ஒளியைப் போல (பிரபையைப் போல்) தர்மபூத ஞானம் தனது இருப்பிடத்தைவிட்டு வெளியே செல்லும். இதை அனுமானத்தினாலும் உணரலாம். **"குணமாயிருக்கும் தர்ம பூத ஞானம், நாற்புறங்களிலும் ஒளியைப் போல பரவும் தன்மையினால் பொருளாகவும்" ஆகும்.**

ஒரு தீபம் எப்பொழுதும் தன்னைக்காட்டும். பிற பொருள்களையும் காட்டும். ஆனால் தர்மபூத ஞானம், தான் பற்றியிருக்கும் ஆன்மாவுக்கு மட்டும், விஷயங்களை உணர்த்தும் போது பிரகாசிக்கும். மற்றவர்களுக்கு இது பிரகாசிக்காது.

அறிவு நித்தியமானது, அழிவற்றது என்று கூறப்பட்டது. ஆனால் ஒருவன் மூர்ச்சை அடைந்தான் என்று சொல்லும் போது, அவனது அறிவு தற்காலிகமாக அழிந்தது என்றுதானே பொருள்படும். அப்படியிருக்க அது எங்ஙனம் நித்தியம் எனப்படும் என்ற ஐயப்பாடு தோன்றுவதியல்பு. மூர்ச்சித்து கிடப்பவனுக்கு, ஒரு வலுவான தமோ குணத்தின் செயலால். அறிவு மறைக்கப்பட்டது என்ற கருத்தில்தான் அவ்வாறே கூறப்படுவது! தமோகுணம், மனிதர்களுக்கு மந்த நிலையை கொடுக்கும் தன்மை கொண்டது. மது முதலான பானங்கள் தமோ குணத்தை வலுப்படுத்த கூடியவைகள். அந்நிலையில் மனிதன் அறிவு

இழந்தவனாகவே இருப்பதை நாம் அறிந்துள்ளோம்! இதைத் தான் அறிவு இழந்த நிலை என்று கூறுகிறோம். ஆனால் அறிவு அழிவது இல்லை என்பதை, ஒருவன் தூங்கி எழுந்தவுடன் நன்றாக தூங்கினேன் என்று சொல்வதிலிருந்து உணரமுடியும். ஆக அறிவு நித்யம், அழிவற்றது.

சுருதிவாக்கியங்கள், தர்மபூத ஞானத்தை பல பெயர்களால் குறிப்பிடுகின்றது. அவைகள் **தீஷணா, மதி, ஞானம், பிரஞ்ஞானம், மநீஷா, சேமுஷி, மேதா, புத்தி, தி** (DHI) சம்வித்து என்பனவாம்.

தர்மபூத ஞானம் "**உதாதி**" பேதத்தால் (LIMITED ADJUNCT) இன்பம், துன்பம், முயற்சி, விருப்பு, வெறுப்பு என்று பல நிலைகளை அடையும் தன்மை கொண்டது.

சாதகமான சூழ்நிலையில் இன்பத்தையும், பாதகமான சூழ்நிலையில். துன்பத்தையும் ஒருவன் அடைவது, தர்மபூத ஞானத்தின் வேறுபாட்டால் தான். ஆக, ஒருவன் இன்பமோ. துன்பமோ அடைவது அறிவிலிருந்து வேறுபட்டவைகளல்ல என்பதை உணரலாம். ஆனால் ஒரு மனிதனில் இன்பத்திற்கோ துன்பத்திற்கோ தர்மபூத ஞானம் காரணமாகாது! எப்படியெனில் ஒருவன் ஒரு பொருளை அடைய விரும்புகிறான். இந்த விருப்பத்திற்கு காரணம் தர்மபூத ஞானம் இருப்பினும் அப்பொருளை அடையப் பெற்றதின் விளைவு இன்பமாகவோ துன்பமாகவோ இருக்கக்கூடும். ஆக ஒரு மனிதனின் இன்ப, துன்ப உணர்வுகளை தூண்டும் சக்தியாக தர்மபூத ஞானம் செயல்படுகிறதேயன்றி, அவைகளுக்கு காரணமாவதில்லை.

விருப்பம் சங்கல்பம் (RESOLVE) **ஐயம், நம்பிக்கை, நம்பிக்கையின்மை, உறுதி, விகாரம், வெட்கம், தைரியமின்மை, புத்தி** ஆகிய அனைத்துமே மனம் என்று கூறுகறது **பிருஹதாரண்யக உபநிஷத்**. இந்நிலைகளில் மனமே புத்தியாக செயல்படுவதால், அது தர்மபூத ஞானத்தைக் குறிப்பிடுவதாக கொள்ளலாம். மேலும், அறிவுக்கு மனம் எப்பொழுதும் துணையிருந்து அதற்கு உதவி செய்கிறபடியால், எல்லாம் மனந்தான் என்று கூறுவது உபசார வழக்கு. ஆகையால் சேதனனின் கணக்கில்லாத குணங்களும், தர்மபூத ானத்தின் வேவ்வேறு நிலைகள் என்பது அறியப்படுகிறது.

மூன்றுவ்கை பிரமாணங்களான, காணுதல் - கருதுதல்

வாய்மொழி என்ற சப்தம், ஆகியவைகளால் உண்டாகும் தர்மபூத ஞானத்தின் நிலைகள், நினைவுகூர்தல் - ஐயம் - மருள் என்ற பிரமிப்பு - தவறு (ERROR) உறுதி - அசட்டுத்தனம் (INFATUATION) மோகம் - பந்தம் - வெறுப்பு - மதிமயக்கம் (INBRIETY) பொறாமை தைரியம் - கோபம் - கர்வம் - வஞ்சகம் - தடுமாற்றம் (FICKLENESS) பொறை - மகிழ்ச்சி - நட்பு - கவனக்குறைவு - ஆவேசம் படபடப்பு - நல்ல உள்ளம் - தீய உள்ளம் - பண்பாடு - பண்பாடு இல்லாமை - முரட்டுத்தனம் என்று இருபத்தியேழு வகைகளாகும்.

இப்படியே பகவானுக்கு ஜ்ஞானம் - சக்தி - பலம் - ஐச்வர்யம் வீர்யம் - தேஜஸ் ஆகிய ஆறு குணங்களும் முதன்மையான குணங்களாகும். இவை தவிர, சௌசீல்யம் - வாத்ஸல்யம் மார்த்வம் - ஆர்ஜ்ஜவம் - சௌகார்த்தம் - சாம்யம் காருண்யம் - மாதுர்யம் - காம்பீர்யம் - ஔதார்யம் சாதுர்யம் - ஸ்தைர்யம் - தைர்யம் - சௌர்யம் - பராக்ரம் ஆகிய பதினைந்து குணங்களும் மற்ற வேறு குணங்களும் எம்பெருமானுக்குண்டு.

இவைகளின் விளக்கம்.

ஜ்ஞானம்:	எக்காலத்திலும், எந்நிலையிலும் எல்லாவற்றையும் அறியும் தன்மை.
சக்தி:	வேறொருவராலும் செய்யமுடியாதவைகளை செய்யும் திறமை. (இயற்கையிலேயே பகை கொண்டவைகளான கருடனையும் பாம்பையும் சேர்த்து வைக்கும் ஆற்றல்)
பலம் (STRENGTH):	அனைத்தையுமே தாங்கும் ஆற்றல்.
ஆசுவர்யம் (SPLENDOUR):	நியமனம் செய்யும் சாமர்த்தியம் (ஆளும் திறமை).
வீர்யம் (PROWESS):	சற்றும் சோர்வடையாத நிலை.
தேஜஸ் (LUSTRE):	மற்றவர்களை வெற்றி கொள்ளும்படி செய்யும் திறமை.
சௌசீல்யம் (EXCELLENCE OF DISPOSITION):	தாழ்ந்தவருடன், உயர்ந்தவன் நெருங்கிப் பழகும் தன்மை. (உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற பாகுபாடற்ற நிலை).

வாத்சல்யம் (LOVE): ஒருவனது குற்றத்தை நிராகரிக்கக் கூடிய ஸ்நேக விசேஷம்.

மார்த்தவம் (SOFTNESS): அடியார்களின் பிரிவை பொறுக்க முடியாமை.

ஆர்ஜ்ஜலம் (STRAIGHT FORWARDNESS): எண்ணம் - சொல் - செயல் இவை ஒன்றுபட்டிருக்கை.

சௌகார்த்தம் (EQUALITY): தன் இருப்பையும் பொருட்படுத் தாமல் அடியார்களைக் காப்பதில் ஈடுபாடு கொள்ளல்.

சாம்யம் (EQUALITY): ஒருவர் உயர் குலத்தில் பிறந்தவன், நல்ல செயல்கள் கொண்டவன், நல்ல குணமுள்ளவன் என்பவை களைப் பாராமல் அனைவராலும் விரும்பத்தக்கவராக இருத்தல்.

காருண்யம் (COMPASSION): பிறர் துன்பம் பொறுக்காதிருத்தல், பலன் கருதாமல் மற்றவர்களின் துன்பம் துடைத்தல், பிறர் துன்புறும் போது தானும் துயர டைதல் முதலியன.

மாதுர்யம் (SWEETNESS): மற்றவர்களுக்கு உபகாரம் செய்யும் போது பாலைப்போல இனிமை யாக இருப்பது. பால் மருந்துமாகும். பருகும் பானமும் ஆகும். தன்னை கொல்ல வருபவனிடத்தும் இனிமை யாக பழகும் தன்மை.

காம்பீர்யம் (PROFONDITY): அடியார்களை ஆதரித்து அருள் பாலிப்பதையும், அவர்கள் வேண்டு வதைக் கொடுப்பதையும் இவ்வளவு என்று அடியோடு அளவிட முடியாமலிருப்பது.

ஔதார்யம் (GENEROSITY): அடியார்களுக்கு அளவிட முடியாத

படி வழங்கியும் திருப்தி அடை யாமை. இன்னும் என்ன வழங்க லாம் என்று அக்ஷய பாத்திரம் போன்று இருக்கும் தன்மை.

சாதுர்யம் (CLEVERNESS): அடியார்களின் குற்றங்களை மறந்து விடுதல். பகைவர்களையும் நண்பர் களாக்கிக் கொள்ளும் ஆற்றல்.

ச்தைர்யம் (STEADINESS): எளியோர்களையும், அடியார் களையும், காப்பதில் அசைக்க முடியாத உறுதி. அவர்களை என்றென்றும் கைவிடாதிருப்பது.

தைர்யம் (FIRMNESS): செய்த பிரதிஞ்ஞைக்கு ஒருவரும் இடையூறு செய்ய முடியாமை.

சௌர்யம் (HEROISM): பயமில்லாமல், எதிரிகளின் படை களுக்குள் போகும் சாமாத்தியம். மற்றவர்களின் உதவியின்றி செயல் படும் அசகாய சூரத்தனம்.

பராக்ரமம் (VALOUR): பகைவர்களை, அவர்கள் புகுந்த இடத்திலும், போர்களத்திலும் முற்றிலும் அழிப்பது.

பக்தியும், பிரபத்தி என்ற சரணாகதியும் தர்மபூத ஞானத்தின் நிலைகள். பக்தியினாலோ அல்லது சரணாகதியினாலோ எம்பெருமானே முக்தியை வழங்குவதால், இவைகள் முக்திக்கு சாதனங்கள். இவைகளைப் பற்றிய விரிவான விளக்கங்களை முக்தி பெறும் வழிகள் என்ற ஏழாம் அத்தியாயத்தில் காணலாம்.

பக்தி - பிரபத்தி ஆகிய இரண்டும் இறைவனுக்கு உகப்பு அளிப்பவைகள் என்பதில் சந்தேகமில்லை என்றாலும், பக்தியைக் காட்டிலும் பிரபத்தி என்ற சரணாகதியே ஏற்றமுடையது என்பதை அறிந்து கொள்ள முடியும். இதன் காரணமாகவே ஆச்சார்யார்களும் ஆழ்வார்களும் பிரபத்தியே சிறந்தது என்று கூறியுள்ளார்கள்.

18. ஜீவன்

சேதனம் என்ற தத்துவமே ஜீவன் என வழங்கப்படுகிறது. உருவத்தில் இது மிக மிகச் சிறிது. இதற்கு அறிவு முதலான குணங்களும் பத்த திசையில் மிகக் குறைவு. இது அறிவுவடிவமாக (ஞானமயமாக) இருப்பதால் சுயம் பிரகாசமானது. தன்னை அறிவதற்கு சாதனமாக வேறொரு அறிவை (ஞானம்) எதிர்பாராது **"நான் - நான்"** (அகம் - அகம்) என்று தானே பிரகாசித்துக் கொண்டிருப்பது. அறிவு மயமாக இருந்து, தானே பிரகாசிப்பதுடன், அறிவையும் இது குணமாகப் பெற்றிருப்பதால் **"சேதனன்"** என்று வழங்கப்படுகிறது.

ஜீவன், இயல்பாகவே, அணுவளவாயிருத்தல், அடிமையாக இருத்தல், அறிவு பெற்றிருத்தல், பகவானால் தாங்கப்படுபவனாக இருத்தல், இறைவனால் நியமிக்கப்படுபவனாக இருத்தல், கர்த்தாவாக இருத்தல் ஆகிய சிறப்புகள் கொண்டவன்.

ஜீவன் எந்த இடத்திலும் தங்குதடையின்றி புகும்படியாக அணுவளவே இருப்பதால், எள்ளுக்குள் எண்ணையைப் போலவும், அரணிக்கட்டைக்குள் தீயைப் போலவும் கண்களுக்கு புலப்படாமலும், வளர்ச்சி - குறைதல் ஆகிய மாறுதல்கள் இல்லாமலும் இருப்பவன்.

ஜீவனை கண்ணால் காண முடியாததாலும் கைளுக்கோ அல்லது எந்தக் கருவிகளுக்குமோ அகப்படாததாலும், அவன் அழிவற்றவன், நித்யமானவன் என்று சுருதி வாக்குகள் கூறுகின்றன.

நாத்திகர்களும் மற்றும் சிலரும் ஜீவனைப் பற்றிய இக்கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில்லை.

ஜீவன் என்றும் உள்ளது. அழியாதது, பிறப்பு, இறப்பு அற்றது. இப்படி பகவானே பகவத்கீதையில் கூறியுள்ளார்.

"அவிநாசிது தத் வித்தியேன ஸ்ர்வமிதம் ததம்!
விநாசமவ்யயஸ்யாஸ்ய நகச்சித் கர்த்து மர்கூஷதி"!!

இதன் பொருள்:

"எல்லா அசேதனப் பொருள்களிலும் ஆன்மவஸ்து புகுந்து பரவியுள்ளதால், மிகமிக நுண்ணிய இதை, நாசம் செய்ய முடியாது.

மற்ற எல்லாப் பொருள்களும் ஆன்மாவைவிட ஸ்தூலமாக இருப்பதால், எந்த பொருளும், நாசத்தை உண்டு பண்ண சக்தியற்றது என்பதை தெரிந்து கொள்."

பொதுவாக, உலகில் ஒரு பொருளை அழிக்கும் கருவிகளான கத்தி, ஜலம், காற்று, தீ முதலானவைகள். அழிக்கப்படும் பொருள்களில் உட்புகுந்தே நாசத்தை விளைவிக்கும். ஒரு கடத்தை உலக்கையால் தாக்கும் போது, வேகம் காரணமாக காற்றை உண்டாக்கியே அழிக்கும். அணு அளவேயுள்ள ஆன்மாவினுள், இதர பொருள்கள் புக முடியாததால், அது அழிக்க முடியாதது.

ஜீவர்கள் கோடிக்கணக்கானவர்கள், ஒரு குவியலுள்ள நெல் பலவானாலும், நெல் என்றே கூறுவது போல ஆன்மாக்கள் பலவானாலும், அறிவு மயமாக இருப்பதால், ஒன்றாக சொல்லப்படுகிறதேயன்றி ஒன்று தான் என்ற பொருளில் அல்ல!

ஜீவன், உடல் இந்திரியங்கள் மனம், பிராணன், அறிவு ஆகிய இவைகளைக் காட்டிலும் வேறானவன். "என்னுடைய உடல் என்ற அறிவு உண்டாகிறபடியால், அவன் உடலைக்காட்டிலும் வேறுபட்டவன் என்று தெரிகிறது. அப்படியே இந்திரியங்களாலும் பார்க்கிறேன், பேசுகிறேன், செயல்படுகிறேன் என்ற அறிவு தோன்றுவதனாலே, அவன் இந்திரியங்களை காட்டிலும் வேறானவன். மனத்தால் (நான்) அறிகிறேன் என்று மனம் அறிவுக்கு கருவியாக தோன்றுவதால், "எனது பிராணன்" என்று வெற்வேறு வேற்றுமைகளால் பிரித்துச் சொல்லப்படுகிறபடியாலும், நான் அறிகிறேன், என்ற அறிவு உண்டாவதாலும், மனம், பிராணன், அறிவு, இவைகளைக் காட்டிலும் வேறுபட்டவன் ஜீவன் என்று ஏற்படுகிறது.

ஜீவன் விபுவானவனா அல்லது அணுவளவினனா என்று ஆராயப்புகின் அவன் அணுவளவு தான் என்று வேதம் கூறுகிறது. ஜீவன் ஒரு உடலிலிருந்து வெளியேறுகிறான், வேறு உலகத்திற்கு போகிறான், அங்கிருந்து திரும்பி வருகிறான் என்று சாஸ்திரம் கூறுவதால் அவன் விபுவாக இருக்க முடியாது. விபுவான பதார்த்தத்திற்கு செயல் இருக்க நியாயமில்லை. அவன் விபுவுமில்லை நடுத்தரமானவனாகவும் இருக்க முடியாது. உடலைக் காட்டிலும் குறைந்த அளவுள்ளவனாக இருப்பின், அவன் உடல் முழுவதும் நிறைந்திருக்க முடியாது. உடலின் அளவுக்கு

தகுந்தாற்போல் வேறுபடின், ஜீவனுக்கு அழிவு உண்டாக வாய்ப்பு உண்டு. அதனால் அது அணுவளவுதான், அதாவது ஒரு தலைமுடியின் நுனியை நூறு பாகமாக செய்து, அதில் ஒன்றை நூறு பாகமாக செய்தால் அது ஜீவனின் அளவாகும்.

ஆனந்தத்தையே இயல்பாகக் கொண்டவர்கள் ஜீவர்கள். கர்மத்தினால் சம்சார பந்தம் உண்டாகிறது. இவன் "கர்த்தா" (ஒரு செயலை செய்பவன்) இவன் "போக்தா" (போகத்தை அனுபவிப்பவன்) அவன் உடலை உள்ளவனாகவும், உடலாகவும் இருக்கின்றான். தன்னைக் குறித்து அவன் உடலை உடையவன். ஈசுவரனைக் குறித்து. அவன் உடலாகின்றான். பிரத்யக்ஷ பிரமானத்தாலும், சப்தப்பிரமாணத்தாலும் ஜீவன் சுயம்பிரகாசன் என்று காட்டப்படுகிறது.

ஜீவர்கள் மூவகைப்படுவர். சம்சாரபந்தத்தில் கட்டுண்டு உழல்பவர்கள் "பத்த ஜீவர்கள்" எனவும், சம்பாரபந்தம் விடுபட்டு முக்தி நிலையை அடைந்தவர்கள் "முக்தஜீவர்கள்" எனவும், சம்சாரபந்தத்தின் வாசனையே சிறிதுமின்றி, எந்நாளும் எம்பெருமானையே அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் "நித்ய ஜீவர்கள்" எனவும் மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளார்கள்.

பத்த ஜீவர்கள், முன் செய்த வினைப்பயன்களால், வலுவான பாசத்தால் கட்டுண்டவர்கள். அவர்களின் வினைகளுக்கேற்ப, சுகதுக்கங்களை, அனுபவித்துக் கொண்டு, சம்சாரபந்தத்தில் உழன்று கொண்டிருப்பவர்கள் இப்பிறவியிலும் பாபங்கள் செய்து அடுத்த பிறவிக்கு வழி தேடிக் கொள்பவர்கள். மேலும் பிரகிருதியின் தொடர்பு காரணமாக, அறிவும் ஒழுக்கமும் கெட்டு, உடலே ஆன்மா என்று மயங்கி, அதை பாதுகாக்கக் கண்ட ஆகாரங்களைப் புசித்தும் தனது இயல்பான ஆனந்த நிலையை, அடைய வழி தெரியாது தடுமாறுபவர்களாக இருப்பவர்கள். இதன் காரணமாக அகங்காரமும், மமகாரமும் ஓங்கி, என்றும் கவலையுற்று, பிறவிக் கடலினுள் துன்புற்று உழல்பவர்கள். இது பக்த ஜீவர்களின் நிலை. இந்த நிலை எந்தக் காலம் முதல் வந்தது என்று கூற இயலாது.

இப்படியிருக்கிற பத்த ஜீவர்கள் அவித்யை கர்மம், வாசனை, பிரகிருதி தொடர்பு கொண்டவர்கள். பீஜாங்குர நியாயப்படி, இவைகள் வண்டி சக்கரம் போல் சுற்றிச்சுற்றி, ஆறு போல

பலவிதத்தில் பெருகிக் கொண்டே இருக்கின்றன. எப்பொழுது இது ஆரம்பித்தது என்று சொல்ல இயலாது.

ஒரு விதையிலிருந்து ஒரு முளை உண்டாகிறது. அது மரமாய் வளர்ந்து விதையை உண்டு பண்ணுகிறது. அதிலிருந்து வேறு முளை உண்டாகிறது. அதிலிருந்து மறுபடியும் ஒரு விதை, மறுபடியும் முளை, என்று சுற்றுச்சுற்றி வருவது பீஜாங்குர நியாயம் என்று சொல்லப்படுகிறது. அது போல ஒரு உடல், அதில் கர்மம செய்யப்படுகிறது. மறுபடியும் அதிலிருந்து உடல் என்று இப்படிப் பெறுகிறது. விதைகளும் வெவ்வேறு, முளைகளும் வெவ்வேறு. அதுபோல உடல்களும் வெவ்வேறு. கர்மங்களும் வெவ்வேறு. விதையும் முளையும் போல இவை ஒன்றுக்கொன்று காரணமாகின்றன. அனாதி காலமாக வந்து கொண்டிருக்கும் இந்த நிலைக்கு முடிவு உண்டு. முக்தி அடைய பிரயத்தனப்பட்டு, அதை அடையும் போது, அனைத்து கர்மவினைகளும் ஒழிக்கப்பட்டு விடுகின்றன என்ற நிலையில் இதற்கு ஆதி இல்லை, அந்தம் உண்டு.

ஆன்மாவிற்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை என்ற நிலையில், பத்த ஜீவர்களுக்கு பிறப்பும் - இறப்பும் மாறி மாறி வருகின்றனவே? இது ஒரு முரண்பாடல்லவா? என்ற ஐயம் தோன்றுவதியல்பு. இதில் முரண்பாடு ஏதுமில்லை. எப்படியெனில். ஒரு ஜீவன் பிறப்பதோ இறப்பதோ இல்லை. வினைப் பயன்களுக்கேற்ப ஒரு ஆன்மா உடலில் புகும்போது பிறப்பது என்றும், உடலைவிட்டுப் பிரியும் போது இறப்பது என்றும் கூறுவது உடலின் உத்பத்தியையும், அழிவையும் கூறுகிறோமேயன்றி, ஆன்மாவைப் பற்றி கூறப்படுவதல்ல.

ஜீவன், இறைவன் இருவருமே, அறிவு மயமாக உள்ளவர்கள். அறிவையும் தர்மமாக கொண்டவர்கள் என்று கூறப்பட்டது. ஜீவன் தனக்குத்தானே ஒளிர்பவன், இதய கமலத்தினுள் ஒளிமயமாக இருப்பவன் என்பது சுருதிவாக்கு. மேலும், இவனே காண்பவன், கேட்பவன், சுவைப்பவன், மோப்பவன், நினைப்பவன், அறிபவன், செய்பவன் என்ற நிலைகளில் அறிவு மயமான புருஷனாக இருப்பவன் என்பதும் சுருதிவாக்கு. இப்படி நித்யமாயும், அணுவாயும் உள்ள ஜீவன் தன்னை அறியும் போது தனது அறிவுக்கு விஷயமாகின்றான், மற்றவர்களின் அறிவாலும் அறியப்படுகிறான்.

பத்த ஜீவர்கள் இந்த நிலையினின்று விடுதலைப்பெற,

பக்திமாக்கத்தையோ அல்லது பிரபத்தி என்ற சரணாகதியையோ செய்து, எம்பெருமானின் அருளைப் பெற்று, முக்தி நிலைக்கு வழி வகுத்துக் கொண்டால் இயல்பாக உள்ள தனது ஆநந்த நிலையை அனுபவிக்கக்கூடும்.

(பக்தி-பிரபத்தி ஆகியவைகளைப் பற்றிய விளக்கங்களை ஏழம் அத்தியாயத்தில் காண்க)

"**கடோபநிஷத்**" கூறும் ஒரு மந்திரத்தை, இங்கே நினைவு கூர்வது. சாலப் பொருத்தமாக இருக்கும்.

> **"நித்யோ நித்யானாம் சேதன: சேதனானாம்**
> **ஏஹோபஹூனாம் யோவிததாதி காமந்**
> **தம் ஆத்மஸ்தம் யேநு பச்யந்தீ**
> **தீராஸ் தேஹாம் சாந்தி: சாச்வதி நேதராகூஷாம்"**

இதன் பொருள்: "இயல்பிலேயே அழிவு இல்லாததாகவும், அறிவு உள்ளதாகவும், நித்யமாயும், அநேகர்களாகவும் உள்ள ஜீவாத்மாக்கள், பத்த நிலையில் இருக்கும்போது, பகவான் இஷ்டங்களை அளித்து காப்பாற்றுகிறான். அப்படி காப்பவனை, ஜீவாத்மாவினுள் இருப்பவனாக எவர்கள் அறிகின்றார்களோ, அவர்களுக்கே நிலையான சாந்தி உண்டாகிறது.

ஆக இவ்வளவு சிறப்புகள் கொண்டவன் ஜீவன்!

> அறிவு என்பது ஞானம்,
> அறிபவன் என்பது ஞாதா,
> அறியப்படுவது என்பது ஞேயம்

என்று மூன்று நிலைகள் உண்டு ஆன்மாவிற்கு.

இந்த மூன்றில், ஜீவனின் தர்மமான அறிவு, அறிவதாகவும் அறிவாகவும் உள்ளது. காலம் - பிரகிருதி இரண்டும் அறியப் படுபவைகள்.

ஆக மூன்று வகை ஜீவர்களுள் பத்த ஜீவர்கள் தொடர்ந்து வரும் முடிவற்ற சம்சாரத்தில் கட்டுண்டு துன்பப்படுபவர்கள் என்பதை அறிந்தோம். பதினான்கு உலகங்களை கொண்ட அண்டத்திலுள்ள, பிரும்மா முதல் புழு, பூச்சி வரை அனைவரும் பத்த ஜீவர்களே!

தேவர்கள், மனிதர்கள், திரியக்குகள் (விலங்கினம்), தாவரங்கள் என்று நான்கு வகைகளாக பத்த ஜீவர்கள் பிரிக்கப்பட்டுள்ளார்கள். தேவர்களுள் சித்தர், கந்தர்வர், கின்னரர், கிம்புருடர், வித்யாதரர்,

வசுக்கள், ருத்திரர், ஆதித்தர், அசுவணி தேவர், யக்ஷர் என பல உட்பிரிவுகள் உண்டு.

மனிதர்களுள் அந்தனர், க்ஷத்திரியர், வைசியர், வேளாளர் என நான்கு உட்பிரிவுகள் உண்டு.

திரியக்குகளில் நிலவாழ்வன, நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன என நான்கு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

தாவரங்களிலும் மரம், செடி, கொடி, புதர் என்று நான்காகக் பிரிந்துள்ளன.

பத்த ஜீவர்களின் பிறப்பு கர்ப்பம் (யோனிஜம்), முட்டை (அண்டஜம்), முளை (உத்பிஜம்), வியர்வை (சுவேதஜம்) என்று நான்க ாக பிரிந்துள்ளது. கர்ப்பத்தினின்று பிறக்கும் பிறப்புகள் யோனிஜ ம் எனப்படும். அயோனிஜம் என்று கூறப்படுவது கர்ப்பவாசனை யற்றது என்று பொருள். (இப்படிப் பிறந்தவர்களைப் பற்றிய விவரங்கள், பதிநான்காவது அத்தியாயத்தில் காணலாம்).

பத்தஜீவர்கள் கர்ப்பவாசம், பிறப்பு, வாலிபம், யௌவனம், முதுமை, மரணம்,சுவர்க்கம், நரகம் என்று பல நிலைகளை அடைகிறார்கள். மேலு ம் விழிப்பு, கனவு, தூக்கம் ஆகிய மூன்று நிலைகளுமுண்டு. பத்த ஜீவர்களுக்கு மூன்று வகையான துன்பங்கள் (தாபங்கள்) உண் டு. அவைகள் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்பனவாம்.

உடலைப் பற்றிய வியாதிகளும், மனத்தைப் பற்றிய காமம், கோபம், பயம் முதலானவைகளும் ஆத்யாத்மிகமாகும்.

மிருகம், பறவை, மனித இனம் முதலிய பூதாதிகளால் வரும் தாபங்கள் ஆதிபௌதிகம் எனப்படும்.

குளிர், சூடு, காற்று, மழை முதலிய காரணங்களால் வருபவைகள் ஆதிதைவிகம் என்ற பிரிவைச் சார்ந்தது.

இந்த மூன்று துன்பங்களையும் தாபத்ரயம் என்று கூறுவது வழக்கம்.

சாஸ்திரங்களுக்குட்பட்டு நடப்பவர்கள் தேவர்களும் மனிதர்களும் ஆவார்கள். திரியக்குகள் சாஸ்திரத்திற்கு உட்படாதவைகள்.

சாஸ்திரங்களுக்கு உட்பட்டவர்கள், போகத்தை விரும்புபவர்கள் என்றும் மோக்ஷத்தை விரும்புபவர்கள் என்றும்

இருவகைப்படுவார்கள். போகத்தை விரும்புபவர்கள் தர்மம், அர்த்தம், காமம் ஆகிய புருஷார்த்தங்களுக்காக உபாயங்களை செய்கின்றவர்கள். (இந்த மூன்றும் "த்ரிவர்க்கம்" என்று சொல்லப்படும். அர்த்தம் என்பது செல்வம் முதலான விலையுள்ள பொருள்கள். காமம் என்பது இந்திரி யங்கள் தேடும் அனுகூல அனுபவங்கள்) இவர்களுக்குள்ளும் (தர்மத்தை தச் சேராத) அர்த்த காமத்தை விரும்புவர்களென்றும், தர்மத்தை த மட்டும் தேடுகிறவர்கள் என்றும் இருவகைப்படுவார்கள். தர்மம் என்றால் சாஸ்திரத்தால் அறிய வேண்டியதாயும், நலன்களுக்கு காரணமாயிருப்பவையான செயல்கள் உடலையே ஆன்மாவாக நினை த்து செயல்படுபவர்கள் **அர்த்த-காம விரும்பிகள்**. யாகம், தானம், தபஸ், தீர்த்தயாத்திரை முதலானவைகளை மேற்கொள்பவர்கள் **தர்ம விரும்பிகள்**. உடலை விட ஆன்மா வேறு என்று எண்ணுபவர்கள் இவர்கள். இவ்வுலகைக் காட்டிலும் வேறு உலகம் இருக்கிறது என்றும் எண்ணமுள்ளவர்கள் இவர்களுள் பகவானை ஆராதிக்கிறவர்கள், (பகவத் கீதையில் கூறியபடி) **ஆர்த்தன்** என்றும் **அர்த்தார்த்தி** என்றும் **ஞானத்தை** தேடுபவர்கள் என்றும் மூவகைப்பட்டவர்கள்.

ஆர்த்தன் என்பவன் இழந்து போன செல்வத்தை மீண்டும் பெற ஆசைப்படுபவன். அர்த்தார்த்தி என்பவன், புதிதாய் தனத்தைப் பெற ஆசைப்படுபவன். இந்த இருவகையினர்களும், செல்வத்தை விரும்புவார்கள் என்ற நிலையில் **ஐசுவர்யாத்திகள்** எனப்படுகிறார்கள்.

ஜ்ஞானத்தைத் தேடுபவர்கள் பிரகிருதியின் தொடர்பு விடுபட்டு போவதில் விருப்பமுள்ளவர்கள். இவர்களுள் ஒருவகை, **கைவல்யத்தை** விரும்பும் **ஜிஞ்ஞாசு** என்பவன். இரண்டாவது வகை பகவானுடைய அனுபவத்தையே விரும்புவனான **ஜ்ஞானி** எனப்படுபவன். அறிவு மயமான, தனது அனுபவத்தையே விரும்புகிறவனாக, ஜீவாத்மனுபலமான கைவல்யத்தை அடைய விரும்பி, பகவானை ஆராதித்து, அதைப் பெற்று, எங்கேனும் தேச விசேஷத்தில் அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலை கைவல்யமாகும்.

பகவத் அனுபவம் பெற பகவானையே உபாயமாகவும், பலனாகவும் ஆச்ரயித்து. பகவானையே அடயும் நிலையான முக்தியை விரும்புபவன் ஜ்ஞானியாவான்.

ஆக, ஒரு சேதனன் அடைகின்ற நிலைகளான ஐசுவர்யம், கைவல்யம், ஆகியவைகளைக் காட்டிலும், மிக உயர்ந்த நிலை முக்தியாகும்.

முக்தியைப் பெறவேண்டும் என்ற அவாவினால், நான்காவது அதிகாரிகளான சேதனர்கள் நித்திய, நைமித்திக கர்மங்களையும், பகவானுக்குரிய இதர கைங்கர்யங்களையும் உகப்போடு செய்வார்கள். ஆச்சார்யார் உபதேசத்தால் விவேஹம் பெற்று மோக்ஷத்தைப் பற்றிய சாஸ்திரங்களில் விதித்த உபாயங்களான பக்தி-பிரபத்தி என்ற சரணாகதி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை கடைபிடிப்பார்கள். பிறகு, இவர்கள் ஆச்சார்ய அனுக்கிரகத்தை முன்னிட்டு, பலனை எதிர்பாராமல் கைங்கர்யம் செய்வார்கள். இதனால் இவர்களிடம் எம்பெருமான் கொண்டிருந்த சீற்றம் நீங்கி, பிரியம் உண்டாகும். இவர்கள் விரும்பியபடியே, இவர்களுக்கு முக்தி அளிக்க இறைவன் சங்கல்பித்து விடுவான். முற்பிறவியில் செய்த வினைப்பயன்களால் இறைவன் அருள்பெற்று, பகவத் கைங்கர்யத்தில் ஈடுபடுவோரும் உண்டு.

கர்ப்பவாசத்திலேயே, பிரஹலாதனைப் போல தெய்வ அருள்பெற்று, பகவத் கைங்கர்யத்தில் ஈடுபடுவோரும் உண்டு.

எம்பெருமானுக்கு அடியனான ஜீவன், தன்னை சுதந்திரனாக நினைத்து செயல்படுவது அகங்காரமாகும். மற்ற பொருள்களை தனது என்று எண்ணுவது மகாரமாகும். இவை இரண்டுமே ஜீவர்களுக்கு படுகுழிகள், பகவான் ஆச்சார்ய உருவில், இவர்களது அறிவை வளர்த்து கை கொடுப்பான். இவர்கள் முழுமையான அறிவை அடையப் பெற்றதும் இப்படுகுழியிலிருந்து வெளியேறி விடுவார்கள்.

இவர்கள் உடலை துறக்கும் போது இவர்கள் செய்த இருவினைகளும் நீங்கிவிடும்.

இவர்கள் செய்த நல்வினை பயன்கள், இவர்களது நண்பர்களையும், இவர்கள் செய்த தீவினைப் பயன்கள், இவர்களைப் பகைப்பவர்களிடமும் போய் சேர்ந்து விடும் என்று கூறுகிறது கௌசிக உபநிஷத்.

சேதனர்களின் உடலைவிட்டு ஆன்மா வெளியேறுவதற்கு, ஒரு காரணத்தை இறைவன் தானே உண்டாக்குகிறான். பின் பத்து இந்திரியங்களையும் மனத்தில் கொண்டு சேர்க்கிறான். பின் அந்த

மனத்தை பிராண வாயுவோடு இணைக்கின்றான். பிறகு, அந்த பிராண வாயுவை ஜீவாத்மாவோடுப் பிணைத்து, அதை உடலினின்று கடைந்தெடுத்து ஐந்து பூத சூக்ஷ்மங்களோடு ஒன்றாக இணைக்கின்றான் (கடைந்தெடுத்தல் என்பது ஜீவனின் உடலில், முதுகின் மேற்புறத்தில், தூண் போன்று மூன்று எலும்புகள் ஒன்று கூடியிருக்கும். இதற்கு "த்ரிஸ் தூணம்" என்று பெயர். மரண காலத்தில் இறைவன், இதிலிருந்து ஐந்து பூதங்களின் சூக்ஷம அம்சத்தை எடுத்து அதோடு ஜீவனை சேர்ப்பதாகும். இது மிக வேதனை அளிப்பதாகும்)

இதுவே ஜீவன் உடலைவிட்டு பிரியும் வகை. இது எல்லா ஜீவன்களுக்கும் பொதுவானதாகும்.

புண்ணியம் செய்த ஜீவர்கள் சுவர்க்க லோகத்திற்கு போவார்கள். அங்கு புண்ணியத்தின் பலனை அனுபவித்து அது முடிந்தவுடன் திரும்பி சந்திரனிடமிருந்து, ஆகாசம், வாயு, மேகங்களுடன் வரிசையாக சேர்ந்து, மழையுடன் பூமியை அடைந்து, பின் பூமியிலுண்டாகும் தானியங்களுடன் கலந்து, பிறகு அவைகளை உண்கிற ஆண்களை அடைந்து வீர்யமாக மாறி பெண்களின் கர்ப்பங்களில் வந்து சேருகிறார்கள்.

இனி முத்த ஜீவர்களின் பயணத்தையும், நிலையையும் நோக்குவோம்.

பிறகு, முக்திக்கு தகுதி பெற்ற ஜீவர்களை சுவர்க்கம், நரகம் இவைகளுக்கு போகும் வழியில் கொண்டு சேர்க்கும், நாடிகளில் போகாதபடி விலக்கி, அர்ச்சிராதி மார்க்கத்திற்கு கொண்டு சேர்க்கும் 101வதான பிரும்ம நாடியிலே புகச்செய்து, சூரிய கிரணங்களைப் பிடித்துக் கொண்டு புறப்படச் செய்வான்.

பின், சூட்சம சரீரத்துடன் செல்லும் இந்த ஜீவனை அக்நி தேவதை பகலின் தேவதை - சுக்லபக்ஷ தேவதை - உத்தராயண தேவதை ஆண்டு தேவதை - வாயு தேவதை - சூரியன் - சந்திரன் - மின்னல் தேவதை - வருணன் - இந்திரன் - பிரஜாபதி, ஆகியவர்கள் எதிர் சென்று வரவேற்று, வழிநடத்தி அழைத்துப் போய் உபசரித்து தங்கள் எல்லை வரையில் கொண்டு போய் விடுவார்கள்.

அக்நி முதல் பிரஜாபதி வரையில் உள்ளவர்களே "**ஆதிவாஹிகர்**" எனப்படுவர். இவ்வாறு செல்லும் வழியே அர்ச்சிராதி மார்க்கம் எனப்படும். இதை உறுதிப்படுத்தும் பாசுரம்:

"நடைபெறவங்கிப் பகலொளிநாள் உத்தரயாணமாண்டு
இடைவரு காற்றிரவி இரவின்பதி மின் வருணன்
குடையுடைவானவர் கோன் பிரசாபதி என்றிவரால்
இடையிடை போகங்களெய்தி எழிற்பதம் ஏறுவரே"

இதற்குப் பிறகு அந்த ஜீவனை பிரகிருதி மண்டலத்தின் முடிவெல்லைக்கு கொண்டு சேர்த்து, இதுவரை பிரயாணத்திற்காக ஒட்டியிருந்த சூட்சம சரீரத்தை அங்கேயே விடச் செய்கிறான் எம்பெருமான். பின், விரஜா நதிக்கு அக்கரை சேர்க்கிறான். சேர்ந்த உடனேயே சுத்தசத்துவமயமான திவ்ய சரீரத்தைக் கொடுத்து "ஐரம்மதீயம்" என்ற திவ்விய தடாகத்திற்கு அழைத்துச் செல்கிறான். பிறகு "சோமசவனம்" என்ற அரசமரத்தின் அருகில் செல்லும் போது, ஐநூறு திவ்ய அப்ரஸ்ஸுக்கள் மாலை - மை - வாசனைப் பொடி - ஆடை - ஆபரணம் முதலியவைகளைக் கொண்டு ஜீவனை அலங்கரிப்பார்கள். இதனால் ஜீவன் திவ்யகந்தம், திவ்யரஸம், திவ்ய தேஜஸ் அடையப் பெறுவான்.

பின், நித்ய சூரிகள், இவனை எதிர் கொண்டழைத்துக் கோபுரத்தின் வாயிற் காப்பாளர்களாகிய இந்திரன், பிரஜாபதி ஆகியோரை அணுகி பிராகிருதமல்லாத (அப்பிராகிருதமான) ராஜோபசாரங்களைப் பெற்று திருமாமணி மண்டபத்தில் புகுவான். பின் எம்பெருமானுடைய திவ்ய ப்ரயங்கத்திலேறி, தன் இயற்கை உருவைப் பெறுவன். (ஸ்வரூபத்தை பெறுவான்) பின், எம்பெருமான் தன் திருவடிகளின் கீழ் சேர்த்து, நித்ய-முக்த ஜீவர்களோடு சேர்ப்பான். இதுவே முக்திநிலை அல்லது மோக்ஷம் எனப்படும்.

முக்தி பெறும் ஜீவர்களுக்கு, வைகுண்டத்தில் நடக்கும் உபசாரங்களை, நம்மாழ்வார் திருவாய்மொழியில் அருளிச் செய்த பாசுரங்கள் இங்கே கவனத்திற்குரியது!

"வைகுந்தம் புகுதலும் வாசலில்வானவர்
வைகுந்தன் தமர்எமர் எமதிடம் புகுதென்று
வைகுந்தத்து அமரரும் முடினவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே"

"விதிவகை புகுந்தனரென்று நல்வேதியர்
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்

நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும்
மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே"

"வந்தவர் எதிர் கொள்ள மாமணி மண்டபத்து
அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தன்மை
கொந்தலர் பொழில் குருகூர் சடகோபன் சொல்
சந்தங்களாயிரத்து இவை வல்லார் முனிவரே"

இவ்விதம் வைகுந்தம் அடைந்த முக்தன், எல்லாவகையிலும், ஒன்றும் குறைவின்றி பகவானை அனுபவித்துக் கொண்டிருப்பான். பகவத்ஸ்வரூபம் - ஸ்ரீவைகுண்டம் - முக்தி அடையும் ஜீவஸ்வரூபம் ஆகிய மூன்றும் பரமபதம் என்ற சொல்லாலே வழங்குவதுண்டு.

பத்த தசையில், கர்மத் தொடர்பால் சாதகமாயும், சாதகமில்லாததாயும் இருந்தவைகளனைத்தும், முக்தி நிலையில் பகவதனுபவம் பெற்ற பகவத்சங்கல்பத்தால் சாதகங்களாகவே தோன்றும். இவ்விதம் பரிபூர்ண பிரஹ்மானுபவம் பெற்ற முக்தன், ஒருகாலும் கர்மபூமிக்கு திரும்பி வருவதில்லை. ஒருகால் அவன் விருப்பத்தால் வந்த போதிலும், பரிபூர்ண மலர்ச்சியை அடைந்த அவனது தர்ம பூத ஞானம் சுறுங்குவதேயில்லை. பகவதனுபவமும் குறைவதில்லை. இவ்வனுபவத்தில், பகவான் - நித்யர் - முக்தர் ஆகியோர்களுக்குள் சிறிதும் வேறுபாடு இல்லை.

முக்தி பெறுபவன் எம்பெருமானுக்கே சமமாகின்றான் என்று உபநிஷத் கூறுவது ஜ்ஞானம் ஆனந்தம் முதலியவற்றில் பகவானோடு முக்தனுக்கு வரும் சாம்யத்தையே குறிப்பதாகும். உலகத்தைப் படைத்தல் முதலிய பல செயல்கள் எம்பெருமானுக்கே உரியவைகள்.

பகவானின் பரிபூர்ணநுபவத்தில் மூழ்கி திளைத்து இருக்கும் முக்தனின் அறிவு பரிபூர்ண மலர்ச்சியைப் பெற்றுவிட்டபடியால், பூமிக்கு திரும்பி வர பிரசித்தியே இல்லை. இருப்பினும் தனது விருப்பப்படி, பல திருமேனிகளை தரித்துக் கொண்டு அனைத்துலகெங்கிலும் சுற்றி வர முடியும். இது ஒரு பகவத் கைங்கர்யமே. இந்நிலையில் இறைவனுக்கும் முக்தனுக்கும் வேறுபாடு கிடையாது. பகவானின் தனி உரிமையான ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய செயல்களை செய்யும் ஆற்றல் முக்தர்களுக்கு கிடையாது.

பகவானின் உகப்பே, முக்தனுக்கு உகப்பாதலால்.

எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு மாறுபட்ட செயல்கள் ஏதுமில்லாததால் பரம புருஷானுபவம் நித்யமாகின்றது.

இறைவனின் பரிபூர்ண அருளைப் பெற்ற முக்தர்கள், இறைவனின் குணங்களையும், அழகையும் சதா அனுபவித்துக் கொண்டு கைங்கர்யம் செய்வதையே இலக்காகக் கொண்டு, ஆனந்தத்தில் திளைத்திருப்பார்கள். இதனால் இதுகாறும், மறைந்திருந்த எட்டு குணங்களான **பாபமின்மை, முதுமையின்மை, மரணமின்மை, துக்கமின்மை, பதியின்மை, தாகமின்மை, சத்யகாமத்வம், சத்ய சங்கல்பத்வம்** ஆகியவைகளினால். கர்மபரதந்தர்ய மில்லாதவனாக மலர்ந்து விளங்குவான்.

முக்தனின் அறிவு முழு மலர்ச்சி அடைந்து விட்டபடியால், சர்வேசுவரனுக்கு இவனிடம் உள்ள அன்பு எல்லையற்று வளர்ந்து விட்டபடியாலும் முக்தனை கர்ம பூமிக்கு அனுப்ப, எம்பெருமான் சங்கல்பிப்பதற்கும் வாய்ப்பே இல்லை. மேலும் முக்தி நிலையில் சாஸ்திரத்திற்கு வசப்பட வேண்டியதில்லையாதலால், இறைவன் (சாஸ்திரத்தில்) கட்டளையிட்வற்றைச் செய்யாத குற்றத்தால், பகவானுக்கு முக்தனிடத்தில் அதிருப்தி ஏற்பட இடமில்லை. ஆகையால் முக்தி நிலையில் பெற்ற பரமபுருஷானுபவம் ஆன்மா உள்ளவரை நடப்பதாதலின் நித்யமாயிற்று.

இதுவரை முக்த ஜீவர்களைப் பற்றி கூறப்பட்டது. இனி நித்யர்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

நித்யர்கள் ஒரு போதும், அறிவின் குறைதலுக்கு இடமில்லாதவர்கள். அறிவு சுருங்குவதற்கு காரணமான சம்சாரபந்தமும், வினைகளின் தொடர்பும் அறவே அற்றவர்கள் நித்யர்கள். மேலும் பகவானுக்குப் பிடிக்காத ஒன்றையும் ஒருபோதும் நித்யர்கள் செய்தவர்களல்லர். அவர்கள் **அநந்தன், கருடன், விரவச்சேனர்** முதலானவர்கள். அவர்களில் இன்னாருக்கு இன்ன அதிகாரம் என்பது ஒருபொழுதும் மாறாது. பகவானது இச்சையால் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அவதாரம் செய்வதும், பகவானுடைய அவதாரத்தைப் போல அவர்களுடைய விருப்பத்தினாலேயே உண்டாகிறது.

அநந்தன் பகவானுக்கு இருக்கையாகவும், கருடன் பகவானுக்கு வாகனமாகவும், விஷ்வக்சேனர் சேனைத் தலைவராகவும் செயல்படுகிறார்கள்.

நித்யர்களுக்கு ஒரு போதும் சம்சார பந்தம் இல்லை என்பதற்கு பிரமாணம் அவர்கள் அந்த விஷ்ணுவினுடைய மிகவும் உயர்ந்த ஸ்தானத்தை "சூரிகள்" எப்பொழுதும் பார்க்கிறார்கள் என்ற வேத வசனம் தான் இதில் சூரிகள் என்ற சொல் நித்யர்களை மட்டும் குறிப்பிடும். முக்தர்களை குறிப்பிடாது. ஏனெனில் முக்தர்கள் முக்தி அடைந்த பிறகு தான் அதைப் பார்க்கக்கூடும். எப்பொழுதும் அவர்களால் பார்க்க முடியாது. சூரிகள் என்பது பன்மை சொல்லாதலினால் இறைவனை குறிப்பிடாது.

"தத்விஷ்ணோ: பரமம்பதம் சதா பச்யந்தி ஸூரய:
தீவீவ சக்ஷுராததம்

என்ற விஷ்ணு சூக்தத்தின் மந்திரம் இங்கே நினைக்கிற்பாலது.

இதன் பொருள், அந்த விஷ்ணுவின் (மிக உயர்ந்த ஸ்தானமான பரமபதத்தை (திவ்யதிரு மேனியை) ஆசைதீராத கண்களால் அகல விழித்துக் கொண்டு சூரிகள் தினமும் பார்த்து இன்புறுகிறார்கள்.

19. ஈசுவரன்

பெரிய பிராட்டிக்கு நாயகனாகவும் எல்லாவற்றையும் எல்லோரையும ஏவுகின்றனாகவும், எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவனாகவும், எல்லோருக்கும் தலைவனாகவும் இருக்கும் ஸ்ரீமந் நாராயணனே இங்கு ஈசுவரன் என்று குறிப்பிடப்படுகிறான்.

இவன் எல்லா செயல்களாலும் வழிபடத்தக்கவன். சகல வினைகளுக்கும் பலன் அளிப்பவன். அனைத்துக்கும் ஆதாரமானவன். எல்லா செயல்களையும் செய்பவன். சொற்கள் அனைத்திற்கும் பொருளானவன். சேதன அசேதன விஷயங்களில் மூன்று வகையான தொடர்புகள் கொண்டவன். அதாவது இவற்றையெல்லாம் எப்பொழுதும் தாங்கி நிற்பவன் அவனே! அவற்றில் கலந்து தன் சங்கல்பத்தால், எப்பொழுதும் நியமித்துக் கொண்டிருப்பவனும் அவனே! அவற்றால் வரும் பயனை எப்பொழுது நுகருபவனும் அவனே! இவ்வாறு மூன்று தொடர்புகள் கொண்டதால் எம்பெருமான் அவற்றை தனக்கு சரீரமாக கொண்டு தான் ஆத்மாவாக உள்ளான்.

தன்னையும் தர்மபூத ஞானத்தையும் தவிர சேதன - அசேதனங்களை உடலாகக் கொண்டவன், சர்வவியாபி, சர்வசேஷி, அறிவுமயமானவன், இயல்பாகவே நினைத்ததை செய்து முடிப்பவன். ஊழிக்காலத்திலேயே சூட்சம நிலையை அடைந்த, சேதன அசேதனங்களை உடலாகக் கொண்டு அவற்றைவிட்டு பிரியாமலிருப்பவன்.

உலகப் படைப்பிற்கு எம் பெருமான், மூன்று வகையான காரணங்களாகிறான் என்பது சுருதிவாக்கு.

உலகில் கார்யப் பொருள் ஒவ்வொன்றிற்கும் மூன்று காரணங்கள் உண்டு அவைகள்.

1. உபாதான காரணம்;
2. நிமித்த காரணம்; மற்றும்
3. சஹகாரி காரணம் என்பனவாம்.

உலகியலில், இந்த மூன்று வகை காரணங்களும் வெவ்வேறு பொருள்களாகவே இருக்கும். உதாரணமாக மண், குடம் என்ற

கார்யப்பொருளாக மாறுகிறது. இதற்கு மண் முதல் காரணமான உபாதானக்காரணம். குயவன் மண்ணை குடமாகச் செய்கிறான் என்ற நிலையில், குயவன் குடத்திற்கு இரண்டாவது காரணமான நிமித்த காரணம் ஆகின்றான். குயவனுக்கு சக்கரம் - சுற்றுக்கம்பு முதலிய கருவிகளும் தேவைப்படுகிறது. இக்கருவிகள் குடம் செய்ய துணை புரிவதால், இவைகள் மூன்றாவது காரணமான சககாரி காரணமாகின்றன.

எம்பெருமானின் உலகப்படைப்பு விஷயத்தில், இந்த அம்சம் விசித்திரமானது. இந்த மூன்று வகை காரணங்களும் எம்பெருமானே ஆகின்றான்.

ஊழிக்காலத்தில் சூட்சம நிலையடைந்த சேதன - அசேதனங்களை உடலாகக் கொண்டு அவற்றை விட்டுப் பிரியாமலிப்பவன், உலகப்படைப்பிற்கு முதற்காரணமாகிறான் என்று கூறப்பட்டது. பிரகிருதியின் மாறுபாடான மஹத், அகங்காரமாக மாறும்போது, உண்மையில் மஹத்திற்கு அந்தர்மியான எம்பெருமானே பேசப்படுகிறான் அல்லவா? ஆக அவ்வகையிலும் எம்பெருமானான பிரும்மமே உலகப்படைப்பிற்கு முதற்காரணம்.

எம்பெருமானே, நான் பலபொருள்காள ஆகின்றேன் என்று சங்கல்பித்து அவ்வாறே பலபொருள்களாக ஆகின்றான். மண்ணை குடமாக செய்கிறேன் என்ற குயவனின் செயலே குடத்திற்கு இரண்டாவது காரணமான நிமித்த காரணமாவது போல, பல பொருள்காள ஆகிறேன் என்று சங்கல்பத்து. அவ்வாறு ஆவதால், எம்பெருமான் பிரபஞ்சத்திற்கு இரண்டாவது காரணமான நிமித்த காரணமாகவும் ஆகின்றான். உலகப்படைப்பிற்கு பிரும்மாதி தேவர்களே நிமித்த காரணம் என்று சொல்லப்படினும், அவர்களுக்கு அந்தர்மியாக, எம்பெருமானே தான் நியமித்தபடி செயல்படுவதால், இவ்வகையிலும் எம்பெருமானே நிமித்த காரணம். உலகப் படைப்பிற்கும், கார்யப் பொருள்கள் உண்டாவதற்கும், காலம் துணையாக இருந்த செயல்படுகிறது. குயவனுக்கு சக்கரமும், சுற்றுக்கம்பும் துணை கருவிகளாக செயல்படுவதைப் போல, காலம் முதலியவற்றுக்கும் எம்பெருமானே அந்தர்யாமி என்ற நிலையில், எம்பெருமானே மூன்றாவது காரணமான துணைக்காரணம் (சக்காரி காரணம்) ஆகின்றான்.

இந்த அம்சங்களை கருத்தில் கொண்டே உலகப்படைப்பிற்கு மூன்று வகை காரணங்களாக எம்பெருமானான பிரும்மமே என்று வேதங்கள் நிர்ணயித்துள்ளன!

ஆக சூட்சமமான சேதன - அசேதனங்களை சரீரமாகக் கொண்ட "விசிஷ்ட பிரம்மமே" உபாதான காரணமாகவும், சங்கல்பித்தலையே (நினைத்தலையே) இயல்பாகக் கொண்ட "விசிஷ்டபிரம்மமே" நிமித்த காரணமாகவும், காலத்திற்கும் அந்தர்யாமியென்ற நிலையில் கால இயல்போடு கூடிய "விசிஷ்டபிரம்மமே", சககாரி காரணமாகவும் செயல்படுவதால், உலகப் படைப்பிற்கு காரணப்பொருள் என்ற நிலையில் ஸ்ரீமந் நாராயணனே ஜகத்காரணப் பொருளாகத் திகழ்கின்றான்.

"விசிஷ்டம்" என்ற சொல் மிக ஆழமான பொருளைக் கொண்ட சொல். இது தமிழில் அடைமொழி எனப்படும். பசு என்றால் பொதுவாக எல்லாப் பசுக்களையும் குறிப்பிடும் பொதுப்பெயர். "காராம்பசு" என்று குறிப்பிடும்போது, அது கருமை நிறங்கொண்டதை மட்டும், மற்றவைகளிலிருந்து பிரித்துக்காட்டும் சொல். இதில் கருமை என்பது அடைமொழி அல்லது விசேஷணம் எனப்படும். இவ்வாறு அடைமொழியான விசேஷணத்தை ஏற்ற சொல் விசேஷ்யமெனப்படும். ஆக காராம்பசு என்ற தொடரில், கருமை என்ற நிற இயல்பை விசிஷ்டமாக கொண்ட பசு என்று பொருள்படும்.

மண்ணின் இயல்பை அறிந்தால், மண்ணினால் ஆன பல பொருள்களையும் அறிய இயலும். அதுபோல பிரம்மம் ஒன்றை மட்டும் அறிந்து கொண்டால், அனைத்துப் பொருள்களையும் அறிந்து கொண்டதாகும் என்பது வேதம். அதனால் இறைவனே உலக காரணப்பொருள் ஆகின்றான்.

காரணப் பொருளை பல பெயர்களால் குறிப்பிடுகிறது வேதம்.

பிரம்மத்தை "ஆன்மா" என்றும், "சிவன்" என்றும், "சம்பு", "ருத்திரன்" என்றும், சில உபநிஷத் கூறுகின்றது. "பிரஜாபதி" என்றும் "இரண்யகர்ப்பன்" என்றும் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புருஷசூக்தம் பிரம்மத்தை புருஷோத்தமன் என்றே கூறகிறது. மற்றும் பல இடங்களில் ஹரி, விஷ்ணு, அச்சுதன், அனந்தன், வாமனன், திரிவிக்ரமன், கிருஷ்ணன் முதலிய பெயர்களும்,

நாராயணன் என்ற பெயரும் உண்டு. மேலும், ஜ்யோதி, அக்ஷரம், ருதம், சத்யம், பிரமம், ஞானம், ஆனந்தம் முதலிய பெயர்களையும் உபநிஷத்துக்கள் குறிப்பிடுகின்றன. இவைதவிர சத்து, ஆகாசம், பிராணன் என்றும் கூறப்பட்டுள்ளது. ஜ்யோதி, அக்ஷரம் ருதம், சத்யம், ஆகாசம், பிராணன் முதலான சொற்கள் பரம்பொருளை சேதனம் என்றோ அசேதனம் என்றோ கூற இயலவில்லை. இருப்பினும் பிரம்மன் அறிவுமயமானது. அறிவையும் குணமாக உடையது என்பதை நாம் அறிந்துள்ளோம். மேலும் வேதத்தில் இந்திரன், அக்நி, சூரியன், சந்திரன்,வாயு, குபேரன், யமன், வருணன், ருத்திரன், பிரும்மா, நாராயணன் முதலிய பலர் கூறப்பட்டுள்ளார்கள். இவர்களுள் ஆன்மா என்பது யார்? இந்திரன், அக்நி, சூரியன், சந்திரன, வாயு, குபேரன், எமன், வருணன் ஆகியோர்கள் வினைக்குக் கட்டுப்பட்டவர்கள். அளவுபட்ட செல்வத்தை உடையவர்கள். பிராகிருதப் பிறவியுடையவர்கள், அழிக்கப்படுபவர்கள் என்று வேதமே கூறுவதால் இவர்கள் பரம்பொருளாக இருத்தல் முடியாது.

இனி இரண்யகர்ப்பன், பிரஜாபதி என்ற பெயர்களைக் கொண்ட நான்முகனைப் பரம்பொருள் என்று கொள்ளமுடியுமா? நான்முகனோ நாராயணனின் நாபியிலிருந்து தோன்றியவன். ருத்திரனோ நான்முகனிடமிருந்து தோன்றியவன். பிறப்புடையவர்கள் அழிக்கப்படுபவர்கள் என்று வேதம் குறிப்பிடுவதால் இவர்களும் பரம்பொருள் ஆக முடியாது.

சிவம் என்ற சொல் மங்களம் என்ற வேறொரு பொருளையும் குறிக்கும். அதனால் மங்களமுடையவன் யாராகினும் சிவம் என்றே அழைக்கலாம். ஆக இது பலருக்கு பொதுவான பெயர் என்று கருதலாம். இதைச் சார்ந்தே மற்றைய பெயர்கள் அனைத்தும் ஒருவனை மட்டும் குறிப்பிடாமல் பலரையும் குறிப்பிடுவதாக உள்ளதாகவே இருக்கின்றன.

ஆனால், நாராயணன் என்ற பெயர் இவ்வாறு பொதுப்பெயராகக் கருத இடமே இல்லை. அது நாராயணனைத் தவிர வேறு யாருக்கும் பொருந்தாது. அப்படி பொருந்துவதற்கும் இலக்கணவிதிகள் இடம் தராது. ஆக நாராயணனே பரம்பொருள், என்பது வைணவர்களின் கொள்கை.

மேலும் சிவனுக்கும், நான்முகனான பிரமனுக்கும் கூறப்பட்டது

போல பிறப்பு - இறப்பு ஸ்ரீமந் நாராயணனுக்கு உண்டு என்று எந்த வேதமும் கூறவில்லை.

ஆக படைப்பிற்கு முன் (ஸ்ருஷ்டிக்கு) ஊழிக்காலத்தில் பெயரும் உருவமுமற்ற சேதன - அசேதனங்களை மிக நுண்ணிய (சூட்சமமான) நிலையில், தனது உடலாகக் கொண்டு பிரம்மம் மட்டுமே இருந்தது. இது "சத்" எனப்படும். இந்நிலையில் பிரம்மனைத் தவிர மற்ற எதுவும், அவரைவிட்டு பிரிந்திருக்க முடியாத நிலையில், ருத்திரனோ, நான்முகனோ இருப்பதற்கு வாய்ப்பே இல்லை என்பது வைணவத்தின் கொள்கை. உலகம் உண்டான பிறகும் சேதன - அசேதனங்கள் ஸ்தூல வடிவத்தோடு பகவானுக்கு உடலாக இருக்கும் பிரியாத நிலை. இந்த இரண்டு நிலைகளிலும் பரம்பொருள் "பிரகாரி" சேதன - அசேதனங்கள் "பிரகாரம்". இவைகளுள் உயிராக உட்புகுந்த அந்தர்யாமி என்ற நிலையில், பரம்பொருளே, இவர்களுக்கு பெயர்களையும் - வடிவங்களையும் (நாமங்களை) அளிக்கின்றான்.

சுருதிவாக்கிற்கு இணங்க, பலவாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்து, ஜகத் காரணப்பொருள் ஸ்ரீமந் நாராயணன் தான் என்று சிந்தாந்தப்படுத்தியுள்ளார் ஸ்ரீராமாநுஜர். தனது ஸ்ரீபாஷ்யத்தில், ஆக விசிஷ்ட பிரம்மமான ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்பது வைணவத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ருத்திரன் - நான்முகன் ஆகியோர்களின் பிறப்பைப் பற்றி கூறும் திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த பாசுரமும், இங்கே நினைவு கூர்வது மிகப் பொருத்தம்.

> "நான் முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
> தான் முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் -
> யான்முகமாய்
> அந்தாதி மேலிட்டறிவித்தேன் ஆழ்பொருளை
> சிந்தாமல் கொாண் மின்நீர் சேர்ந்து"

சங்கரர் சித்தாந்தப்படி ஒரு மனிதன் அவித்யையிலிருந்து விடுபட்டு, பூர்ணஞானம் அடைந்த நிலையில், அந்த பிரம்மமாகவே ஆகின்றான் என்று கருதப்படுகிறது. சாந்தோக்ய உபநிஷத் கூறும் வாக்கியமான "தத் த்வம் அஸி" என்பதற்கு "நீ அந்த பிரம்மாகவே இருக்கிறாய்" என்று பொருள் கொண்டுள்ளார்கள்.

ஆனால் வைணவம் இதை ஏற்றுக் கொள்வதில்லை. எப்படியெனில் த்வம் (நீ) என்ற சொல்முன்னிலையிலுள்ளவனை குறிப்பிடுவதாக இருப்பினும், அவனுள் உறையும் அந்தர்மியான இறைவனைக் குறிப்பதாகப் பொருள் கொள்ள வேண்டும். அப்பொழுது **"அந்தப் பரமனே உனக்கு அந்தர்மியான இறைவனாக உள்ளது"** என்று பொருள் கொள்ளுதல் வேண்டும் என்று சித்தாந்தப்படுத்தியுள்ளார் ஸ்ரீ ராமாநுஜர்.

அநேக குறைபாடுகள் கொண்ட சேதனர்கள், ஞானம் பூர்ணமாக மலர்ந்த நிலையிலும் இறைவனாக முடியாது. ஆனால் இறைவனுக்கு சமமான நிலையை அடைய முடியும் என்பது வைணவத்தின் திட நம்பிக்கை.

குறைபாடுகள் கொண்டவர்களாயிற்றே சேதனர்கள். இவர்களை உடலாகக் கொண்ட இறைவனையும், குறைபாடுகள் பாதிக்காதோ என்று ஐயப்பாடு தோன்றுவதில்பு.

உடலிற்கே உரிய சில விகாரங்கள் இளமை - முதுமை ஆகியவை, ஆன்மாவோடு ஒட்டுவதில்லை என்பதை முன்பே அறிந்துள்ளோம். ஒரு ஜீவன் உடல் பெறுவது வினைப்பயன்களின் காரணமாகத் தான். ஆதலால் உடலின் மாறுதல்கள், உடலையடைந்த ஆன்மா விடத்து ஒட்டுவதில்லை. ஆன்மாவின் தர்மமான அறிவு சுருங்கிய நிலையும், இறைவனைப் பாதிக்காதா? என்றால் பாதிக்காது. இறைவனுக்கு வினைப்பயன்களால் சேத - அசேதனங்கள் உடலாக அமையவில்லை. தனது இச்சையினாலேயே ஏற்றுக் கொண்டுள் ளான். அதனால் சேதன - அசேதனங்களின் குறைபாடுகள் ஈசுவரனிடம் எவ்வித விகாரத்தையும் தோற்றுவிக்காது.

பாதசரம் மிக விலையுயர்ந்த உலோகப்பொருள். இது தாமரை இலை தண்ணீரைப் போல ஒரு திரவப்பொருள். இந்தப்பொருள் புழுதியில் இருந்தாலும் மண் ஒட்டுவதில்லையே!

நான் பலவாறாக ஆவேன், என்று இறைவன் சங்கல்பித்து பலவாறாக மாறும்போது அது விகாரம் அடைகிறது என்ற நிலையில், இறைவன் விகாரமற்றவன் என்று எப்படி கூறமுடியும் என்று மற்றொரு ஐயமும் தோன்றக்கூடும். ஆனால், உண்மையில் சேதன - அசேதனங்களான அவனது உடல்மட்டும் சூட்சம நிலையிலிருந்து ஸ்தூல வடிவம் அடைகின்றது என்ற நிலைமட்டும் உண்டாகிறதேயன்றி, இறைவனே மாறுவதில்லை!

சில உபநிஷத் மந்திரங்களைச் சார்ந்து, சிலர் பிரும்மத்தை "நிர்குணம்" என்று குறிப்பிடுகிறார்கள். அப்படியிருக்க, பிரம்மம் சகல கல்யாண குணங்களையும் கொண்டது என்று கூறுவது எப்படி சிலர் சந்தேகிக்லாம்.

நிர்குணம் என்ற பதத்திலுள்ள குணம் என்ற சொல், பிரகிருதியோடு தொடர்பு கொண்ட ஸத்துவ - ரஜஸ் - தமஸ் ஆகிய முக்குணங்களையும் அதனால் உண்டாகும் விளைவுகளையும் மனதில் கொண்டு பொருள் அறிதல் வேண்டும். பிராகிருத தொடர்பே இல்லாத ஈசுவரனிடம், இக்குணங்கள் ஒட்ட சிறிதும் வாய்ப்பே இல்லை என்ற நிலையில் தான் நிர்குணம் என்ற பதப்பிரயோகம் செய்யப்பட்டிருக்க வேண்டும் (நிர்குணம் - (தீய) குணம் இல்லாமை). மேலும், நிர்குணம் என்றால் வேண்டத்தகாத குணங்கள் (தீயகுணங்கள்) இல்லாதவன் என்ற பொருளும் உண்டு. ஆகையால் இறைவன் சகல கல்யாண குணங்களுக்கு இருப்பிடமானவன் என்று பொருள் கொள்வதே சாலச் சிறந்தது.

ஈசுவரன் மூன்று வகையில் எங்கும் நிறைந்துள்ளவன். இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமான பொருள்களில் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகின்றான். ஸ்ரீமந் நாராயணன் என்ற எட்டெழுத்து மந்திரத்தின் பொருள்படி, தனது திவ்யமங்கள ஸ்வரூபத்தால் எங்கும் பரவியவன். இது ஒரு வகை.

சூரியனின் ஒளிபோல, தனது இயல்பான தர்மபூத ஞானம் மூலமாக பரவியிருப்பவன் ஸ்ரீமந் நாராயணன். இது இரண்டாவது வகை.

பிரகிருதி தொடர்பு அல்லாத தனது திவ்ய மங்கள விக்கிரகத்தின் மூலம் பரவியிருப்பவன் ஸ்ரீமந் நாராயணன். இது மூன்றாவது வகை.

இதனால், ஸ்ரீமந் நாராயணன் நீக்கமற எங்கும் நிறைந்துள்ளவன் என்பதனை நாம் அறியக்கூடும்.

உலகியல் பொருள்கள் மூன்று வகையில் அளவிபட்டிருக்கும் தன்மை கொண்டவை.

ஒரு குறிப்பிட்ட பொருள் இன்ன இடத்தில் உண்டு. இன்ன இடத்தில் இல்லை என்று கூறுவது **"இடத்தால் அளவுபட்டது"**. இன்ன காலத்தில் உண்டு, இன்ன காலத்தில் இல்லை என்று கூறும்படி இருப்பது **"காலத்தால் அளவுபட்டது"**. இன்ன

பொருளாக உள்ளது. இன்ன பொருளாக இல்லை என்று சொல்வது "பொருளால் அளவுபட்டது".

இவ்வாறு மூன்று வகையில் அளவுபட்டிருப்பது ஈசுவரனுக்கு இல்லை.

இறைவன் இல்லாத இடமோ காலமோ, பொருளோ இல்லை என்று சொல்லும்படி, அளவுகளை கடந்தவன் என்ற வகையில், "**அனந்தன்**" என்று கூறப்படுகிறான்.

ஸ்ரீமந் நாராயணனுக்கு, இரண்டு வகை தன்மைகள் உண்டு. அவைகள்: "**ஸ்வரூப நிருப்க தர்மங்கள்** " - "நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள்" எனப்படும்.

ஸ்வரூப நிருபக தர்மங்கள்:

ஒரு பொருளின் ஸ்வரூபத்தை அது எவ்விதத் தன்மைகளைக் கொண்டது என்று கூறி விளக்கினாலன்றி, அப்பொருளை அறிய இயலாது. அது போல இறைவனுக்கு "**சத்யத்வம்**", "**ஞானத்வம்**", "**அனந்தத்வம்**", "**ஆனந்தத்வம்**", "**அமலத்வம்**" ஆகிய ஐந்தும் ஸ்வரூப - நிரூபக தர்மங்கள். இந்த ஐந்தையும் அறிந்தே இவற்றுடன் கூடியவனாக எம்பெருமானை நாம் உணர வேண்டும்.

சத்யத்வம் - எப்பொழுதும் மாறுபடாத ஒரே நிலையில் நிற்றல்.

ஞானத்வம் - எப்பொழுதும் குறைவுபடாத ஞானவடிவனா யிருக்கும் தன்மை.

அனந்தத்வம் - இடம், காலம், பொருள் ஆகியவைகளில் அளவுபடாதிருத்தல்.

ஆனந்தத்வம - ஆனந்த ஸ்வரூபனாக நிற்றல்

அமலத்வம் - தோஷங்கள் அற்ற தன்மை.

இவைகள் தான், எம்பெருமானை மற்றவைகளிலிருந்து, வேறுபடுத்திக் காட்டும் தர்மங்கள்.

நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள்:

ஒரு பொருளின் ஸ்வரூபத்தை விளக்கிய பின் அதன் பெருமை புலப்படுவதற்குப் புகழ்ந்து பேசும் குணங்கள். முற்கூறிய ஐந்து குணங்களுடைய எம்பெருமானை விளக்கிய பின், அவனின் பெருமையை உணரும் விசேஷணங்களான குணங்களாகும். (இக்குணங்களின் விளக்கம் 103 பக்கத்தில் காண்க).

இத்தகைய பரம்பொருள் திருமேனி பேதத்தால், ஐந்து ரூபங்கள் உடையவனாக இருக்கிறான். அவைகள் பரரூபம் - வியூகரூபம் - விபவரூபம் - அந்தர்யாமி ரூபம் - அர்ச்சைரூபம் எனப்படும்.

பரரூபம்: ஸ்ரீவைகுண்டத்தில் ஆனந்த ஸ்வரூபனாக இருக்கும் நிலை பரவாசுதேவ திருமேனி. இது நித்யர்களும். முக்தர்களும் வழிபடத்தக்கது. எந்நாளும் அழியாதது.

உயர்ந்த ஆயுதங்கள், ஆபரணங்கள், பரிஜனங்கள், பரிச்சதங்கள் இவைகள் உள்ளவர்களான குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமநன், சங்குகர்ணன், சர்வநேத்ரன், சுமுகன், சுப்ரதிஷ்டன் முதலான நகரபாலர்களால் ரக்ஷிக்கப்பட்ட நகரம் ஸ்ரீ வைகுண்டம்.

இந்நகரத்தில் சண்டன், பிரசண்டன், பத்ரன், சுபத்ரன், ஜயன், விஜயன் தாத, விதாதா முதலான துவாரபாலகர்கள் கூடின. உயர்ந்த கோயிலின் திருமாமணி மண்டபத்தில், எட்டு கால்களை கொண்ட சிம்மாசனத்தில், ஆதிசேஷனாகிய படுக்கையில், நான்கு திருக்கைகளையும், உயர்ந்த திருமேனியும் உடையவனாய், ஸ்ரீ பூமி நீளை ஆகியோர்களுடன் கூடினவனாய், கிரீடம் முதலிய உயர்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவனாய், அநந்தன், கருடன், விஷ்வக்சேனர் முதலிய நித்யசூரிகளாலும், சாமகானம் செய்து கொண்டிருக்கிற முக்தர்களாலும், அனுபவிக்கப்படுகிறவனாய் ஞானம், சக்தி முதலான கணக்கில்லாத உயர்ந்த குணங்களை கொண்டவனாய் சேவை சாதிக்கும் ஸ்ரீமந் நாராயணன் பரரூபம்.

நித்ய விபூதி - லீலா விபூதி ஆகிய இரண்டு உலகங்களுக்கும் ஆதாரமாக விளங்குபவன். வேதங்கள் அனைத்தும் அவன் புகழைப் பாடிக் கொண்டிருக்கும்.

நித்யர் - முக்தர் வழிபட எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் காக்ஷி பேரொளியாகத் திகழும் கதிரவனின் ஒளி, இப்பேரொளிக்கு முன் ஒரு மின்மினிப்பூச்சிக்கு சமம் என்றால் அதை விவரிக்க இயலாது.

இந்நிலையில் இவரை "பரப்பிரும்மம்", "பரமாத்மா", "பரவாசுதேவர்", "பரம்பொருள்", "ஸ்ரீமந் நாராயணன்" என்று பல பெயர்களால் ஆராதிக்கப்படுகிறார்கள். இது பரரூபம்.

வியூகரூபம்: முத்தொழில்களை நடத்தவும், சேதனர்கள் வாழ்வு பெறவும், பரவாசு தேவனுடைய உருவத்திலிருந்து, நான்கு உருவங்கள் தோன்றும். வாசுதேவன், தங்கர்ஷணன், பிரதீயும்னன்,

அநிருத்தன் என்ற பெயர் கொண்ட நான்கு ரூபங்களும் வியூகங்கள் எனப்படும்.

முதலில் தோன்றுவது வாசுதேவன். இவரிடமிருந்து சங்கர்ஷணனும், சங்கர்ஷணனிடமிருந்து பிரத்யும்னனும், பிரத்யும்னனிடமிருந்து அநிருத்தனும் தோன்றுகிறார்கள்.

இப்படி தோன்றிய முதல் உருவமான வியூகவாசுதேவனுக்கு, பரவாசுதேவனுக்கு உள்ளதுபோலவே, ஞானம், சக்தி, பலம், ஐசுவர்யம், வீர்யம், தேஜஸ என்ற ஆறு குணங்களும் முழுமையாக நிரம்பி இருக்கும். இந்த வகையில் இரண்டு வாசுதேவரூபங்களுள் வேற்றுமை இல்லை.

பிரிக்கப்பட்ட மூன்று வடிவங்களிலும், வாசுதேவ வடிவத்தைப் போன்று ஆறு குணங்களும் இருந்த போதிலும், இரண்டே குணங்கள் மட்டும்தான், ஒவ்வொரு ரூபத்திலும், பகிர்ந்து மேலோங்கி இருக்கும். இவ்வகையில், சங்கர்ஷணனிடம் ஞானம் பலம் ஆகிய இருகுணங்கள் மேலோங்கி வெளிப்படும். பிரத்யும்னனிடம், ஐசுவர்யமும், வீர்யமும் மேலோங்கி இருக்கும். அனிருத்தனிடம் சக்தியும் தேஜஸும் வெளிப்படும்.

ஜீவனுக்கு அதிஷ்டான தேவதை சங்கர்ஷணன். இந்த மூர்த்திக்கு உலகை அழிப்பதும் சாஸ்திரங்களை வெளியிடுவதும் ஆகிய செயல்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

மனத்திற்கு அதிஷ்டான தேவதை பிரத்யும்னன். உலகில் சுத்த வர்க்கங்களை படைப்பதும் அறநெறிகளை நடத்துதலுமான செயல்கள் இந்த மூர்த்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அநிருத்தன் என்ற மூர்த்திக்கு ஒதுக்கப்பட்டவைகள் காத்தலும், தத்துவஞான உபதேசமும். இவர் அகங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாவார்.

வாசுதேவன் உள்ளிட்ட நான்கு வியூக வடிவங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் மும்மூன்று உருவங்கள் தோன்றும்.

வாசுதேவனிடமிருந்த **கேசவன், நாராயணன், மாதவன்** என்ற மூன்று உருவங்களும் சங்கர்ஷணனிடமிருந்து **கோவிந்தன், விஷ்ணு மதுசூதனன்** என்ற மூன்று உருவங்களும், பிரத்யும்னனிடமிருந்து **திரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன்** என்ற மூன்று உருவங்களும், அநிருத்தனிடமிருந்து **ஹ்ருஷிகேசன்,**

பத்மநாபன், தாமோதரன் என்ற மூன்று உருவங்களும் தோன்றுகின்றன.

இப்பன்னிரெண்டு உருவங்களையும் நான்கு வியூகங்களின் ஒருவகைப் பிரிவு என்று கூறப்படுகிறது.

இவர்களுக்கு பன்னிரெண்டு மாதங்களுடன் தொடர்பு உண்டு. மார்கழி மாதம் தொடங்கி கார்த்திகை மாதம் வரை, ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு சூரியனாக பன்னிரெண்டு ஆதித்தர்கள் தலைவர்களாயுள்ளர்கள். ஆதித்தர்களுக்கு அந்தர்மியாக இருந்து, அவர்களின் செயலை முறையாக நடத்தி வைக்கிறார்கள். மேலும் வைணவர்கள் அணியும் பன்னிரெண்டு திருமண்காப்புகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு உண்டு. இவர்களின் நிறம், திசை, இருப்பிடம், திருவாயுதம் ஆகியவைகள் வேறுபட்டிருக்கும்.

கேசவன்	-	பொன்நிறம், நான்கு சக்கரங்கள்
நாராயணன்	-	கருமை நிறம், நான்கு சங்குகள்
மாதவன்	-	மணிநிறம், நான்கு கதைகள்
கோவிந்தன்	-	சந்திரநிறம், நான்கு சார்ங்கங்கள்
விஷ்ணு	-	தாமரையின் மகரந்த நிறம், நான்கு கலப்பைகள்
மதுசூதனன்	-	தாமரைப்பூ நிறம், நான்கு மர உலக்கைகள்
திரிவிக்ரமன்	-	நெருப்பு நிறம், நான்கு வாள்கள்
வாமனன்	-	இளஞ்சூரியன் நிறம், நான்கு வஜ்ஜிரங்கள்
ஸ்ரீதரன்	-	வெள்தாமரை நிறம், நான்கு கோடாரிகள்
ஹ்ருஷிகேசன்	-	மின்னல் நிறம், நான்கு இரும்பு உலக்கைகள்
பத்மநாபன்	-	சூரியன் நிறம், பஞ்சாயுதங்கள் (சங்கு, சக்கரம், கதை, வில், வாள்)
தாமோதரன்	-	இந்திரகோப நிறம், நான்கு கயிறுகள்

(மழை பெய்தவுடன் தோன்றும் சென்னிறப்பூச்சிகள் இந்திரகேபமெனப்பாடும்)

பரவாசுதேவன், வியூக வாசுதேவன் ஆகிய இருவருக்கும் செயல்களிலோ, குணங்களிலோ வேறுபாடு கிடையாது. ஆனால் வாசுதேவனுக்கும் மற்ற மூன்று வியூகமூர்த்திகளுக்கும் செயல், குணங்களில் வேறுபாடு உண்டு.

விபவரூபம்: பரம்பொருளான எம்பெருமான் என்னின்ற யோனியுமாய், அதாவது மனித இனம் விலங்கினம், பறவையினம்,

தாவரயினம், தேவ இனம் என்று பலவகைகளில் பிறப்பெடுப்பது விபவம் எனப்படும்.

இப்படி எடுப்பது முப்பத்தாறு என்று சில பிரமாணங்களும், முப்பத்தெட்டு என்று வேறு சில பிரமாணங்களும் கூறகின்றன. "பாஞ்சாரத்ர சம்ஹிதை" முப்பத்தொன்பது என்று கூறுகிறது. இதைதவிர தசாவதாரங்களான பத்தும் விபவம் என்பதிலேயே சேரும்.

முப்பத்தாறு விபவரூபங்கள், **பத்மநாபன் - சநத்குமாரன்த்ருவன் - அனந்தன் - சக்தயாத்மா - மதுசூதனன் - கபிலன் - விசுவரூபன் - விஹங்கமன் - கரோடாத்மா - படபாவக்த்ரன் - தர்மன் - ஹயக்ரீவன் - ஹம்சன் - மத்ஸ்யம் - கூர்மம் - அம்ருதாஹரணன் - வராஹன் - ந்ருசிம்ஹன் - ராஹுஜித் - காலநேமிக்னன் - பாரிஜாதஹரன் - தத்தாத்ரேயன் - நர நாராயணன் ஹரி - நாரதன் - ப்ருது - வ்குஷபன் - தந்வந்தரி - வ்யாசன் - பாதாளசயனன் - பரசுராமன் - ராமன் - பலராமன் - கிருஷ்ணன் - கல்கி** என்பனவாம்.

இப்படி பல அவதாரங்கள் இருப்பினும், தசவதாரங்கள் மட்டும் போற்றுவதற்கு காரணம், உலகிற்கு விசேஷமான நன்மைகள் ஏற்பட்டிருப்பதுதான்.

வேதங்களை மீட்க **மத்ஸ்யா அவதாரம்**; பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்க **கூர்மாவதாரம்**; ஊழிக்கடலிலிருந்து பூமியை மீட்க வராஹ **அவதாரம்**; பிரஹ்லாதனைக் காப்பாற்ற ந்ருசிம்மாவதாரம்; மூவடிமண் யாசிக்க **வாமனாவதாரம்**; அதை அளந்து எடுத்துக்கொள்ள **திருவிக்ரமவதாரம்**; (இப்படி ஒரே சமயத்தில் ஒரு ரூபத்திலிருந்து வேறொரு ரூபமாக மாறுவது இயல்பு). இருபத்தி ஒன்று தலைமுறை. க்ஷத்திரியர்களை ஒழிக்க பரசுராம **அவதாரம்**; அறத்தை நிலை நாட்டவும், சரணாகதி தத்துவத்தை விளக்குவதற்கும், **ஸ்ரீராமாவதாரம்; கண்ணனுக்கு தோழனாகவும் பிரலம்பன்** என்ற அசுரனைவதம் செய்யவும் **பலராமாவதாரம்**; சம்சார பந்தத்தில் கட்டுப்பட்டு கிடக்கு சேதனர்களை காப்பாற்றவும் மோஷோபாய உபதேசம் செய்யவும் **ஸ்ரீகிருஷ்ணாவதாரம்**; கலியுகம் முடிந்து கிருதயுகம் தோன்ற இனி எடுக்கப்போகும் **கல்கி அவதாரம்** ஆகிய பத்தும் தசாவதாரங்களெனப்படும்.

கபிலர் - பரசுராமர் ஆகியோர் எம்பெருமானின் நேர்

அவதாரகள் அல்ல. இவ்விருவரும் ஜீவர்கள். இவர்கள் செய்த முன்வினைப் பயனாக, இவர்களுள் சிலகாலம் இருக்க, தானே திருமேனியோடு புகுந்து செயல்படுவது சில விசேஷ நிகழ்ச்சிகள் செய்வதற்காக. இதனால் அந்த ஜீவர்கள் மேன்மை அடைகிறார்கள்.

முக்கிய அவதாரம் என்பது இறைவன் தானே உடலெடுப்பது.

முக்தியை விரும்பும் ஞானி அவதார ரகசியங்களை அறிந்திருத்தல் அவசியம்.

அவைகள்:

அவதாரங்கள் உண்மையானவை;
பரம்பொருள் தனது இயல்புகளை கைவிடாமலே
அவதரித்தல்;
அவதார திரு மேனியும் சுத்த சுத்துவமானது;
அவை வினைப்பயனாக எடுப்பதல்ல;
அறம் தலைநிறுத்த எடுப்பவைகள் இவை;
நல்லோரைக் காப்பதே பயனாகக் கொண்டவை.

"நான் பிறப்பற்றவன், அழி வற்றவன், பூதங்களுக்கு தலைவன், உலகில் தர்மம் குலைந்து அதர்மம் தலை தூக்கும் போது நான் என் அப்பிராகிருத திருமேனியோடு எனது இச்சையினாலேயே அவதரிக்கின்றேன்"

"நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், தர்மத்தை நிலை நாட்டவும் நான் யுகம் தோறும் பிறக்கின்றேன்"

"என்னை உள்ளபடி அறிந்தவன் உடலை விட்டபின் என்னை அடைகின்றான்"

இவ்வாறு பகவானே கிருஷ்ணாவதாரத்தில் யுத்த பூமியில், அர்ச்சுனனுக்கு கூறிய உபதேசம் ஆகும். இதனால் விபவங்களின் நிலை மிகப் பெருமை வாய்ந்ததாகும்.

அந்தர்யாமி ரூபம்: ஒவ்வொரு சேதனனின் இதயத்தின் உட்புறத்தை இடமாக்கி கொண்டு. எம்பெருமான் கொண்டுள்ள மிக நுண்ணிய (சூட்சமமான) உருவம் "அந்தர்யாமிருபம்" எனப்படும். இந்த திருமேனியை நம்மால் காணமுடியாது, தவம் செய்த யோகிகள் மட்டும் தங்களது தவ வலிமையால் காணலாம்.

சேதனனோடு ஒரே உடலில் இருந்தாலும், அந்த உடலின்

தன்மைகளோ, குற்றங்களோ, இறைவனை சாராது என்பதை நாம் முன்னமேயே அறிந்துள்ளோம்.

அர்ச்சை ரூபம்: சேதனர்கள் கண்ணாரக்கண்டு அனுபவிக்கும்படி திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் நிலை "அர்ச்சாரூபம்" எனப்படும்.

பரம் - வியூகம் - விபவம் ஆகியவைகளுக்குள்ள பெருமைகளில் ஒன்றும் குறையாமல், அர்ச்சாரூபத்தில் காக்ஷி தருகின்றான் எம்பெருமான்.

பரரூபமும், வியூக ரூபமும் (க்ஷீராப்தி) நமக்கு இப்பொழுது எட்டாத ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளது. விபவ ரூபமோ வேறு யுகத்திலோ, நெடுங்காலத்திற்கு முன்போ, நமக்கு எட்டாத காலத்தில் இருந்தன. அந்தர்யாமி ரூபமோ யோகிகளுக்கு மட்டும் காணக்கிடைப்பது. அப்படி வரையறைகள் ஏதுமின்றி இடத்தாலோ, காலத்தாலோ, அனுபவத்தை நாம் இழக்காமலும், எல்லோரும் சேவித்து அனுபவித்து மகிழும்படி இருப்பது, அர்ச்சாரூப திருமேனி. வீடுகளில் (கிரஹங்களில்) திருவாராதனத்திற்கு உகந்ததாக எழுந்தருளியிருக்கும் சாளக்கிராமங்களும் அர்ச்சாருபமாகவே கருதப்படுகிறது.

அர்ச்சை வடிவுடன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் **"ஸ்வயம்வியக்தம் - சைத்தம் - ஆர்ஷம் - திவ்யம் - மாநுஷம்"** என ஐவகைப்படும்.

பிறவகைகளின் தொடர்பின்றி எம்பெருமான் தானே உகந்து வந்து அவதரித்த தலம் **ஸ்வயம் வியக்தம்** எனப்படும். திருவரங்கம் திருமலை பதரிகாச்ரமம் முதலியன.

சித்தர்களால் உண்டாக்கப்பட்டது **சைத்தம்** எனப்படும்.

ரிஷிகளாக அவதரித்து பிரதிஷ்டை செய்யப்பட்டவைகள் **ஆர்ஷம்** எனப்படும்.

தேவர்களால் அமைக்கப்பட்டது **தைவம்** எனப்படும்.

மானிடர்களால் நிர்மாணம் செய்யப்பட்டது **மானுஷம்** எனப்படும்.

ஜ்ஞானம் - சக்தி - பலம - ஐசுவர்யம் - வீர்யம் - தேஜஸ் ஆகிய ஆறு குணங்களும், மற்ற ரூபங்களைக் காட்டிலும் அர்ச்சாரூபத்தில் மிகுதியாக பிரகாசிப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. மேலும் நாம்

எல்லோரும் எளிதில் ஆராதிக்கக் கூடியது, நீராட்டுதல், பூச்சூட்டுதல், ஆடை உடுத்தல் ஆகிய கைங்கர்யங்களை செய்வதற்கு, அர்ச்சகர்கள் வசப்பட்டிருப்பது அர்ச்சாரூபம். நாம் செய்யும் அபராதங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ள கூடியது அர்ச்சை திருமேனி. திருமேனியை நிலைப்படுத்துவதில் (பிரதிஷ்டை) சாஸ்திர முறைப்படி செய்யப்படுவதால், இந்தத் திருமேனிக்கு பெருமை அதிகம். அர்ச்சை திருமேனியில் எம்பெருமான் அந்தர்மியாக இல்லாது சுத்த சத்துவ மயமான திருமேனியுடன் உட்புகுந்து நீரும் - பாலும் போல கலந்து உள்ளான். மேலும் அர்ச்சை திருமேனியில் கணமும் அகலாது நித்யமாய் எழுந்தருளியுள்ளார்.

சர்வரக்ஷகனான எம்பெருமானுக்கு உள்ள பரம் - வியூகம் - விபவம் - அந்தர்யாமி - அர்ச்சை ஆகிய ஐந்து நிலைகளிலும் பெரிய பிராட்டியைப் பிரியாது, அவன் கூடியே இருப்பான்.

பிள்ளை லோகாச்சாரியார் அர்ச்சையின் பெருமையை "ஸ்ரீவசன பூஷணத்தில்", இப்படி வர்ணித்துள்ளார்.

பரத்வம் :	ஆவரண ஜலம் போல, அதாவது அண்டத்திற்கு புரத்தே உள்ள நீர்.
வ்யூகத்வம் :	பாற்கடல் நீரைப் போல அதாவது அண்டத்திற்குட்பட்டு ஆனால் கிட்டுவதற்கு அரிதானது.
விபவத்வம் :	பெருக்கெடுத்து ஓடும் ஆற்று நீரைப் போல்,
அந்தர்யாமித்வம்:	பூமியின் ஆழத்தில் அடங்கியிருக்கும் நீரைப் போல.
அர்ச்சை :	பெருக்கெடுத்தோடிய ஆற்று வெள்ளம், ஒரு மடுவில் தங்கிய நீரைப் போல.

சேதன - அசேதனங்களை தனக்கு உடலாகக் கொண்ட எம்பெருமானுக்கு பிராட்டியும் பிரகாரமாகத்தான் உள்ளாள்.

எம்பெருமான் ஒருவருக்கு மட்டும் சேஷபூதையாகவும், அவன் ஒருவனாலேயே தாங்கப்படுபவளாகவும், அவராலேயே ரஷிக்கப் படுபவளாகவும் இருக்கிறான் என்பது விசிஷ்டாத்வைத கொள்கை.

இறைவனைப் போலவே பிராட்டியும் தன் ஸ்வபத்தால் உலகனைத்தும் பரவியுள்ளவன். உலகிற்கெல்லாம் தலைவி. இம்மி அளவு கூட கோபம் இல்லாதவனாக, கருணைவடிவமாக

விளங்குபவள். பகவானைப் போலவே குறையாத செல்வம் உடையவள். பகவானைக் கணமும் பிரியாது சேவித்துக் கொண்டிருப்பவள். இதனால் "ஸ்ரீ" என்ற திருப்பெயரைக் கொண்டு பெருமைகளோடு விளங்குபவள்.

பிராட்டியின் விருப்பத்திற்கு உட்பட்டே பகவான் அனைத்து செயல்களிலும் ஈடுபடுகிறார். முக்கியமாக உலக ரக்ஷணையில், சேதனனை அங்கீகரிக்க வேண்டும் என்று புருஷோத்தமனுக்கு பரிந்துரை செய்வது பிராட்டியின் செயல். இதை "**புருஷகாரத்வம்**" என்று சொல்லுவார்கள். ஆதலால் எம்பெருமானுக்கு **புருஷகாரமாக** விளங்குபவன் பிராட்டியேயாகும்.

புருஷகாரத்வம், உபாயத்வம், உபேயத்வம் ஆகிய மூன்று தன்மைகளோடு பிராட்டியார் இறைவனுக்கு உடையவளும் உடைமையுமாக இருந்து அருள்பாலிப்பது, அவர்கள் இருவரின் விருப்பத்தினாலேயன்றி அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் உண்டோ என்பதாலல்ல.

பிராட்டியின் விருப்பத்திற்கு உட்பட்டே, உலகம் யாவையும் படைத்தல், நிலைபெறச் செய்தல், அழித்தல் ஆகிய லீலைகளில் ஈடுபடுகிறான் எம்பெருமான்.

20. அத்திரவியம்

ஒரு பொருளை உள்ளபடி அறிய சாதனமாவது பிரமாணம். பிரமாணத்தால் அறியப்படுபவைகள் பிரமேயம். பிரமேயம் திரவியம் - அத்திரவியம் (திரவியமல்லாதது) என இருவகைப் பட்டது என்று நாம் முன்பே அறிந்துள்ளோம். இதுவரை திரவியம் என்பதைப் பற்றி அறிந்தோ ம். இனி திரவியமல்லாதது என்பதைப் பற்றி அறிய முயலுவோம்.

திரவியமல்லாதது என்றால் கண்களுக்கு புலப்படாமல் இருப்பது. இதுவேறு பொருள்களோடு கலக்காமல் தனித்து இருப்பது அதன் இயல்பு.

இது பத்து வகைப்படும். அவைகள் **சத்துவம் - ரஜஸ் - தமஸ் - ஒலி - ஊறு - ஒளி - சுவை - மணம் - சம்யோகம் - சக்தி** என்பவைகளாம்.

இவைகளுள் முதல் மூன்றும் பிரகிருதியின் குணங்கள். தெளிவான அறிவை உண்டு பண்ணுவது என்ற பொருள் கொண்ட "பிரகாசம்", "இன்பம்", "மென்மை" ஆகிய தன்மைகளை வளர்ப்பது சத்துவகுணம்.

சத்துவகுணம். சுத்தசத்துவம் என்றும் மிசிரதத்துவம் (கலப்புசத்துவம்) என்றும், இருவகைப்படும். ரஜோகுணம் தாமஸகுணம் ஆகிய இரு குணங்களும் சிறிதும் கலக்காமல் தனி சத்துவமாக உள்ளது சுத்தசத்துவமெனப்படும். இது நித்ய விபூதியில் உள்ளது. எம்பெருமானின் திருமேனி சுத்த சத்துவமானது. இதன் காரணமாக தன்னை ஆராதிக்கும் பக்தர்களுக்கு, இறைவன் ச துவகுணத்தை வளரச் செய்கிறான்.

இதன் காரணமாகவோ, இறைவனை சத்துவகுணத்தினன் என்று அழைப்பதும் உண்டு. இறைவனது திவ்ய மங்கள விக்கிரத் திருமேனியின் குணம் தான் சத்துவம், அவனது திவ்ய ஆத்மஸ்வரூப குணமல்ல.

முக்குணங்களுக்கிருப்பிடமான பிரகிருதியான, இவ்வுலகத்தில், இவை மூன்றும் தனித்தனியாக இல்லாது, கலந்தே இருக்கும். இப்படி ரஜஸ் தமஸ்களோடு கலந்த சத்துவம் மிசிரத்துவமாகும். இக்கலப்பில் சத்துவம் மிகுந்தும், இதர இரண்டு குணங்களும் குறைவாக இருப்பதே மிசிரசத்துவநிலை.

மூன்று குணங்களும் பிரகிருதிக்கே உடைமையானவை. அப்பொழுது அவைகளின் இயல்பை நாம் அறிய முடியாது. ஆனால் பிரகிருதியின் செயலான உடலில் அவைகள் மலர்ந்து இருக்கும் போது, சேதனர்களின் செயலைக் கொண்டு அவன் இன்ன குணத்தவன் என்று அறிதல் வேண்டும். இக்குணங்கள் உடலைச் சார்ந்தவைகளேயன்றி, ஆன்மாவைச் சார்ந்தது அல்ல. உபசார வழக்கைச் சார்ந்து, ஒருவனை இன்ன குணத்தவன் என்று கூறுவது, அவனின் செயலின் தன்மையினால். இக்குணங்கள் ஆன்மாவைப் பற்றுவதில்லை.

ஆசை, பந்தம், கோபம், சதா இயங்குதல் ஆகியவைகளுக்கு காரணமாக அமைவது ரஜோகுணம்.

மயக்கம், தூக்கம், சோம்பல், மோகம் முதலானவைகளை உண்டாக்குவது தமோகுணம்.

இக்குணங்கள் பிரகிருதியின் கார்யமான உடல், இந்திரியங்கள் ஆகியவைகளுள் வியாபித்துள்ளன. பிரகிருதியில் மொட்டாக இருந்த இந்த குணங்கள், அதன் கார்யமான உடலில் மலர்ந்து, உடலுக்குரியவனை தமக்கு வகமாக்கிக் கொண்டு, பற்பல அனர்த்தங்களுக்கு ஆளாக்குகின்றன. ஜீவன், தன் கர்மாநு குணமான உடலின் தொடர்பு கொண்டவனாதலால், எந்த குணம் உடலில் மேலோங்கியுள்ளதோ அந்த குணத்தினனாக கருதப் படுகிறான்.

மெய்யறிவுக்கும், ஆனந்தத்திற்கும் முக்திக்கும் வழிவகுப்பது சத்துவகுணம். ஆசையையும், பந்தத்தையும் வளர்த்து உலக இன்பம் நுகரவும், மறுபிறவிக்கும் வித்திடுவது ரஜோகுணம்.

சோம்பலையும், மயக்கத்தையும் உண்டு பண்ணி, ஈனப்பிறவிக்கு வழிவகுப்பது தாமஸகுணம்.

இக்குணங்கள் உடலைச்சார்ந்தது என்ற நிலையில், உடலை வளர்க்கும் ஆகார வகைகளில் கட்டுப்பாட்டுடன் இருந்து சத்துவம் மேலோங்க வழிவகுத்துக் கொள்வதே சாலச்சிறந்தது.

இக்குணங்களைப் பற்றிய விரிவான உபதேசங்களையும் ஆகாரக் கட்டுப்பாட்டினையும் பகவத்கிதையில், பகவான் உபதேசித்துள்ளார்.

ஒலி அல்லது ஓசை என்பதை நாம் செவிகளால் கேட்டு

அறிகிறோம். இது ஐந்து பூதங்களிலும் உள்ளது. இது எழுத்து வடிவம் கொண்டதென்றும், கொள்ளாதது என்றும், இருவகைப்படும்.

மொழிக்கு ஆதாரமாக அ - ஆ போன்ற ஒலிகள் எழுத்துவடிவம் கொண்டவை. இவைகள் நெஞ்சு, கண்டம், நாக்கு, பல், உதடு, மூக்கு, தாடை, அண்ணங்களின் தொழிலால் வெவ்வேறு எழுத்து ஒலிகளாகப் பிறக்கும்.

தும்முதல், முக்கல், சீழ்க்கை, முரசு அடித்தல் முதலானவைகள் எழுத்துவடிவம் பெறாத ஒலிகள்.

ஒலியை தாங்கிவரும் காற்று நமது செவிப்பறையில் படும் போது, நாம் அவ்வொலிகளை அறிகின்றோம்.

அடுத்து ஊறு (த்வக்) எனப்படுவது, உடலால் தொட்டு அறியப்படும் உணர்வு. அவை மூன்று வகைப்பட்டுள்ளது. அவைகள் குளுமை, வெப்பம், இரண்டுமற்றது எனப்படும்.

தண்ணீரில் குளுமையும், தீயிலே வெப்பமும், நிலம் - காற்று ஆகியவைகளுள் இரண்டுமற்ற தன்மையும் உள்ளது. குளிர்ந்த காற்று. உஷ்ணக்காற்று என்றெல்லாம் கூறுவதற்கு நீர், வெப்பம் ஆகியவைகளுடன் தொடர்பு கொண்டதாலேயன்றி காற்றுக்கு இவை இயற்கையல்ல.

கண் ஒன்றினாலேயே காணப்படுவது ஒளி. பிரமாணத்தைக் கொண்டு இதை அறியும்போது நான்குவகை நிறபேதங்களை அறியக்கூடும்.

சங்கு, சிப்பி, வெள்ளி, பால் முதலானவைகள் வெண்மை என்றும்: பவளம், அரக்கு, நெருப்பு, செம்பருத்தி மலர் ஆகியவைகள் செம்மை என்றும்; தங்கம், மஞ்சள்கொம்பு முதலானவைகள் மஞ்சள் என்றும்; மேகம், இருட்டு முதலியன கருமை என்றும் ஆக நான்கு வகைகள். ஆனால்பஞ்சபூதங்களுள் அக்நியின் குணமான ஒளிக்கு மூன்று நிறபேதங்கள் தான் உண்டு என்று சில உபநிஷத்வாக்கியங்கள் கூறகின்றன. (வெண்மை, செம்மை, கருமை)

மேலும் ஒளி "பிரகாசிப்பது", "பிரகாசியமலிருப்பது" என இருவகைப்பட்டுள்ளது. நெருப்பிலுள்ள ஒளி பிரகாசிப்பது, நீர், நிலத்திலுள்ளது பிரகாசியாமலிருப்பது என கூறப்படுகிறது.

அடுத்து, நாவின் நுனியில் அறியப்படுவது "சுவை". இவை ஆறுவகைப்படும்.

இனிப்பு	:	கரும்பு, பாகு, பால், வெல்லம் முதலியன.
புளிப்பு	:	புளி, எலுமிச்சை, மாங்காய் முதலியன.
உப்பு	:	நீருப்பு, உலர்மண் முதலியன.
கசப்பு	:	பாகல், வேம்பு ஆகியவை.
துவர்ப்பு	:	மாந்தளிர், கடுக்காய், நெல்லி முதலியன.
கார்ப்பு	:	மிளகாய், மிளகு, இஞ்சி, கடுகு முதலியன ஆகிய ஆறுவைக்கப்படும்.

முகர்ந்து அறிவது மணம் எனப்படும். இது **"நறுமணம்"**, **"துர்ணமம்"** என இருவகைப்படும். சந்தனம், பன்னீர், மலர் முதலானவைகள் நறுமணம் கொண்டவை. தாழ்ந்த பொருள்களிலுள்ளது துர்மணம் பக்குவத்தின் வேறுபாட்டால் மணமும் வேறுபடும். காயில் ஒருவகை மணமும், கனியில் வேறுவகை மணமும் இருப்பது இந்த வேறுபாட்டால் தான்.

காற்றுக்கும், நீருக்கும் மணம் இயற்கையானது அல்ல. செயற்கையினால் காற்றுக்கு மகரந்தமும், நீருக்கு ஏலமும் மணத்தைத் தருகின்றன.

இதுவரை கூறப்பட்ட ஒலி - ஊறு- ஒளி - சுவை - மணம் ஆகிய தன்மைகள், ஒலி ஐந்து பூதங்களிலும், ஊறு, ஆகாயம் தவிர நான்குபூதங்களிலும், ஒளி, அக்நி, நீர், நிலம் ஆகிய மூன்று பூதங்களிலும், சுவை, நீர், நிலம் ஆகிய பூதங்களிலும், மணம் நிலத்தில் மட்டும் உண்டு என்றாலும் பஞ்சீகரண முறைப்படி அந்தப்பூதங்களின் குணம் ஓரளவு எல்லாப் பூதங்களிலும் பரவி உள்ளது.

நாம் பலவற்றை காணும்போது இவைகள் சேர்ந்துள்ளது என்று அறிவு உண்டாக காரணமாவது "சம்யோகம்" என்ற அத்திரவியமாகும்.

பிரகிருதி - காலம் - நித்யவிபூதி - தர்மபூதஞானம் - ஜீவன் ஈசுவரன் என்று ஆறுவகை திரவ்யங்களுள் சம்யோகம் இயல்பாக உள்ளது.

சம்யோகம் "கார்ய சம்யோகம" (EFFECTED) **"அகார்ய சம்யோகம்"** (NON-EFFECTED) என்று இருவகைப்படும்.

அளவுபட்ட பொருள்கள் தங்களது வலிமை காரணமாக சேரும்போது உண்டாவது கார்ய சம்யோகம். இதற்கு உதாரணம்,

இரண்டு ஆடுகள் முட்டிக் கொள்வதோ அல்லது இரண்டு மல்லர்கள் கட்டிபுபுரள்வதோ ஆகும்.

மற்றது, விபுவான இரண்டு பொருள்களின் சேர்க்கையாகும். பரம்பொருள் தர்மபூதஞானம், காலம் ஆகியவைகள் விபு, அதாவது எங்கும் பரவியவைகள். ஒருவிபுப்பொருள், மற்றொரு விபுப்பொருளுடன் இணைவது அகார்ய சம்யோகம் ஆகும். உதாரணம் தர்மபூதஞானமும், காலமும் பகவானோடு சேர்ந்தவைகள்.

ஒரு செயலை செய்வதற்கு துண்டுகோலாக அமைவது "சக்தி" என்ற அத்திரவியம். இது பலவகைப்பட்டது என்பது சுருதிவாக்கு. இறைவனின் சக்தி மிகவும் மேம்பட்டது.

நெருப்புக்கு எரிக்கும் சக்தி உண்டு. இந்த சக்தி பொறிகளுக்கு புலப்படாதது. ஒரு காந்தக்கல் இரும்புத் துண்டத்தை தன்பால் இழுக்கும் போது காந்தத்தின் சக்தியை நம்மால் அறிய முடிகிறது. இதுபோலவே ஒவ்வொரு பொருளிலும் ஒரு சக்தி உண்டு, ஆனால் அவை வெவ்வேறானது.

பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணனின் சக்தி மிகவும் மேம்பட்டது. ஒப்புயர்வற்றது. அற்புதமானது, ஆச்சர்யமானது. அந்த சக்தியின் ஒரு துளியினாலேயே உலகங்களனைத்தையும் தாங்குகிறான் என்று வேதம் கூறுவதால், அவனது சக்தியின் மேன்மையை நாம் உணரக்கூடுமோ? அதனால் இறைவனின் சக்திக்குட்பட்டதுதான் மற்றவைகளில் உள்ள சக்தி என்பதையும், வேதமே குறிப்பிடுகிறது.

பிரகிருதியின் முக்குணங்கள் ஞானத்தையும் காலத்தையும் பாதிக்காது. ஆயினும் அவன் சத்துவ ஞானம் கொண்டவன் என்றும், இது சாத்வீக காலம், என்றெல்லாம் கூறுகிறோமே, அது எப்படி?

சத்துவ குணமேம்பாட்டால் வெளிப்படும் அறிவை, **சத்துவ ஞானம்** என்று கூறகிறோம். ஒரு சேதனனிடம் **சத்துவகுணம்** தோன்றக்கூடிய காலம் சாத்வீக காலம் என்று கூறப்படுகிறது.

ஸ்ரீராமாநுஜரால் சித்தாந்தப்படுத்தப்பட்ட, ஸ்ரீவைணவத்தைப் பற்றி இதுவரை தொகுத்தளித்துள்ளோம்.

ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள் ஐந்தாகும். அவைகள்,


அடையப்படும் பரம் பொருள்,
அடைபவனான ஜீவன்,
அடைவதற்குள்ள உபாயம்,
அடைகின்ற பலன்,
அடைவதில் உண்டாகும் தடைகள்

ஆகியவைகளையே "அர்த்த பஞ்சகம்" எனப்படும். இதை விரிவாகவே கூறியுள்ளோம்.

அப்படி அறியப்படுபவன், சேத - அசேதனங்களை உடலாகக் கொண்டவன் பிரம்மம் என்றும், பரம்பொருள் என்றும் இன்னும் பல பெயர்களால் வழங்கப்படும் எம்பெருமானான அந்த ஸ்ரீயை பதியான ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே என்பது ராமாநுஜ தர்சனத்தின் உறுதியான கொள்கை.

"உரைக்கின்ற முக்கட் பிரான்யானே என்னும்
உரைக்கின்ற திசைமுகன் யானே என்னும்
உரைக்கின்ற அமரர்கோன் யானே என்னும்
உரைக்கின்ற முனிவரும் யானே என்னும்
உரைக்கின்ற முகில்வண்ணனேறக் கொல்லோப்
உரைக்கின்ற வுலகத்தீர்க்கென் சொல்லுகேன்
உரைக்கின்ற என்கோமன வொண்கொடிக்கே"

இப்படி அருளிச் செய்துள்ளார் நம்மாழ்வார்.



உதவிய நூல்கள்

வேதாந்த சூத்திரங்கள் By GEORGE THIBAUT

யதீந்தரமத தீபிகா By Srinuvasa Dasa.

சில்லரை ரஹஸ்யங்கள் By Vedantha Desikan

ரஹஸய த்ரய சாரம்